
இர்மா
அந்த
ஆறு
ஆறா
நாட்கள்
ஆரூர் பாஸ்கர்


இர்மா
அந்த
ஆரூர்
ஆறா
நாட்கள்
ஆரூர் பாஸ்கர்

# அந்த ஆறுறா நாட்கள்

## ஆரூர் பாஸ்கர்

அமெரிக்காவின் ஃபிளாரிடா மாகாணத்தில் வசிக்கும் ஆரூர் பாஸ்கர் மென்பொருள் துறையில் பணிபுரிகிறார். தனது சொந்த ஊரான ஆரூரை (திருவாரூர்) தனது பெயருடன் இணைத்து ஆரூர் பாஸ்கர் எனும் புனைப் பெயரில் எழுதிவரு கிறார்.

"சிறகுகள் கல்வி அறக்கட்டளை" எனும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தை நடத்தி வரும் இவர் கவிஞர், எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டவர். இவருடைய நூல்கள் : என் ஜன்னல் வழிப்பார்வையில் (கவிதை), பங்களா கொட்டா, வனநாயகன்-மலேசிய நாட்கள் (புதினங்கள்).

மின்னஞ்சல் : aarurbass@gmail.com
முகநூல் :https://www.facebook.com/aarurbass

# புயலுக்கு முன்...

கடல் கடவுள் போசிடானின் கோபமே புயலாக, சூறாவளியாக வெளிப்படுகிறது என்ற பண்டைய கால கிரேக்கர்களின் நம்பிக்கைக்கும், கடலின் மேற்பரப்பில் ஏற்படும் காற்றழுத்த தாழ்வு நிலையே புயலாக உருவெடுக்கிறது என்ற புரிதலுக்குமிடையே மனித இனம் பெரிதும் வளர்ந்துவிட்டது. மனிதன் கண்டுகொண்ட தொழில்நுட்பமும் பெரிதாக வளர்ந்துவிட்டது. ஆனால் இயற்கை இயற்கையாகவே சீரிய காலம் போய், கடந்த அரைநூற்றாண்டில் மனிதனின் பேராசைகள் இயற்கையை அதிகமாகவே சீண்டி (சுரண்டி)விட்டதால்தான், இயற்கை பூமி மீது இறக்கம் காட்டாமல் வழக்கத்தைவிட அதிகமாகவே பூமியைத் தாக்குகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. பூமி வெப்ப மயமாதல், மனிதனால் தூண்டப்பட்ட பருவநிலை மாற்றம் இதெல்லாம் மனிதனின் பேராசையின் பயன்கள். ஒவ்வொரு முறையும் இயற்கை, புயலாக, வெள்ளமாக, அடைமழையாக மனிதனை நோக்கி சீறும் போது மட்டுமே, மனிதனால் இயற்கையை என்றுமே வெல்ல முடியாது என்ற உண்மை நமக்கு உரைக்கிறது. இதற்கு வளர்ந்த நாடுகளும் விதிவிலக்கல்ல.

அதுவும் குறிப்பாக சீனா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு சூறாவளி தாக்குதல் என்பது வாழ்வின் ஒரு அங்கமாக போய்விட்டது. அதில் அமெரிக்க மாநிலங்களிலேயே அதிக சூறாவளியைச் சந்திக்கும் மாநிலமான ப்ளோரிடாவை, கடந்த ஆண்டு (2017) தாக்கிய இர்மா சூறாவளியை மையமாக வைத்து நண்பர் 'ஆரூர்' பாஸ்கர் புனைந்திருக்கும் குறுநாவலே 'இர்மா'.

பெரும் ஆபத்தை விளைவிக்க கூடிய கேட்டகிரி ஐந்து வகை 'இர்மா' புயல், கதை நாயகன் பரணி வசிக்கும் ப்ளோரிடாவை நோக்கி வந்துகொண்டிருக்கும் நாளில் தொடங்கும் இந்த நாவல் அவனுடைய அகப் போராட் டமாக மட்டும் நின்றுவிடவில்லை. மாறாக அமெரிக்கா வைப் பற்றி, அந்த நிலப்பரப்பை பற்றி, அங்கே இருக் கும் மனிதர்களைப் பற்றி, அவர்களின் பாசாங்குகளைப் பற்றி, அந்த நிலத்தின் அரசியல், கொள்கை மாற்றங்க ளைப் பற்றி, அங்கே இந்தியர்களுக்கு இருக்கும் நெருக் கடிகளைப் பற்றி, மூலக் கதையிலிருந்து விலகாமல் கதையினூடே பதிவு செய்துபோகும் நாவலாக விரிகி றது. அதுவே இந்த நாவலின் சிறப்பம்சமாக கருதுகி றேன்.

ஏனெனில் இந்தக் கரு புதிது. களமும் புதிது. நாம் அதிகம் சந்தித்திராத ஒரு இயற்கைச் சீற்றத்தை மைய மாக கொண்டது கதைக்கரு. கதை நடக்கும் தேசமோ, பலருக்கும் பரிச்சயம் இல்லாத ஒரு இடம். ஆனால் பாஸ்கரின் விவரணைகள் அந்தத் தேசத்தை நமக்கு பரிச்சயமாக்குகிறது. அதன் சாலைகள், அந்த ஊரின் கட்டுமானங்கள், சுற்றி இருக்கும் ஏரிகள், அதில் தலை தூக்கி பார்க்கும் முதலைகள் என கதைக்கு தேவை யான விவரங்கள் சில இடங்களில் தகவல்களாகவும், பல இடங்களில் துல்லியமான காட்சிகளாகவும் விவரிக்

கப்பட்டிருப்பதால் நம்மால் எளிதாக நாவலின் உலகிற்குள் நுழைந்து விட முடிகிறது.

மேலும், பரணி ஒரு சாதாரண மனிதனாகவே நமக்கு அறிமுகமாவதால் அவனோடு நம்மை எளிதாக தொடர்புபடுத்திக் கொள்ள நமக்கு அதிக அவகாசம் தேவைப்படவில்லை. கதையில் அவன் எந்த சாகசங்களையும் செய்யக்கூடியவன் அல்ல. இந்த யதார்த்தமான சித்தரிப்பே கதாபாத்திரத்தின் நம்பகத்தன்மையைக் கூட்டுகிறது. மேலும், நிதானமாக நகரும் கதையில் புயலின் வரவால் பரணியின் வாழ்வில் பரவும் இறுக்கம், ஒரு கட்டத்தில் நம் மனதிலும் பரவுவதை உணரலாம். அதுவே கதைசொல்லலின் வெற்றி.

ஒவ்வொரு முறையும் இயற்கை கருணை காட்டாமல் போகும் நேரத்திலெல்லாம் நம்மிடம் மிச்சமிருக்கும் மனிதமே நம்மை மீட்டெடுக்கிறது. அண்மையில் வீசிய கஜா புயல் வரை இதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் நம்மால் தடுக்க முடிந்த பேராபத்துகளை முன்கூட்டியே தடுப்பதற்கு நமக்கு மனிதத்தோடு சேர்ந்து ஒரு பொறுப்புணர்ச்சியும் தேவைப்படுகிறது. அதை நாவலிலும் பதிவு செய்திருக்கிறார் பாஸ்கர். 'இந்த பூமி நமக்கானது, மனித இனத்துக்கானது. இதை அடுத்த தலைமுறையிடம் சரியாக ஒப்படைப்பது நமது கடமையாகிறது'. பரணியின் மனதில் எழும் இந்த எண்ணங்கள் தான் நமக்கான முக்கிய செய்தியும் கூட. ஏனெனில், இயற்கையைப் பாதுகாக்க சராசரி மனிதர்களான நாம் மிக பெரிய மாற்றத்தை எல்லாம் செய்யவேண்டியதில்லை. இயற்கை நேரடியாக நமக்கு தந்த வளங்களையும், நாம் அதிலிருந்து கண்டுகொண்ட வளங்களையும், நம்முடைய முந்தைய தலைமுறைகள் நமக்கு விட்டு வைத்ததைப் போல, அடுத்த தலைமுறைக்கு நாமும் மிச்சம் வைக்க வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியோடு

நாம் இயற்கையை பாதுகாத்தாலே போதும். இந்த பூமியும் அதன் வளங்களும் தப்பிக்கும். இல்லையேல் நாவலில் சொல்வது போல், இயற்கை தன் அடியாட்களை பூமி நோக்கி தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டே இருக்கும்.

-அரவிந்த் சச்சிதானந்தம், சென்னை, 23- டிசம்பர்-2018.

# என்னுரை

உலக அரங்கில் அமெரிக்கா மிகப்பெரிய வலிமையானதொரு தேசம். பொருளாதார, ராணுவ ரீதியில் சர்வ வல்லமை பொருந்திய வல்லரசு. இயற்கை வளங்களால் தன்னிறைவு பெற்ற ஒரு நாடு. தொழில்நுட்பத்தில் குளோபல் லீடர். உலகின் தவிர்க்கமுடியாததொரு சக்தி. என்றெல்லாம் பேசப்படுகிறது. அதெல்லாம் எந்த அளவுக்கு உண்மையோ அதே அளவு உண்மை அமெரிக்கா இயற்கைப் பேரழிவுகளால் ஆசிர்வதிக்கப்பட்ட ஒரு தேசம் என்பதும் கூட. பூகம்பங்கள், சூறாவளிகள், எரிமலைகள், பனிப்புயல்கள், நிலச்சரிவுகள், மழை, வெள்ளம், வறட்சி, பனிச்சரிவுகள் எனப் பட்டியலிடப்படாத பல இயற்கைச் சீற்றங்களை அமெரிக்க மக்கள் ஒவ்வொரு ஆண்டும் எதிர்கொள்ளத்தான் செய்கிறார்கள்.

அமெரிக்காவில் 2018-இல் மட்டுமே எத்தனை இயற்கை இடர்பாடுகள்? ஜனவரியில் மான்டினோகோ (கலிபோர்னியா) நிலச்சரிவுகள் பிறகு மேரிலேண்ட் பெருவெள்ளம். அடுத்து புளோரன்ஸ்,மைக்கேல் எனத் தொடர்ந்தார்போல இருபெரும் ஹரிக்கேன்கள். இதை எழுதும் இந்தத் தருணத்தில் மேற்கே கலிபோர்னியா

மாநிலத்தில் கடந்த ஒரு மாதமாக கட்டுப்படுத்த இயலாத காட்டுத்தீ தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கி றது. இதுவரை பல நூறு மனித உயிர்களைக் கோர வெறியோடு சுவைத்த தீயின் நாக்குகளுக்கு இரண்டு லட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலமும் இரையாகி யுள்ளது. பல லட்சம் மக்கள் தங்கள் உடமைகளைக் காட்டுத்தீக்கு தாரை வார்த்துவிட்டு இடம்பெயர்ந்துள் ளனர். கடும் வறட்சியால் பற்றிக்கொண்ட இந்தக் கலி போர்னியா வனங்களின் கரும்புகை இன்று கிழக்குக் கடற்கரை வரை வந்து மக்கள் மூச்சை முட்டச் செய்கி றது. அதற்கு இணையாக பனிப்புயல்கள் என்றால் வட, மத்திய மற்றும் மேற்கு மாநிலங்கள் என அழிவின் வரி சையில் நான் வசிக்கும் ஃபிளாரிடா மாநிலமும் சேர்ந்து கொள்கிறது.

**ஃபிளாரிடா-** உலக வரைபடத்தில் வட அமெரிக்காவின் தென்கோடியில் உயர்த்திப்பிடித்த கைத்துப்பாக்கியின் வடிவத்தில் இருக்கும் அமெரிக்காவின் ஒரே தீபகற்ப மாநிலம். கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடல், மேற்கே மெக்சிகன் வளைகுடா சூழ்ந்திருக்கும் இந்தத் தேசத் தில் சூறாவளிகள் சாதாரணம். ஃபிளாரிடா என்றால் ஹரிக்கேன்கள். ஹரிக்கேன்கள் என்றால் ஃபிளாரிடா எனச் சொல்லும் அளவுக்கு இரண்டும் பிரிக்க முடி யாத உடன்பிறந்த சகோதரர்கள். பலநூறு ஆண்டுகளாக ஃபிளாரிடா ஸ்பானிசு, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் காலனியாக மாறி மாறி இருந்தா லும், என்றும் மாறாத ஒன்று இங்கு வீசும் ஹரிக்கேன்கள் தான்.

அமெரிக்காவின் ஃபிளாரிடாவும் ஹரிக்கேன்களும் இரட்டை சகோதரர்கள் என்றாலும் ஹரிக்கேனை மையப்படுத்தி நான் ஒரு புத்தகம் எழுதுவேன் என ஒரு நாளும் நினைத்துப் பார்த்ததில்லை.

அது எப்படி நினைத்துப் பார்த்திருக்க முடியும் ?பூமிப் பந்தில் எங்கோ ஒரு மூலையில் பிறந்து வளர்ந்து, பணி நிமித்தமாக மலேசியா, ஐரோப்பா என உலகம் சுற்றி விட்டு இறுதியாக ஃபிளாரிடா குடும்பத்தோடு வந்து குடி யமருவேன் என யார் தான் நினைத்துப் பார்த்திருக்க முடியும். இப்படி யாரும் நினைக்காத ஒன்றை நிகழ்த்தி காட்டி சாகசங்கள் செய்வதுதானே காலம்.

அந்த வகையில் 2017, செப்டம்பரில் ஃபிளாரிடா மக்க ளோடு நான் ஹரிக்கேன் இர்மாவை எதிர்கொண்டேன். எங்கள் வாழ்வில் செப்டம்பர் 5ல் இருந்து வந்த ஆறு நாட்களில் ஏதோ ஒருநாளேனும் சில காரணங்களுக் காக கண்டிப்பாக மறக்கமுடியாத நாளாக இருந்திருக் கும். தனிப்பட்ட முறையில் அந்த மறக்கமுடியாத நாட் களின் தருணங்களை நான் எழுத்தில் கொண்டுவந்த போது அந்த நாட்கள் மேலும் துலக்கம் பெற்றன.

பணி நிமித்தமாக சொந்தநாட்டைப் பிரிந்து ஃபிளாரிடா வில் வசிக்கும் ஒரு சாமானியன் தனது குடும்பத்தோடு இர்மா எனும் பெருஞ்சூராவளியை எதிர்கொண்ட அனு பவத்தை இங்கே புனைவாக படைத்திருக்கிறேன்.

என் எழுத்தால் ஆயிரமாயிரம் நல்ல தமிழ் உள்ளங்க ளைச் சென்று சேர்வது நெகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த நூல் ஆக்கத்தில் அன்போடு உதவிக்கரம் நீட்டிய அரசனுக்கும், அரவிந்துக்கும் எனது பிரியங்கள். இந்த நூலைப் பதிப்பிக்கும் எழுத்து பிரசுரத்துக்கும், என்றும் என்னையும் என் எழுத்தையும் நேசித்து ஊக்கமளிக் கும் குடும்பத்தினருக்கும் எனது நெஞ்சம் நிரம்பிய நன் றிகள்.

என்றும் அன்புடன்,

ஆரூர் பாஸ்கர்,

ஜூபிடர், ஃபிளாரிடா,
ஆகஸ்ட்-21-2019.

என்னை உலகுக்கு அறிமுகம் செய்து அழகு பார்த்த
பெற்றோர்கள் கவிதா, சிவசுப்ரமணியன் அவர்களுக்கு...

திங்கள், செப்டம்பர் 4, 2017. மாலை 4 மணி (தல ஹாசி, ஃபிளாரிடா)

அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான ஹரிக்கேன் இர்மா ஃபிளோரிடா மாநிலத்துக்குக் கடுமையான அச்சுறுத்தல் என கணிக்கப்படு கிறது. மாநில கவர்னர் ரிக் ஸ்காட் அவசரகால நிலையை அறிவிக்கிறார். "இர்மா சூறாவளி உயி ருக்கு ஆபத்தான மாபெரும் புயல். ஃபிளோரிடா உடனடியாக இதற்குத் தயாராக வேண்டும்" எனும் அவசர அரசாணை வெளியிடப்படுகிறது.

செவ்வாய், செப்டம்பர் 5, 2017. அதிகாலை 5:45 (தேசிய வானிலை சேவை மையம், மாசசூசெட்ஸ்)

இர்மா அதிஆபத்தான கேட்டகிரி-ஐந்து ஹரிக் கேனாக கூடுதல் சக்தி பெறுகிறது. அது மெக் ஸிகோ வளைகுடா மற்றும் கரீபியன் பிராந்தியங் களுக்கு வெளியே அட்லாண்டிக் பேசினில் பதிவு செய்யப்பட்ட மிகசக்தி வாய்ந்த சூறாவளியாக இருக்கும் என நம்பப்படுகிறது.

கரீபியனின் போர்டரீக்கோ, டோமினிக்கன் ரிப்பிளிக், கியூபா போன்ற தீவுகளைத் துவம்சம் செய்துவிட்டு வார இறுதியில் ஃபிளாரிடாவின் மியாமியைத் தாக்கலாம் எனத் தேசிய வானிலை சேவை மையம் எச்சரிக்கை செய்கிறது.

# 1

“இதுக்கு முன்னால, ஹரிக்கேனுக்கு யாரெல்லாம் ஃபிளாரிடாவில் இருந்திருக்கீங்க ?” என ஆங்கிலத்தில் கேட்டது மோனிகா. அதுவரை கனத்த மௌனம் சூழ்ந் திருந்த அந்த அறையில் பரணியோடு சேர்த்து மொத்த மாகப் பதினைந்து பேர் இருந்திருப்பார்கள்.

மோனிகா, பரணியின் மேலதிகாரி. அது அவன் வேலை செய்யும் நிறுவன தொழில்நுட்பப் பிரிவின் வாராந் திர பணியாளர்கள் கூட்டம். அது லேபர் டே எனும் தொழிலாளர் தினத்திற்கான விடுமுறைக்குப் (லாங் வீக் எண்ட்) பின் அவர்கள் கலந்துகொள்ளும் முதல் கூட் டமும் கூட. அன்று அவர்கள் தங்கள் பிராஜெக்ட்டுக ளின் ஆப்பரேசனஸ் ஸ்டேடஸை விவாதிக்க மடிக்க ணினியுடன் கூடி இருந்தார்கள். கச்சேரி செய்பவர்கள் கையில் இசைக்கருவிகளைத் தூக்கிச் சுமப்பதுபோல மீட்டிங் நடக்கும் இடங்களுக்கெல்லாம் மடிக்கணினி யைத் தூக்கிச் சுமப்பது அவர்களின் கடமையாகிறது.

மூன்று நாள் தொடர் விடுமுறையில் ஓய்வெடுத்த களைப்போ இல்லை வழமையான ஒரு கூட்டத்தை எதிர்பார்த்து வந்திருந்ததாலோ என்னவோ, மோனிகா கேட்ட கேள்விக்கு அங்கே யாரிடமிருந்தும் உடனடியா கப் பதில் வரவில்லை.

இத்தனைக்கும் அங்கிருந்தவர்களில் பலர் அங்கே புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்த ஒப்பந்தப் பணியாளர்கள் தான். சில நொடிகள் யோசனைக்குப் பிறகு ஒன்றிரண்டு கைகள் மெள்ள மேலெழும்பின. அறையில் நிலவிய அமைதியையும், தயக்கத்தையும் செரித்துக் கொள்ள பொறுமை இல்லாத மோனிகா தாமதிக்காமல் தனது அடுத்த கேள்வியை வீசினாள்.

இப்போது சற்று பூடகமானதொரு குரலில், “இர்மா பத்தி நியூஸ் கேள்விப்பட்டீங்க இல்ல ?”

அதை ஆமோதிப்பது போல் சிலர் தலையாட்டினார்கள். ஆனால், அந்தத் தலையாட்டலில் பெரிய அவசரம் ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை.

உண்மையில் 'இர்மா' என்பதே பரணிக்கு அப்போது தான் காதில் விழுகிறது. அவனைப் போன்ற ஃபிளாரிடா வாசிகளுக்கு ஹரிக்கேன் என்பது ஒன்றும் ஒரு புதிய விசயமில்லை. அதிலும் ஃபிளாரிடாவின் பத்து மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு மின்சாரம் வழங்கும் நிறுவனத்தில் பணிபுரியும் அவனுக்கு ஹரிக்கேன் கண்டிப்பாகப் புதிதில்லை தான். அதனால், இர்மா என்பது வரப்போகிற ஹரிக்கேனுக்கு சூட்டப்பட்டிருக்கும் ஒரு பெயர் என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு வெகுநேரமாகவில்லை.

அதுவரை இர்மாவைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருந்தது ஒருவிதத்தில் பரணியின் அலட்சியம் என்று கூடச் சொல்லலாம்.

பரணி ?.

முழுப்பெயர் பரணிதரன். அமெரிக்கர்கள் கூப்பிட வசதியாக சுருக்கமாக பரணி. ஆனாலும், மோனிகாவுக்கு

அவன் இப்போதும் ப்பரணி தான். பெயர்களின் முதல் அசை எனும் ஸ்லபெல்லை (syllable) அழுத்திச் சொல்லும் அமெரிக்கர்கள் அவன் பெயரை பிராணி இல்லை பிரியாணி என்று கூப்பிடாதவரை பெரிதாகப் பாதகமில்லை என நினைத்துக் கொள்வான். பரணி ஒரு தொழில்நுட்பப்பிரிவின் குழுத்தலைவனாக இருக் கிறான். ஆமாம், எனது தேசம், ஆள், அம்பு, சேனை என் பதுபோல் ஒரு தொகுப்பான பிராஜெக்ட்டுகளை மேற் பார்வைச் செய்துகொண்டிருக்கிறான்.

கணினிகள் பெரிதும் புழங்காத தொண்ணூறுகளின் இறுதியில் கணிப்பொறியியல் முடித்துவிட்டு முதலில் சென்னையில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை யிலிருந்தான். திருமணத்திற்குப் பிறகு பிழைப்புக்காகச் சொந்த மண்ணை விட்டுக் கிளம்பி கிழக்கும், மேற்கு மாக பல நாடுகள் சுற்றித்திரிந்துவிட்டு இறுதியாக ஃபி ளாரிடா வந்து அமெரிக்கவாசியாகி விட்டான்.

தற்போது வசிப்பது பாம் பீச்- தென் ஃபிளாரிடாவின் கிழக்குக் கரையோரம் புகழ்பெற்ற சுற்றுலா நகரான மியாமியில் இருந்து புறப்பட்டு சுமாராகத் தொன்னூறு மைல்கள் (150 கி.மீ.) வடக்கில் இருக்கும் ஒரு சிறிய கடற்கரை நகரம். தொடக்கத்தில் மூன்று மாத குறுகிய கால ஒப்பந்தத்தில் வந்த அவன் இங்கிருக்கும் அழகான கடற்கரைகள், நெருக்கடி இல்லாத மக்கள்தொகை, தமிழ்நாட்டுக்கு இணையான வெப்பமண்டல சீதோச னம் போன்ற இத்யாதிகளை விட்டு பிரிய மனமில்லாமல் இங்கேயே குடும்பத்தோடு தங்கிவிட்டான்.

அவன் மட்டுமல்ல பிரபல கால்ப் வீரர் டைகர் வுட்ஸ், டென்னிஸ் வீராங்கனைகளான வில்லியம்ஸ் சகோதரி கள், அதிபர் டிரம்ப் போன்ற பிரபலங்களுக்கும் ஃபிளா ரிடாவின் இந்தப்பகுதி பிடித்துப்போய் விருப்பத்தோடு

இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டதில் ஆச்சர்யம் எதுவுமில்லை. பில்கேட்ஸ் முதல் ஹாலிவூட் நட்சத்தி ரங்கள் வரை தெற்கு ஃபிளாரிடாவில் கெஸ்ட் அவுஸ் இல்லாத பிரபலங்கள் இல்லை என்றுகூடச் சொல்ல லாம்.

முதல்முறை இங்கு வரும்போது இந்த ஹரிக்கேன் கள் பற்றியெல்லாம் அவன் பெரிதாகக் கவலைப்பட வில்லை. உண்மையைச் சொல்லப்போனால் பரணிக்கு இதுகுறித்தெல்லாம் அப்போது சொல்ல ஆளில்லை என்பது தான் சரியாக இருக்கும். வந்த புதிதில் (செப் டம்பர் முதல் வாரம்) சந்தித்த ஒன்றிரண்டு இந்தியர்கள் அக்கறையுடன் கேட்ட முதல் கேள்வி

"என்ன மிடில் ஆப் த ஹரிக்கேன் சீசன்ல வந்திருக்கீங்க "என்பது தான்

அதுவரை அவனுக்குத் தெரிந்ததெல்லாம், புயல் சின் னம் உருவாகி இருக்கிறதென்றால், பெருங்காற்று அடிக் கப் போகிறது. காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உரு வாகி இருக்கிறது என்றால் கன மழை பெய்யப்போகிறது அவ்வளவு தான். அதைத்தாண்டி வானிலையில் பெரிய பரிச்சயம் எதுவுமில்லை. ஹரிக்கேன் என்றதும் சற்று அந்நியமாக உணர்ந்தான்.
இவர்கள் மெட்ரிக் அளவான கிலோவுக்கு பவுண்டு, கிலோமீட்டருக்கு மைல்கள் என்பது போல கடும் புய லுக்கு இங்கு ஹரிக்கேன் போல என்று நினைத்துக் கொண்டு, சத்தங்காட்டாமல் வீட்டுக்கு வந்து இணை யத்தில் அதை உறுதிப்படுத்தியும் கொண்டான்

அதுமட்டுமல்ல இந்தச் சுழலும் புயல்காற்று பூமத் திய ரேகைக்கு மேலே அதாவது அட்லாண் டிக், கிழக்கு பசிபிக் பெருங்கடலில் தோன்றினால் 'ஹரிக்கேன்ஸ்' (Hurricanes) என்றும், வடமேற்கு பசி

பிக்கில் வந்தால் 'டைபூன்ஸ்' (Typhoons) என்பதையும் தெரிந்துகொண்டான். பூமத்திய ரேகைக்குக் கீழே அதாவது இந்தியப் பெருங்கடலில் உருவானால் அதைப் 'புயல்' (Cyclone) என்கிறார்கள். தலையில் வலி வந்தால் தஞ்சாவூர் பக்கம் 'தலைவலி' என்றும், திருநெல்வேலி பக்கம் 'மண்டையிடி' எனச் சொல்வது போல் வேறு வேறு பெயர்கள் அவ்வளவே. ஒரே வித்தியாசம், பூமத்திய ரேகைக்கு மேலே (வடக்கில்) உருவாகும் புயல்கள் இடஞ்சுழியாகவும், மற்றது வலஞ்சுழியாகவும் சுழலும் என்பதையும் அறிந்து கொண்டான்.

ஃபிளாரிடாவில் ஜூன் 1ல் இருந்து நவம்பர் கடைசிவரையான ஆறு மாதங்களை ஹரிக்கேன் சீசன் என்கிறார்கள். இந்த ஆறு மாதங்களில் எப்போது வேண்டுமானாலும் ஹரிக்கேன்கள் வரலாம் என்றாலும் ஆகஸ்ட் மாத பிற்பகுதி மற்றும் செப்டம்பரில் வர அதிக வாய்ப்பிருக்கிறது. ஹரிக்கேனைப் பொறுத்தவரை செப்டம்பர் ஃபிளாரிடாவின் அபாயகரமான மாதம் எனும் புரிதல் அவனுக்கு இருந்தது. கணினியில் இன்றைய தேதியைப் பார்த்தான் செப்டம்பர் ஐந்து என்றது.

சொந்தமாக மின் உற்பத்தி செய்து, பரிமாற்றம் மற்றும் வாடிக்கையாளர்களுக்குப் பகிர்மானம் செய்யும் அந்த நிறுவனத்தில் ஹரிக்கேன் முன் தயாரிப்பு அதிமுக்கியம். அதனால், நம்மூரில் மார்கழி சீசனுக்கு சபாக்கள் தயாராவது போல, அலுவலகத்தில் ஹரிக்கேன் சீசன் ஆரம்பிக்கும் முன்பே ஆயத்தங்கள் ஜரூராக நடக்கும். நிறுவனத்தின் ஆஸ்தான வானிலை ஆய்வாளர் அந்த வருடத்தின் காலநிலை பற்றிய சாதக, பாதகங்கள் குறித்த கூட்டத்தைக் கூட்டி விவரிப்பார். பிறகு நிறுவனத்தின் எல்லா துணை அமைப்புகளும் தகுந்த ஆயத்த ஏற்பாடுகளைச் செய்து தயார் நிலையில் இருப்பார்கள்.

அதில் 'மாக் ரன்' எனும் சோதனை ஓட்டமும் முக்கிய மானது. அதாவது சீசனுக்கு முன்பே நிஜத்தில் ஹரிக் கேன் வருவதுபோல கற்பனையாக ஒரு ஹரிக்கேனை உருவாக்கி, அதற்கு பெயரிட்டு, கேட்டகிரி-நான்கு அல் லது ஐந்து என வகைப்படுத்தி, நிறுவனத்தின் எல்லா அமைப்புகளும் கூட்டாக இணைந்து தங்களுடைய ஆயத்தப் பணிகளை ஐந்து நாட்களுக்குத் தொடர்ச்சி யாக ஒத்திகைப் பார்ப்பார்கள். வைரத்தைப் பட்டை தீட் டுவதுபோல அதைத் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண் டும் மீண்டும் மீண்டும் செய்து அதற்கு நிறைவானதொரு செயல் வடிவம் கொடுத்திருக்கிறார்கள். அப்போது ஹரிக்கேனுக்குப் பின் தனிப்பட்ட முறையில் நான் பாது காப்பாக இருக்கிறேன் என்பதைப் பணியாளர்கள் அலு வலகத்துக்குப் போன் செய்து சொல்லும் நடைமுறை ஒன்று இருக்கிறது. ஒத்திகை தானே என்று அதைத் செய்யத் தவறும் வேளையிலும் மோனிகா விடாது போன் செய்து அதை உறுதிப்படுத்திக் கொள்வாள். போன முறைக் கூட ஒத்திகையின்போது ஏதோ நினைப்பில் அவன் இருந்துவிட உடனடியாக போன் செய்து அவள் கடிந்துகொண்டாள். 'மாக் ரன்' ஐ தொடர்ந்து அந்த வரு டத்தில் எதிர்பார்க்கப்படும் சூறாவளிகளின் பெயர்ப் பட் டியலை அலுவலகத்தின் பொது இடங்களில் அனைவ ருடைய பார்வையில் படும்படி ஒட்டிவைப்பார்கள். இந்த வருடப் பட்டியலில் இர்மா கண்டிப்பாக இருந்திருக்கும் என அவன் நினைத்தான்.

சூறாவளிகள் பெயரிடப்பட்டாலும் பெரும்பான்மையா னவை கடலிலேயே சுவடில்லாமல் தற்கொலை செய்து கொள்ளும். சில தடம் மாறி நகர்ந்துவிடும். சில கனத்த மழையாக மட்டும் வந்து நனைத்துபோகும். சில அதிரடி யாகப் பெருமழை, காற்றோடு சூறாவளியாக வந்து சுழற் றிவிட்டு போவதும் உண்டு.

இதில் இர்மா எந்தவகை எனத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் மோனிகாவின் முகத்தைப் பார்த்தான். ஒரு நொடி தலை குனிந்து யோசித்த மோனிகா, லேசா கத் தலையை உயர்த்திக் குரலில் கொஞ்சம் தீவிரத் தன்மையுடன்

“இர்மா ஃபிளாரிடா நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அதன் தீவிரத்தைக் கணக்கில் கொண்டு இந்த வாரத் திற்குத் திட்டமிடப்பட்டிருந்த அனைத்துத் தொழில் நுட்ப மாறுதல்களும் (Deployments) ரத்துசெய்யப் படு கின்றன” என்றவள் சற்று இடைவெளி விட்டு, அறை முழுதும் தன் கண்களைச் சுழல விட்டபடி, தனது தீர்க் கமான குரலில் “லெட் அஸ் டாக், அபவட் அவர் சேப்டி பர்ஸ்ட்” என்றபோது, அதுவரை அறையில் இருந்த இல குத்தன்மை சட்டென விலகி ஒருவித இறுக்கம் பரவத் தொடங்கியது.



வழக்கத்தில் அமெரிக்கா அல்லது யூஎஸ்ஏ ***(USA)*** என்பது அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் ***(United States of America)*** குறிக்கும் பொதுப்பெயராக இருந்தாலும். அமெரிக்கக் கண்டத்தை (அமெரிக்காஸ்) வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா என மூன்றாக பிரிக்கிறார்கள். அதில் தென் அமெரிக்கா என்றால் அமேசான் மழைக்காடு. மத்திய அமெரிக்கா என்றால் உலகின் சர்க்கரைக் கிண்ணமான க்யூபா. வட அமெரிக்கா என்றால் அழகான கடற்கரைகள் என அமெரிக்கப்பெருங்கண்டத்தின் செழிப்புக்கு முக்கியக்காரணம் ஆப்ரிக்காவின் சகாரா பாலைவனத்தில் இருந்து கிளம்பும் புழுதிப்புயல்.

# 2

இர்மாவைப் பற்றிப் பேசத்தொடங்கியதும் மோனிகா வின் உடல்மொழியில் மாற்றம் தெரிந்தது. முகம் லேசாக இறுகி கண்களில் தீவிரத்தன்மை கூடியிருந்தது. நல்ல சாமர்த்தியசாலியான அவளுக்கு வயது நாற்பத்தைந்து இருக்கலாம் என்பது பரணியின் அனுமானம். ஃபிளா ரிடாவின் ஒரு புகழ்பெற்ற கல்லூரியில் இருந்து நேரடி யாகக் காம்பஸ் இன்டெர்வியூவில் தேர்வாகி வந்தவள். வேலையில் கறார் பேர்வழி. அவளிடம் கடந்த ஐந்து வருடங்களாக வேலைசெய்கிறான். மற்ற விசயங்களைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் மேலோட்ட மாகச் சொல்லி கடந்துசெல்லும் மோனிகா ஹரிக்கேன் விசயத்தில் மற்றவர்களிடம் சற்று கடுமையாகவே நடந் துகொள்வாள்.

“இந்த வருசம் புதுசா வந்தவங்களுக்கு, கேட் ஃபைவ் ஹரிக்கேன்னா என்னனு தெரியும்ல ?” எனக் கேள்வி யாய் புருவத்தை உயர்த்திய மோனிகா, இர்மாவை கேட் டகிரி-ஐந்து எனும் ஐந்தாம் நிலை என்றும், மணிக்கு 150 மைல்களுக்கு அதிகமான வேகத்தில் சூரைக்காற்றை எதிர்பார்க்கலாம் என நிலைமையின் தீவிரத்தைப் பற் றிச் சொல்லத் தொடங்கினாள்.

அறையில் இருந்தவர்கள் நாற்காலியின் விளிம்புக்கு நகர்ந்திருந்தனர். ஆசானின் போதனைகளைக் கேட்கும் சீடர்களின் உடல்மொழியுடன் அவளை உன்னிப்பாகவே கவனிக்கத் தொடங்கினர்.

“நான் ஃபிளாரிடாவுல பிறந்து வளர்ந்தவள், இங்கே எத்தனையோ பெரிய ஹரிக்கேன்கள் வந்திருக்கு. ஆனால், இந்த இர்மாவின் ஆக்ரோசத்துக்கு நிகராக வேறெந்த ஹரிக்கேனும் இதுவரை வந்ததில்லை...

கரீபியனில பார்பூடா, யூஎஸ்-வீர்ஜின் ஐ லேண்ட்ஸ், பிரிட்டிஷ்-வீர்ஜின் ஐ லேண்ட்ஸ் னு சின்னதும் பெரிசுமாக பல தீவுகள் இருக்கு. அந்தத் தீவுகளைத் தாண்டி ஃபிளாரிடா வரும்போது இர்மாவோட வேகம் எப்படி இருக்குமோ தெரியாது. ஏன்னா வழியில கியூபா பக்கம் போனால் மலைகள். மலைகளைக் கடந்துவரும் போது வேகம் குறையும். போர்டரீகோ சமதளம். அப்போ வேகம் குறைய அதிக வாய்ப்பில்லை”. எனப் பல்வேறு நில அமைப்புகள் குறித்துப் பேசினாள்...

அவள் பேச்சில் இருந்த அனுபவமும், முதிர்ச்சியும் பரணிக்கு ஆச்சர்யமாக இருந்தது, நம்பமுடியாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

மோனிகா நிறுவனத்தில் முக்கியமான ஆள் கூட. இங்கே ஸ்மார்ட் மீட்டர்கள் என்றால் மோனிகா ஒரே ஓர் ஆள் தான். வீட்டுப்பயன்பாடு, வணிக, தொழில் நுட்ப மீட்டர்கள் குறித்த அனைத்து விசயங்களும் அவளுக்குப் பாலபாடம். முன்பெல்லாம் வாடிக்கையாளர்களின் மின் பயன்பாட்டைத் தெரிந்து கொள்ள வீடுகளில் மீட்டர்களைப் பொருத்தியிருப்பார்கள். அந்த மீட்டர் ரீடிங்கை கணக்கெடுக்க மாதமொருமுறை வீட்டுக்கு ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஸ்மார்ட் மீட்டர்கள் எனும் ஒற்றனை வீடுகளில் பொருத்திய பின் அது

யாருடைய உதவியும் இன்றி நேரடியாக ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மின்பயன்பாட்டைப் பக்காவாக அனுப்பிவிடும்.

மோனிகா தொழில்நுட்பத்தோடு தனக்கு இருக்கும் இலகுத்தன்மையை மனிதர்களோடு பழகுவதில் பெரிதாகக் காட்டமாட்டாள். வேலையைத் தாண்டி அவளிடம் நேரடியாக வேலை செய்பவர்களின் பற்றிய தனிப்பட்ட எந்த விசயங்களையும் தெரிந்துகொள்ள இம்மியளவுகூட அக்கறை காட்டமாட்டாள். வேலை, வேலையைத் தாண்டி சமயங்களில் அலுவலக அரசியல் எனும் எல்லையோடு நின்றுவிடுவாள். அதைத் தாண்டி "ஹைஸ்கூல் படிக்கும் உன் மகன் மேல என்ன படிக்கப் போறான் ?" இல்லை "உன் பெண்ணுக்கு இருபத்தினாலு வயசு ஆயிருக்குமே கல்யாணம் எப்போ ?" என்பது மாதிரியான தனிப்பட்ட கேள்விகளோ, விசாரணைகளோ எதுவும் கிடையாது. அவள் நல்ல திறமைசாலியாக இருந்தாலும் மனிதர்களோடு நெருங்கிப் பழகத் தெரியாமல் இல்லை பழக விருப்பமில்லாமல் இருப்பது அவனுக்கு வியப்பாக இருக்கும். அதுதான் பெருநிறுவன ஏணியில் அவள் இன்னமும் பல உயரங்களைத் தொடத் தடையாக இருக்கிறதோ என்றுகூட அவன் சமயங்களில் நினைப்பது உண்டு.

அறையில் பரணிக்கு இடதுபுறம் இருந்தது புனித். பரணியிடம் வேலை செய்யும் கேரளப் பையன். படுசுட்டி. அதனாலோ என்னவோ முப்பது வயதுக்குள்ளாகவே தலையை மைதானமாக வைத்திருந்தான். ஹரிக்கேன் என்றதும் அவன் முகத்தில் கலவரக் கோடுகள் அதிகமானதைப் பரணி கவனிக்கத் தவறவில்லை.

"நம்முடைய வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் இல்லாததைவிட இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில

தான் நம்முடைய தொழில்நுட்பச் சேவை அதிகமாகத் தேவை. அதனால், அதுக்கு தேவையான எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் செய்யுங்க." என்றவள் விடாமல்

"இப்ப ஒரு நாளைக்கு நம்ம ஸ்மார்ட் மீட்டர்களிடம் இருந்து சராசரியா எவ்வளவு ஈவன்ட்ஸ் வருது ?" என்றவள் பதிலை எதிர்பார்க்காமல்,

"நாலு மில்லியன் இருக்குமா ?, இதுமாதிரியான ஹரிக்கேன் சமயத்தில் இது ஐந்து மடங்கு ஆகலாம்"

"போன வருசம் வந்த ஹரிக்கேன் மேத்யூ போது..., "என இடைவெளி விட்ட புனித் "இருங்க பாத்து சொல்லிடுறேனே" என லேப்டாப்பை நோண்டத் தொடங்கினான்.

"தெட்ஸ் ஃபைன். மேத்யூ ஒரு பூனைக்குட்டி. வரப்போற இர்மாவோட ஆற்றலுக்கு முன்னால் அதெல்லாம் ஒன்னுமேயில்லை" என்றாள். பரணிக்கு பக்கென்றிருந்தது. போனவருட ஹரிக்கேன் போதே அவனுடைய அப்ளிகேசன்கள் அழுத்தம் தாளாமல் தள்ளாடியது நினைவுக்கு வந்தது.

'மீட்டர் ஈவன்ட்ஸ்' -ஐ மீட்டர்களோட இதயத் துடிப்பு என வைத்தோமானால், வெளியே பருவ நிலை மாறும் சமயங்களில் அந்த மீட்டர்கள் அதிவேகத்தில் மராத்தான் ஓடிக் களைத்து ஒழுங்கற்ற இதயத்துடிப்பைத் தரும். அதனால் தடுப்பு உடைந்த காட்டாற்று வெள்ளமாக ஈவன்ட்ஸ் ஆர்ப்பரித்து வந்து கொட்டும்.

"இன்னொரு விசயம், நாம சாதாரண மீட்டர்களை எல்லாம் ஸ்மார்ட் மீட்டராகி பத்து வருசம் கூட ஆகலை. நல்ல வேளையா இந்த ஸ்மார்ட் நெட்வொர்க் வந்தபின்னாடி பெரிய ஹரிக்கேன் எதுவும் இதுவர இங்க வரலை.

அதனால, இர்மாதான் இந்த ஸ்மார்ட் நெட்வொர்க் கோட பலத்தை, பலவீனத்தைச் சோதிக்கப்போகுது போல" என்றபடி லேசாக முறுவலித்தாள். பரணி தான் வசமாகச் சிக்கவைக்கப்பட்டதாக உணர்ந்தான்.

"கடைசியா இங்க வந்த பெரிய ஹரிக்கேன்னா அது வில்மா. 2005ல இங்க வந்தது. எனி வே, இப்போதைக்கு எதையும் உறுதியாச் சொல்ல முடியாது. வாச் அவுட் பார் அப்டேட்ஸ். எதுவும் சாத்தியம் தான். அதனால ஜாக் கிரதை" என்பதை இறுதியாக எச்சரிக்கும் தொனியில் அழுத்தமாகச் சொல்லிவிட்டு எழுந்துகொண்டாள்.

கூட்டம் முடிந்தது. மெலிதான காற்றில் போனால் போகி றது என மெல்ல அசையும் மரக் கிளைகள் போல ஒரு வித தயக்கத்தோடும், கலக்கத்தோடும் அந்தக் கூட்டம் கலைந்தது.

அறையிலிருந்து வெளியே வந்த சிலரின் முகங்கள் இப்போது வெளிறி இருந்தன. சிலர் மற்றவர்களின் முகத்தை எதிர்கொள்வதைக் கூடத் தவிர்த்தனர். சிலர் யாருடனோ அவசரமாகச் செல்போனில் தனித்துப் பேச மறைவிடம் தேடி ஒதுங்கினார்கள். நிச்சயமாக ஒருவர் பாக்கி இல்லாமல் அனைவரின் முகங்களிலும் குழப்ப ரேகைகள் தெளிவாக ஓடிக்கொண்டிருப்பது அப்பட்ட மாகத் தெரிந்தது. அடுத்து என்ன?, எப்போது?, எங்கே?, எப்படி? என்பதற்கான சுயதேடல்.

பரணி தன் கையில் இருந்த லேப்டாப்பை இப்போது கூடுதல் சுமையாக உணர்ந்தான். யோசனையோடு தனது டெஸ்கிற்குத் திரும்பினான்.

சில நிமிடங்களில் அலுவலகத்தின் சூழல் மாறியது. இர்மா பதற்றம் தீயாக பற்றிக் கொண்டது. ஒருவர் இரு வராகக் கூடி கூடி அவசரமாகப் பேசிக் கொண்டார்கள்.

வேலை பார்க்கும் மனநிலை எல்லோருக்கும் சுத்தமாக விட்டுப் போயிருந்தது. உலகத்தில் இதைத் தவிர வேறு முக்கியமான எந்த வேலையும் இல்லாதது போல இருந் தார்கள்.

டர்பன் கட்டிய சிங் அவசரமாக எழுந்துவந்து பரணியின் டெஸ்கை எட்டிப்பார்த்தான்.

"விசயம் தெரியும்ல, எங்க போறதா உத்தேசம் ? "என்றப டி பார்வையிலும் ஒரு கேள்வியோடு பார்த்தான்.

சிங் கரிய தாடி, மீசை சகிதமாக அடர் கறுப்பு, சிகப்பு, நீலம் எனக் கண்ணைப் பறிக்கும் நிறத்தில் டர்பனை இறுக்கிக் கட்டிக்கொண்டு சீக்கிய வழி வாழ்பவன். சிங் என்றால் வடமொழியில் சிங்கம், இவன் வேலையிலும் சிங்கம். ஆவி பறக்கும் காஃபியை ரசித்து உறிந்தபடி இரண்டு பேர் வேலையை தனியொருவனாக செய்து முடிப்பான்.

அதனாலோ இல்லை, மிகப்பெரிய கம்பெனி ஒன் றின் வழியாக வந்திருப்பதாலோ என்னவோ அவனுக்கு, மற்ற ஒப்பந்தப் பணியாளர்களை விட இரண்டு, மூன்று மடங்கு அதிகச் சம்பளம். ஆனால், இன்றைய தொழில் நுட்பத்தை விரல் நுனியில் வைத்தபடி கலகலப்பாக அலுவலகத்தைச் சுற்றி வரும் அவனுக்கு அந்தத் தொகையைத் தருவதில் மோனிகாவுக்குப் பெரிய பிரச் சனையில்லை.

"வீட்ல தான். வேறெங்க போறது" என்றான் பரணி சாதா ரணமாக,

"இது கேட்-ஃபைவ் . பசங்கள வச்சிகிட்டு இங்க இருக் கிறது அவ்வளவு பாதுகாப்பு இல்ல. நான் பக்கத்து

ஸ்டேட்ல ரூம்ஸ் பார்த்திட்டு இருக்கேன். சேர்ந்து போக லாமா ?"

பரணி, புன்னகைத்தபடி, தீர்மானமாய் மறுத்தான்.

"போன வருசம் ஹரிக்கேன் மேத்யூவுக்கே குடும்பத் தோடு அட்லாண்டா வுக்கு எஸ்கேப் ஆனவன் நான். இப்போ இர்மாவுக்கு இருப்பனா என்ன"

"ஆனால், மேத்யூ கேட்-ஃபைவ் இல்லையே"

சிங் தனது சொந்தக் கதையைப் புலம்பினான். கடந்த ஹரிக்கேனின் போது தான் தங்கி இருக்கும் வாடகை வீட்டின் உரிமையாளர் பாதுகாப்புக்காக ஹரிக்கேன் சட்டர்ஸ் பொருத்த மறுத்த கதையைச் சொன்னான். கேட்டால் வாடகை ஒப்பந்தத்தில் இல்லாத ஒன்றை உனக்கு நான் செய்யவேண்டிய அவசியமில்லை என வாதிடுகிறார் என்றான். இப்படி இங்கே எதுவாக இருந் தாலும் வாய் வார்த்தையைவிட, பேப்பரும் கையெழுத் தும் தான் அதிகம் பேசும்.

வெளியே தனக்கு அறை கிடைக்காத பட்சத்தில் ஓஹ யோவில் இருக்கும் உறவினர் வீட்டுக்கு போக உத்தே சித்திருப்பதாகச் சொன்னான்.

"இப்பவே ஃபிளைட்ஸ் எல்லாம் புஃல். ஆனால், கண் டிப்பாக நான் இங்க இருக்க மாட்டேன். யூ நோ அப வுட் மை சன்" எனச் சொல்லியபடி டர்பனுக்கு வெளியே லேசாகத் துருத்திக் கொண்டிருந்த முடியை சரிசெய்து கொண்டான்.

போன் செய்யக் கூட மறந்துபோன சொந்தக்காரர்களை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயம் சிங் கைப் போலப் பலருக்கு வந்திருந்தது.

சிங் தனது மகன் குறித்து அதிகச் சிரத்தை எடுத்துக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. சிங் பரணியைவிட வயதில் மூத்தவனா எனத் தெரியவில்லை. செயற்கரிய செய்வார் பெரியர் எனும் அய்யன் வள்ளுவனின் சொல் படி பார்த்தால் அவன் பெரியவன் தான்.

சிங்கின் சொந்த ஊர் பஞ்சாபில் லூதியானா. பரம்பரை பரம்பரையாக வியாபாரிகள். நகரின் மையப் பகுதியில் எலக்டிரிக்கல் கடை வைத்திருக்கிறார்களாம். இவன் மட்டும் முதல் தலைமுறை பட்டதாரியாக படித்து அமெ ரிக்கா வந்துவிட்டான். சிங்கின் அண்ணன் இன்னமும் தன் அப்பாவுடன் கடையைப் பார்த்துக் கொள்கிறார். துரதிர்ஷ்டவசமாக அவருடைய நான்கு வயது பைய னுக்கு ஒரு விநோத மருத்துவப் பிரச்சனை. அது ' தலசீ மியா' எனும் ஒருவித அபூர்வ இரத்த சோகை நோய். மரபு ரீதியான இரத்தக் கோளாறு பிரச்சனை. கடையில் வரு மானம் மோசமில்லை என்றாலும் அவர்களால் நோயுற்ற அந்தச் சிறுவனை இந்தியாவில் செலவு செய்து உயர் மருத்துவம் தந்து காப்பாற்ற இயலவில்லை. அமெரிக் காவில் உயர்தரச் சிகிச்சையும் அதற்கு மருத்துவக் காப் பீட்டு உதவியும் கிடைக்கும் வாய்ப்பிருந்ததால் இவன் அண்ணன் மகனை இங்கே அழைத்து வந்து உயர்தரச் சிகிச்சை தந்துகொண்டிருக்கிறான்.

அதற்காக அண்ணன் மகனை முறைப்படி தனது மக னாகத் தத்து எடுத்து, அமெரிக்கா வரவழைத்து இப் போது மருத்துவமனை, குருதிமாற்றம், குருதியேற்றம் என கடந்த நான்கு வருடங்களாக அல்லாடிக் கொண்டி ருக்கிறான். தான், தனது குடும்பம் என்றில்லாமல் அண் ணன் மகனுக்காக இதெல்லாம் செய்வது தியாகம். இது வரை இந்த மருத்துவச் செலவுக்கெனக் காப்பீடு நிறுவ னம் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேலாகச் செலவு செய்திருப்பதாகக் கேள்வி.

பரணி, கிடைத்த நேரத்தில் சென்ற வருட கோப்பு களை லேப்டாப்பில் தேடிக்கொண்டிருந்தான். இர்மா பற்றி மின்னஞ்சல்கள் குவிய தொடங்கியிருந்தன. சூறா வளிக்கு முன்பு தனது கணினி பயன்பாட்டுத் தொகுப் புகளுக்குத் தேவையான ஆயத்த நடவடிக்கைகளைக் குழுவினரிடம் கொடுத்து உடனே சரிபார்க்கச் சொன் னான்.

அடுத்து அவனிடம் "இப்போ என்ன பண்றது" எனக் கை பிசைந்து கொண்டு வந்து நின்றது புனித். முதலில் அவனைக் கண்களில் சந்தித்தவன் லேசாகச் சிரித்த படி வெற்றுப் பார்வை பார்த்தான். அவன் பார்வையில் ஒரு சோகம் தெரிந்தது. பாவம். ஒன்பது மாத கர்ப் பிணி மனைவியை வீட்டில் வைத்துக் கொண்டு இந்தச் சூழலில் நிம்மதியாக இருக்க முடியுமா? என்ன. சென்ற ஆண்டு பரணி இங்கே தங்கிக் கொண்டு புனித்தை வெளியூர் போக அனுமதி தந்திருந்தான்.

"போன வருசம் மேத்யூவுக்குத் தாம்பாவுக்குப் போனோம், இந்த வருசம்" எனச் சொல்லி சற்று நிறுத்தி "சந்தேகம் தான்" என முடித்தான்

"டிராவல் பண்ணலாமான்னு டாக்டர்கிட்ட கேளேன்" என்றான் உண்மையான அக்கறையோடு,

"அவங்க கூட இந்தியன் டாக்டர் தான். இனிமே தான் கேக்கனும்"

"தனிப்பட்ட முறையில என்னைக் கேட்டால், உங்க டாக் டர் அனுமதி தந்தால் பேசாமல் நீங்க பாதுகாப்பான இடத்துக்குப் போவதுதான் நல்லது"

சரி என்பது மாதிரி தலை அசைத்தவனின் முகத்தில் உணர்ச்சிகள் அதிகமில்லை.

புனித் காதல் திருமணம் செய்து கொண்டவன். அதுவும் இருவீட்டாரின் சம்மதம் இல்லாமல். அதனால் ஊரில் இருந்து பிரசவத்திற்கு யாரும் கண்டிப்பாக உதவிக்கு வரப்போவதில்லை எனதிடமாக அவன் சொன்னது பரணிக்கு நினைவுக்கு வந்தது.

“எங்க போனாலும், நீ ரிமோட்டா கனெக்ட் பண்ணு, முடியலைனா வேற ஆள வைச்சு சமாளிச்சுகலாம், பிரச்சனையில்லை”. என அவனுக்கு நம்பிக்கை தந்து அனுப்பி வைத்தான்.

‘நான் வேறு ஆளை வைத்து சமாளித்துவிடுவேன்’ என அவனிடம் சொல்லிவிட்டானே தவிர உண்மையில் அவனை அனுப்பிவிட்டால், நேரடியாக அந்த வேலையைப் பரணிதான் செய்யவேண்டும்.

பரணிக்கு வீட்டு ஞாபகம் வந்தது. அலுவலகத்தில் இருந்து வெளியே வந்தான். கருணையின்றிச் சுட்டுக் கொண்டிருந்த மதிய சூரியனுக்குப் பயந்து அங்கிருந்த ஒற்றைமர நிழலில் ஒதுங்கி போன் செய்தான்.

“தாரிணி, இர்மா விசயம் கேள்விப்பட்டியா ?”

“ம், இப்பதான் டிவிட்டர்ல பாத்தேன். அதுக்கு பின்னாலயே "ஹோசே"னு இன்னொரு புயல் வருதாமே ?”

“தெரியலை, முதல்ல நாம இர்மா பத்தி கவலைப்படுவோமே”

மோனிகா விசயங்களைச் சொன்னான்.

“ஆமாம், உங்க ஆபிசுல எப்பவும் ஓவர் பிரிப்ரேசன் தான்” என்றாள் அலுப்பாக

“நாம இங்கதான இருக்குறோம் ?”

“அப்புறம் ?, வேறெங்க போறதா உத்தேசம்” என்றவள் “சரி, எதுவாக இருந்தாலும் வீட்டுக்கு வாங்க பேசிக்க லாம்” என முடித்தாள்.

உள்ளே நுழையும் வழியில் உடன் வேலை செய்யும் அனா வை எதிரே பார்த்தான். வெள்ளைப் பெண் மணி. பஞ்சாய் வெளுத்த முடியை பாய் கட் செய்தி ருந்தாள், வயது அறுபதுகளின் தொடக்கத்தில் இருக் கலாம். இந்த வயதிலும் அதிக உழைப்பைக் கேட்கும் புரோகிரோமிங் செய்துகொண்டிருக்கிறாள். மின்சாரம் தொடர்பான இதுபோன்ற நிறுவனத்தில் அறுபது வயது என்பது பொதுவாகப் பெரிய வயதில்லை. அமெரிக்கா வில் தனியார் நிறுவனங்களில் ஓய்வுபெற எனத் தனி யாக வயது எதுவும் வரையறுத்துச் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை. தேவைப்பட்டால் அறுபத்திரண்டு வய தில் அரசாங்கத்திடம் சோசியல் செக்யூரிட்டி எனும் ஓய் வூதியத் தொகையை, நலன்களைக் கோரலாம். மற்றபடி உடலும், மனதும் ஒத்துழைக்கும் வரை வேலை செய்ய லாம்.

அறுபது வயதில் அவள் புரோகிராம் செய்யத் தயாராக இருந்தாலும், அவளுடைய வேலையைச் செய்ய இந்தி யாவில் இருந்து இருபத்தைந்து வயதுக்குள் எச்ஒன்பி (H1B) விசா உள்ள ஓர் ஆளை எளிதாகப் பிடித்து விட முடியும் என்பதால் அவள் வேலைக்கு உத்தரவாத மில்லை என அலுவலகத்தில் பேச்சிருக்கிறது.

அவள் அமெரிக்காவின் குளிரும் ஒரு வடமாநிலத்தில் இருந்து வந்து இங்குப் புதிதாக வேலைக்குச் சேர்ந்த வள். புதிதாக என்றால் சுமார் ஒன்று இல்லை இரண்டு வருடங்கள் இருக்கும். அவளுக்குக் கல்யாணம் ஆனது போலவோ இல்லை குழந்தைகுட்டிகள் எதுவும் இருப் பது மாதிரியோ தெரியவில்லை. அமெரிக்காவில் கல்

யாணம் ஆனால்தான் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் சமூகக் கட்டுப்பாடுகள் எதுவும் கிடையா. அதுபோல உடன் வேலைசெய்பவர்களிடம் ஒரு வரைமுறையோடு தான் பழகுவார்கள். தனிப்பட்ட விசயங்கள் பெரும்பாலும் விவாதிக்கப்படுவதில்லை.

சமீபத்தில் இப்படிதான் உடன் வேலைசெய்யும் ஒருவர் எந்தத் தகவலுமின்றித் தொடர்ச்சியாக நான்கு நாட் கள் வராமல் போக, ஹெச்.ஆர் விடாமல் போன் செய்து பார்த்துவிட்டு போலீசுக்குத் தகவல் சொல்ல , அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டிப்பார்த்து விட்டுக் கடைசியில் உள் பக்கம் தாழிட்டிருந்த கதவை உடைத்துப் பார்த் தால், படுக்கையில் மூன்று நாள் அழுகிய நிலையில் பிணமாக...

தனியாக வாழும் அவளுக்கு இந்த ஊரில் உறவினர், நெருங்கிய நண்பர்கள் என யாரும் இருப்பது மாதிரி யும் தெரியவில்லை. அலுவலகத்திலும் யாரிடமும் பெரி தாகப் பேசிக்கொள்ள மாட்டாள். தான் உண்டு தன் வேலை உண்டு என ஒரு குகைக்குள் வாழ்பவள். அலு வலகத்தில் அவள் பேசும் ஒரிருவர்களில் பரணியும் ஒரு வன். அந்த உரிமையில் இர்மாவைப் பற்றி விசாரித்தான்.

சில நொடிகள் பேசாமல் அவன் கண்களைச் சந்தித்த வள், “ஐ டோன்ட் நோ” என்றாள் வெறுமையாக

பின் சுவரில் வீசிய பந்தாக அதே கேள்வி அவனுக்குத் திரும்பி வந்தது.

“ஹௌவ் அபட் யூ ?”

“நான் இங்கதான் இருப்பேன்”

“பாதுகாப்பானதா ?”

“அப்படிதான் நினைக்கிறேன்”

“ஆனால், உன்னோட வீடு கடலுக்கு நெருக்கம்னு சொன்னதாக ஞாபகம் இருக்கே” என்றான் பதிலாக

“எஸ்” எனச் சொல்லி கண்களைச் சந்தித்தவள், தயங்கியபடி “ஐ யம் ஒரீட், எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை” என்பதைச் சொல்லி முடிக்கும் முன் நா வறண்டு தொண்டை கட்டி குரல் கரகரத்தது. இனம் புரியாத பதற்றத்தால் அவள் முகம் சட்டென முழுவதுமாகச் சிவந்தது. அவளின் மொத்த இரத்தமும் திரண்டு வந்து முகத்தை நோக்கி பீரிட்டுப் பாய்ந்ததைப் போல் சிவப்பானது. அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அவளுடைய கைகள் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தன.

பரணிக்கு அதிர்ச்சியாக இருந்தது. தேவையில்லாத கேள்வியைக் கேட்டுவிட்டோமோ எனும் குற்றவுணர்ச்சி வந்தது. என்ன சொல்லி சமாதானம் செய்வது என்றும் அவனுக்குப் புரியவில்லை. அவள் வயதுக்குத் தான் என்ன சொன்னாலும் சரியாக இருக்குமா இல்லை எடுபடுமா என்றும் தெரியவில்லை.

“நீ கவலைப்படாதே, ஒன்னும் பெரிதாக நடக்காது” எனச் சொல்லிவிட்டு சில நொடிகள் அங்கே நின்றுவிட்டு நகர்ந்தான். அவநம்பிக்கையில் அவனைப் பார்த்த கண்களில் இருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. வழிந்த கண்ணீரைத் துடைக்க அவன் கைகள் எழாவிட்டாலும், அவன் மனம் அவளது கண்ணீரை சுற்றியபடி இருந்தது. அவளுக்கு ஏதேனும் செய்யவேண்டுமென்கிற நினைப்பு அவனை வேலை செய்ய விடாமல் தொடர்ந்து அலைகழித்துக் கொண்டே இருந்தது. மோனிகாவிடம் சொன்னான். நிமிர்ந்து பார்த்தவள் ஒரு நொடி தாமதித்து “ஐ வில் டேக் கேர்” என்றாள். இனி

அவள் என்ன செய்வாள் என்பதை அவனால் தெளி வாக அனுமானிக்க முடியவில்லை.

பரணி வேலை முடித்துத் திரும்பும்போது மாலையில் மோனிகாவைப் பார்த்தான். சாதாரணமாகத் தினமும் மேனேஜரிடம் அவனுக்கு நேர்வார்த்தையாடல் கிடை யாது. தேவைப்பட்டால் மட்டுமே பேசுவான். அவள் வழக்கத்தைவிட அதிகப் பரபரப்பிலும் பதற்றத்திலும் இருந்தாள். கொஞ்சம் பேச வேண்டுமே என்றான். "ஸ்யூர்" எனச் சொல்லி நிமிர்ந்து பார்த்தவளிடம் தன்னு டைய ஆயத்தப் பணிகள் குறித்து விளக்கினான். பொறு மையாகக் கேட்டாள்.

வாடிக்கையாளர்களின் வீடுகளில் பொருத்தப்பட்டிருக் கும் மீட்டர்கள் ஸ்மார்ட்டாக இருந்தாலும், ஒருநாளைக் குச் சராசரியாக சில ஆயிரம் மீட்டர்களிடம் இருந்து தினசரி மின்பயன்பாட்டை எடுப்பதில் சிக்கல் இருக் கும். இப்படித் தொடர்ச்சியாகத் தினப்படி பிரச்சனை செய்யும் மீட்டர்களைக் கண்டுபிடித்து அதை நிவர்த்தி செய்ய ஆட்களை நேரடியாக வீட்டுக்கு அனுப்புவார் கள். அதற்கு உதவிசெய்யும் கணினி நிரல் அவனுடைய கண்காணிப்பில் வருகிறது.

அந்த நிரல் பற்றி மோனிகா அதிகம் விசாரித்தாள். ஹரிக்கேன் முடிந்த பின்னால் பல லட்சம் மீட்டர் கள் வேலை செய்யாமல் போகும் என்பதால் அதைக் கையாள தயாராக இருக்கச் சொன்னாள்.

"லெட்ஸ் டூ அவர் பெஸ்ட். ஹரிக்கேன் ஏற்படுத் தும் சேதாரம் குறித்து இப்போதைக்கு நம்மால் எதை யும் உறுதியா சொல்ல முடியாது". தேவைப்பட்டால் கம் ப்யூட்டர் சர்வர்களுக்குக் கூடுதலாக ஹார்ட்வேர் ஏற்பாடு செய்ய அறிவுறுத்தினாள்.

இடது கையால் கண்ணாடியைச் சரிசெய்தபடி சற்று இடுக்கிய கண்களுடன்

“அப்புறம், உன்னோட பிளான் என்ன ?”

“புரியல” என்றான் பரணி விவரம் புரியாமல் இதுமாதிரி யான அவசரகாலச் சூழ்நிலைகளின் போது வேலைக்கு வருவேன் என அவன் கையெழுத்திட்டதை நினைவுப டுத்தினாள்.

“நீ மட்டுமல்ல இந்தக் கம்பெனியில் ஜாயின் பண்றப் போது நாம எல்லாரும்தான் அந்தக் கண்டீசனுக்கு ஒத் துகிட்டுதான் இங்க வேலைக்குச் சேர்ந்திருக்கிறோம். என்றவள் சரி, நீ இங்கதான் இருக்கப் போற இல்லை” என்றபோது அவள் குரல், “ஆம்” எனும் பதிலை எதிர் பார்ப்பது போல இருந்தது.

“ஐ திங் சோ” என்பதை யோசனையோடு மேலோட்டமா கச் சொன்னான்.

“இல்லை. இந்தத் தகவல்களையெல்லாம் சேகரித்து என்னோட மேலதிகாரிகளுக்குத் தொகுத்து கொடுக்க னும். எவிரி ஒன் ஈஸ் டு பீ அக்கவுண்டட் ஃபார் “

“இன்னொரு விசயம். உன்னை ஸ்டாராம் ரெய்டராக நாமெனிட் பண்ணியிருக்கேன், சம்மதம் தானே ?” என் றாள்.

'ஸ்டாராம் ரெய்டர்' எனும் பொறுப்பை எடுத்துக் கொள்பவர்களுக்கு ஹரிக்கேனின் போதும் அதைத் தொடர்ந்து வரும் சில நாட்களுக்கும் கமாண்ட் சென் டரில் தான் வேலை. அங்கிருந்து வாடிக்கையாளர்க ளுக்கு மின் விநியோகத்தைச் சீரமைக்கும் பணிக்கு தொழில்நுட்ப உதவிகளைச் செய்யவேண்டும்.

ஹரிக்கேன் சமயத்தில் குடும்பத்தைப் பிரிந்து இருக்கவேண்டியிருக்கும் என்பதால் பரணி உடனே பதில் சொல்லாமல் யோசித்துச் சொல்வதாகச் சொன்னான்.

"சரி. எதுவாக இருந்தாலும் உடனடியா சொல்லிடு" என்றவள். சற்று இடைவெளி தந்து பாதுகாப்பு அதிமுக்கியம் எனப் பொருள்படும் படி "சேப்டி இஸ் த மோஸ்ட் இம்பார்டன்ட்" என்றாள்.

அவள் தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறாள் என்பதை அவனால் மிகச்சரியாக ஊகிக்கமுடியவில்லை.

விடைபெற்று பரணி வெளியே வந்தான். மாலை இளஞ்சிவப்பாக மயங்கிக் கொண்டிருந்தது. அந்தியில் கூட்டுக்கு அவசரமாய் விரையும் குருவிகள் போல் கார்கள் வேகமாகப் பறந்து கொண்டிருந்தன.

பரணிக்குச் சாலையில் வழக்கத்திற்கு மாறாக எல்லா விசயங்களும் சற்றுத் துரிதகதியில் நடப்பது போலிருந்தது. அவனுக்கு மட்டும்தான் அப்படித் தோன்றியதா இல்லை உண்மையில் அப்படிதான் நடந்ததா என்றும் உறுதியாகத் தெரியவில்லை. சிகப்பு விளக்கிற்கு நிற்பவர்களிடம் கூட ஒருவிதப் பதற்றத்தைக் கவனித்தான்.

வீட்டுக்கு வரும் வரை, யோசனையாக இருந்தது. மோனிகா சொன்ன பல விசயங்களில் ஒருவிசயம் அவனை உறுத்திக் கொண்டிருந்தது.

"கேட்டகிரி-ஃபைவ் இஸ் நாட் அ ஜோக். இட் இஸ் அ சீரியஸ் பிசினஸ்".

இன்று ஆப்ரிக்காவின் மூன்றில் ஒரு பகுதியை அடைத்திருக்கும் உலகின் மிகப்பெரிய பாலைவனம் சகாரா. அது ஒரு காலத்தில் (சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்) மழை தொடர்ச்சியாகப் பொழிந்த செழிப்பான பூமியாக இருந்திருக்கிறது (அரபியில் 'சகாரா' என்றால் பாலைவனம்) . அதனால் சகாரா பாலைவன மண் என்பது நாம் நினைப்பது மாதிரி வெறும் சாதாரண மண் அல்ல. அது அங்கு ஏற்கனவே பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மடிந்த விலங்

குகள், தாவரங்களின் உயிர்ச்சத்துகள் நிரம்பிய மண்.

****************

# 3

பரணி குடியிருப்பு வளாகத்திற்குள் நுழைந்ததும் தூரத்தில் இருந்தே வீட்டைக் கவனித்தான். வரிசையாக ஒரே மாதிரியான காங்கிரீட் வீடுகள். வீட்டுக் கூரைகள் ஏறக்குறைய கேரளத்தை ஒத்து இருந்தன. வெளிர் பச்சை நிறத்தில் இருந்த அனைத்து வீடுகளும் டவுண் அவுஸ் வகை. இந்த அமைதியான சூழலும், சீரான நேர்க் கோட்டில் அமைந்த சாலைகளும் ஒத்த அமைப்பிலான வீடுகளும் பரணிக்குச் சிறுவயதில் பார்த்த மேல்நாட்டு ஓவியங்களை நினைவுபடுத்தும். வீட்டின் பின்புறமாக வந்தான். அமைதிப் போர்வை சுவடாய் படர்ந்திருந்த டிரைவேயில் தாரிணியின் கார் ஆழ்ந்த தியானத்தில் நின்றிருந்தது.

காரில் இருந்தபடியே ரிமோட்டில் கராஜைத் திறந்துக் காரை உள்ளே நிறுத்தினான். இருபத்தைந்து மைல்கள் ஓடிவந்த களைப்பில் கார் மெலிதாக அடங்கி நின்றது. ஷூக்களைக் கழற்றி வைத்துவிட்டு பின்வாசல் வழியாக உள்ளே நுழைந்தபோது வீட்டில் யாருமில்லை.

சமையலறையைத் தாண்டி ஹாலுக்கு வந்தான். மொசைக் தரை குளிரியது. ஃபேன் சலனமின்றிச் சுழன்று கொண்டிருந்தது. வீட்டிற்குக் கிழக்கு பார்த்த முன்வாசல் என்பதால் இந்த மாலை வேளையில் ஹாலில் நிழல் வடிந்திருந்தது. டீபாயில் வெள்ளைத் தாள்கள், வண்ண பென்சில்கள், கிரையான்கள் பரப்பிக் கிடந்தன. சோபாவில் மூத்தவள் அம்முவின் கனமான புத்தகப் பை அழுத்திக்கொண்டு கிடந்தது. பட்டாம் பூச்சிகளின் முதுகில் பாறாங்கற்களைச் சுமக்க வைக்கிறோமோ எனச் சமயங்களில் பரணியைக் குற்ற உணர்ச்சி கொள்ளச் செய்யும் பத்து கிலோ எடை. வலித்தது.

தாரிணியைத் தேடி இடதுபுறம் இருந்த மாடிப்படியில் ஏறி மேலே போனான். முதலில் அம்முவின் படுக்கை அறையில் எட்டிப்பார்த்தவன் பின் கவி, அவனுடையது என மூன்று படுக்கை அறைகளிலும் எட்டிப் பார்த்தான். மேலே யாரும் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. கார்பெட் விரித்த படிகளில் திரும்ப அவசரமாக இறங்கினான்.

போன் செய்து பார்க்கலாமே எனும் சிந்தனை சட்டென வந்தது. அப்போது முன்வாசல் கதவு தாழிடப்படாமல் இருந்ததைக் கவனித்து யோசனையோடு திறந்தான். தாரிணி திண்ணை போன்ற வெளி முற்றத்தில் அமைதியாக அமர்ந்திருந்தாள். ஆச்சர்யமாக இருந்தது. அவன் இந்த வீட்டுக்கு வந்த இரண்டு வருடங்களில் அவள் இங்கே தனியாக அமர்ந்திருந்த தருணங்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

தினமும் பம்பரமாக சுழலும் வேலை அவளுக்கு. காலையில் எழுந்து பிள்ளைகள் இரண்டையும் கிளப்பி, பள்ளியில் விடுவதில் தொடங்கி அவர்களைத் திரும்பக் கூட்டி வருவது, கணக்கு, பியானோ, பாடல், நடன பயிற்சி

வகுப்புகள் என இரவு வரை பிசியான ஷெட்யூல் அவளுக்கு.

உடை மாற்றாமல் அப்படியே அவளுக்கு அருகில் இருந்த
பிரம்பு நாற்காலியில் அமர்ந்தான்.

அவன் கல்யாணமே ஒருவிதத் துரிதக் கல்யாணம் தான். வெளிநாட்டில் இருந்து நான்கு வார விடுமுறையில் ஊருக்குபோனவன் முதல்வாரம் அவளைப்பார்த்துச் சரியெனச் சொல்ல, மறுவாரம் நிச்சயம். நிச்சயித்த பத்தாவதுநாள் சரியாகத் தாலி கட்டினான். அதுநடந்து பத்துவருடங்களுக்கு மேலாகி இரண்டு பிள்ளைகளும் வந்துவிட்டனர்.

பிள்ளைகள் வளரும் இந்த அவசரமான நாட்களில் பரணி, தாரிணியுடன் தனித்து இருந்து பேசும் தருணங்கள் அரிதாகி வருவதாக சமயங்களில் நினைப்பதுண்டு.

“நீ என்ன தனியா உட்காந்திருக்க” என்றான்.

பக்கவாட்டில் திரும்பியவள், “இரண்டும் கிரவுண்டுக்கு விளையாட போயிருக்கு, அப்றம் என்ன இன்னைக்குச் சீக்கிரமா”

இது சாதாரணப் பேச்சில்லை என்பதால், ஒருவித தயக்கத்தோடும் முன்னெச்சரிக்கையோடும் “இர்மாவுக்குத் தயாரா ?” என்றான்.

“என்ன பெருசா ரெடி ஆகணும். வழக்கம் போல எமர்ஜென்ஸி சப்ளைசை வாங்கிட்டு வந்து வையுங்க” எனச் சாதாரணமாகச் சொன்னாள்.

டீபாயின் மேலிருந்த பீங்கான் குவளையைக் கவனித்துக் கையில் எடுத்தான். சூடு இருந்தது. குடிக்க போன

வனைத் தடுத்தவள் "அது காஃபி, எனக்குப் போட்டது. டீ வேணா எடுத்துட்டு வரேனே" என்றபடி பதிலுக்குக் காத்திராமல் உள்ளே போனாள்.

இர்மா பற்றிய எந்தவிதமான பதற்றமும் இல்லாமல் அவள் இருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டான்.

காலையில் மோனிகா இருந்த அறையில் அவள் தன்னுடன் இருந்திருந்தால் வேலை சுலபமாக இருந்திருக்குமே எனும் ஆதங்கம் வந்தது. இப்படி உலகில் எல்லோருக்கும் ஒரேமாதிரியான தகவல்கள் கிடைத்தால் வாழ்வில் பெரிதான சுவாரசியம் இருக்காதோ எனத் தோன்றியது.

எதிரே விரிந்து கிடந்த ஏரியைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'லேக் வீயூ'எனும் இந்த அமைப்பிற்காகவே வீட்டுக்குக் கூடுதலாக ஐந்தாயிரம் டாலர்கள் செலவு செய்து வாங்கியது நினைவுக்கு வந்தது.  சொந்த வீடு எனும் கனவு ஒருபுறம் இருந்தாலும் நிதிச்சுமை இப்போது தேவையில்லை எனப் பல வருடங்களாகத் தள்ளிப் போட்டுக் கடைசியில் பிள்ளைங்க பெருசாகுதுங்க, நமக்குனு ஒரு நிரந்தரமான இடம் வேண்டும் என முடிவெடுத்து இரண்டு வருடங்களுக்கு முன்புதான் தேடித் தேடி இந்தவீட்டை வாங்கினான். அதிலும் தாரிணிக்கு ஓப்பன் கிச்சன் மாடல், அம்முக்கு ஃபிரெஞ்ச் ஜன்னல், அவனுக்கு லேக் வீயூ, இரண்டடுக்கு மாடி என பல கட்டுப்பாடுகள் வேறு..

கையில் இருந்த சேமிப்பையெல்லாம் முன் பணமாகக் கொடுத்துவிட்டு, மீதம் உள்ளது முப்பது வருட வீட்டுக்கடன் என ஊரில் சொன்னபோது, "என்னது முப்பது வருசமா ?
உன்னோட பாதி ஆயுசுக்கு கட்டணும் போலருக்கேடா. பாத்து பண்ணு" என்றார் அப்பா. அவர் சொன்னதுமாதிரி

முப்பதுவருட வீட்டுக்கடன் என்பது ஒருவித சிறைவாசம் எனும் மத்தியதரவகுப்பு நினைப்பு அவனுக்கு இன்றும் உண்டு. இதுபோன்றதொரு வீட்டை அமெரிக்க வீட்டு வெற்றுக்குமிழி (housing bubble) எனும் வீட்டு மனைச் சந்தை சரிவடைந்த 2009-2010 வாக்கில் வாங்கியிருந் தால் மிகுந்த லாபமாக இருந்திருக்கும்தான். ஆனால், இப்படி நிறைவேறாத ஆசையை, ஏக்கத்தைப் போட்டு நிரப்பிக்கொள்வதில் அவனுக்குப் பெரிய உடன்பா டில்லை.

அவனைப் பொறுத்தவரை ஒரு விதத்தில் அமெ ரிக்க வாழ்க்கை என்பதொரு சூதாட்டம். ஆரம்பத் தில் ஜெயிப்பதுபோலத் தோன்றினாலும், கண்ணுக்குத் தெரியாமல் தொடர்ந்து பலவற்றை இழந்து கொண்டே யிருப்பதாக நினைத்தான். நல்ல சம்பளம், அலைச்சல் இல்லாத வாழ்க்கை என மெதுவாகத் தொடங்கிய இந் தக் கவர்ச்சியான ஆட்டத்தில் முதலில் சொந்த ஊர், பெற்றோர்கள், குடும்பம், நண்பர்களை இழந்து பிள் ளைகளை வென்றிருந்தான். ஆனால், அந்தப் பிள்ளை களின் ஊடாகத் தாய்மொழி, பண்பாடு, மரபு எனும் பல இழப்புகளோடு ஆட்டத்தை விட்டு விடாமல், மீள இய லாமல் தொடர்ந்துகொண்டேயிருப்பதாக நினைத்தான். அமெரிக்கா வந்து இத்தனை ஆண்டுகள் கழித்துத் திரும்பிப் பார்த்தால் அடைந்ததை விடத் தான் இழந்தது அதிகமோ எனச் சமயங்களில் அவனுக்குத் தோன்றும்.

ஏரியை சற்றுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந் தபோது, தாரிணி டீயுடன் வந்திருந்தாள். கோப் பையை வாங்கிக்கொண்டு இர்மா தொடர்பாக தனக் குத் தெரிந்த அனைத்தையும், அவளிடம் முழுவதுமாகச் சொன்னான். சிங் வெளி மாநிலத்துக்குப் போவதையும் சேர்த்தே சொன்னான்.

“அவர் மேத்யூவுக்கே இங்க இல்லைனு சொன்னீங்க”

“இது மேத்யூ மாதிரி இல்லையாம், பெரும்பாலும் கேட்ட கிரி-ஃபைவ் ஆக வர வாய்ப்பு இருக்குதாம். அது மட்டு மில்லாமல் பெண்கள் பேரில் வர்ற ஹரிக்கேன்ஸ் எப்ப வும் கூடுதல் ஆபத்துதான்” என்றான்

“இர்மா-ன்ற பேர்ல வர்ரதால அதிக பாதிப்பு வரப்போ குதா என்ன” என ஏளனமான குரலில் கேட்டவள் “எப்ப கன்பார்ம்மா சொல்ல முடியுமாம் ?”

“வியாழக்கிழமை தான் உறுதியா தெரியவருமாம். ஏன் நியூஸ்செல்லாம் பார்க்கிறதில்லையா ?” எனக் கேள்வி கணை தொடுத்தான்.

“ஏன், வீட்ல டீவி கனெக்சனைக் கட் பண்ணினது மறந்து போச்சா ?” எனச் சட்டென பதிலடி தந்து சொற் போருக்குத் தயாரானாள்.

“இன்டெர்நெட் தான் இருக்குதே”. என பேச்சை வளர்க் காமல் நேரடியாக விசயத்துக்கு வந்தான்

“இது ரொம்ப ஆபத்துனா. எதுக்குப் பிரச்சனை. நீங்க வேணா வேற எங்கயாவது சேஃபா போயிடுங்களேன்” என்றான்.

நம்ப முடியாமல் அவனைப் பார்த்தவள். “சட்டுனு இப்ப எங்க போக சொல்றீங்க ?” என்றாள் கூர்மையாக

“யாராவது பிரெண்ட் வீட்டுக்கு”

“யாராவது பிரண்டு வீட்டுக்கா. என்ன பேசுறீங்க” இப் போது குரலில் கூடுதல் கோபத்தைத் தடவியிருந்தாள்.

நியூ ஜெர்சியில் யாரையாவது கேட்கலாமே என யோசனை சொன்னான்.

“ஒரு உதவினா மட்டும் நான் யாரட்டயும் போய் பேசவும் முடியாது. வீட்ல போய் நிக்கவும் முடியாது” பட்டெனச் சீறினாள்

“வேணும்னா நான் பேசுறேனே” என்றான் தணிவான குரலில்

“சரி. நாங்க எப்படிப் போறது ?”

“இங்க பக்கத்துல ஏர்போர்ட் பிளைட்ஸ் எல்லாம் புக் ஆயிட்டாம். அதனால பேசாம கார்ல ஆர்லெண்டோ போய் அங்க இருந்து பிளைட் புடிச்சு வெளிய போயி டுங்க”

“நீங்க ?”

“நான் இங்க இருந்துப்பேன். எனக்கு ஸ்டார்ம் டியூட்டி இருக்கு”

“எங்களுக்கு இங்க பாதுகாப்பு இல்லைனா, உங்க ளுக்கு மட்டும் என்ன வாழுதாம்”

“நான் ஆபிசில தங்கிக்க முடியும்னு நினைக்கிறேன். மோனிகாவுக்குப் போன் செய்து கேக்கவா ?”

டையை உறிஞ்சியபடி கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

பார்வையால் துளைத்து விடுபவள்போல் ஒரு நொடி பார்த்தவள் உறுதியான குரலில்

“வேண்டாம். அதெல்லாம் ஒன்னும் சரியா வராது. என் னால பசங்கள வச்சிக்கிட்டு தனியா இங்கேயிருந்து மூனு மணி நேரமெல்லாம் ஓட்டிட்டு போகமுடியாது”

கைவிடப்பட்டது போல உணர்ந்தவன் அவளைச் சமா தானம் செய்யும் நோக்கில் பேச வாயெடுத்தபோது

“இங்க பாருங்க, கூட வர்தா இருந்தா சொல்லுங்க. சேர்ந்து போறத பத்தி யோசிப்போம். நாங்க தனியா போறதெல்லாம் சரியா வராது”

“சரியா வராதா ?”

“ஆமா. அப்படியே எதாவது பிரச்சனைனா, ஆளுக்கொரு பக்கம்
பிரிஞ்சு இருக்கணுமா?”

அந்தக் கேள்விக்கு ஆம்/இல்லை எனும் கறுப்பு/ வெள்ளை பதில் அவனிடம் இல்லை. அவன் பேச வாயெடுத்தபோது அவள் பட்டென

“எங்களை ஊருக்கு அனுப்பி வைக்கிறதுல இவ்வளவு குறியா இருக்கீங்களே. உங்களுக்கு எங்களோட நிம்மதி முக்கியமா இல்லை, நீங்க இங்க தனியா இருக்கிறது தான் முக்கியமா”

எனச் சண்டைக்காரியாக எதிர்க்கேள்வி கேட்டாள். சில நொடிகள் மௌனத்துக்குப்பின் அவனைச் சமாதானம் செய்வது போல் “நீங்க பயப்படுற மாதிரி எல்லாம் பெருசால்லாம் ஒன்னும் வராதுங்க. நம்ம வீடு சேபாஃ தான் இருக்கும், பேசாமல் இங்க வீட்டுலயே இருந்திடலாம். அப்படியே எதாவதுனாலும், அக்கம் பக்கத்துல பிரண்ட்ஸ் யாராவது உதவிக்கு வராம போயிடுவாங்களா என்ன” எனச் சமாதானம் சொன்னவள் அவனது பதிலுக்குக் காத்திராமல் எழுந்தாள்.

பரணிக்குக் குழப்பமாக இருந்தது. குடும்பத்தைப் பிரிந்து அவனால் தனியாக இருக்க முடியுமா என வெகு நேரம் யோசித்தான். தாரிணி தன்னால் யூகிக்க முடியாத ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாளா என்ன. ஆனால், அவள் இயல்பே அப்படிதான் முன் தீர்மானமில்லாமல்

எப்போதுமே மிகுந்த நடைமுறை தன்மையுடன் பேசுப வள். அவள் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகப் பட் டது. அவளை அவன் வற்புறுத்தவில்லை. அனுசரித்துப் போக முடிவெடுத்தான். அவளைச் சமாதானப்படுத்துவ தும் சாத்தியமில்லை எனப்பட்டது. பரணி இர்மாவைக் குடும்பத்தோடு உறுதியாக எதிர்கொள்ளத் தயாராக முடிவெடுத்திருந்தான்.

வாசலில் இருந்த செம்பருத்தி மரத்தருகில் நின்றபடி மோனிகாவுக்கு போன் செய்தான். குரலில் உறுதித்தன் மையை வரவழைத்துக்கொண்டு, ஸ்டார்ம் ரெய்டராக (Storm Raider) வர தனக்கு விருப்பமில்லை. ஆனால், வீட்டில் இருந்தபடி ஸ்டாராம் டியூட்டி பார்ப்பதாகச் சொன்னான். கூடவே புயல் அடித்து ஓய்ந்தபின் முதல் வேலையாக அலுவலகம் வந்துவிடுவதாக உத்தரவா தமும் கொடுத்தான். மறு முனையில் சில நொடிகள் மவுனத்திற்குப் பின் ஏதோ முடிவெடுத்தவளாய், "ஆல் ரைட். ஆர் யூ ஸ்யூர் ?, ஆர் யூ ஸ்யூர் ?" எனக் கேட்டு உறு திசெய்து கொண்டாள். ராணுவ விறைப்போடு "ஆமாம், ஸ்யூர். கண்டிப்பாக" என்றான். பேசி முடித்ததும் தனது குரலில் கூடுதல் செயற்கைத் தன்மையைக் கூட்டிவிட் டேனோ என்று அவனுக்குத் தோன்றியது.

தாரிணி சொன்னதுபோல் தனது வீடு எனும் சிறு ஓடத் தைப் பற்றிக் கொண்டு இர்மா எனும் ஆர்ப்பரித்து முன் னேறும் பெருங்கடலைக் கடக்க ஆயத்தமானான்.



சகாரா பாலைவனத்தின் உயிர்மண் ஆப்பிரிக்கக் காடுகளில் இருந்து கிளம்பும் காற்றால் புழுதிப் புயலாக மாறி அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து அமெரிக்கக் கண்டத்தை நோக்கிப் பயணிக்கிறது.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய ***180*** மில்லியன் டன் மணல் புழுதியாக அட்லாண்டிக் பெருங்கடலைக் கடப்பதாக ***2006***ல் நாசா ஆய்வு செய்து சொல்லியிருக்கிறது. இந்தப் பல ஆயிரம் மைல்கள் நீண்ட நெடிய பயணத்தில் அது பல சூழியல் மாற்றங்களை நிகழ்த்திச் செல்கிறது. அதிக அளவு புழுதி காற்றில் மிதந்து வந்த ஆண்டுகளில் அமெரிக்காவைச் சுழற்றியடிக்கும் சூறாவளிகளின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்காகக் குறைந்தது என்கிறார்கள்.

************

# 4

மாலை கடந்து இரவாகியிருந்தது. அம்மு தனது படுக் கையறையில் இருந்து அவனைக் கூப்பிட்டாள். மெத் தையில் அமர்ந்தபடி மடியில் லேப்டாப்பை வைத்திருந் தவள், அவன் கையில் சில பேப்பர்களைத் திணித்து "இதெல்லாம் சரியா இருக்கானு பாருங்கப்பா" என்றாள். பார்த்தான். வகுப்பில் ஹரிக்கேன் இர்மாவின் பாதை யைக் குறிப்பிட்ட இடைவெளியில் பின்தொடர்ந்து குறிப்பெடுக்கச் சொல்லி இருந்தார்கள். தேதி, நேரம், வேகம் என வரிசைப் படுத்தி இர்மாவின் போக்கை அட்சரேகை, தீர்க்கரேகையுடன் அட்டவணைப்படுத்தி யிருந்தாள். கூடவே 'அட்லாண்டிக் பேசின் ஹரிக்கேன் டிராக்கிங் சார்ட்'எனத் தலைப்பிட்ட அமெரிக்க நிலவ ரைபடத்தில் இன்று இர்மா அட்லாண்டிக்கில் கரீபியன் தீவுகளுக்கு அண்மையில் இருப்பதைப் பென்சிலால் குறியிட்டிருந்தாள். அரசின் தேசிய சூறாவளி மையத் தின் இணையதளத்தைப் (https://www.nhc.noaa.gov/) பயன்படுத்தி வேண்டிய தகவல்களைப் பெற அறிவுறுத் தியிருந்தார்கள். சரியாகத் தான் செய்திருந்தாள். ஐந் தாம் வகுப்பு பிள்ளைகளுக்கு ஒரு பயிற்சிக்காக இதைக் கொடுத்திருக்கலாம் என நினைத்தான். அவள் கண்க ளில் களைப்பு.

"நீ இன்னமா தூங்கல" என்றவனிடம். "ம், இட்ஸ் ஸ்கேரி அப்பா, இர்மா கேட்டகிரி-ஃபைவ் ஹரிக்கேன்.

வெரி டேன்ஜர்" என்றபடி மடியிலிருந்த லேப்டாப்பை கொடுத்துவிட்டு படுத்தாள். "அவசரப்படாத, இன்னும் இரண்டு நாள் பொறு" என்றபடி அவளுடைய கழுத்து வரை போர்வை போர்த்திவிட்டு, அழுந்தாமல் கன்னத்தில் முத்தமிட்டான். "குட் நைட் அப்பா" என்றபடி ஒருக்களித்துப் படுத்துக் கண்களை மூடினாள். அறை விளக்கை அணைத்துவிட்டு வெளியே வந்தான்.

அடுத்து சின்னவள் கவிக்கு கதை படித்துத் தூங்க வைக்க முயன்றான். பயனில்லை. பள்ளி நூலகத்தில் இருந்து எடுத்து வந்திருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொடுத்தாள். எல்லாம் முடிந்தபின்பும் தூங்காதவள் இறுதியாக தனது பொம்மையைக் கேட்டாள். தேடிக் கொண்டுவந்து கொடுத்தான்.

"அப்பா, நீங்களும் இப்போ தூங்குக" எனத் தூங்க முரண்டு பிடித்தவளை இன்னொரு கதை படித்து ஒரு வழியாகத் தூங்கவைத்துவிட்டு தனது படிக்கும் அறைக்குள் பரணி மெல்ல நுழைந்தான்.

இருண்ட அறையில் இதயமாக கடிகாரம் மட்டும் துடித்துக் கொண்டிருந்தது. வலப்புற சுவரில் இருந்த லைட்டை போட்டு நிமிர்ந்தபோது தஞ்சாவூர் ஓவியத்தில் துர்க்கை சாந்தசொரூபியாகி பிரேமில் நின்றிருந்தாள்.

அமெரிக்காவில் ஒருவன் எந்தப் பொருளாதார பின்புலத்தில் வாழ்க்கையைத் தொடங்கினாலும் மதம், இனம் கடந்து கடின உழைப்பால் வாழ்க்கையில் வெற்றியடையலாம் எனும் அமெரிக்கக் கனவு ஆளுக்கொன்றாக இருக்கிறது. சிலருக்கு உயர்ந்த உத்யோகம், சிலருக்கு நீச்சல் குளத்தோடு அரண்மனை போலப் பெரிய வீடு வாங்குவது, சிலருக்கு கப்பல் போலக் கார்கள். அதுவும் ஒன்றுக்கு மூன்றாக. குறிப்பாக இந்தியர்களுக்கு மெரி

சிடிஸ், பிஎம்டபுல்யூ போலொரு ஐரோப்பிய பிராண்ட் களின் மேல் தீராத மோகம் என்பதை வந்த கொஞ்ச நாளிலேயே தெரிந்துகொண்டான்.

பரணிக்கு இப்படிப் பொருள் சார்ந்த இலக்குகள் பெரிதாக இல்லையென்றாலும், தனியாக படிக்க அறை கிடைத்திருப்பதே ஒரு வகையில் மகிழ்ச்சி. இரவு வேளையில் எவர் தொந்தரவும் இல்லாமல் தனியாக ஒரு மணிநேரமாவது வாசித்துவிட முடிகிறது. அளவு பெரிதாக இல்லாவிட்டாலும் மொத்தமாக 200 அடி இருக்கலாம். அறையில் இன்டீரியர் டிசைன் அவனுடைய கைவண்ணம். தரையில் கண்ணை உறுத்தாத நிறத்தில் பெரிய கார்பெட். நேர் எதிரே இடதுபுறம் கண்ணாடி வைத்த ஜன்னல், அதை ஒட்டியபடி படிக்கும் மேஜை, சுழல் நாற்காலி. வலது புறம் சுவரை ஒட்டி அவனது புத்தக அலமாரி, அதை ஒட்டிய சுவரில் அவன் பெயரில் தொங்கிய அமெரிக்கக் காப்புரிமை சான்றிதழ் (மோனிகாவுடன் சேர்ந்து அவன் செய்த ஒரு பிராஜெக்ட்டுக்காக வாங்கியது), அதற்கு நேர் எதிரே சுவரோடு இருக்கும் இன்னொரு ஷெல்பில் பிள்ளைகளின் புத்தகங்கள். இடதுபுற சுவரில் தொங்கும் வெள்ளை வினைல் போர்டைக் கவனித்தால் அதுவே அவனுடைய 'ஆபிஸ் ரூம்' என்பதையும் எளிதாக யூகித்துவிடலாம்.

ஊரில் அப்பாவுக்கோ, தாத்தாவுக்கோ இதுபோலொரு வாய்ப்பு கிடைக்கவில்லையே எனச் சமயங்களில் நினைப்பான். தாத்தா தன்னுடைய சிறு வயதில் மின்சார வசதி இல்லாமல் சிம்னிவிளக்கில் படித்த பள்ளி நாட்களையும், மழைக்காலங்களில், சேற்றிலும், சகதியிலும் சிக்கி பள்ளி போய் சேர்ந்ததை கதைகதையாகச் சொல்லக் கேட்டிருக்கிறான்.

வழக்கத்துக்கு மாறாக, வாசிக்காமல் முதலில் இர்மா தொடர்பான தகவல்களை இணையத்தில் பரணி பார்த் தான். இர்மா கரீபியன் தீவுப்பகுதியில் 175 மைல்கள் வேகத்தில் தாக்கிவிட்டு ஃபிளாரிடாவை நோக்கி முன் னேறுவதை உறுதி செய்திருந்தார்கள். இது அட்லாண் டிக் கடலின் மிகச் சக்தி வாய்ந்த புயலாக இருக்கலாம் என்றும் ஃபிளாரிடாவைத் தாக்க ஞாயிற்றுக் கிழமை கெடு விதித்திருந்தார்கள்.

மாதத்தின் முதல்வாரம் என்பதால் படிக்கும் கண்ணா டியை மாட்டிக்கொண்டு வீட்டுச் செலவுக் கணக்கை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். மாதாமாதம் சம் பளம் வருகிறதோ இல்லையோ இங்கே மாதம் பிறந் தால் ஒழுங்காகப் பில்லைக் கட்டிவிடவேண்டியிருக்கி றது. சரியான தேதிக்குக் கட்டாமல் போனால் அபராதம் என்பதைத் தாண்டி ' கிரிடிக்ட் ஹிஸ்டிரி ' பாதிக்கும் எனும் தலைவலி வேறு. கிரிடிக்ட் ஹிஸ்டிரி ? ஒரு கட னாளி நாணயமாகக் கடனைத் திருப்பிச் செலுத்தியதற் காக ஆவணம். ஒருவரின் நம்பகத்தன்மைக்குச் சான்று என்று கூடச் சொல்லலாம். அதை வைத்து கிரிடிக்ட் ஸ்கோர் என ஒவ்வொருவருக்கும் ஒரு மதிப்பெண் தரு கிறார்கள். பொதுவாக 700க்கு மேல் கிரிடிக்ட் ஸ்கோர் இருந்தால் நல்லது. அது பாதித்தால் ? புது லோன் எதுவும் தரமாட்டார்கள். அப்படியே தந்தாலும் மற்றவர் களை விட அதிக வட்டிவிகிதமாக இருக்கும். புதிதாக கடன் அட்டை வாங்க முடியாது. ஏன் வீட்டுக்கு புதிய இண்டெர்நெட் வேண்டும் எனப் போன் செய்தால் கூட ' கிரிடிக் ஹிஸ்டிரி ' இங்கேக் கண்டிப்பாகத் தேவையாக இருக்கிறது.

அவன் புதிதாக வந்த ஒரிருவருடங்கள் அதைக் கட்ட மைப்பதற்குள் தாவு தீர்ந்துவிட்டது. ஆரம்பத்தில் கிரி டிக் ஹிஸ்டிரி உருவாகக் கடன் அட்டையில் செலவு

செய்து கடனைச் சரியான நேரத்தில் திருப்பிக் கட்ட வேண்டும். சரி என்று அதற்குப் புதிய கடன் அட்டை வேண்டும் என அவன் வங்கிகளை அணுகியபோது அதற்கு கிரிடிக் ஹிஸ்டிரி எங்கே என்றார்கள். அதற்குதான் இது என்றபோது ஒத்துக்கொள்ளவில்லை. கோழி, முட்டை கதைதான்.

நம்மூரில் பாதுகாப்பு வைப்புநிதி இருந்தால்தான் வங்கிகளில் லாக்கர் தருவார்கள். அதுபோலப் பரணி கடைசியாக ஒரு தொகையை முன் பணமாகச் செலுத்தி முதல் கடன் அட்டையை ஒருவழியாக வாங்கினான். வந்த புதில் கடன் அட்டையில் செலவு செய்வது என்பதே அவனுக்கு ஒவ்வாமையாகத்தான் இருந்தது. கையில் காசு கொடுத்து வாங்குவதை விட கடன்அட்டையில் செலவு கைமீறுவதை உணர்ந்தான். கூடவே
இங்கே அனைவரும் சிறைக்கைதிகளைப் போல ' கிரிடிக் ஹிஸ்டிரி ' எனும் ஓர் எண்ணுக்குள் சிக்க வைக்கப்பட்டிருப்பதாக நினைத்தான். அவனைப் போல் அமெரிக்காவுக்குப் பிழைக்க பல நூறு தேசங்களில் இருந்து வருபவர்கள் யாருடைய ஜாமினும் இல்லாமல் வங்கிகளில் கடன் பெற இதைவிட்டால் வேறு நல்ல வழி இல்லை என்பதைப் பிறகு புரிந்துகொண்டான்.

மின்சாரம், இணையம், வீட்டுக்கடன், மெயின்டனஸ், சொந்த கார், அதற்கு இன்சுரென்சு, தண்ணீர், இண்டெர்நெட், குப்பை அள்ள... கூடவே கண், பல், பொது எனத் தனித்தனியாக மருத்துவக் காப்பீடு, ஆயுள் காப்பீடு, பிள்ளைகளின் உயர்கல்வி... சமயங்களில் இங்கே சம்பாதிப்பதே செலவு செய்யத்தானா என நினைக்க வேண்டியிருக்கும். அதனால் தான் இங்கே பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சம்பளம் தருகிறார்களோ என்னவோ. தெரியவில்லை. கூடவே ஹரிக்கேன் சமயங்களில் வரும் எதிர்பாராத செலவுகள் ஒருபுறம்...

அலுவலக இமெயில்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். இர்மாவுக்கான ஆயத்தப்பணிகள் முழுவீச்சில் ஆரம்பமாகியிருந்தன. அதை உறுதிப்படுத்தும் இமெயில்கள் வந்திருந்தன. கூடவே ஆளாளுக்கு இதைப் பாத்தியா ?, அதைக் கவனிச்சியா ?, இதைக் கண்டிப்பாக மறந்துடாதீங்க! என்பது மாதிரியான பல மெயில்கள். அது 'நோ ஸ்டோன் அன்டேர்ன்ட்' என ஆங்கிலத்தில் சொல்வது மாதிரியான மனநிலை. அதாவது ஒரு சிக்கலைத் தீர்க்க அனைத்து சாத்தியமான வழிகளிலும் யோசிப்பது. கூடவே நிறுவனத் தலைவர் தன் பங்கிற்குக் கம்பெனி ஹரிக்கேனை எதிர்கொள்ள முழுவீச்சில் ஆயத்தமாகி வருவதாக ஊழியர்களுக்கு எழுதியிருந்தார்.

ஹரிக்கேனின் போது சப்போர்ட்டில் இருக்கப்போகும் ஊழியர்களின் பட்டியலைச் சரிபார்க்க ஒப்பந்தப் பணியாளர்களைத் தரும் இந்திய நிறுவனம் பரணிக்கு அனுப்பியிருந்தது. முன்பெல்லாம் அமெரிக்கர்களின் வேலை இந்திய நிறுவனங்களுக்கு அவுட்சோர்சிங் செய்யப்படுவதை ரகசியமாக எனச் சொல்லமுடியா விட்டாலும் பிரபலப்படுத்தாமல் சிறிய அளவில் கண்டும் காணாமல் செய்துகொண்டிருந்தார்கள். சமீபத்தில் அதெல்லாம் வெளிப்படை. முடிந்தவரை எல்லா இடத்திலும் இந்தியர்களை வைத்து முயன்று பார்க்கிறார்கள். வருமானத்தை அதிகரித்துச் செலவினங்களைக் குறைக்க ஆப்ஷோர் வழியே சரியானது என உயர்மட்ட தலைவர் அமெரிக்க ஊழியர்கள் கூட்டத்தில் தைரியமாகப் பேசுகிறார். ஏன், தலைமைப்பதவியில் இருப்பவர்களுக்கு ஆப்ஷோர் வழியாக அவுட்சோர்சிங் செய்வதை இலக்காகவே நிர்ணயித்துவிட்டார்கள். அந்த இலக்கில் மனிதர்களை முடிந்தவரை நீக்கிவிட்டு ஆட்டோமேசன் எனும் இயந்திரமயமாதல் நோக்கியும் நகரத்

தொடங்கியிருக்கிறது. இன்றைய தொழில்நுட்பத்தில் அனைத்தும் சாத்தியமே.

பெயர்ப்பட்டியலில் பரணியின் தொகுப்பைப் பார்த்துக் கொள்ளும் முதன்மை பொறுப்பில் அவனது பெயரே இருந்தது. இரண்டாவதாக புனித் பெயர் இருந்தது. அதை உறுதிப்படுத்தி அனுப்பினான்.

அறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பினான்.

தாரிணி நின்றிருந்தாள். அவனது முகத்தில் களைப்பை கவனித்தவள் "தூக்கம் வந்தால் இப்போ படுத்துட்டு பேசாமல் காலையில எந்திரிச்சு வேலைய பாக்கலாமே" என்றபடி வெளியேற தயாரானாள்.

பரணி முறுவலித்தான்.

"என்னோட பேவரேட் அப்ளிகேசன் ஹரிக்கேன் போது ஒர்க் ஆகணும் கவனம்,
ஆமா" எனக் கேலியாகச் சொல்லிவிட்டுப் போனாள்.

அவளுக்கு, அவனிடம் இன்று கொஞ்சம் கடுமையாக நடந்துகொண்டது போலிருந்தது. பரணியின் நண்பர்க ளின் வீட்டுக்குக் குடும்பமாகச் சேர்ந்து போவது, தங்கு வது என்பது வேறு. ஆனால், தான் மட்டும் தனியாகப் போய் உரிமைக் கொண்டாடி அங்கே போய் தங்கு வது என்பது வேறு. அதை நினைத்தாலே அவளுக்கு அசூசையாக இருந்தது. இதையெல்லாம் சொன்னால் அவன் புரிந்துகொள்ளாமல் கோபப்படுவான். அத் தோடு இந்தச் சூழ்நிலையில் பிள்ளைகளைத் தனியா கக் கூட்டிக்கொண்டு இங்கிருந்து போவதெல்லாம் அவ ளுக்கு நடக்கிற காரியமாகத் தெரியவில்லை.

இப்படித்தான் ஒரு முறை விடுமுறைக்கு இந்தியா போய் விட்டு விமானத்தில் வரும்போது அவள் பிள்ளைகளு

டன் ஒரு இக்கட்டில் சிக்கிக்கொண்டாள். திட்டமிட்ட படி நியூயார்க்கில் தரை இறங்க வேண்டிய விமானம் கடும்பனிப் பொழிவால் தரையிறங்காமல் வானிலேயே கழுகுபோலப் பல மணிநேரங்கள் மேலேயே வட்டமிட்ட படியிருந்தது. அதுவரை பயண அசதியில் தூங்கிக் கொண்டிருந்த சின்னவள் எழுந்து பசியில் அழுது ஆர்ப் பாட்டம் செய்ய, விமானத்தில் சாப்பாடு இல்லை எனக் கைவிரித்துவிட்டதால் அவளைச் சமாதானப் படுத்துவ தற்குள் பெரும்பாடாகிவிட்டது. கூடவே விமானப் பய ணிகள் பயன்படுத்திய போர்வைகளைக் கழிவறையில் போட்டு அடைத்துவைத்துவிட்டதால், கழிவறையைக் கூட பயன்படுத்த முடியாமல் திண்டாடியவளுக்கு ஒரே எரிச்சல். கடைசியில் நியூயார்க்கில் இறங்க வேண்டிய வளை ஆறு மணிநேரக் காலதாமதத்திற்குப் பிறகு பாஸ் டன் ஏர்போர்டில் இறக்கிவிட்டார்கள். அங்கே இரவு தங்கி, மறுநாள் காலை முதல் விமானத்தைப் பிடித் துத் திரும்ப நியூயார்க் வந்துசேர்வதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. தனியாகப் பிள்ளை களை வைத்துக்கொண்டு படாத பாடுபட்டுவிட்டாள். ஒருவேளை அவள் தனியாக இல்லாமல், அவனும் உடன் இருந்திருந்தால் கண்டிப்பாக உறுதுணையாக, ஆதரவாக இருந்திருக்கும் என்று நினைத்தாள்.

பரணிக்கு குளிரியது. ஏசியை நிறுத்திவிட்டு வந்தான். தாரிணி தன்னுடைய பேவரேட் எனச் சொன்னது வாடிக்கையாளர்கள் இணையத்தில் தங்கள் மின்சா ரப் பயன்பாட்டைத் தெரிந்துகொள்ள உதவும் எனர்ஜி டேஸ்போர்ட் (Energy Dashboard) ஐ தான். வீடுகளில் தானியங்கி (ஸ்மார்ட்) மீட்டர்கள் பொருத்தப்பட்டிருப் பதால் அவர்கள் தங்களுடைய பயன்பாட்டு அளவை மாதமொரு முறைத்தான் தெரிந்து கொள்ள இயலும் என்கிற நிலை இப்போது இல்லை. அவர்களால் குறிப்

பிட்ட நாளில், குறிப்பிட்ட மணிக்கு எவ்வளவு உபயோகம் என்பதைச் சரியாக தெரிந்து கொள்ள முடியும். கூடுதல் சேர்க்கையாக வீட்டில் இருக்கும் ஏசி போன்ற மின்சாதனங்களின் பயன்பாட்டையும் தனித்தனியாகத் தெரிந்துகொள்ள முடிவதால் மாதக்கடைசியில் பில் எகிறிவிட்டது எனக் கூப்பாடு போடாமல் மின்சாரத்தைச் சிக்கனப்படுத்த முடியும்.

மோனிகா ' செயலிழப்பு எச்சரிக்கை ' (Outage alert) எனும் பயன்பாட்டைக் குறித்து பரணிக்கு இமெயில் அனுப்பி விசாரித்திருந்தாள். அதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு எதிர்பாராத விதமாக மின் விநியோக தடை ஏற்பட்டால் இல்லை அக்கம் பக்கம் மின் கம்பிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மரம் வெட்டுதல் போன்ற மராமத்துப் பணிகள், பராமரிப்புப் பணிகள் நடந்தால் முன்கூட்டியே தெரிந்துகொள்ளலாம். கூடவே ஹரிக்கேன் சமயத்தில் மறுசீரமைப்புப் பணிகள் சம்பந்தமான தகவல்களையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள இயலும்.

இந்தப் பயன்பாட்டைக் கணினி மட்டுமல்லாமல் செல்போனில் செயலியாக நிறுவிக்கொள்ளவும் வசதி இருக்கிறது. அதனால் ஹரிக்கேன் சமயத்தில் வழக்கத்தை விட பல இலட்சம் பேர் அதிகமாக பயன்படுத்த வாய்ப்பிருப்பதால் மோனிகா பரணியைத் தயாராக இருக்கச் சொல்லியிருந்தாள். எளிதாக "தயாராக இரு" என்று எழுதிவிட்டாள். ஆனால், ஹரிக்கேன் சமயத்தில் எந்த மாதிரியான பிரச்சனைகள் கிளம்பும் என யாரும் அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட முடியாது. அப்படியே பிரச்சனை என்றாலும் நாம் நினைத்தவுடன் சரிசெய்துவிடவும் முடியாது. ஹரிக்கேன் சேஞ்ச் பிரீஸ் எனச் சொல்லி மென்பொருள்களில் மாற்றம் செய்வதைத் தடைசெய்திடுவார்கள். இது மென்பொருள் என்றில்லை ஹார்ட்வே

ருக்கும் பொருந்தும். அதனால், எந்தவொரு மாறுதல்களும் சீனியர் டைரக்டர் போன்ற மிக உயர்ந்த பதவியில் இருப்பவர்களின் தணிக்கைக்கு உட்பட்டும். சீனியர் டைரக்டரிடம் போகவேண்டும் என்றாலே மோனிகா மிகவும் யோசிப்பாள். கொஞ்சம் கடுமையாகவும் நடந்து கொள்வாள். கண்டிப்பாக மாறுதல் செய்யவேண்டுமா? மாற்று வழி இல்லையா, இல்லையா? எனக் கேட்டு அவனைத் துளைத்து எடுத்துவிடுவாள்.



ஆப்ரிக்காவில் இருந்து கிளம்பும் புழுதிப்புயல் கடலைக் கடக்கும்போது அது காற்றின் ஈரம் உறிஞ்சும் தன்மையைக் குறைக்கின்றது. மேலும் காற்றில் பறக்கும் இந்தப் புழுதி கடலின் மீது விழும் சூரிய வெப்பத்தின் அளவையும் குறைக்கிறது.

விஞ்ஞானப் பூர்வமாக பார்ப்பதென்றால் கடல் நீரின் வெப்பத்திற்கும் சூறாவளிக்கும் நேரடியாக தொடர்பு இருக்கிறது.கடல் வெப்பமாகி, காற்று

மேலெழும்பிக் காற்றழுத்தம் உருவாவதால்தான் சூறாவளி ஏற்படுகிறது. கடலே சூறா வளிகளின் தாய். அதுவே சூறாவளியின் பிறப்பிடம். அவை தனக்குத் தேவையான சக்தியைக் கடலிடம் இருந்தே பெற்றுக்கொள்கிறது.

*******

# 5

காலை ஏழு மணிக்கு திறக்கும் கடைக்கு அரை மணி முன்பாகவே போய் பார்க்கிங் லாட்டில் காத்திருந்தான். சூரியன் உக்கிரமின்றி சோம்பல் முறித்துக்கொண்டிருந் தான்.

வெளியே ஒரு சிறுகூட்டம் காத்துக்கொண்டிருந்தது. இப்படிக் கடைக்கு வெளியே காத்திருப்பது என்பது பர ணிக்குப் புதுவித அனுபவம்தான். சமீபத்தில் அவன் எதை வாங்க, எங்கே காத்திருந்தான் எனச் சரியாக நினைவில்லை. சுதந்திரமான ஷாப்பிங் மால்களும், ஆன்லைன் வியாபாரமும் பெருகிவிட்டபின் கடைக ளில் காத்திருத்தல் எனும் விசயமே அரிதாகி வருகிறது. “நினைத்தேன் வந்தாய்” என்பது போலத் தூரயியங்கி எனும் டிரோன்களின் உதவியோடு சில மணி நேரங் களில் வீட்டு வாசலிலும் கார் டிரங்குகளிலும் தானா கச் சாமன்களை டெலிவரி செய்ய எத்தனிக்கும் அமே

சான் நிறுவனத்தின் முயற்சியை அந்தநொடி நினைத்துக்கொண்டான்.

ஷாப்பிங் மால்கள் அமெரிக்க வாழ்வில் இணைபிரியாத ஓர் அங்கம். அவை பொருட்களை வாங்கிக் குவிக்கும் நுகர்வு கலாச்சாரம் எனும் ஆடம்பர மாளிகையின் பல வழிகளில் ஒன்று. முதன் முதலில் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களால் அறுவடைத் திருநாள் என்றும் நன்றியறிதல் நாள் (Thanksgiving Day) என்றும் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்ட விழா இன்று மடைமாற்றப்பட்டிருக்கிறது. நன்றி தெரிவிப்பது, குடும்பத்தினர் ஒன்று கூடி விருந்துண்பது எனும் பாரம்பரியம் தேய்ந்து இன்று தள்ளுபடியில் பொருள்களை விற்றுத் தீர்க்க கறுப்பு வெள்ளி (Black Friday) என்றும் இணையத்தில் எலக்ட்ரானிக்சைச் சல்லிசாய் விற்பனை செய்ய சைபர் திங்கள் (Cyber Monday) என்பதில் வந்து நிற்கிறது.

கடைக்கு முன்னால் தென் ஃபிளாரிடாவின் தனித்தன்மையான உயர பனைமரங்கள் வரிசையாக நின்றன.

உள்ளூர் நூலகத்தில் விநியோகித்திருந்த (hurricane supply list) சூறாவளி- தேவைப்பொருட்களின் பட்டியலைக் கையோடு பரணி எடுத்து வந்திருந்தான். ஃபிளாரிடா மாநில பேரிடர் மேலாண்மைக்குழு சீசன் சமயத்தில் தயார் நிலையில் வைத்திருக்கச் சொல்லியிருந்த பட்டியலை மீண்டும் ஒருமுறை எடுத்துப் பார்த்தான்.

குடிதண்ணீர் - தலைக்கு ஒரு நாளைக்கு ஒரு காலன் வீதம் மூன்றில் இருந்து ஏழு நாட்களுக்கு. உணவு- மீன், காய்கறிகள், பழங்கள், சூப் வகைகள், உலர்ந்த பழங்கள், கொட்டைகள். பிஸ்கெட்டுகள், பால் பவுடர், காஃபி, டீ போன்ற அழுகாத உணவுப் பொருட்கள். உலோக டின்களில் அடைக்கப்பட்ட உணவுகள், பழச்சாறு போத்தல்கள், நொறுக்குத்தீனி உணவுகள், குழந்

தைகள் மற்றும் வயதானவர்களுக்கான சிறப்பு உணவு கள்.

தேவையான மாற்று உடைகள், ரெயின் கோட் படுக் கத் தலையணை, போர்வைகள். முதலுதவிப் பெட்டி, தேவையான மருந்து மாத்திரைகள் போன்ற இத்தியாதி கள்.

கூடவே சமைப்பதற்கான உபகரணங்கள், எரிபொருட் கள், காகித பிளேட்டுகள், கேன் ஓப்பனர்கள் அதனு டன் டார்ச் லைட், பேட்டரிகள், ரேடியோ இவற்றோடு நாப்கின்கள், பாத்ரூம் பேப்பர்கள் என அந்தப் பட்டியல் நீண்டது.

கடை திறந்தவுடன் ஷாப்பிங் கார்ட்டுடன் இரண்டாவது ஆளாக உள்ளே நுழைந்தான். முதல் வேளையாக தண்ணீர் பாட்டில்கள் இருக்கும் ஷெல்பைத் தேடிப் போனான். கோடைக்காலத்து ஆறாக வறண்டு கிடந் தது. மற்றவர்கள் முந்தி இருந்தார்கள். கையில் இருப்பு இல்லை என்பதை 'வாடிக்கையாளர்களின் கவனத் திற்கு' எனும் துண்டறிக்கை மூலம் பூசி மெழுகியிருந் தார்கள். இப்படி ஒவ்வொரு முறையும் புயல் எச்சரிக்கை வரும்போதெல்லாம் மாயம் போலச் சட்டென மறைந்து போகும் இரண்டு முக்கிய விசயங்கள் கேசும் (பெட் ரோலும்), தண்ணீருமாக தான் இருக்கும். இரண்டும் ஒருவிதத்தில் தொடர்புடையவைதான். ஏமாற்றத்தோடு அங்கிருந்த பணியாளரிடம் விசாரித்தான். நேற்றே தீர்ந் துவிட்டதாம். திரும்ப இனி எந்த நேரமும் வரலாம் என் றார்கள். ஹரிக்கேன் சமயத்தில் முக்கிய எரிபொருள் தண்ணீர். அது இல்லாமல்... அவனுக்கு அயர்ச்சியாக இருந்தது.

பட்டியலில் முதலில் அழுகாத உணவுகள் என்று கொடுத்திருந்தாலும் வழக்கம்போல் பிரெட், ஜாம்,

முட்டை எடுத்துக்கொண்டான். ஒருவேளை மின்சாரம் இல்லாமல் சமைக்க இயலாத நிலை வந்தால் பிரெட், ஜாமாவது கை கொடுக்கும் என்பதால் ஒன்றுக்கு இரண்டாக எடுத்துவைத்தான். எளிதில் அழுகிக் கெட்டுப் போகாத சாமன்களைத் தேடி எடுக்க அதிக நேரமாகவில்லை. உலோக டின்களில் அடைக்கப்பட்டிருந்த காய்கறிகளில் பட்டாணி, சோளம், பீன்ஸ், காளான். உலர் வகைகளில் சிப்ஸ், உலர் பழங்கள், பாஸ்தா, சீரியல் பார்கள், நூடுல்ஸ், பிஸ்கெட் பாக்கெட்டுகளை எடுத்துக் கொண்டான். எதற்கும் இருக்கட்டும் என அட்டை டப்பாக்களில் அடைக்கப்பட்டிருந்த நான்கு பால் டப்பாக்களை வாங்கினான். ஷாப்பிங் கார்ட் நிரம்பியிருந்தது. முக்கியமான தண்ணீர் மட்டும் இல்லை என்பது அவனை உறுத்தியது.

பணம் செலுத்த வரிசையில் நின்றபோது சிறிய டிரக் போன்ற எந்திரத்தின் உதவியோடு தண்ணீர் பாட்டில் பொதிகளை இறக்கினார்கள். வரிசையில் நின்றுகொண்டிருந்த கூட்டம் இறைச்சியைக் கொத்தும் கழுகுக் கூட்டம் போல் தண்ணீருக்குப் பாய்ந்தது. அவனும் அந்த நொடி கழுகானான். பாட்டில்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி இரண்டு டஜன் சிறிய பிளாஸ்டிக் சிப்பமாக பேக் செய்திருந்தார்கள். ரேசன் முறை எதுவும் இல்லாததால் அவரவர் தேவைக்குச் சிப்பங்களை அவசரமாகத் தூக்கி ஷாப்பிங் கார்ட்டில் அடுக்கினார்கள். அவன் அடித்துபிடித்து நெருங்கும்போது தண்ணீர் சுத்தமாகக் காலி ஆகியிருந்தது. ஒருவித எரிச்சலுடன், அடுத்து குடிதண்ணீரை எங்கே தேடி அலையவேண்டியிருக்குமோ எனும் கவலை தொற்றிக்கொள்ள, யாரிடமாவது அதிகப்படி தண்ணீர் இருந்தால் சொல்லுங்கள் என நண்பர்களிடம் உதவிகேட்டு வாட்ஸ் அப்பில் செய்தி அனுப்பினான்.

வாங்கின வரை பணத்தைக் கொடுத்துவிட்டு ஷாப் பிங் கார்ட்டுடன் வெளியே வந்தபோது, போரில் தோற்ற போராளியாக உணர்ந்தான். அடுத்த போர்க்களமான பெட்ரோல் பங்கைத் தேடி கார் ஸ்டெயிரிங்கைத் திருப் பினான்.

வழியில் 'டிரம்ப் நேசனல் ஜூபிடர் கோல்ப் கிளப்' என்று எழுதி நிறுத்தப்பட்ட ஆளுயர சலவைக் கல் போர்டைக் கடந்தான். அதிபர் டிரம்புக்கு ஃபிளாரிடாவில் இது போலப் பத்து பதினைந்து கோல்ப் கிளப்புகள், கடற் கரையோரம் பல அடுக்குமாடிக் குடியிருப்புகள் என ஏகப்பட்ட சொத்துகள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக் கிறான். அதிபரான பின்பு கூட இங்கிருக்கும் தனது மோனோ லார்கோ மேன்சனில் தான் வாரஇறுதியில் குடும்பத்தோடு தங்கிச் செல்கிறார். அதனால் அமெ ரிக்க வரலாற்றில் ஃபிளாரிடாவில் இருந்து ஆட்சி செய் யும் அதிபர் எனும் சிறப்பு அந்தஸ்து வந்திருப்பதாகச் சொல்வார்கள்.

இப்போது பலநாட்டு அதிபர்கள் வந்து தங்கிப்போகும் அந்தமாளிகை சுமார் நூறு ஆண்டுப் பழமையானது. அதன் சொந்தக்காரர் ஒரு செல்வச்செழிப்பு மிக்க சீமாட்டி. அவர் தனது கடைசிக் காலத்தில் இந்தமா ளிகை குளிர்கால வெள்ளை மாளிகையாக (Winter White House) பயன்படவேண்டும் என்ற கோரிக்கை யோடு அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு மரணமடை கிறார். பின் அரசாங்கத்தால் பராமரிக்க இயலாமல் பல கைகள் மாறி கடைசியில் டிரம்பின் கைக்கு வந்து அவர் மூலமாக இன்று வெள்ளை மாளிகை கனவு நனவாயி ருக்கிறது.

அதிபர் டிரம்ப் ரியல் எஸ்டேட் அதிபராக இருக்கும் போதே இந்தப் பகுதியில் பிரபலமானவர் தான். தனது

மாளிகையின் முன் உரிய அனுமதி பெறாமல் பிரமாண் டமான கொடிமரத்தில் அமெரிக்கக் கொடியைப் பறக் கவிட்டது. அதற்கு அபராதம் விதித்த நகர்மன்றத்தை எதிர்த்து இருபத்தைந்து மில்லியன் டாலர்களுக்கு வழக்கு பதிவுசெய்து பிறகு வாபஸ் பெற்றது. தனக்கு ஆதாயம் செய்ய மறுத்ததால் மின்சாரம் வழங்கும் நிறுவ னத்தைப் பழித்து டீவீட் செய்தது. எனச் சகலமானதும் நெகட்டிவ் பப்ளிசிட்டி எனும் எதிர்மறை விளம்பர வகை யறாதான்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் அவர் அந்த மாளிகையை அடிமாட்டு விலைக்கு வாங்கிய கதை யைச் சொல்லிவிடுகிறேன். ஒருமுறை எதேர்ச்சையாக இங்கே விடுமுறைக்கு வந்தவர் மாளிகை விற்பனைக்கு என்பதினை தெரிந்துகொண்டு, இருபது மில்லியன் டாலருக்கு முதலில் விலைகேட்கிறார். ஆனால், உரி மையாளர்கள் இன்னும் கூடுதலான தொகையை எதிர் பார்த்து அவரை நிராகரிக்கக் கோபமடைந்த டிரம்ப் அவர்களைப் பற்றிப் பொதுவெளியில் கிண்டலடிக்கி றார். பின், அத்தோடு நிற்காமல் இன்னொரு வியாபாரத் தந்திரம் செய்து அவர்களைத் தன் வழிக்கும் கொண்டு வருகிறார்.

தன்னை நிராகரித்த அதே மாளிகையின் எதிர்புறம் இருந்த கடற்கரை நிலம் விலைக்கு வருவதைத் தெரிந் துகொண்டவர், அவர்களுடன் ஒரு பினாமி கம்பெனி வழியாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு உடனடியாக மாளிகை உரிமையாளர்களுக்கு ஒரு தகவல் அனுப் புகிறார். அதன்படி, உங்கள் மாளிகையின் முன்னால் இருக்கும் கடற்கரை இனி என்னுடையது. அதில் மிகப் பெரிய வீட்டைக் கட்டி உங்கள் மாளிகையின் பார்வை யில் இருந்து கடற்கரையை மறைத்து விடுவேன் என மிரட்டல் அனுப்புகிறார். கடற்கரை முகப்பு இல்லாத

மாளிகையை யாரும் வாங்க முன்வரமாட்டார்கள் எனும் யுக்தியைப் பயன்படுத்தியே அந்த மாளிகையை இறுதி யாக ஒன்றுக்குப் பாதியாக முடித்துவிட்டாராம்.

பெட்ரோல் பங்க் வந்தது. பரணி வழக்கமாகப் போகும் இடம் தான். ஆனால், அங்கே ஒரு பம்பைத் தவிர மற் றவைகள் நிராயுதபாணியாக நின்றன. அவை தன்னிடம் பெட்ரோல் இல்லை (No Gas) என்று சரணடைந்தது போல் வழங்குக் குழாயின் நுனியில் மஞ்சள் பாலிதீன் பையைச் சுற்றிக் காட்டின. தனி ஆளாய் களம் கண்டு வாடிக்கையாளர்களுடன் யுத்தம் செய்து கொண்டிருந்த அந்த ஒரு பம்பிற்கு முன்னால் கார்கள் மிக நீண்ட வரி சையில் அணிவகுத்து நின்றன.

காத்துக் கொண்டிருந்த நேரத்தில் கார் ரேடியோ வைத் தட்டினான். முழுவதும் இர்மாவைப் பற்றியதா கவே இருந்தது. ** கரீபியன் கடலில் இர்மாவின் துவம் சம். **சூறாவளியைக் காரணம் காட்டி அத்தியாவசியப் பொருட்களின் விலையை ஏற்றி விற்றால் தண்டனை. **பெட்ரோலை சாதாரணமான நேரத்தில் மக்கள் வாங் குவதை விட ஐந்து மடங்கு வேகமாக வாங்குகிறார்கள்... நிறுத்தினான். போன், குழந்தை ஒன்று கடத்தப்பட் டதை எச்சரிக்கும் அவசரநிலை குறுஞ்செய்தி வந்ததை அபாயஒலி எழுப்பிச் சொன்னது. இப்படிச் சுற்றுவட்டா ரத்தில் இதுபோலப் பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் கடத்தப்படும் போது உடனடியாக அதுகுறித்த தகவல் களை வெளியிட்டு எச்சரித்து உதவும் நோக்கில் ஒரே சமயத்தில் கேபிள் டிவி, ரேடியோ போன்ற ஊடகங் களில் இயந்திரத்தனமாக 'அம்பர் எச்சரிக்கை' என்று அறிவித்து விடுகிறார்கள். இதுபோன்ற கடத்தல்களில் கார் சம்பந்தப்பட்டிருந்தால் 'குழந்தை கடத்தல்- சிகப்பு ஃபோர்ட் ஃபோகஸ் கார் எண்-1234'எனும் ரீதியில் எச் சரிக்கைச் செய்திகள் அமெரிக்க நெடுஞ்சாலைகளின்

எல்யிடி போர்டுகளில் ஒளிர்வதையும் அவன் பார்த்தி ருக்கிறான்.

முப்பது நிமிடங்கள் கடந்தன. வேறெதுவும் செய்யத் தோன்றவில்லை. கொஞ்ச நேரம் போனை நோண்டி னான். மீண்டும் ரேடியோ. இர்மா... பயனில்லை. எதிரே நின்றிருந்த கார்கள் எதுவும் நடக்காதது மாதிரி அப்ப டியே நின்று கொண்டிருந்தன. இந்தப் போர்க்களத்தில், ஒரு அடிகூட நகர இயலாத முன்னேற்றமாக இருந்தது. காத்திருந்த அனைவரும் பொறுமையிழந்து கொண்டி ருந்தனர் என்பதை அவர்களின் உடல்மொழி சொன் னது. திடீரென பின்னால் நின்று கொண்டிருந்த உயரமா னதொரு டிரக்கில் இருந்து இறங்கிய ஆசாமி பொறுமை யிழந்து கோபத்தில் மடாரென கதவை அறைந்து சாத்தி விட்டு கேசியர் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தான். அவன் கையில் இருந்த பிஸ்டலை பரணி கவனிக்கத் தவறவில்லை. சூழ்நிலையின் பதற்றம் கூடிக்கொண்டே யிருந்தது. இங்கே உரிய துப்பாக்கி உரிமம் வைத்திருந் தாலும், அதை இப்படி வெளிப்படையாக மற்றவர் கண் களில் படும்படி வைத்துக்கொள்வதோ இல்லை அச் சுறுத்துவதுபோல துப்பாக்கியைக் காட்டுவதோ தண்ட னைக்குரிய குற்றம் என அவனுக்குத் துப்பாக்கி சுட பயிற்சி தந்த ஓய்வுபெற்ற போலீஸ் சொன்ன அறிவுரை நினைவுக்கு வைந்தது.

ஒருவழியாக ஊர்ந்து கார் பம்பை நெருங்கியது. பர ணிக்கு முன்பிருந்த காரில் இருந்து இறங்கிய வயதான பெண்மணி பெட்ரோல் போட இயலாமல் கையில் கடன் அட்டையுடன் திணறிக் கொண்டிருந்தாள். அவ ளுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. அவளுடைய கை அசாதாரணமாகத் தள்ளாடிக் கொண்டிருந்தது. ஃபிளா ரிடாவில் பெட்ரோல் நிரப்புவது சுயசேவை. பரணியோ பொறுமை இழந்து கொண்டிருந்தான். ஏன் வயதான

காலத்தில் இவர்கள் ஒதுங்கிக் கொள்ளாமல் மற்றவர் களுக்கு இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்று ஆத்தி ரப்பட்டான். யோசித்தபோது அடுத்தநொடி தான் ஏன் இந்த அளவுக்குக் கீழ்த்தரமாக யோசிக்கிறோம் என்கிற எண்ணத்தால் குற்றவுணர்ச்சி வர, அவளுக்காகக் கீழே இறங்கி உதவிசெய்தான்.

ஒரு முக்கியமான விசயத்தைத் தவறவிட்டது அப்போது தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

வருணபகவானை நாம் மழைக்கடவுள் என நம்புவது போல பண்டைய தென் அமெரிக்க மாயன் நாகரீகத்தில் புயல் கடவுளை 'ஹருக் கேன்' என வணங்கினார்கள். அதைக் குறிக்கும் வகையிலேயே அட்லாண்டிக்கில் உருவாகும் சூறாவளிப்புயலை ஹரிக்கேன் என்கிறார்கள். ஹரிக்கேன் என்பதற்குப் பெருங்காற்று, கெட்ட ஆவி என்றும் பொருள் சொல்கிறார்கள்

# 6

பரணி திரும்பியபோது வீட்டில் யாருமில்லை. தாரிணி பிள்ளைகளைப் பள்ளிக்கு கூட்டிப் போயிருப்பாள் என நினைத்தான். இர்மா குழப்பத்தில் ஒரு முக்கியமான கூட்டத்தை மறந்துபோயிருந்தான். ஒரு மாதத்திற்கு முன்பு திட்டமிட்ட கூட்டம் அது. வீட்டில் இருந்து அறு பது மைல் தூரத்தில் இருக்கும் மற்றொரு அலுவலகத் திற்குப் போய் வாடிக்கையாளர்களைச் சந்தித்துப் பேச வேண்டும். சுங்கப் பணம் வசூலிக்கும் நெடுஞ்சாலை யில் போனால் கூட போவதற்கு மட்டும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரப்பயணம். இனி கிளம்பிப் போவது சரியில்லை

என்று முடிவு செய்து போனில் கலந்து கொள்வதாகக் குறுஞ்செய்தி அனுப்பினான்.

காரின் டிரங்கில் இருந்த லேப்டாப்பை எடுத்து வர வேற்பறை டீபாயில் வைத்து உயிர் கொடுத்தான். அது மெதுவாக சோம்பல் முறித்துக் கொண்டிருந்த நேரத்தில் சமையலறையில் டீ போட்டு எடுத்து வந்தான். மானிட்டர் ஆபரேடிங் சிஸ்டம் பாஸ்வேர்டு கேட்டது. கொடுத்தான். அடுத்து ரிமோட் கீ எனும் விரலில் அடங்கும் பொடியன் தந்த தொடர்பின்மை (random) பாஸ்வேர்டைக் கொடுத்து அலுவலக நெட்வோர்க்கில் இணைந்த போது தாரிணி வந்திருந்தாள்.

“இவ்வளவு நேரம் ஆயிடுச்சா, ஆபிஸ் போகல” என்றபடி கார் சாவியை வளையத்தில் மாட்டியவள், “இர்மா என்ன ஆச்சுன்னு பாத்தீங்களா ?” எனக் கேட்டபடி மாடிப்படிகள் ஏறினாள்.

போன் மீட்டிங்கில் இணைந்தாலும் பரணியின் மனம் இர்மாவைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்ததால் மனம் லயிக்கவில்லை.

மீட்டிங் முடிந்த மறுநொடி இர்மாவின் உடனடி நிலவரம் அறிய டிவியில் ஏதாவதொரு செய்திச் சேனலைத் திருகினால் வசதியாக இருக்கும் எனப்பட்டது. வரவேற்பறையில் ஸ்மார்ட் எல்சிடி டிவி பளிச்சிட்டாலும் அமெரிக்க நிலவரப்படி அவர்கள் 'கார்டு கட்டர்ஸ்' (cord cutters). இங்கே ஏறக்குறைய எழுபது சதவீதத்தினர் கிருஸ்தவர்கள், அதில் இருபத்தொரு சதவீதம் பேர் கத்தோலிக் என்பதுபோல் "கார்டு கட்டர்ஸ்" என்பதொரு தனிப்பிரிவெல்லாம் இல்லை. நெட்பிளக்ஸ், யூடியூப் போன்று இணையத்தில் ஸ்ட்ரீமிங் வசதியில் இயங்கும் சேனல்கள் வந்தபின்னர் வழக்கமான கேபிள் சேவையை ரத்து செய்து விடைபெறுபவர்களை கார்டு

கட்டர்ஸ் என்று புரட்சிகரப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். இதில் விளம்பரம் இல்லை அல்லது குறைவான விளம் பரம், குறைந்த கட்டணம், தேவைப்பட்ட நேரத்தில் தேவைப்பட்ட நிகழ்ச்சிகள் என்று பல சௌகரியங்கள் இருக்கின்றன.

அவனைப் பொறுத்தவரை இதுவொரு புரட்சி என்பதை விட பிள்ளைகளுக்கு உதவுகிறதா என்று பார்க்கிறான். உண்மையில் அதீத தகவல் எனும் இன்றைய இன்பர் மேசன் ஓவர்லோட் காலகட்டத்தில் டிவியைத் தாண்டி பல வழிகளில் தகவல்களைப் பெற வாய்ப்பிருக்கிறது. சம்பிரதாயமான கேபிள் டிவி என்பது ஆறாம் விரலாகி வருகிறது. இன்று அந்த ஆறாம் விரல் தேவை என முடிவெடுத்துவிட்டான். அவன் கேபிள் ரிசிவரைத் தேடி எடுத்து இணைத்தான்.

“உங்களுக்குத் தேவைன்னா டிவி உடனே ரெடிஆயி டுமே “தாரிணியின் குரல் கிச்சனில் இருந்து வந்தது.

அவள் குளித்துவிட்டுச் சமைக்கத் தொடங்கி இருந் தாள். எண்ணெயில் வதங்கிய காலிபிளவர் மணம் வர வேற்பறையை நிறைத்திருந்தது.

தண்ணீர் கிடைக்காத விசயத்தைச் சொன்னான்.

“வாட்ஸ் அப் அனுப்பிச்சிருக்கீங்க இல்ல, பாப்போம். இல்லை, ஈவினிங் போய் பாக்கலாம்” என்றாள் நம்பிக் கையாக

போன் அடுத்த மீட்டிங் இருப்பதை நினைவூட்டியது. இர்மா தொடர்பான ஆயத்தப்பணிகள் குறித்த விளக் கக்கூட்டம் அது. போனில் இணைந்தான். அவர்கள் ஃபி ளாரிடாவில் பிறந்து வளர்ந்து, நிறுவனத்தில் உயர் பத வியில் இருப்பவர்கள். அவர்களின் நிறுவன அனுபவம்

பரணியின் வயதாக இருக்க வாய்ப்பிருக்கிறது. பெரும் பாலானவர்கள் அலுவலகத்தில் இல்லாமல் வெளியில் இருந்தார்கள். அவர்கள் குரலில் பதற்றத்தோடு கூடிய ஒருவித அவசரத்தன்மை தெரிந்தது.

ஒருவர் ஒரு மணி நேரமாகப் பெட்ரோல் நிரப்ப வெயி லில் காய்ந்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார். ஒரு வர் இர்மா மியாமியை நேரடியாகத் தாக்கும் அச் சுறுத்தல் இருப்பதால் வடக்கே 400 கிலோமீட்டரில் இருக்கும் ஆர்லாண்டோ (Orlando) போகப்போவதாகச் சொன்னார். பிராஜக்ட் லீடர் குடும்பத்தோடு ஃபிளாரி டாவின் மேற்குக்கரையில் இருக்கும் தாம்பா (Tampa) நகருக்குப் போகத் தயாராகப் போவதாகச் சொன்னவள், "கைய்ஸ், மழை பெய்தால் ஓடனும். காற்றடித்தால் ஒளி யனும் ஆமா மறந்துடாதீங்க" எனச் சிரித்தபடியே சொன் னாள். ஆயத்தப் பணிகள் குறித்து நிறைய பேசினார்கள். அவர்கள் துருவித் துருவிக் கேட்ட அனைத்து கேள்வி களுக்கும் அவனிடம் பதில் இருந்தது. நிறைவாக இருப் பதாய் சொன்னார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களிடம் பேசுவது, அவர்களுக்குத் தகவல் சொல்லுவது என்பது ஒரு கலை. சமயங்களில் குரலில் இருக்கும் ஸ்திரத் தன் மையேகூட அவர்களுக்குத் தேவையான நம்பிக்கை யைத் தந்து பல விசயங்களைச் சாதித்துவிடும். முதலில் நம்மை நாம் நம்பினால் தானே மற்றவர்கள் நம்மை நம்பு வார்கள்.

இர்மா முன்வாசலைப் பலமாகத் தட்டுகையில் தான் இவர்களுக்காக அலுவலக வேலை செய்யவேண்டியி ருக்குமோ என அச்சப்பட்டான். ஆனால், அவர்களின் குரலில் தனக்கு ஒரு செய்தி இருப்பதாகப் பட்டது. அது, தனிப்பட்ட முறையில் நாங்கள் பதற்றமாகத்தான் இருக் கிறோம். ஆனால், அலுவலகம் தொடர்பான வேலை என்று வரும்போது அதற்குத் தேவையான கவனத்தை

யும் முக்கியத்துவத்தையும் கொடுக்கிறோம். இரண்டையும் குழப்பிக் கொள்ளமாட்டோம். நாம் நமது வாடிக்கையாளர்களுக்காக இணைந்து செயல்படுவோம் என்பதாக இருந்தது. அது அவர்கள் நிறுவனத்தில் இருந்து கற்றுக்கொண்ட அனுபவப்பாடம் என்பது புரிந்தது. அந்தப் பாடத்தை தான் என்றாவது ஒருநாள் கற்கவேண்டும் என அவன் நினைத்துக்கொண்டான்.

"ஸ்டே சேஃப், டேக் டே கேர் !!" என ஒவ்வொருவராகச் சொல்ல கூட்டம் முடிந்தது. ஃபிளாரிடாவில் பிறந்து வளர்ந்து எத்தனையோ சூறாவளிகளைப் பார்த்த அவர்கள் அவசர அவசமாக வெளியேறுவது அவனை யோசிக்கச் செய்தது. சிஎன்என் போன்ற தேசிய சேனல்களை விடுத்து உள்ளூர் நிகழ்வுகளை முன்னிறுத்தும் பிராந்திய ஒளிபரப்பே இதற்குச் சரியானதாக இருக்கும் என்று சேனல்-25ஐ திருப்பினான். கவர்னர் பேசிக்கொண்டிருந்தார். அவர் இர்மாவை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்திருக்கும் முன்னெச்சரிக்கை, தயார் நடவடிக்கைகளை நிறுத்தி நிதானமாக விளக்கிக்கொண்டிருந்தார்.

ஃபிளாரிடாவின் தெற்கே காலடியில் சிறு கூட்டமாகச் சிதறிக்கிடக்கும் சிறு தீவுகளின் (Florida Keys) வழியாக நுழையும் இர்மா செங்குத்தாக வடக்கு நோக்கி நகர்ந்து மாநிலத்துக்குள் பிரவேசிக்கக் கூடும் என்றார்.

அதனால் அந்தத் தீவுகளில் இருப்பவர்களும், கிழக்குக் கரையோர மியாமி நகரின் தாழ்வான பகுதியில் இருப்பவர்களும் உடனடியாகக் கட்டாயமாக வெளியேற வேண்டும். தேவைப்பட்டவர்கள் மாநில அரசின் அடைக்கல முகாம்களில் (evacuation shelters) தங்கிக் கொள்ளலாம் என்றார்.

சமையலறையில் இருந்து வந்த தாரிணி “நாம இவாக்குவேசன் சோன்லயா இருக்கோம் ? ” என்றாள். உடனே அதற்கான வரைப்படத்தை இணையத்தில் தேடினான். அவனுடைய குடியிருப்பின் முந்திய பிளாக் வரை தாழ்வான பகுதி என்பதைக் குறிக்கும் வகையில் சிகப்பு வண்ணமிட்டிருந்தார்கள். “நல்ல வேளை” என ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள்.

ஹெலிகாப்டர் போன்ற உதவிகளுடன் ராணுவம் தயார் நிலையில் இருப்பதாகச் சொன்ன கவர்னர், மாநிலத்தின் மிகப்பெரிய நன்னீர் ஏரியான லேக் ஓக்கச்சோபியில் நீர்மட்டம் பாதுகாப்பான அளவில் இருப்பதாகவும் அதன் அளவு தொடர்ந்து கண்காணிக்கப்படுவதுமாகச் சொன்னார்.

இடையிடையே தாரிணி கலவையாகப் பல செய்திகளை இணையத்தில் வாசித்து அவனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“டிஸ்ணி பார்க் இர்மாவுக்காக மூடப்போறது இல்லையாம். அப்படி மூடினால் அது நாப்பத்தாறு வருசத்துல வெதருக்காக மூடின ஐந்தாவது தடவையாக இருக்குமாம்”

“உம், இதுல எல்லாம் கூட எப்படி மார்கெட்டிங் பண்றாங்க பாரு” என்றான்

“இன்னொரு விசயம்... இங்கிருந்து இருந்து கரீபியன் தீவுகளுக்குக் கிளம்பும் டிஸ்ணி குரூஸ் மாதிரியான சொகுசு கப்பல்களையும் கேன்சல் பண்ணிட்டாங்களாம்”

“ஆமாம், கப்பல் கடலுக்குள் போகும் ஆனால் உறுதியா திரும்பாதுனு தெரிஞ்ச பின்னாடி என்ன செய்வாங்க ”

அவள் மெலிதாகச் சிரித்தபடி, "ஹார்வி பத்தி அந்த ரிடையர்ட் கமாண்டர் என்ன சொல்லியிருக்கார் பாத் தீங்களா ?"

"எந்த கமாண்டர் ?" புரியாமல் கேட்டான்.

"ஞாபகம் இல்ல, ஹரிக்கேன் கட்ரீனா ஹீரோனு சொல் லலை, நீங்க இரண்டுபேரும் சேர்ந்து எடுத்த போட்டோ வைக் கூட பாத்தனே..."

"கட்ரீனா ?" சந்தேகத்தோடு கேட்ட அவன் கொஞ்சம் யோசித்தான். மங்கிக்கிடந்த ரஸ்ஸல் பற்றிய நினைவு துலக்கம் பெற்றது.

"ஓ, ரஸ்ஸல் ஹொனெரா " என்றவன் குரலில் பிடிபட்ட மகிழ்ச்சி இருந்தது.

ரஸ்ஸல் ஹொனெர் (Russel L. Honoré) ஐ அவன் நியூ ஆர்லையன்சில் சந்தித்து இரண்டு வருடங்கள் இருக் கும். அவர் அமெரிக்க ராணுவத்தின் உயர்பதவியான லெப்டினன்ட் ஜெனரலாக பணி செய்து சமீபத்தில் ஓய் வுபெற்றவர். 2005ம் ஆண்டு ஹரிக்கேன் கட்ரீனாவில் இருந்து லூசியானாவின், நியூ ஆர்லயன்ஸ் நகரை மீட் டெடுக்கும் பணியில் மிகத் திறமையாகப் பணியாற்றிய தால் வெளியுலகுக்குத் தெரியவந்தவர்.

அன்றைய புஷ் அரசின் கட்ரீனா செயல்பாடுகள் கடு மையாக விமர்சிக்கப்பட்ட நிலையில் மீட்புப்பணிகள் ராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டன. அப்போது தலைமை பொறுப்பு ஏற்று தன்னுடைய வெளிப்படை யான, அதிரடி நடவடிக்கைகளின் மூலம் நிலைமையை விரைவில் கட்டுக்குள் கொண்டுவந்ததால் 'ஹரிக்கேன் கட்ரீனாவின் கதாநாயகன்' என்று பெரிதும் சிலாகிக்கப் பட்டவர்.

ரஸ்ஸல் ராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றபின் பேரழிவில் இருந்து குடும்பங்களைத் தற்காத்துக் கொள்ளும் கலாச்சாரம் இன்றைய தேவை எனத் தொடர்ந்து எழுதியும், பேசியும் வருகிறார். சில வருடங்களுக்கு முன்பு தலைமைத்துவப் பண்புகள் குறித்தான ஒரு மாநாட்டில் அவருடைய எழுச்சியூட்டும் உரையைக் கேட்கும் வாய்ப்பு அவனுக்குக்
கிடைத்தது. அன்று அவர் மேடையில் அறிவித்த ஒரு போட்டியில் பரணி வெற்றி பெற்று, அவர் எழுதி கையெழுத்திட்ட புத்தகத்தை அவர் கையால் பரிசாகப்பெற்றது அவனுக்கு மறக்கமுடியாத தங்கப் புதையல் அனுபவம்.

டிவியில் கவர்னர் கேஸ் (பெட்ரோல்), தண்ணீர் போன்ற அத்தியாவசியங்கள் மக்களுக்குக் கிடைக்க மாநிலங்கள் எடுத்துள்ள முயற்சியை விவரித்தார். அமெரிக்கன் ரெட் கிராஸ், மத்திய மருத்துவக் குழு போன்ற நிறுவனப்பணியாளர்கள் தேவையான ஏற்பாடுகளுடன் மாநிலத்தை நோக்கி விரைகிறார்கள். கடற்படை தேவையான விசைப்படகுகள் போன்ற உபகரணங்களுடன் தயாராக இருக்கிறார்கள்.

மாநிலத்திற்கு மின்சாரம் தரும் நிறுவனங்களுடன் தொடர்பில் இருக்கிறோம். அவர்கள் பேரழிவிற்குப் பிறகு மற்ற மாநில பணியாளர்களின் உதவியுடன் மின்சாரத்தைத் துரிதமாக வழங்கி நிலைமை விரைவில் சீரடைய உறுதி செய்வோம் என்றவர், மாநில அரசுக்கு இந்தச் சமயத்தில் உதவத் தன்னார்வத் தொண்டர்கள் தேவை, விருப்பமுள்ளவர்கள் தயவுசெய்து இணையத்தில் உங்கள் விவரங்களைப் பதிவு செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

“தாரிணி, நான் வாலண்டியரா ரிஜிஸ்டர் செய்ய வா ?”என யோசிக்காமல் சட்டெனத் தன் விருப்பத்தைச் சொன்னான்.

“ஆமாம், வீடு, ஆபிசை விட்டுட்டு நீங்க எங்க போறது. பேசாம இருங்க, எல்லாத்துக்கும் ஆசைப்படாதீங்க” என்று சொல்லி அடக்கினாள். அவள் குரலில் உஷ்ணம் தெரிந்தது.

அவன் விடாமல் அவளைச் சீண்டும் தோரணையில் “இது ஆசையா ?, சமூகப் பணி இல்லை?”என்றான்.

“கொஞ்சமாவது பொறுப்பா பேசுங்க. சரியா. இவ்வளவு பெரிய புயல் வருது. பிள்ளை குட்டிய பத்திரமா காப்பாத் துவோம்னு இல்லாம நீங்க வாலண்டியர் செய்ய கிளம்பு றேன்றீங்க”

அவனால் மறுத்து ஒரு வார்த்தை சொல்ல இயல வில்லை. அவனது ஆசை முற்றிலும் வடிந்து மனநிலை மாறியது. முதலில் இது சிறுபிள்ளைத் தனமா என்ன ? என்றுகூடத் தோன்றியது பின் நிதானமாக யோசித்தபின் நிதர்சனம் உரைத்தது.

இறுதியாக கவர்னர் ஆங்கிலம் தெரியாத ஸ்பானியர்க ளுக்காகச் சில நிமிடங்கள் ஸ்பானிசில் பேசினார். முடி வாக இர்மா தொடர்பான விரிவான தகவல்களை உட னடியாக அனைவருக்கும் வழங்குவதாக உறுதி அளித் தார். ஆனால் முடிவாக அவர் சொன்ன சில விசயங் களை அவனைச் சிந்திக்க வைத்தது.

இர்மா இந்த மாநிலத்தைச் சீர்குலைக்கும் வலிமையோ டும், ஆக்ரோசத்தோடும் வந்துகொண்டிருக்கிறது. இது இருபத்தைந்து வருடங்களுக்கு முன் வந்த அன்ரூவை விட வலிமையானது, அகன்றது. எதுவேண்டுமானாலும்

நடக்கலாம் எனும் இந்தச் சூழலில் மாநிலத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக வெளியேறும் திட்டம் (evacuation plan) இருக்கவேண்டும். “பிளீஸ் டேக் திஸ் சீரியஸ்லி”. உங்களுடைய வீட்டை வேண்டுமானால் கட்டிவிடலாம். ஆனால், உங்கள் வாழ்க்கையைக் கட்டமைப்பது கடினம் எனும் பொருள்படும்படி “we can build your house not your life” என்றார்.

அன்று ஃபிளாரிடாவை 1992இல் தாக்கிய போது, சாவு எண்ணிக்கை அறுபத்தைந்து எனத் தாரிணி இணையத்தில் பார்த்துச் சொன்னாள்.

அவனுக்கு இர்மா பற்றிய கூடுதல் தெளிவு கிடைத்தது போலிருந்தது.

கடல் வழியாக சுழலும் பிரமாண்டமான தீபாவளி சங்குசக்கரம் போன்ற தோற்றத்தில் மெள்ள நகரத் துவங்கும் இந்த ஹரிக்கேன்கள் மிகவும் ஆபத்தானவை. அவை பிரான்சின் கில்லட்டின் *(Guillotine)* போன்றதொரு நகரும் கொலை இயந்திரம் ஆகும்.

அதன் அமைதியான மையத்தைக் கண் *(hurricane eye)* என்கிறார்கள். அதை ஒட்டியுள்ள பகுதி கண்சுவர் *(eye*

*wall)*. அதில் தான் புயலின் அதிதீவிரமான காற்று உள்ளடங்கியிருக்கிறது. அதை மழைப்பட்டைகள் சூழ்ந்துள்ளன. இப்படித் தீவிரமடைந்த ஹரிக் கேன்கள் சமயங்களில் கடல் பரப்பில் பல ஆயிரம் சதுர மைல்கள் வரை கூட பரந்துவிரிந்திருக்கும். ஹரிக்கேன்கள் தீவிரமடை வது இல்லை வலுவிழப்பது, திசை மாறுவது என அதன் தலை எழுத்தைக் கடல் மட்ட வெப்பம், காற்றின் வேகம், ஈரப்பதம் போன்ற பல காரணிகள் தீர்மானிக் கின்றன.

# 7

மாலையில் அவனது குடியிருப்பில் இருக்கும் வரது ஹரிக்கேன் ஷட்டர்ஸ் எனும் ஜன்னல் அடைப்புகளைப் பொருத்த உதவி கேட்டிருந்தார். அலுவலக வேலை களை முடித்துக் கொண்டு தேவையான உபகரணங் களுடன் கிளம்பினான். அம்மு ஹாலில் அமேசானின் அலெக்சா (Alexa Echo) எனும் குரல் ரோபாட்டுடன்

விளையாடிக் கொண்டிருந்தாள். ஷூக்களை மாட்டிய படி தாரிணியிடம் சொன்னான்.

“ம். யாருக்காவது போய் ஹெல்ப் பண்ணுங்க, டிவிய பாத்து பாத்து என்ன ஆகப்போகுது. என்ன இருந்தாலும் நடக்குறது நடக்கத்தான் போகுது” என்றாள்.

“அப்புறம், பத்திரம். ஷட்டர் மாட்டுறேனு கைல கால்ல கிழிச்சிக்கிட்டு வந்து நிக்காதீங்க” என்றாள் கரிசனத் தோடு

“அதெல்லாம், கிளவுஸ் இல்லாம தொடமாட்டோம்” என உத்தரவாதம் தந்துவிட்டுக் கிளம்பினான்.

பரணியின் வீடு மாநிலத்தின் புதிய கட்டுமான விதிக ளைப் பின்பற்றிக் கட்டப்பட்ட வீடு என்பதால் ஜன்னல், கதவுகள் ஹரிக்கேனைத் தாங்கும் உறுதியான கண் ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன.

“நமக்கு ஷட்டர்ஸ் மாட்றதுனா, வேற வெளி ஆளைத் தான் தேடவேண்டியிருக்கும். நீங்க எங்க அதையெல் லாம் தனியா செய்யப் போறீங்க”

என அவள் பிலாக்கணம் சொல்லி முடித்தபோது, பின்பு றக்கதவை அடைத்துவிட்டு வெளியேறி இருந்தான்.

அவன் எதையும் தனியாகச் செய்வதில்லை எனும் தாரி ணியின் குற்றச்சாட்டு முழுவதும் உண்மையில்லை.

உண்மையில் சுயமாக மழிப்பது, துவைப்பது போல இங்கே பெரும்பாலான வேலைகள் சுய உதவி எனும் 'செல்ஃப் ஹெல்ப்' வகைதான். ஊரில் இருப்பதுபோல பாத்திரம் துலக்க, வீடு துடைக்க, சமைக்க என்று தனி யாக தினப்படி வேலையாட்கள் கிடையா. சொந்தமாக கார் ஓட்டுவதில் தொடங்கி, வீட்டுக்கு சீலிங் பேஃன்

மாட்டுவது, பெயிண்ட், ஜன்னலுக்குச் திரைச்சீலை, பாத்ரூம் ஷவர் ஹெட், பிளம்பிங் ஓர்க்... கழிப்பறை வரை சகலமும் சுயசேவை தான். இதையெல்லாம் செய்ய வேலைக்கு ஆட்கள் வைத்து மணிக்கு இவ்வளவு டாலர்கள் எனக் கொடுத்துக் கட்டுப்படியாகாது என்ப தால் எல்லோரும் சொந்தமாகக் கையில் ஆயுதமெடுக் கிறார்கள். வந்த புதிதில் சற்று தயங்கினாலும் பரணி இது போன்ற வேலைகளைச் செய்யப் பழகிவிட்டான்.

ஆனால், டிவி பற்றி தாரிணி சொல்வதில் ஓரளவுக்கு உண்மையிருக்கிறது. காலையில் இருந்து இர்மாவின் பாதையையும் அதை ஒட்டிய நிகழ்ச்சிகளை விடாமல் டிவியில் தொடர்ச்சியாக ஓய்வின்றி பார்த்துக் கொண்டி ருப்பது பரணிக்கும் அயர்ச்சியாகத்தான் இருந்தது. மூச் சைப் பிடித்துக்கொண்டு தண்ணீருக்குள் மூழ்கியிருப் பது போலொரு உணர்வு. எப்பொழுது வெளியே வந்து சுதந்திரமாக மூச்சுவிடுவது என்றிருந்தது. உள் மனத் தில் ஒருவித பயம் நெருங்கியதால், அரசாங்கத்தின் வழி நடத்தலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எப் போதுமில்லாமல் அதிகம் தேவைப்படுவதாக நினைத் துகொண்டான்.

கடைசி நேரத்தில் ஹரிக்கேனின் பாதை மாறி கடலுக் குள் போனால், இல்லை அதன் வேகம் சட்டெனக் குறைந்து பெரும் ஆபத்தில்லாமல் போக வாய்ப்பிருக்கி றதா ? எதுவும் சரியாக பிடிபடாமல் குழப்பமாக இருந்தது.

மேற்கே சூரியன் மஞ்சளாக மயங்கிக் கொண்டிருந் தான். ஆனால் வெயிலின் சூடு இன்னமும் காற்றில் இருந்தது. தொன்னூறு டிகிரி பாரன்ஹீட் இருக்கலாம். எப்போதாவது சாலையில் தென்படும் ஒன்றிரண்டு கார் களும் இன்று கண்ணில்படவில்லை. ஒரு பெண் தன் கார் கராஜில் இருந்த சகலவிதமான சாமான்களை

யும் சேர்த்துவைத்து கேமராவில் வீடியோ படம் எடுத்துக்கொண்டிருந்தாள். இன்னொரு வீட்டில் ஹரிக்கேன் ஷட்டர்ஸ் பொருத்திக் கொண்டிருந்தனர். குடியிருப்பின் மையத்தில் இருந்த பூங்காவில் வழக்கமாக விளையாடிக்கொண்டிருக்கும் ஒன்றிரண்டு பிள்ளைகளும் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது. பூங்காவின் ஓரமாக நின்றிருந்த கொன்றை மரம் புற்தரையைத் தனது சிவப்புப் பூக்களால் நிரப்பியிருந்தது.

வரதுவின் வீடு, பரணியின் வீடு போல மாடி எதுவும் இல்லாமல் தரைதளத்தில் மட்டும் இருக்கும் பண்ணை (Ranch style) வீடு. கீழே செவ்வகம், கூரையாக முக்கோணம் எனும் சிறுவர் வரையும் ஓவிய வீடு போன்றதொரு சிக்கலற்ற எளிய வீட்டுக் கட்டுமானம். வாசலில் இரண்டு பெரிய கண்ணாடி ஜன்னல்கள் வரவேற்றன. நான்கு அடிக்கு ஆறு அடியாக இருக்கலாம். வரது இடதுபக்க ஜன்னலில் இருந்த திருகுகளை நீக்கிக் கொண்டிருந்தவர் “வாங்கோ” எனச் சிரித்தபடி வரவேற்றார். வரது முன்னாள் சென்னைவாசி. இங்கே உயிரியல் பிரிவில் மேற்படிப்பு படித்துவிட்டு அதேத் துறையில் ஆராய்ச்சியாளராக இருப்பவர். ஜன்னல்- நம்மூர் போல் மர பிரேம், இரும்பு கிராதிகள் போன்ற இத்தியாதிகள் இல்லாமல் அலுமினிய பிரேமில் பொருத்தியிருந்தனர். ஜன்னலைச் சுற்றி சிமெண்டில் சீரான இடைவெளியில் துளைகள் இட்டிருந்தார்கள்.

அந்தத் துளைகளில் இருந்த திருகை நீக்கிவிட்டு ஷட்டர்ஸ் எனும் இரும்புத் தகடுகளை வைத்து ஜன்னலை மூட வேண்டியது தான் வேலை. கராஜில் ஓரமாகக் கரும்பு கட்டுபோல் சீராகக் கட்டிச் சுவரோரமாக சாய்த்து வைக்கப்பட்டிருந்த தகடுகளை எடுத்துவந்து வைத்தார்கள். அவை நம்மூரின் வளைவு வளைவான கனமான அஸ்படாஸ் சீட்டை ஒத்திருந்தன. முனைகள்

இரத்தக்காவு கேட்கத் தேவையான கூர்மையோடு பள பளப்பாக இருந்தன.

“முதல்ல கிளோவ்சை போடுங்கோ” என உறையைக் கையில் திணித்தார்.

“முதல்ல அத போடுங்க. இப்படிதான் எனக்குத் தெரிஞ்சவன் போனவருசம் ஆத்துல ஷட்டர் பிக்ஸ் பண்ற பேர் வழினு, கைய கிழிச்சுண்டு ஆபரெசன் வரை போனான்”

“சீட் நல்ல வெயிட்டா இருக்குல்ல ?”

“ம், தாங்கனுமே, 300 கி.மீ. வேகத்துல காத்தடிச்சால் அடிக்குற காத்துல மரம் மட்டைனு எது பறந்து வந்தாலும் எதிர்த்து நிக்கணுமே”

ஜன்னலின் ஒருபுறம் ஒருவர் தகட்டை எச்சரிக்கையாகப் பிடித்துக் கொள்ள இன்னொருவர் மறுபுறம் தகடுகளைப் பொருத்தவேண்டும். திருகைப் பொருத்த வைத்திருந்த ஆட்டோமெடிக் ஸ்கூரு டிரைவர்கள் அளவில் கொஞ்சம் பெரிதான கைத்துப்பாக்கி போலிருந்தது. ரீசார்ஜ் செய்யும் வசதியுள்ள பாட்டரியில் இயங்குபவை. துப்பாக்கியில் தோட்டாவைப் பொருத்துவதற்குப் பதிலாகத் திருகை மறையில் பதியும்படி சரியாகப் பொருத்திவிட்டு டிரைவரைக் கொஞ்சம் அழுத்திப்பிடித்துத் துப்பாக்கியின் விசை போலிருக்கும் பொத்தானை அழுத்தினால் ட்ர்ரீக்..ட்ர்ரீக். எனும் தொடர் ஒசைக்குப் பின் திருகு அழகாக மறையில் பொருந்திக் கொள்கிறது. தேவைப்பட்டால் திருகை நீக்கவும் டிரைவரில் வழியிருக்கிறது.

இரண்டு அலுமினிய ஏணிகளை ஆளுக்கொரு புறமாக வைத்துக் கொண்டு மேலே ஏறி மாட்டிக்கொண்டிருந்தார்கள்.

“ஹரிக்கேன் ஷட்டருக்கு நாலு நட்ஸ் தேவைனு ஹார்ட்வேர் ஸ்டோர்ஸ் போனால் எதுவும் கிடைக்கவே இல்லை நல்ல கும்பல், ஜன்னலை அடைக்குற மர பிளைவுட்ஸ் சுத்தமா காலி. அப்புறம் பேட்டரி, ஜென ரேட்டர், தார்பாலின், டார்ச்லைட்... எல்லாத்தையும் ஜனங்க அள்ளிட்டு போயிட்டாங்க” என்று அலுத்துக் கொண்ட வரது,

“அடுத்த வருசம் முடிஞ்சா இந்த ஷட்டர்சை எடுத்துட்டு உங்கவீடு மாதிரி ஹரிக்கேன் புரூஃப் கண்ணாடி வாங்கி ஜன்னல், கதவுக்கெல்லாம் மாத்திடலாம்னு நினைக்கி றேன். என்ன, செலவு பெருசா இருக்கும்” என்றார்.

வீட்டில் குடிக்க பெரிய பீங்கான் குவளையில் டீ தந்தார் கள். டீவியில் மாலை ஐந்து மணிக்கான ரிப்போர்ட் வந் திருந்தது.

சமநிலையான குரலில், “எந்த சேஞ்சும் இல்லை. கேட் டகிரி ஐஞ்சு தானாம்” என்றார்.

“என்னது. சேஞ்சே இல்லையா ?”என்றான் அதிர்ச்சி கலந்த ஆச்சர்யத்துடன்

“ஆமாம், ஒரு மணி நேரத்துக்கு பதினாறு மைல் வேகத் துல தான நகர்ரது” என்றார் சாதாரணமாக

“ஆனால், கவர்மெண்ட் சகல ஏற்பாடும் பக்காவா செய் றாங்க. கவர்னர் தெற்க வடக்கனு ஸ்டேட் முழுக்க பறந்து பறந்து போய் பேட்டி வேற குடுக்குறாரே”

அவர் நெற்றியில் வழிந்த வியர்வையை ஒற்றை விரலால் வழித்தபடி

“ஆமா, புஷ் கவர்மெண்ட்ல ஹரிக்கேன் கட்ரீனா மாதிரி டிரம்புக்கு நடக்கக் கூடாது இல்லை” என்றார் மெலிதாகச் சிரித்தபடி.

“அது ஒன்னு, இன்னொரு பிரச்சனை, டெக்சாஸ்ல இப்ப வந்த ஹார்வி மாதிரியும் ஆயிடக் கூடாதுல்ல”

“ஹூஸ்டன்லயா. ஏரி மாதிரி தாழ்வான பகுதியெல்லாம் வீடு கட்டுனா” அவர் எதிர்க்கேள்வி கேட்டார்.

“நம்ம ஊரு மாதிரிதானா ?” என்றான் கேலியாக

“ம், நம்ம ஊரு அளவுக்கு மோசமில்லைனு சொல்லாம்” என்றவர்
விடாமல், ஆமாம், பவர் போனால் பிக்ஸ் செய்ய நீங்க ரெடியா ?”என்றபடி உள் அர்த்தத்தோடு சிரித்தார்.

நாம் சுவாசிக்கிறோம் எனும் பிரக்ஞை பிணத்தைப் பார்க்கும் போது வருவதுபோல, இதுபோலொரு பிரச்சனை என்றால்தான் வழக்கமாக மின்சாரம் தருபவர்களின் ஞாபகம் வரும் என்று நினைத்தவன் மெலிதாக சிரித்தபடி

“நாங்க எப்போதும் பிரிபர்டு தான். பேஸ்புக் பாத்தீங்களா, நம்ம கம்யூனிடியில ஒருத்தர் கயாக் படகு வைச்சுகிட்டு ரெடியா இருக்கனு போட்ருக்காரே” என பேச்சை மாற்றினான்.

“அவ்வளவு தண்ணி வருமா என்ன ?”

“வருமாவா. புயல் காத்து ஒருபக்கம்னா ஸ்ராம் சர்ஜ்னு சொல்ற கடல் தண்ணீர் உள்ள வர்ரதும் பெரிய ஆபத்துன்னு சொல்றாங்களே”

“ம், தேவைப்பட்டால், ஷெல்ட்டருக்குப் போய் தங்க வேண்டியது தான். நமக்குத்தான் எவாக்குவேசன் ஷெல்ட்டர் பக்கத்துல இருக்குதே”

“300 கி.மீ. காத்துக்கு ஷெல்ட்டர் எல்லாம் தாங்குமான்றது சந்தேகம் தான். ஆனால் நம்ம வீடுங்க கண்டிப்பாக தாக்கு பிடிக்காது ”என்றவரின் குரலில் விரக்தி தெரிந்தது.

“என்னதான் இருந்தாலும் வீட்டுக் கடனை கட்டி முடிக்கிறவரை, வீடு முழுசா நம்மளோடது இல்லையே” என்று சொல்லி நிலைமையைச் சகஜமாக்கினான்.

“வேற வழியில்லாட்டி மஞ்சள் நோட்டீஸ்தான்” என அவர் சொல்லி முடிப்பதற்கும் பீப்.. பீப்.. எனத் தொடர்ச்சியான அபாய ஒலி போலொரு சத்தம் வீட்டுக்குள் இருந்து வருவதற்கும் சரியாக இருந்தது.

கொஞ்ச நேரம் யாருக்கும் எதுவும் புரியவில்லை. யோசனையாக அவனைப் பார்த்தவர் போட்டது போட்டபடி கிடக்க மடமடவென வீட்டுக்குள் நுழைந்தார். முதலில் நெருப்புக்கான அபாய ஒலியாக இருக்குமோ என அவன் நினைத்தான். பிறகு வேறுவழியின்றி பரணி அவர் பின்னாலேயே ஓடினான் என்றே சொல்லவேண்டும். உள்ளே டிவியில் வந்த அபாய ஒலி நின்றிருந்தது. ஆனால், திரையில் ஓடிக் கொண்டிருந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு "அவசரச் செய்தி- இது இர்மாவுக்கு முன்பான எச்சரிக்கை செய்தி வெள்ளோட்டம்" என்று ஆங்கிலத்தில் ஒளிர்ந்த தகவலை இயந்திர ஆண்குரல் வாசித்துக் காட்டியது.

நொடியில் அறைக்குள் அபாய மேகங்கள் சூழ்ந்து ஒரு வித இறுக்கமான அமைதி சூழ்ந்தது. இருவருக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை. சில நொடி மௌனத்துக்

குப் பிறகு வரது "சரி வாங்க வேலைய முடிச்சிடலாம்" என்றபடி வெளியே வந்தார்.

வீட்டைச் சுற்றி இருந்த உயரம் குறைந்த சிறிய ஜன் னல்களுக்கு ஷட்டர்ஸ் பொருத்தும் வேலை அவ்வளவு பெரிய சிரமமாக இருக்கவில்லை. ஆனால், உயரமான பெரிய ஜன்னல்களுக்குப் பொருத்துவதற்கு பெரும்பாடு பட்டார்கள்.

நெட்டையும் குட்டையுமாக இருந்த இரண்டு ஏணி களை வைத்து தகடுகளைப் பொருத்தத் திண்டாடி னார்கள். சின்ன ஏணியில் ஏறி ஒருவர் தகட்டை எக்கிபி டித்தபடி இருக்க அடுத்தவர் பெரிய ஏணியில் ஏறித் திரு கைப் பொருத்தினார். இப்படி இருவரும் மாறி மாறி ஏறி இறங்கியதில் தொப்பலாக வியர்வையில் குளித்தார்கள். படகில் இருபுறமும் தொடர்ந்து துடுப்பு போட்டவனின் கைபோல அவனுக்கு அசந்தது. இதனுடன் ஃபிளாரிடா வின் வெக்கையும் சேர்ந்து எரிச்சலூட்டியது.

முழுவதுமாக அடைத்தபின் வீட்டுக்குள் ஏசி இல்லா மல் இருப்பது சூடான அடுப்பின் மேல் அமர்ந்திருப் பது போலக் கொடுமையானது. அதுவும் பிள்ளைகளு டன் வெளிச்சம், காற்று இல்லாமல் கூடைக்குள் கோழி போல் அடைகாப்பது தண்டனை. ஹரிக்கேன் மேத்யூ வின் போது பரணி நன்றாகவே அனுபவப்பட்டிருக்கி றான்.

"என்ன பண்றது நாலு, ஐஞ்சு நாளைக்குப் பொறுத்துக்க வேண்டியது தான்." என்றவர் வீட்டின் பின்புறமிருந்த நீச் சல் குளத்தைத் தயார் செய்யப் போனார். ஹரிக்கேன் சமயங்களில் நீச்சல் குளத்தின் நீரை வடிகட்டி மேலுறை போட்டு மூடி வைக்கக் கூடாது. மாறாக, குளத்தைச் சுற்றியுள்ள நாற்காலி போன்ற அசையும் பொருட்களை அப்புறப்படுத்துவது, அதிகப்படியான குளோரின் விட்டு

மின்சப்ளையை மட்டும் நிறுத்துவது உத்தமம் போன்ற நுட்பங்களை வரதுவிடமிருந்து அவன் தெரிந்துவைத் திருந்தான்.

அவன் வியர்வை வழிய வழிய வீட்டுக்குள் சூரியஒளி வரும் எல்லாத் திறப்புகளையும் ஒன்றுவிடாமல் தேடித் தேடி அடைத்திருந்தான்.

ஈரக்கையை டவலால் துடைத்தபடி வந்தவர் வீட்டின் முன்வாசலையும் முழுவதுமாக அடைத்துவிட்டு வீட் டுக்கு உள்ளே போக வர பின்புறமுள்ள கார் கராஜைப் பயன்படுத்திக்கொள்வது என முடிவெடுத்திருந்தார்.

முன் வாசல் கதவில் ஷட்டர்களை ஒவ்வொன்றாகக் கீழிருந்து பொருத்தத் துவங்கினார்கள். 'மழை கவிதை கொண்டு வருது யாரும் கதவடைக்க வேண்டாம்' எனும் வைரமுத்துவின் பாடல் அவன் நினைவுக்கு வந்தது. வீட்டை இருளடித்துக்
கொண்டிருப்பதாக நினைத்தான். வேறு வழியில்லை. இறுதியில் அனைவருக்கும் கல்லறை அது ஜன்னல் இல்லாத இருட்டறை எனத் தோன்றியது. உண்மை யில், மற்ற ஜன்னல்களை மூடும் போது வராத ஏதோ ஒரு உணர்வு கடைசியாக வாசல் கதவை அடைக்கும் போது அவனை ஆட்கொண்டது. சடலத்தைச் சிதை யில் வைத்து இறுதி விறகடுக்குவது போலொரு அபத்த சிந்தனை வந்தது.

காற்றின் வேகத்தைப்
பொறுத்து ஹரிக்கேன்க
ளைக் கேட்டகிரி ஒன்று,

இரண்டு என வகைப்படுத்துகிறார்கள்.

காற்றின் வேகம் மணிக்கு 74 முதல் 95 மைல்கள் வரை இருக்கும்போது கேட்டகிரி-ஒன்று என்றும் அது தீவிரமடைந்து 110 மைல்களைத் தொட்டால் கேட்டகிரி-இரண்டு, 111–129ஐ கேட்டகிரி-மூன்று ,130–156ஐ கேட்டகிரி-நான்கு என்றும் காற்றின் வேகம் 157 மைல்களைக் கடந்துவிட்டால் கேட்டகிரி-ஐந்து என்றும் வகைப்படுத்துகிறார்கள்

**********

# 8

ஹரிக்கேன் ஷட்டர்சைப் பொருத்திவிட்டு வரது வீட்டிலிருந்து கிளம்பும்போது இருளாகியிருந்தது. நடையில் பழைய வேகமில்லை. இறுதிச்சடங்கை முடிந்துவரும்

மனநிலையில் இருந்தான். மெல்லிய இருளில் புதைந் திருந்த வரிசையான வீடுகள் ஒரு பிரளயத்தை எதிர் பார்த்து மரக்கிளையில் அமைதியாக காத்திருக்கும் பற வைகளாகத் தெரிந்தன.

வீட்டில் நுழைந்த போது பிள்ளைகள் வரவேற்பறையில் விளையாடிக் கொண்டிருந்தனர். அறையின் ஓரத்தில் புதிதாக ஒரு பழுப்புநிற அட்டைப் பெட்டி முளைத்தி ருந்தது. திறந்து பார்த்தான். அவசரத்துக்கு வாங்கிய எமெர்ஜென்சி சாமான்களால் நிறைந்திருந்தது. பெட்டி யில் உள்ளூர் அரசாங்கம் வழங்கியிருந்த ' 2017 ஹரிக் கேன் மற்றும் வெள்ளக் கையேட்டை ' யும் போட்டு மூடினான். அதில் உள்ளூர் தொடர்பு எண்கள், இணை யதள முகவரிகள், அவசரகாலத்தில் வெளியேறினால் பாதுகாப்பாகத் தங்கும் இடங்கள், இன்சூரன்ஸ் போன்ற விவரங்கள் இருந்தன.

தாரிணி இரவு உடைக்கு மாறியிருந்தாள். அவள் கையில் கேமராவுடன் மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள். அவளை வீடு முழுவதும் படம் எடுத்து வைக்கச் சொல்லியிருந்தான்.

“முடிஞ்சுதா ?”

“உம், மேல கீழ எல்லாம் எடுத்துட்டேன். கராஜ் மட் டும் தான் பாக்கி ” என்றவளின் முகத்தில் வழக்கமான மலர்ச்சி இல்லை.

தாரிணி, வீட்டையும், வீட்டிலிருக்கும் முக்கியப் பொருள் களையும் எதற்காக படம் எடுத்துவைக்கிறோம் என் பதைத் தெரிந்திருப்பாள். அவர்கள் தேவைப்பட்டால் எந்த நேரமும் வீட்டை விட்டு வெளியேறவேண்டியிருக் கும். அப்படி வெளியேறினால், வீட்டுக்கு எப்போது எந் தச் சூழலில் திரும்ப வேண்டியிருக்கும் என்பதை யாரா

லும் சொல்ல முடியாது. அதனால், இந்தப் படங்கள் பின்னால் இன்சுரென்ஸ் போன்ற விவகாரங்களுக்குத் தேவையாக இருக்கும். கொஞ்சம் உணர்வுப்பூர்வமான விசயம் தான்.

“எதுக்கும் வீட்டு இன்சுரென்சுக்கு ஒருதடவ போன் செஞ்சு பாக்குறீங்களா” என்றாள் யோசனையாக

“என்ன திடீர்னு”

“எதாவது டேமேஜ் ஆச்சுனா கவரேஜ் என்னனு தெரிய ணுமே ”

“ம், இப்ப ராத்திரில எங்க போன் பன்றது. பார்ப்போம்” என்று தவிர்ப்பது போல் பொதுவாக அவன் சொல்லி வைத்தாலும், உள்ளுக்குள் அது குறித்த லேசான பயம் கலந்த உறுத்தல் தொற்றிக்கொண்டது.

தரையில் இரண்டு தண்ணீர் பாட்டில்கள் கட்டிய சிப்பங் கள் இருந்தன. விசாரித்தான்.

“ம், ரவிக்கு கிடைச்சுதுன்னு நமக்கும் சேர்த்து வாங் கிட்டு வந்து கொடுத்துட்டு போனார்” என்றாள்.

“அப்போ இந்த ஸ்வீட்ஸ் ?” என மேசையிலிருந்த இந் திய இனிப்பைக் காட்டினான்.

“அதுவும் அவருதான் கொண்டுவந்து கொடுத்தார். சிட் டிசன்ஷிப் கிடைச்சிடுச்சாம்” என்றாள்.

பரணி பொதுவாக யாரிடமும் உதவி கேட்க கூசுவான். அதே சமயத்தில் யாரேனும் உதவி செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு மனமுவந்து நன்றி சொல்ல தயங்கமாட் டான்.

உடனே ரவிக்கு போன் செய்து தனது நன்றியையும், வாழ்த்துகளையும் சொன்னான். அவர் தன்னுடைய அமெரிக்கக் கனவு பல ஆண்டுகளுக்குப் பிறகு நன வாகி இருந்தாலும் உணர்ச்சிவசப்படாமலேயே பேசி னார். “அமெரிக்கக் குடிமகனானதை எப்படி உணர்கி றீர்கள் ?” என அவன் கேட்டதற்குக் கூட “பெரிய உற் சாகமெல்லாம் இல்லைங்க. பத்து வருசம் அமெரிக்கன் விசா, எக்ஸ்டென்சன், அப்புறம் கீரின் கார்டுனு கியூல நின்னோம். இனி அந்தத் தொல்லை இல்லை” என்று சாதாரணமாக சொன்னவர் இறுதியாக “என்ன, பரிமேல ழகர்-ன்ற என்னோட அப்பா பேரைத் தான் கடைசிவர சொல்லத் தெரியாமல் கொலை பண்ணிணாங்க” எனச் சொல்லி உரக்கச் சிரித்தார்.

அவருடைய சிரிப்பில் பரணியும் சேர்ந்துகொண்டான். ஆனால் ரவியைப் போல இங்கிருக்கும் பலரும் அதிஷ்ட சாலிகள் இல்லை என்பது உண்மை. கடந்த வாரம் கலி போர்னியாவில் இருக்கும் பரணியின் நண்பர் ஒருவர் பேசினார். அவர் மகள் அங்கிருக்கும் ஒரு புகழ்பெற்ற கல்லூரியில் இறுதி ஆண்டுபடித்துக்கொண்டு இருக்கி றாள். ஒரு நாள் மதியம் செய்முறை வகுப்பில் இருந் தவளை அழைத்து “இனி உன்னை அமெரிக்காவில் இருக்கக் கூடாது எனச் சொல்லிவிட்டார்கள், நீ நாட் டைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும்” எனக் கட்டாயப்படுத்தி கல்லூரியை விட்டு அனுப்பியிருக்கி றார்கள்.

நடந்தது இதுதான். எச்ஒன்பி எனும் விசா மூலமாக இந்தியாவில் இருந்து குடும்பத்துடன் வந்த அவர் கிரீன் கார்டு எனும் அமெரிக்க நிரந்தரக் குடியுரிமைக்கு விண் ணப்பித்துவிட்டு கடந்த பன்னிரண்டு வருடங்களாகக் காத்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு நிரந்தரக் குடியு ரிமைக் கிடைப்பதற்குள் அவருடைய மகள் (இந்தியன்)

இருபத்தோரு வயதைக் கடந்துவிட்டாள். அமெரிக்கக் குடியுரிமை விதிப்படி இருபத்தொரு வயதைக் கடந்த பிள்ளைகள் பெற்றோரைச் சார்ந்திருக்க இயலாது என் பதால்தான் இந்த அவசர வெளியேற்றம்.

இதை எதிர்பார்த்து அவள் முன்பே விண்ணப்பித்தி ருந்த மாணவர் விசா மறுக்கப்பட்டு விட்டதால் அவள் இந்தியா செல்வதைத் தவிர வேறுயில்லை என்று வழக் கறிஞர்களும் கைவிரித்துவிட்டார்களாம். இங்கேயே வளர்ந்து பள்ளிப்படிப்பையும் முடித்து மனதளவில் ஏறக் குறைய அமெரிக்கக் குடிமகளான அந்தப் பெண் தனது எதிர்காலம் குறித்த மிகப்பெரிய கனவுகளுடனும், நம் பிக்கையுடன் இங்கே கல்லூரியில் படித்துக்கொண்டி ருந்தாள். இந்த அதிர்ச்சியை முற்றிலும் எதிர்பார்க்காத அவள் இதைக் கேட்டு நொறுங்கிப் போயிருக்கிறாள்.

கல்லூரியில் பருவத்தேர்வுக்குத் தீவிரமாக படித்துக் கொண்டிருந்தவளை "இனி நீ இங்க இருக்க முடியாது. இந்தியா போய் வேணா விசா முயற்சி செய்து பார்க்க லாம் உடனே கிளம்பு" என வலுக்கட்டாயமாக நண்பர், அவளை அழுக அழுக ஊருக்கு இழுத்துக்கொண்டு போயிருக்கிறார். அதுபோல கடைசி நிமிடத்தில் விசா மறுக்கப்பட்டு நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று கார், வீடு போன்ற உடமைகளை வேறுவழியின்றி வந்தவிலைக்கு விற்றுவிட்டு ஊர் திரும் பிய சம்பவங்கள் பல உண்டு. சமீபத்தில் இதுபோன்ற அடாவடிகள் அதிகமாகிவிட்டது என்பது உண்மை தான்.

அவனுக்கு மீண்டும் தண்ணீர் ஞாபகம் வந்தது. பவர் இருக்கும் போதே தண்ணீரை பிடித்துவைத்துவிடலாம் என்று நினைத்து வீட்டில் இருந்த வாளி, பெரிய பாத் திரங்களை நிறைத்தான். நாளை பாத்ரூம் டப்பையும்

அடைத்துவைத்து தண்ணீரை சேமித்துவைக்க மன துக்குள் திட்டமிட்டான்.

இங்கே இருபத்திநான்கு மணிநேரமும் குழாயில் தண் ணீர் வரும் அப்படியே பிடித்துக் குடிக்கலாம். தனியாக எதிலும் பிடித்துவைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஹரிக்கேனுக்கு பின்பு வரும் சிலநாட்களுக்கு மட்டும் குழாய் தண்ணீரை காய்ச்சிக் குடிக்கச் சொல்லி அறிவு றுத்துவார்கள். மற்றபடி வேறு கட்டுப்பாடுகள் இல்லை. வேண்டுமானால் பில்டர் வைத்துக் கொள்ளலாம். நம் மூர் நகராட்சிக் குழாய் தண்ணீரில் குப்பென வீசும் குளோரின் வாசம் இங்கில்லை. படுக்கை அறையில் வாக்கியூம் கிளீனரை வைத்துச் சுத்தம் செய்துகொண் டிருந்தான்.

கீழிருந்து கவி கூப்பிட்டாள். சன்னமான இயந்திர ஒலி யில் அவன் முதல் முறை கவனிக்காததால் மறுபடி "அப்பா. இங்க வந்து கொஞ்சம் பாருங்க" என அழுத்திச் சொன்னாள். படிகளில் தடதடத்தான். வரவேற்பறையில் அவள் சிரித்தபடி ராணுவ மிடுக்கோடு கைகளை வீசிய படி அவனுக்கு நடந்து காட்டினாள். ஐந்து வயது முகத் தில் பூரிப்பு வழிந்தோடியது.

அவனுக்கு நொடியில் அனைத்துக் கவலைகளும் விலகி ஒதுங்கி நின்றதுபோலொரு உணர்வு வந்தது. அவள் செய்கை சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாமல் இருக்கலாம். ஆனால், அவள் குழந்தை. பச்சை மண். தனக்குப் பிள்ளையாக பிறந்ததைத் தவிர வேறொன்றும் அறியாத தேவதை. பொய்மை, பொறாமை என இன் னும் பல ஆமைகள் நிறைந்த உலகில் இன்னமும் தூய வெள்ளை மலர் அவள் எனப் பெருமிதம் கொண்டவன் வாரி அணைத்துத் தூக்கிக்கொண்டான்.

தனது கன்னத்தை அவளுக்கு விரல்களால் தட்டி காட்டினான். அவள் புரிந்தவள் போல் சிறிய உதட்டைக் குவித்து டக்கென முத்தமிட்டாள். பூவின் ஸ்பரிசம் போலொரு மெல்லுணர்வு ஆட்கொண்டது. பதிலுக்கு முத்தமிட்டான். பிள்ளைகள் இல்லாத உலகம் எப்படியானதாக இருக்கும் என்பதை அவனால் கற்பனை செய்துகூட பார்க்கமுடியவில்லை. வீடு, மனைவி, பிள்ளைகள் என்று குடும்பமே ஒருவனைத் தொடர்ந்து இயங்கச் செய்துகொண்டிருப்பதாகத் தோன்றியது.

"நமக்கு எவாக்குவேசன் பிளான் என்ன?ஏதாவதுன்னா பிள்ளைகளோட எங்க போறது ?" கவலையோடு கேட்டாள் தாரிணி.

அவன் பதில் பேச வாயெடுத்தபோது, அம்மு "அப்பா, சீ திஸ்!" கவன ஈர்ப்புக் குரலெழுப்பி டிவி நிகழ்ச்சியைக் கை காட்டினாள்.

டிவியில், சூறாவளியின் போது வீட்டில் பதுங்கிக் கொள்ளும் வழிமுறைகளை விளக்கிக்கொண்டிருந்தார்கள். வெளியே சூறைக்காற்று அடிக்கும் போது ஜன்னல் கதவுகள் எதுவும் இல்லாத அறையில் இருப்பது பாதுகாப்பானது. அதனால் குடும்பத்தினர் அதுபோன்றதொரு அறையைத் தேர்ந்தெடுத்து சூறாவளி முடியும் வரை ஒளிந்து கொள்ளவும், உள்ளே தங்கத் தேவையான ஸ்னாக்ஸ், படுக்கை சமாச்சாரங்களை வைத்துக் கொள்ளுங்கள். இருளைச் சமாளிக்க டார்ச் லைட் அதி முக்கியம் என்றார்கள்.

மாடிக்கு வந்த பரணி முகநூலைப் பார்த்துக் கொண்டிருந்தான். காலையில் இர்மா குறித்த தனது மனஓட்டத்தை முகநூலில் பகிர்ந்திருந்தான்.

'இர்மா ' எனப் பெயரிடப்பட்ட ராட்ச சூறாவளி வர லாறு காணாத வேகத்துடனும், சீற்றத்துடனும் அமெரிக் காவின் பிளாரிடா மாநிலத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தேவையான முன்னேற்பாடு, பாதுகாப்பு ஏற்பாடுகள் துரிதமாக
முழுவீச்சில் நடந்துகொண்டிருக்கிறன. நாங்கள் இந்த வார இறுதியில் இர்மாவை எதிர்கொள்ள ஆயத்தமாகி றோம்.

*185* மைல் *(~300 கி.மீ.)* வேக உக்கிரத்தோடு வரும் இர்மா வழியில் கரிபியன் கடலில் உள்ள சிறிய தீவுக ளைப் பந்தாடியபடி விரைகிறது. அதன் வேகம் எங்க ளைக் கலக்கமூட்டுகிறது.

எனும் அந்தப் பதிவுக்குப் பலநூறு முகநூல் அன்பர்கள் லைக் செய்ததோடு ஆச்சர்யப்படும் வகையில் பாது காப்பாக இருங்கள், கடவுள் துணையிருப்பார், *OMG...!! stay safe*, வேலவனைத் தொழுங்கள், *I will pray God for the sobriety of the wind, Plz..take care.My prayers!* என்றெல்லாம் முகமறியாத நண்பர்கள் (சரியாக நாற்பத் தைந்து பேர்) அன்பொழுக கமெண்ட் செய்திருந்தது நெகிழ்ச்சியாக இருந்தது.

தாரிணி கீழே டைனிங் டேபிளில் தட்டு பரப்பிவிட்டு கூப்பிட்டாள். பிள்ளைகளோடு சேர்ந்து அமர்ந்தான். பாஸ்தா செய்திருந்தாள். ஊரில் நிலைய வித்துவான் உப்புமா என்றால் பரணி வீட்டில் இத்தாலிய பாணி யில் பாஸ்தா. அவர்கள் முள்கரண்டியுடன் சண்டையிட் டுக் கொண்டிருந்தபோது, “என்னோட காருக்கும் கேஸ் போட்டு வைச்சிருங்களேன், கொஞ்சம் தான் இருக்கு, தேவைப்படும்” என யோசனை சொன்னாள் தாரிணி. பிள்ளைகள் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

“அப்பா, ஜூபிடர் லைட் ஹவுசுக்குக் கூட ஹரிக்கேன் ஷட்டர்ஸ் பிக்ஸ் பண்றாங்களாம், டிவில பார்த்தேன்” என்றாள் கவி. அம்மு ஹரிக்கேன் பயிற்சி வரைபடத்தை அவனிடம் காட்டி சரிபார்த்துக்கொண்டாள்.

அவன் பாத்ரூம் சென்று பல் தேய்த்து வெந்நீர் குழாயைத் திறந்துவிட்டு கொப்பளித்துவிட்டு வந்தான். “நீ பிள்ளைங்களைத் தூங்கவைச்சிட்டு படுத்துடு, திரும்பி வர லேட்டாகலாம்” அவள் கண்களைச் சந்திக்காமல் கிளம்பினான்.

இரவு மணி பத்தாகி இருந்தாலும் வெளியே இன்னமும் இருளோடு வெக்கை இருந்தது. சாலைகளில் இர்மாவின் பரபரப்பைப் பார்க்க முடிந்தது. எங்கும் பதட்டமான முகங்கள். அவன் கண்களில் எதிர்ப்பட்டவர்கள் அனைவரும் முடுக்கிவிட்ட கடிகாரம் போலத் தீவிரத் தன்மையோடு இயங்குவது போலிருந்தது.

வழக்கமான இடங்களில் பெட்ரோல் தீர்ந்திருந்தது. சுற்றுவட்டாரத்தில் பத்து பதினைந்து மைல்கள் சுற்றித் திரிந்ததில் கார் பெட்ரோல் இண்டிகெட்டரே ஒளிர்ந்தது. ஆனால், எங்கும் ' இல்லை' எனும் வாசகமே வரவேற்றது. இருந்த ஓரிரு இடங்களிலும் மிகக் கடுமையான கூட்டம். நீண்ட வரிசை. குறைந்தது சில மணிநேரங்களாவது ஆகும் என்ற நிலை. காத்திருந்தாலும் நிச்சயமாக பெட்ரோல் கிடைக்குமா என்பதையும் சொல்லமுடியாது. அதையும் தாண்டி ஓரிடத்தில் காத்திருந்தான். எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. ஒரு நிலைப்படுத்தித் தவம்போல் இரண்டு மணிநேரத்துக்கு மேல் ஒருகட்டத்தில் குரல்வளை அழுத்தி நெரிக்கப் படும்போது திமிறிக்கொண்டு விடுவித்துக்கொள்வது போல வெக்கையான இருளில் யாருமற்ற தனிமையில்

மணிக்கணக்கில் காத்திருக்க பொறுமையின்றி வீட்டுக் குத் திரும்ப முடிவெடுத்தான்.

ஏமாற்றம் வயிற்றை அழுத்திப் பிசைந்தது. வஞ்சிக் கப்பட்டதாக உணர்ந்தான். நமக்கு அவசியமில்லாத ஒன்றை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவது வேறு. ஆனால், அத்தியாவசியமான ஒன்றைப் பெற பூரண உரிமை, தகுதி இருந்தும் மறுக்கப்படுவது ஆற்றாமை யாக இருந்தது. உடனே ஏதோ செய்துவிட வேண்டும் என்ற துடிப்பு அவனுள் எழுந்தது. திடீரென உரக்க கோசமிடவேண்டுமெனத் தோன்றியது. நெஞ்சில் தீ போல ஏதோ ஒன்று ஆங்காரத்துடன் பொங்கி எழுந்தது. அந்நிய தேசத்தில் நம்மால் பெரிதாக என்ன செய்துவிட முடியும் எனும் நினைப்பு வந்து அதற்கு நீருற்றியது. உள் ளிருந்து கிளர்ந்தெழுந்த அந்தத் தீ அவ்வளவு துரிதமாக அணைக்கப்பட்டது அவனுக்குச் சற்று ஏமாற்றம்தான். ஆனால், அவனது அறச்சீற்றம் சட்டென அடங்கினாலும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறை குரல்வளையை நெரித்தால் எதிர்க்குரல் எழுந்து மக்கள் புரட்சி தானாக வெடிக்கும் என்பதை உணர்ந்துகொண் டான்.

டிவியில் கவர்னர் சொன்னது போல அதிக பெட்ரோல் வந்து நாளை நிலைமை சீரடையும் எனும் நம்பிக்கை யில் சமாதானமடைந்தான்.

வீட்டிற்கு வந்தபோது எல்லோரும் தூங்கியிருந்தார்கள். தொட்டியில் உறங்காமல் உலாத்திக்கொண்டிருந்த மீன் களுக்கு இரையிட்டுப் படுக்கையில் சாய்ந்தான். ஹரிக் கேனைத் தவிர அவன் மனதில் வேறு சிந்தனை எதுவும் இல்லை. சுழற்றியடித்த ஹரிக்கேன் நினைவுகளினூடா கவே பரணி உறங்கியிருந்தான்.

இன்று நம்மால் ஹரிக்கேன்களை வகைப் படுத்தமுடிகிறது. பெயரிட இயலுகிறது. செயற்கைக்கோள்கள் போன்ற தொழில் நுட்ப உதவியுடன் பின்தொடர இயலுகிறது. ஆனால், செமினோல் (Seminole) எனும் அமெரிக்கப் பழங்குடியினர் சாகிராஸ் (sawgrass) எனும் நெடிய ஊசிப்புற்களின் பூக்கள் பூப்பதை வைத்து ஹரிக்கேன் வரு வதை முன்கூட்டியே கணித்தார்களாம்.

# 9

ஒருநாள் எத்தியோப்பியன் உணவகம் ஒன்றை இணையத்தில் தேடிப்பிடித்து பரணி சென்றிருந்தான். அங்குப் போன பின்புதான் அது முற்றிலும் கறுப்பர்கள் அடர்த்தியாக வாழும் பகுதி என்பதே அவனுக்குப் புரிந்தது. “மாலை ஆறு மணிக்குமேல் அந்தப்பக்கம் போகாதே! அடிக்கடி துப்பாக்கி சம்பவங்கள் நடக்கும். நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய ஏரியா” என நண்பர்கள் எச்சரித்த ஆபத்தான இடம். தனது முட்டாள்தனத்தை நொந்துகொள்ள மனமின்றி அந்தத் தெருவில் நுழைந்தான். நகரத்துக்குப் பொருத்தமில்லாத ஒற்றைக் கார் மட்டும் செல்லும்படியான குறுகலான தெருக்கள். இருபுறமும் காங்கிரீட் ஷெட்டுகள் போலிருந்த சிறிய வீடுகளில் வாசல் கதவுவோடு போனால் போகிறதென்று ஒரு இரும்பு சன்னலையும் சேர்த்து வைத்திருந்தார்கள். மற்றபடி கவிழ்த்து வைத்த பெட்டி போலிருந்தன. அந்த வீடுகள் இங்கே பிழைக்க அடிமைகளாக வந்த கறுப்பர்களுக்காகக் கட்டப்பட்டவை.

நூறு வருடங்களுக்கு முன்பு தென் ஃபிளாரிடாவின் பெரும் பகுதி அடர்ந்த சதுப்புநிலம். மனிதர்களின் காலடிபடாத கடற்கரைகள், புதர்கள் முதலைகள், விலங்குகள். ஃபிளாரிடா அமெரிக்காவின் இருண்ட மாநிலமாக இருந்த நாட்கள்.

ஆனால், மாநிலத்திற்குச் சூரியனின் ஆசி பூரணமாக இருந்தது. சூரிய ஒளி வருடம் முழுவதும் வஞ்சனை யின்றி கிடைத்தது. தென் ஃபிளாரிடா அமெரிக்காவின் குளிர்காலச் சொர்க்கம் என்று கண்டுகொள்ளப்பட்ட பின் வந்த நாட்கள் ஃபிளாரிடாவின் பொற்காலம்.

அந்தக் காலகட்டத்தில் கடுங்குளிரால் தவித்துக் கொண்டிருந்த மக்கள் வெளிநாடுகளில் இருந்தும் மற்ற வடமாநிலங்களில் இருந்தும் பெருமளவில் ஃபிளாரிடா நோக்கி படையெடுக்கத்தொடங்கினர். மியாமி கடற் கரை மாநிலத்தின் தங்கக் கடற்கரையாக மாறி வெளி உலகத்துக்குத் தெரியத் தொடங்கியது. நியூயார்க், சிகாகோ போன்ற வடக்கிலிருந்த பெருநகர வணிகர்க ளும் முதலீட்டாளர்களும் சல்லிசாகக் கிடைத்த ஃபிளா ரிடா நிலங்களை வாங்கிக் குவித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் எண்ணெய்யிலும், பருத்தியிலும், பங்குச்சந் தையிலும் சம்பாதித்த காசை இங்கே தாராளமாக முத லீடு செய்தனர். கட கடவென மாநிலத்தின் மக்கள் தொகை ஒரு மில்லியனைத் தொட்டபோது வருடம் 1928. ஃபிளாரிடா அமெரிக்காவின் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் மாநிலங்களின் பட்டியலில் சேர்ந்தி ருந்தது.

குறுகிய காலத்தில் மிக அபரிமிதமான வளர்ச்சி. ஃபிளா ரிடாவின் வடக்கையும் தெற்கையும் இணைக்க புதிய ரயில் பாதை. கடற்கரையோரம் முழுவதும் ஆடம்பர விடுதிகள், வணிக நிறுவனங்கள், பண்ணை வீடுகள், குளிர் வாசத்தலங்கள் என்று ரியல் எஸ்டேட் கொடி கட்டி பறந்தது. மாநிலத்தின் மேற்கில் இருந்த சதுப்பு நிலங்களில் நீர் வடிகட்டப்பட்டு பல மில்லியன் ஏக் கர் நிலம் விவசாயத்துக்குத் தயாரானது. இதற்கெல் லாம் தேவைப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையைக் கறுப்பர்கள்தான் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். தினமும்

பல்லாயிரம் பேர், ஜார்ஜியா, அலபமா மாநிலங்களில் இருந்து ரயில்களில் வண்டி வண்டியாகவும் கரீபியன் தீவுகளில் இருந்து கப்பலில் அடிமைகளாகவும் இறக்கு மதி செய்யப்பட்டனர். ஒருவிதத்தில் அவை அன்றைய அடிமை வீடுகள் தான்.

**********

உணவகத்தின் உள்ளே அவன் நுழைந்தபோது பெரிய தடபுடல்கள் இல்லாமல் நான்கு, ஐந்து டேபிள்களுடன் மிக எளிமையாக இருந்தது. தொங்கிக் கொண்டிருந்த சிறிய சரவிளக்கில் ஆறு மின் மெழுகுவர்த்திகள் உரு கிக்கொண்டிருந்தன. அடர் வண்ணத்தில் ஆப்பிரிக்க ஓவியங்கள். கையால் பின்னிய நேர்த்தியான தட்டுகள் சுவரை அலங்கரித்தன. உணவு பரிமாறிய கறுப்புப் பெரி யவருக்கு என்பது வயதிருக்கலாம்.

தனக்கு முன் தட்டில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த கோதுமை நிற தோசையையும் உடன் இருந்த தொடுக றிகளையும் தயக்கத்தோடு வெறித்துப் பார்த்து கொண் டிருந்போது நட்போடு சிரித்த பெரியவர் “நீங்க இந்தி யரா ? அது இஞ்சிரா (injera) எத்தியோப்பிய திணை வகையில் செய்தது. இதுதான் எங்களுடைய தேசிய உணவு கூட, கூச்சப்படாமல் கையில் எடுத்து சாப்பி டுங்க” என உற்சாகமூட்டினார்.

கடைசியில் “எங்க டீயையும் சுவைத்துப் பாருங்களேன்” என்றபடி உரிமையாக டீ கோப்பையை நீட்டினார். முத லில் வேண்டாமென நினைத்து பின் முயற்சி செய்து பார்க்கலாம் என்று வாங்கிக்கொண்டான். எதுமாதிரியும் இல்லாத புதுவித சுவையில்
அருமையாக இருந்தது. பால் இல்லாமல் தேன் நிறத் தில் இருந்த டீயை ருசித்தபடி அவருடன் பொதுவாக பேசிக்கொண்டிருந்தான். அவர் எதிரே கிடந்த நாற்கா

வியை வசதியாக உட்கார்ந்தார். முதலில் நாட்டுநடப்பு கள். பின்பு பேச்சு அவரைப் பற்றி திரும்பியது. உணவகம் எத்தியோப்பியாவில் இருந்து அடிமையாக பிடித்து வரப் பட்ட அவரது தந்தை தொடங்கியது. இவர் இரண்டாவது தலைமுறையாக இதை நடத்திவருகிறார்.

“இதை ஆரம்பித்த காலம் நிறவெறி உச்சத்தில் இருந்த நேரம். அடிமை முறைதான் நடைமுறையில இருந்தது. கறுப்பர்களுக்குனு தனி உரிமைகள் எதுவும் கிடை யாது. தியேட்டர், நீச்சல்குளம், லைப்ரரி போன்ற பொது இடங்கள் எங்கேயும் அனுமதியில்லை. ஏன் உணவகங் களில் கூட 'கறுப்பர்களுக்கும், நாய்களுக்கும் அனுமதி இல்லை' எனும் வாசகங்கள் எழுதிய போர்டுகள் தொங் கின காலம்” என்று கூறி விரக்தியாக சிரித்தார். பழைய நிறவெறி குறித்து யாரும் இங்கே பொதுவாக வெளிப்ப டையாக பேசுவதில்லை என்பதால் பரணி ஒருவித ஆர் வத்தோடும் உன்னிப்போடும் அவரைக் கவனித்தான்.

“அப்போ கறுப்பர்களுக்கு சர்ச்சில் கூட அனுமதி கிடை யாது. அதனால அதிகாரப்பூர்வமான திருமணமெல் லாம்கூட இல்லை”

“அதிகாரப்பூர்வ... புரியல”

“எங்கள் வீட்டுத் திருமணங்களை சர்ச்சில் நடத்தி ஆவ ணப்படுத்தும் வழக்கமெல்லாம் அப்போ இல்லை. அத னால் 'ஜம்பிங் த புரூம்னு' (Jumping the Broom) ஒரு பழக்கம் நடைமுறையில் இருந்தது. அதாவது மணம் செய்துகொள்ள விரும்பும் கறுப்பின ஜோடி, ஒரு துடைப்பத்தைத் தரையில் போட்டுத் தாண்டினால் திரு மணமானவர்களாக அறியப்பட்டார்கள்.”

எழுந்து சென்று சூடான டீயை கண்ணாடிக் குவளையில் கொண்டுவந்து மீண்டும் கோப்பையை நிரப்பினார்.

“வாசிங்டனில் இருக்கும் அதிபர் மாளிகையை 'வெள்ளை ' மாளிகைன்னு (White House) சொல்வதன் அர்த்தம் கூட அதுதான்” என்றவர் அர்த்தபுஷ்டியோடு அவன் கண்களை ஊடுருவும்படி பார்த்தார்.

மார்ட்டின் லூதர் கிங் பற்றியும் அவருடைய சிவில் ரைட்ஸ் எனும் சமூக உரிமைக்கான போராட்டங்கள் குறித்து தெரிந்து இருந்ததாலும், 'வெள்ளை மாளிகை ' பற்றிய அவருடைய அவதானிப்பு பரணிக்கு ஆச்சர்யம் தந்தது.

“இப்ப நாங்க ஆப்ரிக்கன் அமெரிக்கர்கள்னு அடையாளப்படுத்தப்பட்டாலும் அப்ப நாங்க 'நீக்ரோக்கள் ' தானே” என மெலிதாக சிரித்தவரின் உதட்டில் கறுப்போடு கசப்பும் கலந்தே இருந்தது.

பரணியின் அனுபவத்தில் இளவயது கறுப்பர்களை விட வயதானவர்களிடம் அதிக மனிதாபிமானத்தையும், பாசத்தையும் பொதுவெளியில் பார்த்திருக்கிறான். அந்த வகையில் பெரியவரின் செயல்கள் பரணியை ஆச்சர்யப்படுத்தவில்லை.

அவருக்குப் பதில் சொல்லும்விதமாக “இப்போதான் கறுப்பரான ஒபாமா ஒன்னுக்கு, இரண்டு முறை அமெரிக்க பிரசிடெண்டா வந்துட்டாரே” என்றான். லேசான புன்னகையை மட்டும் பதிலாகத் தந்தவர் தன்னுடைய கோட் பாக்கெட்டில் இருந்த ஒரு சிகரெட்டைத் தடவி எடுத்து “வான்ட் அ ஸ்மோக் ?” என அவனிடம் நீட்டினார்.

மறுத்தான். லைட்டரில் சிகரெட்டைப் பற்றவைத்து புகையை ஆழ்ந்து இழுத்தார். ஏதோ பேச வாயெடுத்தவர் சற்று நிறுத்தி வாயிலிருந்த புகையைச் சவகாசமாக ஊதிவிட்டு” இதுக்கே இவ்வளவு ஆச்சர்யப்படுறீங்

களே, வர்ர வழியில ஒரு பரியல் சைட் இருந்திருக்குமே, பார்த்தீங்களா ?" என்றவரிடம் "பார்க்கவில்லை" என மறுத்த பரணி தான் வந்த வழியைச் சொன்னான்.

பரவாயில்லை எனும் தொனியில் லேசாகக் குனிந்த படி தலையை அசைத்தவர், அமெரிக்காவின் இருண்ட கோரமான ஒரு ஹரிக்கேனைப் பற்றிச் சொன்னார்.

1928ல் ஃபிளாரிடாவைத் தாக்கிய ஹரிக்கேன்தான், சமீ பத்திய அமெரிக்க வரலாற்றில் இரண்டாவது மிகப்பெ ரிய ஹரிக்கேன். ஃபிளாரிடாவில் மட்டும் இறந்தவர்கள் இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேல். ஹரிக்கேன்களுக்கு பெயர் வைக்கும் வழக்கம் அப்போது நடைமுறை யில் இல்லாததால் அதை 1928-ஓக்கசோபி ஹரிக்கேன் (1928 Okeechobee hurricane) என்று நினைவுகூர்கி றார்கள்.

"இரண்டாயிரத்து ஐநூறு பேரா ?" நம்ப முடியாமல் கேட் டான்.

"ம், அதுவும் தோராயமான எண்ணிக்கைதான். நிறைய பேர் வெள்ளத்தில் குப்பை போல அடிச்சுட்டு போன தால சரியான எண்ணிக்கை ஒருபோதும் கண்டுபிடிக் கப்பட முடியாது. அப்போ எல்லாம் ஹரிக்கேன் வர்ரதை துல்லியமா சொல்ல முடியாது. இப்போது இருப்பதுபோல நவீன தொழில் நுட்பங்களோ தொலைத் தொடர்பு களோ இல்லாத காலம் இல்லையா. ஹரிக்கேன் விச யத்துல அப்போதைய அதிகபட்ச தொழில் நுட்பம் பாரா மீட்டராக (காற்றழுத்தமானி) இருந்திருக்கும். அதுபோ லத் தொலைத் தொடர்பின் உச்சமாக ரேடியோ இல்லை டெலிபோன்கள் இருந்திருக்கலாம். அதனால் இன் னைக்கு போல ஹரிக்கேன் பற்றிய கணிப்புகள், அது தொடர்பான தகவல்களை முன்கூட்டியே சேகரிப்பது இயலாத காரியம். கிடைக்கும் பெரும்பாலான தகவல்

கள் கடலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் கப்பல்கள், நேரடி சாட்சிகளிடமிருந்து திரட்டப்பட்டவைதான். அதனால் பெரிய முன்னறிவிப்புகள் எதுவும் இல்லாமல் 145 மைல் வேகத்துல வந்த சூறைக்காற்று நாம, இப்ப நிக்குற வெஸ்ட் பாம் பீச்சை கரை கடக்குது. அதன் பாதையில் இருந்த இரண்டாயிரம் வீடுகளைச் சீட்டுகட்டுபோல சிதற செஞ்சுட்டு மேற்கே போகுது. ஹரிக்கேனோட கடுமையான தாக்கம் இருந்த இடம்னா லேக் ஓக்கச்சோபி தான்".

"லேக் ஓக்கச்சோபி உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே ?"

ஃபிளாரிடாவின் வரைபடத்தில் தெற்கே சற்று பெரிய துவாரம் இட்டது போல் தெரியும் பிக் ஓ (Big O) எனும் அந்த ஏரியைத் "தெரியும்" என்பதுபோல் தலையாட்டினான்.

"சூறைக்காற்று போகும் வழியெங்கும் கபளீகரம் செய்து அசுர பலத்துடன் ஏரியைச் கடந்தபோதுதான் யாரும் எதிர்பார்க்காத ஒரு விசயம் நடந்தது. அந்த ஹரிக்கேனின் ஆக்ரோச பலத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் ஏரியின் மதகு உடைந்து ஏரியைச் சுற்றி பல மைல்கள் தூரத்திற்கு வெள்ளக்காடாக்கியது. குடியிருப்புப் பகுதிகள், விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி பல ஆயிரம் பேர்களை விழுங்கிக் கொண்டது. புறஉலகில் இருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டவர்கள் வீடுகளையும், உடமைகளையும், சொந்தங்களையும் இழந்து பதைபதைப்புடன் கால்நடையாக இங்கதான் வந்தார்கள். இதோ இந்த சின்ன வீட்டுல நாற்பது பேர் மூனு நாளைக்குத் தங்க வேண்டியிருந்தது" என்றவர் தொடர்ந்தார்.

"மீன்கள், மாடுகள், முதலைகள் போன்ற சகலமானதோடு மனிதப்பிணங்களும் அழுகி மொத்த ஃபிளாரி

டாவே நாறிக்கொண்டிருந்த அந்தச் சூழலில் கூட இன வெறி இருந்ததுனா உன்னால் நம்ப முடியுதா ? "என்றார்

"செத்த பின்பும் இனவெறியா புரியலையே"

"ம், ஹரிக்கேன்ல செத்த வெள்ளையர்களுக்கு மட்டும் சவப்பெட்டி. எங்களுக்கு..." என்றவர் பேச்சை முடிக்காமல் பீடிகையோடு நிறுத்தி, புகைந்து கொண்டிருந்த சிகரெட் சாம்பலை கீழே தட்டிவிட்டார். சில நொடிகள் மௌனத்திற்கு பின் நிமிர்ந்து "நேரமிருந்தால் வாங்களேன் அங்கயே போய் பார்க்கலாம்" என அழைப்பு விடுத்தார். இசைந்தான்.

குறுகிய தெருக்களின் வழியாக சில நிமிடங்கள் நடத்திக் கூட்டிச் சென்றவர் நின்றார். கார்கள் விரைந்து கொண்டிருந்த சாலையின் மறுபுறத்திலிருந்த பூங்கா போன்ற பகுதியைக் கைகாட்டியவர் "செத்த கறுப்பர்களுக்கு சவப்பெட்டி கூட கொடுக்காமல், அதோ அங்க தான் பெரியகுழி வெட்டி அவ்வளவு பேரையும் போட்டு புதைச்சாங்க" என்றவரின் குரல் ஏமாற்றத்தோடு ஒலித்தது.

"அங்கேயா ?"

"ம், அதுகூட முழுசில்லை. ஒரு பகுதி. அவ்வளவு தான்" என்றவர் சற்று இடைவெளி விட்டு "நாம நின்னுகிட்டிருக்கிறமே இதோ இந்த ரோட்டைப் போட தோண்டும்போது கூட மனித எலும்புக்கூடுகள் வந்திருக்கு. ஆனால், யாரும் அதை பெருசா கண்டுக்கல "

"அப்ப இந்தப் பூங்கா " என்றான் தயக்கத்தோடு

"அதுகூட எங்களோட ஒரு பெரிய போராட்டத்துக்கு பிறகு சமீபத்துல தான் இந்த சைட்டைத் தனியாரிட

மிருந்து கையகப்படுத்தி, அரசு நினைவிடமாக மாத்தி ருக்கு" என்றவரின் குரல் கரகரத்தது.

அவர்கள் இருவருக்குமான இடைவெளியை இறுக்கம் புகுந்து நிரப்பியிருந்தது.

பெர்முடா முக்கோணம், அட்லாண்டிக்கின் மர்மபிரதேசம், சாத்தானின் முக்கோணம், என் றெல்லாம் சொல்லப்படும் கடல்பகுதியில் மர்ம மான முறையில் மறைந்து, தொலைந்து போகும் கப்பல், விமானங்களுக்கும் ஹரிக்கேன்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது

**********

# 10

பெரியவரிடம் விடைபெற்றுக்கொண்டு சாலையைக் கடந்து எதிரே பூங்கா போலிருந்த இடத்தைப் பார்த் தான். ஒரு நினைவிடம் இல்லை கல்லறை என்பதற் கான அடையாளம் எதுவும் தென்படவில்லை. அங்கி ருந்த அறிவிப்புப் பலகையில் '*1928- ஹரிக்கேன் மாஸ் பரியல் சைட் (பொதுப் புதைப்பிடம்)*' எனும் குறிப்போடு செப்டம்பர் 16, 1928 ல் பெரியவர் சொன்ன சம்பவங்கள் அங்கே நடந்ததாக எழுதியிருந்தார்கள்.

வெளியில் இருந்து பார்க்கையில் பூங்கா போன்ற அமைப்பில் இருந்தது. நுழையும் இடத்தில் அரண் போல் புளியமரத்தை ஒத்த அடர்த்தியான கிளை பரப் பிய குட்டையான மரங்கள் ஐந்தாறு நின்றிருந்தன. அதைக் கடந்து உள்ளே நுழைந்தால் புற்தரையில் மறு முனைக்கு நடந்து செல்ல குறுக்கே குறுகிய சிமெண்ட் தரை. மற்றபடி திறந்தவெளி.

அந்தி கருகிக்கொண்டிருந்தது. பரணியின் மனம் சஞ் சலப்பட்டது. மனதில் மிரட்சியோடும், தயக்கத்தோடும் மெல்ல முன்னேறினான். காலடியில் பெருமழையின் ஈரம் இன்னமும் மிச்சமிருப்பது போலிருந்தது. புதிதா கத் தோண்டிய பிரம்மாண்ட பள்ளத்தை மனக்கண்ணில் கண்டான். வானை அண்ணாந்தபடி பிளந்துகிடக்கும்

அந்தப் பள்ளத்தில் பிணக்குவியல். பாதி எரிந்து வீசி யெறிந்த கருகிய விறகுக்கட்டைகளை போல, ஒன்றின் மேல் ஒன்றாக. வேரோடு பிடுங்கி எறியப்பட்ட பச்சை மரங்கள் போல அசைவற்று கிடந்தன. பிணங்கள் ஆண், பெண், பிள்ளைகள் எனும் வித்தியாசமின்றி குவியலாக வீசப்பட்டிருந்தன. பல நாட்கள் தண்ணீரில் கிடந்து அழுகி, வயிறு உப்பி விகாரமாகி கிடந்த அந்தப் பிணங் களைக் கழுகுகள் கொத்தித் தின்கின்றன. அந்தக் கோரக்காட்சியைக் கண்டு அவன் மனம் பதறியது. அந்த உடல்களில் இருந்து கிளம்பிய கொடிய வாடையைத் தாங்க முடியாமல் மூக்கைப் பொத்திக் கொள்கிறான்.

யாரோ தொண்டையைப் பலங்கொண்ட மட்டும் அழுத் துவது போல மூச்சு முட்டிக்கொண்டு வந்தது. பிரயத் தனப்பட்டு மூச்சை இழுத்துவிட்டான். தோளை உத றிக் கொண்டு நெஞ்சில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, எதிரே கோடுபோல நீண்டிருந்த சிமெண்ட் பாதையில் முன்னே நடக்க எத்தனித்தான். ஆனால், எதிர்வினையாகக் கால் பின்னோக்கி செல்வது போலிருந்தது. முகத்தில் அறையும் கடுமையான எதிர்க் காற்றில் நடப்பதுபோல திமிறிக்கொண்டு முன்னேறி னான். அவனது காலடிக்குக் கீழே பல ஆயிரம் உடல் கள் புதைந்துகிடக்கும் நிதர்சனம் சுட்டது.

பெரும் புயலில் துர்மரணமடைந்து குறைந்தபட்ச மரி யாதையின்றி விலங்குகள் போல வீசப்பட்ட பிணங்கள் கீழே அவமானத்தால் புழுபோல் துடிப்பதாக உணர்ந் தான். அவர்களின் இதயத்துடிப்பு கால்கள் வழியாக உட லினுள் மின்சாரமாக பாய்வது போல் இருந்தது. இது வரை புதைந்துகிடந்த பிணங்கள் திடீரென விழித்துக் கொண்டு நீண்ட கரங்களால் அவனை உள்ளிழுத்து தங்கள் அவலக்கதைகளைத் அவன் காதில் ரகசியமாக சொல்ல அழைப்பதாக நினைத்தான்.

அப்பொழுது எழுந்த மெல்லிய அழுகுரல் உரத்து மரண ஓலமானது. கூடவே இறந்தவர்களின் கதறியழும் சத்த மும் சேர்ந்து பெருங்குரலாக அந்தப் பிரதேசமெங்கும் ஓங்கி ஒலித்தது. பொறுக்கமுடியாமல் அவனுடைய காது மடல்கள் சிவந்து சூடாகி துடிப்பது போலிருந்தது.

துர்மரணமடைந்தவர்கள் இங்கே பிசாசுகளாக உலாவு வார்களா என்ன ? அதிர்ச்சியாக இருந்தது. இந்தத் துஷ்ட ஆவிகள் என்னை என்ன செய்துவிடும் ? குழப் பம். வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ வலிமை யான ஒன்று அவனை ஆட்படுத்த முயற்சிசெய்வதாக உணர்ந்தான்.

**********

கை கால்களை உதறியபடி கண்விழித்த போது மணி நள்ளிரவைத் தாண்டியிருந்தது. அவன் உடல் வேர்த்து தொப்பலாக நனைந்திருந்தது. பாதங்கள் சில்லிட்டு மர ணத்தின் வாயில் வரைச் சென்று வந்தது போலிருந் தது. தன் மனதையும், உடலையும் ஒன்றுதிரட்டி சிரமப் பட்டு எழுந்து அமர்ந்தவனின் முகம் சலனமற்று இருந் தது. தன்னை இம்சிக்கும் ஹரிக்கேன் நினைவுகளில் இருந்து மீண்டவன் கொஞ்ச நேரம் இருளை வெறித்த படி இருந்தான். காலத்தின் பின்நோக்கி சென்றுவந்தது போலிருந்தது. ஆழ்மனதுக்கு விடப்பட்ட சவால் அவ னுக்குப் புரிந்ததும் புரியாதது போல இருந்தது. ஒரு தீர் மானத்தோடு எழுந்தவன் அறையிலிருந்து ஓசையில் லாமல் வெளியேறி இணையத்தில் இர்மா பற்றிய புதிய செய்திகளைத் தேடினான்.

டிவிட்டர், முகநூல் போன்ற சமூகவலை தளங்களில் இர்மா குறித்த பல தகவல்கள் கொட்டிக் கொண்டி ருந்தன. குறிப்பாக டிவிட்டரின் #HurricaneIrma #Irma #Irma2017 என இன்னும் பல ஹேஷ்டாக்கில் பொது

மக்கள், நிறுவனங்கள், பிரபலங்கள் என்று பலரும் இர்மா தொடர்பான தகவல்களைப் பகிர்ந்தபடியிருந்த னர். இர்மா போலொரு ஒரு சம்பவம் குறித்த அனைத் துத் தகவல்களையும் ஒரே சமயத்தில் உலகம் முழுவ திலும் இருந்து தெரிந்துகொள்ள ஹேஷ்டேக் வசதியாக இருந்தது.

இர்மா எனும் மிகப்பெரிய வெடிப்பு, பிசாசு நிலை அடைந்துவிட்டது***#Irma***

குளத்தில் ஒரு பெரும் பாறை வீழ்ந்தது போன்ற அலை களுடன் இர்மா அட்லாண்டிக் கடலில் முன்னேறுகிறது ***#Irma2017***

செயற்கைக்கோள் படங்களில் இர்மாவின் தோற்றத் தைப் பார்க்கும் போது வார்த்தைகளை முற்றிலுமாக இழந்து நிற்கிறேன்***#Irma***

சூறாவளி இர்மா அனைத்தையும் அழித்து அனைவரை யும் கொன்று போட்டுவிடும் ***#HurricaneIrma***

இப்படி வாசித்த செய்திகள் பரணிக்கு பீதியூட்டின. இர் மாவுக்காகக் காத்திருப்பது நேரத்திற்கு எதிரான போட்டி எனப் புரிந்தது. அழையா விருந்தாளியான இர்மா டொர்னாடோக்கள் (tornado) எனும் தனது பரிவாரங் களுடனும் உள்ளே நுழையக்கூடும் என்பதும் அவனுக் குக் கூடுதல் அதிர்ச்சியாக இருந்தது. மறுபடியும் வந்து படுத்தான்.

ஹரிக்கேன்கள் சுமந்துவரும் பல ஆபத்துகளில் டொர் னாடோவும் ஒன்று. ஹரிக்கேன்கள் நிலப்பரப்பைத் தொடும்போது கட்டவிழ்த்துவிடும் டொர்னாடோக்கள் புயலுக்குள் புயல் போன்றவை. அவை பெரும்பாலும் வானில் இருந்து தரை இறங்கும் புனல் வடிவத்தில்

இருக்கும். மேலே மேகங்களையும் கீழே பூமியையும் தொட்டபடி தரையில் அதிவிரைவாக நகரும் இந்தச் சுழல் காற்று அதி பயங்கரமானது. இவை ஹரிக்கேன் கள் போல் பெரிய நிலப்பரப்பை துவம்சம் செய்வ தில்லை மாறாக, டொர்னாடோக்கள் குறுகிய பாதை யில், குறுகிய தூரத்திற்குத் தூசிப்படலத்துடன் சீறியபடி நகர்கின்றன.

இந்தப் பிசாசுகளின் வேகம் அதிகபட்சமாக 500 கிலோ மீட்டரைத் தொடவல்லது. நொடிப் பொழுதில் வீடு களைக் குப்பை மேடுகளாக விசிறி அடித்துவிட்டுப் போகும் வல்லமை உடைய இவற்றை 'டிவிஸ்டர்ஸ்', 'வெர்ல் விண்ட்ஸ்' (twisters, whirlwinds) என்றும் சொல்கிறார்கள்.

இப்படித்தான் சில வருடங்களுக்கு முன்பு யாரும் எதிர் பார்க்காத ஒரு கோடையில் வந்த ஒரு 'சம்மர் டொர் னாடோ' பரணி வசிக்கும் பகுதியில் ஒரு தெருவை சில நிமிடங்களில் கபளீகரம் செய்துவிட்டு போனது. போய் பார்த்துவிட்டு வந்தான். அழிவின் பாதை நேர்க் கோடு போட்டுச் சென்றிருந்தது. தெருவில் இருந்த அனைத்து மரங்களும் விழுந்துகிடந்தன. அதன்மேல் புழுதி போலொன்று படிந்திருந்ததனைக் கவனித்தான். சுமார் பத்து வீடுகள் சுத்தமாக உருக்குலைந்து வீட்டி லிருந்த சகல பொருட்களும் தெருவெங்கும் இறைந்து கிடந்தன.

வழியேங்கும் இருந்த வீடுகளின் கண்ணாடிகள் உடைந்து, கார்களின் கண்ணாடிகள் எல்லாம் சித றிச் சின்னாபின்னமாகிக் கிடந்தன. யாரோ வீம்புக்காக அரைகுறையாகக் கலைத்துவிட்டுச் சென்ற கோலம் போல் அலங்கோலமாய் கிடந்தது.

உள்ளுக்குள் அவன் மனம் நினைவுக்கும், கற்பனைக்கும் நடுவில் மாறி மாறி புரண்டு, உழன்று கொண்டிருந்தது.

வெளியே பட படவென விட்டு விட்டு பட்டாசு வெடிப்பது போலொரு சத்தம் கேட்டு கண் விழித்தான். படுத்த படியே கண்ணாடி சன்னல் வழியாக வெளியே பார்த்தான். இருளில் எதிரே இருந்த மின்கம்பத்தில் இருந்த டிரான்ஸ்பார்மர் வெடித்துச் சிதறி நெருப்புப் பொறி பறந்து ஒரு நொடி ஒளிர்ந்து அடங்கியது. அடுத்த நொடி வீட்டில் மின்சாரம் சட்டென நின்றுபோனது. டிரான்ஸ்பார்மர் தீடிரென வெடிக்க என்ன காரணம் என்று புரியவில்லை. அறையிலேயே தொடர்ந்தும் படுத்திருப்பதா அல்லது எழுந்து வெளியே போய் என்னவென்று பார்ப்பதா என யோசித்தவாறே படுக்கையிலேயே கிடந்தான்.

சோம்பலை உதறிவிட்டு எழுந்து சன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். வெளியே காதை அடைக்கும் கர்ஜனை போன்ற ஓசையுடன் புனல் வடிவில் டொர்னாடோ வீட்டை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பது தெரிந்தது. சுழல்காற்று தன் வழியில் இருந்த மரங்களையும், வீடுகளையும் மதம் கொண்ட யானை போல் வீழ்த்தியபடி முன்னேறி வந்துகொண்டிருந்தது. ராட்சதப் ஃபேனை வீட்டை நோக்கி திருப்பி வைத்தது போலொரு உக்கிரத்தை உணர்ந்தான்.

அவசர அவசரமாக தாரிணியையும், பிள்ளைகளையும் எழுப்பி வாரிச் சுருட்டிக் கொண்டு பாத்ரூமை நோக்கி ஓடினான். பதற்றத்தோடு உள்ளே நுழைந்து கதவை அடைத்து மூடினான். அறையின் ஆழ்ந்த இருள் முகத்தில் அறைந்தது. பரணி படபடப்பாக உணர்ந்தான். அதிர்ச்சியாக “என்ன ஆச்சு” எனப் புரியாமல் கேட்ட தாரிணியிடம் அவசரகதியில் “டொர்னாடோ” என்றான்.

தூக்கக் கலக்கத்திலும் இருளைக் கண்ட பயத்திலும் பிள்ளைகள் விவரம் தெரியாமல் அழத்தொடங்கின. அவர்களைக் கட்டுப்படுத்தும் விதமாக அதட்டலாக “இஸ்ஸ்” என்றவன் தட்டுத்தடுமாறி இரண்டு பிள்ளை களையும் அலேக்காகத் தூக்கி குளியலறைத் தொட் டியில் உட்காரவைத்துவிட்டு தாரிணியோடு உள்ளே இறங்கினான்.

இடநெருக்கடி. ஒருவர் மற்றவர் இதயத் துடிப்பை உண ரும்படியான நெருக்கம். இருளில் நடுங்கிக் கொண்டி ருந்த பிள்ளைகளைத் தாய்கோழி தன் குஞ்சுகளை அணைப்பதுபோல் தாரிணி பாதுகாப்பாக மறைத்த படி அமர்ந்திருந்தாள். அரவணைப்பின் வெதுவெதுப் பில் பிள்ளைகள் சிலநொடிகள் அமைதியாக இருந்த னர். “கடவுளே, என்ன நடந்தாலும் என் பிள்ளைகளை எப்படியாவது காப்பாத்து” என தாரிணி மனத்துக்குள் பிரார்த்தனை செய்யத் தொடங்கினாள்.

சுழல்காற்றின் பேரிரைச்சலை நெருக்கத்தில் கேட்ட பிள்ளைகள் காதுகளை இறுக்கப் பொத்தியபடி அலறத் தொடங்கினர். அவர்களை இறுக்கியிருந்த பிடியை அவன் மேலும் அதிகமாக்கினான். இப்போது காற்றின் வேகத்துக்கு அவர்களின் வீடு அசைந்துகொடுப்பது போலிருந்தது. அடுத்தநொடி குடும்பத்தோடு மொத்த மாக எங்கோ தூக்கிவீசப்பட்டதாக உணர்ந்தான்.

# 11

சூரியஒளி முகத்தில் நிழலாடியபோதுதான் பரணி கண் விழித்தான். படுக்கையில் மற்றவர்கள் அசந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். லேசாக தலைவலிப்பது போலி ருந்தது. நேற்று இரவு முழுக்க இலக்கற்ற யோசனை களோடும், துர்கனவுகளோடும் போராடி உறங்கியதை நினைத்து வெட்கப்பட்டான். நேற்றைய நிகழ்வு நம் பிக்கை எனும் அஸ்திவார செங்கல்களை லேசாக அசைத்துப் பார்த்திருந்தது.

மனதின் அடி ஆழத்தில் புதைந்திருந்த ஹரிக்கேன் பற்றிய பயமே துர்கனவுகளாக உறக்கத்தில் மெள்ள மேலெழும்பி தன்னைத் துன்புறுத்தி வதைப்பதாக நம் பினான். அதற்கு என்ன மாற்று என்று புரியாமல் தவித் தான்.

ஏதோ ஒரு குருட்டுத்தைரியத்தில் வீட்டில் குடும்பத்து டன் தங்கிவிட முடிவெடுத்துவிட்டேனா ? வேலை என்

கிற பெயரில் குடும்பத்தின் நிம்மதியையும், பாதுகாப் பையும் இழக்கப்போகிறேனா ? எனப் பல கேள்விகள் முளைத்தன. தவறான வழியில் அறியாமல் நுழைந்தது போல உணர்ந்து குழம்பினான். அவன் மனம் சஞ்ச லப்பட்டது. கட்டாயப்படுத்தி பிள்ளைகளைத் தாரிணி யுடன் அனுப்பியிருக்கலாம். காலதாமதப்படுத்தி விட் டதை நினைத்து நொந்தான்.

மோனிகா இமெயில் அனுப்பியிருந்தாள். கிளம்பவேண் டும். இன்னுமொரு நாள் பொறுத்திருந்து பார்ப்போம் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு எழுந்தான். தாரிணியை எழுப்பிவிட்டு அவசர அவசர மாகக் குளித்துவிட்டு அலுவலகம் கிளம்பினான்.

**********

பரணியின் அலுவலகம் நகருக்கு வெளியே ஒரு தொழிற்பேட்டையில் இருக்கிறது. 1950களின் இறு தியில் வனாந்திரத்தில் தேர்ந்தெடுத்துக் கட்டப்பட்ட தொழிற்பேட்டை. விமான இஞ்சின்கள் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், உணவுப்பொ ருட்களைப் பதப்படுத்தி, விநியோகிக்கும் மையங்கள், மருந்து மாத்திரை சேமிப்புக் கிடங்குகள் எனப் பலதரப் பட்டவர்களின் கலவை.

போகும் வழி கூட நீண்டது. அங்கொன்றும் இங்கொன் றுமாக மரங்கள் மற்றபடி புற்களில் நீர் தேங்கிக்கிடக் கும் சதுப்புநில பொட்டல்காடு. ஆள் அவரமற்ற அந்தச் சாலைகளில் தினசரி அடிபட்டுச் சாகும் காட்டுப்பன்றி, நரி, முதலை, முயல், ஆர்மடில்லோ (Armadillo), ஸ்கங்க் (Skunk), அணில், பாம்பு, ஆமை போன்ற விலங்குகளை நினைத்து நிதம் நிதம் மனம் கசிவான். இயற்கையை அழித்து வரும் வளர்ச்சியில் எல்லாம் அவனுக்கு பெரி தாக நம்பிக்கையில்லை.

அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததுமே இர்மாவின் பதற்றம் காற்றில் இருந்தது. “உடனே உங்க அப்ளிகேசனை ஃபெயில் ஓவர் செய்யுங்க” எனும் உத்தரவு வந்தது.

மேனேஜ்மெண்ட் ஒன்றுகூடி 'பெயில் ஓவர் ' எனும் முடிவை எடுத்திருந்தாலும், இது அவன் எதிர்பார்த்த ஒன்றுதான். நிறுவனத்தின் டேட்டா சென்டர் எனச் சொல்லப்படும் பழைய கணினி மையம் மியாமியில் இருக்கிறது. அது முப்பது வருட புதிது. இர்மா மியாமியைத் தாக்கக்கூடும் எனும் இந்தச் சூழலில் கணினிகளை அங்கிருந்து இயக்குவது பாதுகாப்பில்லை. அது புயலுக்கு முன்னால் பூக்களை நீட்டுவதைப் போல கலைத்துபோட்டுவிடும் ஆபத்து இருக்கிறது. அதற்கு மாற்று ஏற்பாடாகதான் கடற்கரையிலிருந்து வெகுதூரத்தில் மாநிலத்தின் மேற்கே இன்னொரு டேட்டா சென்டரை வைத்திருக்கிறார்கள்.

பெயில் ஓவர் என்பது ஒருவரின் உயிரான இதயத்தை எடுத்து வேறு ஒருவருக்கு வைத்துப் பிழைக்க வைப்பது போல. மியாமியில் இருந்து இப்போது செயல்படும் கணினிகளின் சுவாசத்தைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு மாநிலத்தின் மற்றொரு மூலையில் தயாராயிருக்கும் டேட்டா சென்டர் கணினிகளுக்கு உயிர் கொடுப்பார்கள். இந்த மடைமாற்றம் ஒரு நொடியில் இல்லாமல் பல மணிநேரங்கள் வரை நீடிக்கும். பல குழுக்கள், பல கணினிகள், பல நூறு வழிமுறைகள் துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கும். இவற்றை இம்மி பிசகாமல் செய்து முடிக்கவேண்டும். இந்த முஸ்தீபுகளை ஹரிக்கேன் சீசன் முன் பலமுறை செய்துபார்த்த அனுபவம் இருப்பதால் பெரும்பாலும் சிரமமில்லாமல் செய்து முடித்து விடுவார்கள். ஆனால், வேலை முடியும் வரை எதற்கும் உத்தரவாதமில்லை.

கான்ஃபிரன்ஸ் அறையில் பரணி தன் குழுவோடு மோனிகாவுக்காக காத்திருந்தான். அவள் வந்ததும் பட படவென வேலையைத் தொடங்கினார்கள்.

புனித்தும் அலுவலகத்துக்கு வந்திருந்தான். ரொம்பவும் பயந்து போனதுபோல பேசினான். கர்ப்பிணி மனைவி யுடன் காரில் அட்லாண்டா போவதற்கு அஞ்சினான். இப்போதே நெடுஞ்சாலையில் நெருக்கடி என்று கேள் விப்பட்டானாம். பரணியைப் பார்த்து “நீங்க இங்க இருக் கீங்கலே, அப்புறம் எனக்கு என்ன கவலை. நான் கிளம்பிடுவேன்” என்றான். பரணி “ஆமாம்” என்பது போலத் தலையசைத்து வைத்தான். அவன் உள்ளம் வேறொன்றை நினைத்தது.

பெயில் ஓவர் செயல்பாடுகளை வரிசைக்கிரமமாக செய்துகொண்டிருந்த போது இடையே ஒரு நடவடிக் கைக்கு உரிய நபர் இல்லை என்பதைக் கண்டுபிடித் தார்கள். எல்லா வேலையும் பாதியில் நின்றது.

அடித்து பிடித்து போன் செய்து பார்த்தார்கள். பதி லில்லை. இந்த இடைத் தடங்கலால் அடுத்தடுத்த வேலைகளும் தடைப்பட்டு நின்றன. கை பிசையும் தரு ணம். “வேலையை ஆரம்பிக்கும் போது முன்கூட்டியே இதைச் சரி பார்த்திருக்கலாமே” என மோனிகா அதிர்ந் தாள்.

அவளுடைய குற்றச்சாட்டை அனைவரும் தர்மசங்கடத் துடன் ஏற்றுக்கொண்டனர். அந்த நபரைப் போனில் தேடிப்பிடிக்கும் வேலை அவனுக்குத் தரப்பட்டது. டெலிபோன் டைரக்டிரியில் பெயரைவைத்து ஒருவரு டைய எண்ணைக் கண்டுபிடிப்பது போல இணையத ளத்தின் பெயரை வைத்து இணைய வலைப்பின்னலில் அவர்களுடைய கணினியைச் சரியாக அடையாளம் காணும் வித்தையை அவன்தான் செயல்படுத்தவேண்

டும். முயன்றான். சுமார் முப்பது நிமிட காலதாமதத்திற்குப் பின் வேலை தொடங்கி நிலைமை கட்டுக்குள் வந்தது.

ஹரிக்கேன் தாக்குதலுக்கு எழுபத்திரண்டு மணிநேரத்துக்கு முந்திய தயாரிப்பு வேலைகளைச் செய்ய பரிந்துரைக்கும் இமெயில் அனைவருக்கும் வந்திருந்தது. பசித்தது. மதிய சாப்பாட்டிற்காக அலுவலக கேஃபிடேரியா போனான்.

பணம் கொடுக்க வரிசையில் நின்றபோது அவசரமாக பின்னால் வந்து நின்ற லிண்டா “ஹலோ” சொல்லி புன்னகைத்தாள். உடன் வேலை செய்யும் அமெரிக்கப் பெண். இளந்தாய். இயற்கையாகக் குழந்தை பெற்றுக்கொள்ள இயலாமல் சில வருடங்கள் காத்திருந்து போனவருடம் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்து வளர்ப்பவள். அந்த ஒரு தனிப்பட்ட விசயத்தைத் தவிர அவளைப் பற்றி வேறு எந்த விசயமும் அவனுக்குத் தெரியாது. அவளுக்குத் திருமணம் ஆயிற்றா, எங்கிருந்து வருகிறாள் எனப் பல விசயங்களைத் தெரிந்து கொள்ள அவனுக்கு ஆவல் இருந்தாலும் கேட்க ஏனோ மனம் வரவில்லை. இதுபோல் வெகு மேலோட்டமாகப் பழகுபவர்களைப் பார்த்தால் அவனுக்கு ஆச்சர்யமாக இருக்கும். அதற்குக் காரணம் தனது தோல் பிரவுன் நிறமாக இருப்பது என்று சமயங்களில் நினைப்பதும் உண்டு. இத்தனைக்கும் வாரத்தில் ஒருமுறையேனும் மீட்டிங் அது எது என்று சந்தித்து பேசி ஒன்றாக வேலை செய்பவர்கள். இப்போதெல்லாம் இது தான் அமெரிக்கா என மனதைத் தேற்றிக் கொள்ள பழகிவிட்டான்.

இன்று தைரியத்தை வரவழைத்து “ஆர் யூ ஜாயினிங் ?”என்றான்

மதிய உணவை எடுத்துக்கொண்டு போய் அலுவலக டேபிளில் வைத்து சாப்பிடலாம் என நினைத்திருப்பாள் போல அவன் அழைப்பை மறுக்க மனமின்றி "ஓகே" என்றாள்.

சம்பிரதாயமான உரையாடலுக்குப் பின் இர்மா குறித்து பேச்சு திரும்பியது. அவள் தாராளமாகத் திறந்துகிடந்த மார்பைக் கண்டுகொள்ளாமல் சாப்பிட்டபடி நிதானமா கவே பேசினாள்.

"நான் எப்போதும் ரெடிதான். என்ன ஆனாலும் வீட்டை விட்டு மட்டும் எங்கேயும் போறதா உத்தேசமில்லை" என்றாள் மூக்கை உறிஞ்சியபடி

"சின்னக்குழந்தை இருக்கே" என்றான் மெலிதாக

"சோ வாட், நான் ஃபிளாரிடாவுல பிறந்து வளந்தவ. எனக்கு பயமில்லை" என்று கையில் இருந்த சாப்பாட்டு டிரேயைத் தூக்கிக் கொண்டு எழுந்தாள். அதே சமயத் தில் அவளை வலுக்கட்டாயமாக இழுத்துப் பேச வைத் துவிட்டதாக நினைத்தான்.

ஆனால், அவள் குரலில் இருந்த உறுதி அவனை பிரமிக்க வைத்தது. அவள் போன பின்பும் வெகு நேரத்திற்கு வெளியே தெரிந்த ஏரியை உற்றுப்பார்த் துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் ஏரியில் நீந் திக் கொண்டிருந்த முதலைகள் மேல் இருந்தன. ஏரி யின் தெளிந்த நீரோட்டத்தில் லேசாக மேடிட்டிருந்தது போலிருந்த அதன் தலையும் கண்களும் தென்பட்டன.

பிறகு லிண்டா சொன்னதைப் பற்றி அவன் யோசித்தான். தன்னுடைய வேர்கள் இன்னமும் இங்கே ஆழமாக வேறூன்றவில்லை என்று நினைத்தான். அதனால்தான் தான் ஹரிக்கேன் குறித்து தான் அதீத அச்சம் கொள்

கிறேனோ என நினைத்தான். இது தேவையற்ற பயமா ? பயம் என்பது இயற்கையான மனித உணர்ச்சி தானே. அது ஒவ்வொரு மனிதனின் டிஎன்ஏ விலும் இருக்கிறது தானே. அது இருந்ததினால் தானே மனிதன் காடுக ளின் குகைகளை விடுத்து வாழ நகருக்குள் வந்தான் ? என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கினான்.

குடும்பத்தைத் தற்காத்துக் கொள்ளும் யோசனைக ளைச் சிந்தித்தவன் மனதுக்கு நெருக்கமாக யாரிடமா வது பேசினால் சரியாக இருக்கும் என்று நினைத்தான். யாரிடம் என்னவென்று போய் கேட்பது என அஞ்சிக் குழம்பினான். தன் மனம் நீரில் விழுந்த எறும்பு பற்றிக் கொள்ளச் சிறு இலைக்குத் தவிப்பதை போல உணர்ந் தான். அந்த இலை ராபர்ட் என நினைத்து அவருக்குப் போன் செய்தான். போனை உடனே எடுத்தவர் “கொஞ் சம் பிசியா இருக்கேன். ஈவினிங் வீட்ல வந்து பார்க்கி றேனே” என்றார். அவன் அந்தச் சந்திப்பை எதிர்பார்த் துக் காத்திருந்தான்.

# 12

வீட்டின் வரவேற்பறையில் மெலிதான இருள். பரணி சோபாவில் அமர்ந்தபடி கையில் இருந்த பியர் பாட்டி லின் லேசான போதையை ரசித்துக்கொண்டிருந்தான். மனம் அயர்ச்சியாகும் சமயங்களில் அவனுக்கு அது தேவையாக இருக்கிறது. கொளுத்தும் வெயில் வியர்க்க விறுவிறுக்க நடக்கையில் மரநிழலில் ஒதுங்கி ஆசுவா சப்படுத்திக் கொள்வது போலொரு ஆறுதல். போதை படலம் மெல்ல மேலெழுந்து சூழும் நேரத்தில் அதைக் கலைப்பதுபோல் அழைப்பு மணி அடித்தது. எழுந்து போய் திறந்தான்.

ராபர்ட் - அவனுடைய நிறுவனத்தில் எலக்ட்ரிக்கல் இன்ஜினியர். நிமிர்ந்து பார்க்கும் படியான உயரம் ஆறு அடிக்கு மேல். இந்தியர்களுக்கே உரிய பிரத்தியேக பிரௌன் நிறம். ராபர்ட் ஒரு விதத்தில் பரணிக்குக் குடும்ப நண்பர் கூட. பல வருடங்களாக பழக்கம். அவர்

ஒரு எக்ஸ்டரா வெர்ட். தாராளமாய் பேசக் கூடிய வர். அவர் இந்தியாவிலிருந்து படித்து இங்கு வந்தவர் இல்லை. அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் வெஸ்ட் இண்டீஸில் இருக்கும் டிரினிடாட். அவருடைய மூதா தையர்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் டிரினிடாட் பற்றியும் அங்கே வாழும் இந்தியர்களின் வாழ்க்கை தொடர்பாகவும் சலிக்காமல் பேசிக் கொண்டிருப்பார். அவர் இதுபோல அவனிடம் கூடுதல் பிரியமாக இருப்பதே பரணி ஓர் இந்தியன் என்பதாலோ என்னவோ என்று நினைத்துக் கொள்வான்.

சொன்னது போல மிகச் சரியாக ஆறு மணிக்கு வீட் டுக்கு வந்திருந்தவர் கிரே கலர் டீசெர்ட் போட்டு நீல நிற ஜீன்ஸ் அணிந்திருந்தார். முன்னந்தலையில் மயிர் விடைபெற்று வருடமாயிருந்தது. கண்ணாடி வழியாகத் தெரிந்த சிறிய கண்களில் அனுபவம் தெரிந்தது.

சோபாவில் அமர்ந்தபடி, கண்களைச் சுழல விட்டு

“பசங்க இல்ல, வேர் இஸ் தாரிணி ?” என்றார்.

“ஸாப்பிங்” என்றபடி பிரிஜில் இருந்து ஒரு பியர் பாட்டிலைத் திறந்து ராபர்ட்டிடம் நீட்டினான். கை ஜில்லென்றிருந்தது.

“தேங்யூ, கரோனாவா ? ” என்றபடி வாங்கியவர் சியர்ஸ் சொல்லி உறிஞ்சிவிட்டு நேராக அவனைப் பார்த்தார்.

இர்மா பத்தி அவரிடம் எப்படிப் பேச்சைத் துவங்குவது எனத் தெரியாமல் இர்மா... தயங்கினான்.

“அதுக்கு முன்னால, ஒரு முக்கியமான விசயம்” என்றார்.

ஹோம் தியேட்டரின் குரல்வளையை நெரித்துவிட்டு வந்து அமர்ந்தான்.

"சொல்லுங்க"

"அயம் லீவிங் த கம்பெனி மேன்"

ஒரு கணம் அவர் சொன்னதை அவனால் நம்ப முடிய வில்லை. வியப்புடன் "வாட் டூ யூ மீன், லீவிங் ?"

"கெட்டிங் ரிட்டெயர்ட். இர்மாவுக்கு அப்புறம் கிளம்பு றேன்"

அவனுக்கு நெருக்கமான பல நண்பர்களுக்குச் சீக் கிரம் பணம் சேர்த்து ரிட்டெயர் ஆகவேண்டும் என் பது பெருங்கனவு. ஆனால், யாரும் பட்டென இப்படிச் சொன்னதில்லை. தேவைகள் மெள்ள மெள்ள மேலும் மேலும் கூடி அதற்காக மேலும் மேலும் உழைத்து... எலி சுற்றியபடியே தன் வாலை கவ்வுவதுபோல. ரிட்டெயர் மெண்ட் என்பது ஒருவிதத்தில் கானல் நீர் கூட. ஒருபுறம் வருமானத்திற்கு ஏற்ப செலவினங்களைச் சீராக அதி கரித்துவிட்டு சீக்கிரம் ரிட்டெயர்மெண்ட் என்று கூப் பாடு போடுவது அதிவேகமாக ஓடும் ரயிலில் இருந்து இதோ நான் இறங்கிவிடுவேன் என பூச்சாண்டிகாட்டு வது போல.

இவர் பூச்சாண்டி காட்டுகிறாரா ?. புரியவில்லை.

"ஆர் யூ சீரியஸ் ? உங்களுக்கு என்ன பெரிய வயசாயி டுச்சு, அதுக்குள்ள..."

"சீ அயம் ஃபிப்டி ஃபோர், நான் பைனான்ஸியலாக செட் டில் ஆயிட்டேன். அப்புறமென்ன "

நம்ப முடியாமல் அவரைப் பார்த்தான். அறுபது வயதிற்கு முன்பே இங்கே ரிடையர்டாக கொடுத்து வைத்திருக்க

வேண்டும். வீட்டுக்கடன், வாகனக் கடன், பிள்ளைகளின் கல்விக் கடன் எனக் கட்டி மாளாமல், நிலையான மாத வருமானத்துடன் ரிட்யர்டாக முடியாமல் பெரும்பாலானவர்கள் திணறுவார்கள். பலர் கிடைத்த ஏதோ ஒரு வேலையில் வெட்கத்தை விட்டு ஓட்டிக் கொண்டு எழுபது-என்பது வயது வரை அல்லாடுவதைப் பார்த்திருக்கிறான். ஆனால், ராபார்ட் அனுபவஸ்தர். பணத்தை முதலீடு செய்வதில் புலி. ஆப்பிள் கம்பெனி ஸ்டாகை மட்டுமே நூற்றுக்கணக்கில் வைத்திருக்கிறார்.

“கிரேட் நியூஸ். கங்கராஜிலேசன்ஸ் !!” வாழ்த்தினான்.

வாழ்த்தினானேத் தவிர நிஜத்தில் இதை நடைமுறைப் படுத்தத்தான் போகிறாரா என்பது சந்தேகமாகவே இருந்தது. அவருக்குப் பிள்ளைகள் இல்லை என்பது கூட இந்த ரிடையர்மெண்டுக்குக் காரணமாக இருக்கலாம் என மனத்துக்குள் நினைத்தான்.

“கொடுத்து வச்சிருக்கனும் ராபர்ட்”

“அப்படியெல்லாம் இல்லை. என்னால செய்யமுடியும்னா உன்னாலயும் முடியும். டோண்ட் ஒரி. நீ புத்திசாலி. ஒரே விசயம் சின்ன வயசுல இருந்து சேமிக்க தொடங்கு” என்றவர் அமெரிக்க ஸ்டாக் மார்க்கெட்டில் தனது அனுபவத்தைப் பற்றி சொல்லிக்கொண்டிருந்தார். ரிடையர்மெண்ட் பணத்தில் வாழ்வது என்பது மீன் தொட்டியில் தண்ணீர் நிரப்புவதுபோல. உள்ளேவரும் தண்ணீர் வருமானம் என்றால் வெளியேறுவது செலவு. இரண்டும் சரியான அளவில் இல்லையென்றால் என்று வகுப்பெடுத்துக் கொண்டிருந்தவரை அவன் சுரத்தில்லாமல் கேட்டுக்கொண்டிருந்தான்.

“...இங்க ஸ்டாக் மார்கெட் இல்லாமல் எதுவும் இல்லை... ” என்றவர் கொஞ்சம் நிறுத்தி

“சரி, நீ என்ன விசயமா பேசனும் ?”

“ஆபிசில் இர்மா சப்போர்ட்டுக்கு இருக்கேன்னு சொல்லியிருக்கேன்” என்றவன் “ஆனா.. பயமாயிருக்கே.. ” என வெட்கத்தை விட்டு பாதுகாப்பு குறித்த தனது சஞ்சலத்தைச் சொன்னான்.

கையிலிருந்த பியரை முடித்திருந்தவன், வெற்று பாட்டிலுடன் அவர் அடுத்து சொல்லப்போவதை ஆர்வத்துடன் கவனித்தான்.

“அதெல்லாம் நீ எதுக்கும் கவலை படாத. யூ நோ வாட் ?” என்றார் புதிராக.

“சொல்லுங்க”

கடவுள் பார்த்துகொள்வான் எனப் பொருள்படும்படி, “ஹூ வில் டேக் கேர் ஆஃப் இட்” என்றார்.

அவன் புரியாமல் அவரைப் பார்த்தான். “நாம பாக்காத ஹரிக்கேனா என்ன ?” என்றவர் நெருங்கி அவன் தோள் மீது கை வைத்தார். உற்றுப் பார்த்தவர் - நானிருக்கிறேன் என்பது மாதிரி மெல்லப் புன்னகை செய்தார். அவனும் அவருடைய புன்சிரிப்பை வாங்கி முகத்தில் மெல்ல படர விட்டான்.

அப்போது உள்ளே வந்த பிள்ளைகளைப் பார்த்து “ராபர்ட் மாமாவுக்கு ஹலோ சொல்லு” என்றான்.

தயங்கியபடியே இருவரும் மெலிதான குரலில் “ஹலோ” எனச் சொன்னார்கள்.

மாறாக ராபர்ட் உற்சாகமாக “ஹலோ” சொன்னார்.

ராபர்ட் கவியை "கம் ஹியர்" என அருகில் அழைத்து அவள் தலையை வாஞ்சையோடு தடவியபடி, கம்பீரத் தோடு "விச் கிரேடு" என்றார்.

சொன்னாள். "கிரேட்"

அவளுக்கு "அடுத்த வாரம் பர்த்டே" என்றாள் மூத்தவள் உற்சாகம் பீறிட

"வாவ்!!" என்ற ராபர்ட் டக்கென பாக்கெட்டிலிருந்து ஒரு பெரிய அமெரிக்க டாலர் நோட்டை அவள் கைகளில் அழுத்தித் திணித்துவிட்டு "அட்வான்ஸ் பர்த்டே விஷ் ஷஸ் மை லிட்டில் ஏன்ஜல்!" என்றபடி அவள் முதுகில் தட்டிக்கொடுத்தார். பணத்தை வாங்கி "தேங்யூ" என்ற வள் அதை என்ன செய்வது என்று தெரியாமல் தயக்கத் தில் மலங்க மலங்க விழித்தபடி பார்த்தாள்.

"உன்னோட பிகி பேங்குல (உண்டியல்) போட்டுடுமா" என்றான். அவள் சமர்த்தாய் ஓடினாள்.

ராபர்ட் தியாலஜி படித்தவர். அவருக்குதான் பிள்ளை இல்லையே தவிர, பிள்ளைகள் பற்றியும் அவர்களை வளர்ப்பது பற்றியும் நிறையவே பேசுவார். ஏதோ நினைத்தவர் சட்டென "இதுபோல நல்ல பிள்ளைக ளைப் பெற்ற நீ அதிர்ஷ்டசாலி தெரியுமா ?"என்றார்.

அவன் பெருமையும், தர்மசங்கடத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் இருந்தபடி சிரித்தான்.

"ஏன் சொல்றேன் தெரியுமா " அமெரிக்காவில் பயிற்சி பெற்ற பிள்ளைகளை விடப் பயிற்சி பெற்ற நாய்கள் அதி கம் எனும் பொருள்படும் படி "டூ யூ நோ, அமெரிக்கா ஹெஸ் மோர் டிரையின்டு டாக்ஸ் தென் கிட்ஸ்" என அமெரிக்கப் பிள்ளை வளர்ப்பைக் கிண்டலடித்தவர் "யூ ஹெவ் கிரேட் கிட்ஸ்" என்றார்.

பின் அடுத்த நொடி தனது வழக்கமான அதிகாரத் தோரணைக்கு மாறி "பரணி, லிசன். நான் ஹரிக்கேன் சப்போர்ட்டுக்கு கமாண்ட் சென்டர் போறேன். பேசாமல் நீயும் சேர்ந்து வந்துடேன்" என்றார்.

கமாண்ட் சென்டர் என்பது அவர்களது நிறுவனம் ஹரிக்கேன் சமயத்தில் எடுக்கும் சகலவிதமான மின்சார மறுசீரமைப்பு வேலைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் ஒரு முக்கிய இடம். அங்குதான் நிறுவனத்தின் அனைத்துதுறைகளில் இருந்தும் தொழில் நுட்பவல்லுநர்கள் ஒன்றாகத் தங்கி அனைத்து ஆயத்த, மறுசீரமைப்பு பணிகளையும் துரித கதியில் செயல்படுத்துவார்கள். உள்ளூர் கேபிள் டிவியில் இருந்து தேசிய சேனல்கள் வரை அனைத்து ஊடகங்களுக்கும் குழுமியிருப்பார்கள். " ஆல் ரோட்ஸ் லீட் டு ரோம் " என ஆங்கிலத்தில் சொல்வது போல புயலுக்குப்பின் மாநிலத்தின் மொத்த கவனமும் அங்கிருந்து வரும் செய்தியை எதிர்நோக்கி தான் காத்திருக்கும். ஹரிக்கேன் சமயத்தில் கமாண்ட் சென்டரில் இருப்பது அவனுக்கு நல்ல அனுபவமாக இருக்கும் என்பது ஒருபுறம் இருந்தாலும், குடும்பத்தைப் பிரிந்து போவது என்பதை நினைத்துக் கொஞ்சம் தடுமாறினான். அதற்காகத்தான் மோனிகா வழியாக வந்த அந்த வாய்ப்பையும் மறுத்தான்.

"கமாண்ட் சென்டருக்கா ?"

"ஆமாம். என்னோட டிபார்ட்மெண்டில் இருந்து நான்தான் போறேன். ஹரிக்கேனுக்கு முந்தினநாள் போனால் குறைஞ்சது மூனுநாளு நாள் கழிச்சுதான் வெளிய வரலாம்."

"அப்போ வீடு ?"

“என்னோட வெஃய்ப் தனியா இருப்பா, இல்லை பக்கத்துல ஷெல்டருக்கு போனாலும் போவாள்” என்றவர் “பரணி, நாம ஏன் இப்படி பண்ணக்கூடாது ?”என்று கேட்டு நிறுத்தினார்.

“சொல்லுங்க” என்றான்

“தாரிணிய பேசாம பிள்ளைகளோட எங்க வீட்டுக்கு அனுப்பிட்டு, நீ என்னோட வந்துடேன்” என்றவர் திரும்பி தாரிணியைப் பார்த்தார்.

தாரிணியின் தயக்கத்தை அவள் முகம் சொல்லியது. பரணி அவளைக் காப்பாற்றும் விதமாக

“இந்தச் சமயத்துல வீட்டை விட்டுட்டு அங்க வந்து பிள்ளைகளோட இருக்குறது சரியா இருக்காது ராபர்ட். நான் கமாண்ட் சென்டருக்கு வர்றது சந்தேகம் தான் “என்றான் யோசனையாக,

“சரி உன் விருப்பம். ஆனால், பக்கத்துல ஷெல்ட்டர் எங்க இருக்குன்னாவது உங்களுக்கு தெரியுமா ?” என்றார்.

சொன்னான்.

“எதுக்கும், அதை ஒருதடவை பாத்து வைச்சுக்கோங்க”

சரி என்பதுபோலத் தலையசைத்தான்.

“ஏன் வாங்களேன், நாம சேர்ந்தே போய் பார்த்துட்டே வந்துடுவோம்” ராபர்ட் எழுந்தார். அவருடைய விருப்பத்தைப் புறக்கணிக்க விரும்பாத பரணி ஒப்புக்கொண்டான்.

ஒன்றாக சேர்ந்து பரணியின் காரில் கிளம்பினார்கள். காரின் முன் சீட்டில் அமர்ந்த ராபர்டின் தலை கார் கூரையைத் தொடும் படி இருந்தது.

எவாக்குவேசன் ஷெல்ட்டர் எனும் பேரழிவு முகாம் அவன் வீட்டில் இருந்து அதிக தூரத்தில் இல்லை. ஒரு நடுநிலைப் பள்ளியை முகாமாக மாற்றியிருந்தார்கள். வாசலில் ஒரு போலீஸ் காரும், தீயணைப்பு வண்டியும் நின்றுகொண்டிருந்தன. மற்றபடி கூட்டமில்லை. இர்மாவை முன்னிட்டு முகாம் ஏற்பாடுகளைச் செய்ய மாநிலம் முழுவதும் இரண்டு நாட்கள் பள்ளிகளுக்கு விடுமுறை விட்டிருந்தார்கள்.

வெளியில் இருந்து கட்டடத்தைப் பார்த்த ராபர்ட், "இந்தக் கட்டடம் கேட்டகிரி ஃபைவ் ஹரிக்கேனைத் தாங்குவது சந்தேகம் தான். எதுக்கும் உள்ள அரேஞ்ஜ்மெண்ட்சைப் போய் பார்த்துடலாம்" என்றார்.

வாசலில் நின்றிருந்த அலுவலரிடம் அனுமதிவாங்கி உள்ளே நுழைந்தார்கள். பள்ளியின் உள் விளையாட்டு அரங்கு முகாமிற்குத் தயாராகிக்கொண்டிருந்தது. இருக்கைகளை ஒதுக்குவது, தரையில் நீலப் பாலீத்தின் கவரை விரிப்பது என ஐந்தாறு பேர் துரிதகதியில் வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

மேற்பார்வை செய்துகொண்டிருந்தவர் வெள்ளையர். கனத்த உருவம். கையில் லெட்டர் பேட் வைத்திருந்தவர் நெருங்கி வந்து என்ன ஏதேன்று விசாரித்தார்.

ராபர்ட் அறிமுகம் செய்துகொண்டு "இவர் எனது நண்பர் இங்கேதான் இருக்கிறார்..." எனத் தொடங்கி பிரச்சனையைச் சொன்னார்.

அவனை அளவிடுவதைப் போலப் பார்த்தவர் "முதல்ல உங்க அட்ரஸ் சொல்லுங்க".

கேட்டவர், "ஒகே, நீங்க இந்த ஸோன் தான்" என்று உறுதிப்படுத்திக் கொண்டு "அப்புறம், வீட்ல நாய், பூனை போல எதாவது பெட்ஸ் இருக்கா ? " என்றார்.

"இல்லை"

"நல்லது. ஏன் கேட்குறேன்னா, பெட்ஸுக்கு இங்கே அனுமதி இல்லை"

"எப்போ வந்து இங்க தங்கலாம் ?" என்றார் ராபர்ட்

அவர் தொண்டையைச் சரிசெய்தபடி, "இதோ பார்க்க நீங்கல்ல. வேலை நடந்துகிட்டிருக்கு. நாளைக்கு பொது மக்களுக்குத் திறந்துவிடுவோம். முக்கியமான விசயம். இங்க மொபைல் வீடுகள், தாழ்வான பகுதியில் உள்ளவங்களுக்கு முன்னுரிமை தருவோம். நீங்க வந்து விருப்பப்பட்டு தங்கினால் எங்களுக்கு எதுவும் ஆட்சேபனையில்லை"

தலையாட்டினோம்.

இப்போது சற்று கண்டிப்பான குரலில் "ஆனால், ஒரு விசயம். நீங்க வீட்ல எதிர்பார்க்கும் வசதியெல்லாம் பெரிசா இங்க எதுவும் இருக்காது. தரையைக் காண்பித்து இங்கேதான் படுக்க வேண்டியிருக்கும். ஸ்கூல் பசங்களோட பாத்ரூம் தான்.
அப்புறம், நாங்க கொடுக்குற சாப்பாடு எமெர்ஜென்சிக்கு தான் அதுல டேஸ்டையெல்லாம் எதிர்பார்க்காதீங்க. இங்க வர்ரவங்களுக்கு ஷெல்ட்டர்தான் தர்றோமே தவிர ஹோட்டல் மாதிரி வசதி இருக்காது. ஆனால், அவசரத்திற்கு பவர் சப்ளைக்கு ஜெனரேட்டர்ஸ் வச்சிருக்கோம்.

முதலுதவிக்கு ரெட்கிராஸ் இருக்கு" என முடித்துக் கொண்டார்.

நட்பு எனும் வார்த்தைக்குப் பொருள் என்ன எனும் நிலையில் இருந்தது அவருடைய பார்வையும் உடல் மொழியும்.

அம்மு, "வெஜிட்டேரியன் கிடைக்குமா ?" என்றாள்

"இந்த முகாம்கள் லைஃப் போட் மாதிரி, சொகுசு கப்பல் கிடையாதுமா ஓகே வா ?"என்றார் வெடுக்கென.

அவள் முகம் வாடியது. முகத்தில் அறைவது போலிருந்த அந்தச் சொல்லாடல் அவளைக் காயப்படுத்தியிருக்கக் கூடும்.

"சாரி" என்றான் அவரிடம்

"பரவாயில்லை. வேணும்னா உங்களோட துணிம ணிகளோடு, கெட்டுப்போகாத உணவு இருந்தாலும் கையோட எடுத்து வந்திருங்க. பிரச்சனையில்லை. எங் களோட முக்கிய நோக்கம் நல்ல வீடு இல்லாதவங்க, தாழ்வான பகுதியில் இருந்து வெளியேறி வருபவர்க ளுக்குத் தங்க இடம், உணவு தருவது மட்டும்தான்"

அது அகதிகளுக்குத் தரப்படும் வரவேற்பு என்பது புரிந் தது. அவர்கள் அங்கே அழையா விருந்தாளி போலொரு உணர்வு மேலிட்டது. உடனடியாக அங்கிருந்து கிளம்பு வது மரியாதையாக இருக்கும் என நினைத்தான்.

அவர் அவர்களுடைய மனநிலையைப் புரிந்தவர் போல், "பிள்ளைகளோட இங்க தங்கறதுக்கு உங்களுக்கு கஷ் டமா இருந்தால் அதுக்கு நாங்க எதுவும் செய்யமுடி யாது. சாரி. இன்னொரு விசயம். வர்ரது கேட்-ஃபைவ் னு சொல்லாறாங்க. அதனால ஹரிக்கேனுக்கு பின்னால

நீங்க குடும்பத்தோட இங்க எத்தனை நாள் இருக்க வேண்டி வரும்னு இப்ப சொல்ல முடியாது. அது ஒரு சில நாட்களாவும் இருக்கலாம், இல்ல ஒரு மாதம்வரை கூட நீளலாம். இப்ப எதையும் சொல்லமுடியாது. இதெல் லாம் உங்களுக்கு ஒத்து வராதுன்னா முடிஞ்சா ஃபி ளாரிடாவை விட்டு எவாக்குவேட் பண்ணறதை பத்தி யோசிங்க. இட்ஸ் நாட் டு லேட்" என்று முடித்துக் கொண் டார்.

நன்றி சொல்லிவிட்டு ஏமாற்றத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெளியே வந்தான்.

# 13

"நான் யோசிச்சு சொல்றேனே" என ராபர்ட்டை சமா ளித்து அனுப்பிவிட்டு அவன் வீட்டுக் கதவை திறந்து உள்ளே நுழையும்போதே தாரிணி

"பிள்ளைகளை வைச்சுக்கிட்டு அங்க தங்குறது எல் லாம் சரியா வராது. அதுக்குப் பதிலா பேசாம வீட்டுல இருந்தடலாம்" என்றாள் அழுத்தமாக.

அவள் அவனுடைய அபிப்ராயத்தை என்ன ஏது என்று கேட்காமல் மண் உண்டியலைப் பட்டெனத் தரையில் போட்டு உடைத்தது போல எந்தவித ஆரம்பப் பேச்சும் இல்லாமல் தன் கருத்தைச் சொல்லி முடித்துவிட்டாள்.

அதை உடனடியாக ஆமோதிக்கும் மனநிலையில் அவன் இல்லை. இருவரும் ஒரே கூரையின் கீழே

ஒரே காற்றைச் சுவாசித்தாலும் தங்களுக்குள் எண்ண ஓட்டங்கள் வெவ்வேறாக இருப்பதாக மட்டும் அப்போ தைக்குப் புலப்பட்டது.

பிள்ளைகள் உடைமாற்ற மாடிக்குப் போனார்கள். பரணி டைனிங் டேபிள் நாற்காலியில் அமர்ந்தான். தாரிணி அடுப்பு மேடையில் இரவு சமையலுக்கு தயாரானாள்.

சூழலின் இறுக்கத்தைக் குறைக்க டிவி போட்டான். டிவி யில் ' இர்மா ஃபிளாரிடாவை மூடும் அளவுக்குப் பரந்து விரிந்திருக்கிறது. மக்கள் கடைசி நேரத்தில் தங்கள் மனதை மாற்றிக் கொண்டு வெளியேறுகிறார்கள். ஹரிக் கேன் ஷெல்ட்டர் திறக்கும் வரை சிலர் சாலை ஓரத் தில் போர்வையை விரித்துப் படுத்திருக்கிறார்கள். இர் மாவை முன்னிட்டு பொதுப்போக்குவரத்து இடைநீக்கம் செய்யப்படுகிறது. வெளியூர் செல்பவர்கள் புயலுக்குப் பின் வீடு திரும்பும் போது வீட்டுகுள்ள பாத்து போங்க..., முதலை இல்லை பாம்பு குடியிருக்கலாம் ' என்பது மாதி ரியான கலவையான செய்திகள். அவனுக்குத் தலை வலிப்பது போலிருந்தது. அவளிடம் "காருக்கு பெட் ரோல் கிடைக்குதான்னு பார்க்கிறேன்" எனச் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

வெளியே இருட்டியிருந்தது. போர்டிக்கோவின் ஓரத் தில் மேய்ந்து கொண்டிருந்த காட்டுமுயல் காலடி சத்தம் கேட்டு நிமிர்ந்தது. காதுகளை உயர்த்தி சகலபுலன்க ளிலும் எச்சரிக்கையுடன் சிகப்புக்கண்களை உருட்டிய படி சிலநொடிகள் அவனைக் கண்களால் எடை போட் டது. பின் அச்சத்தால் சடுதியில் துள்ளி ஓடி மறைந்தது. அவன் கார் உறுமியபடி கிளம்பியது.

இன்றும் பெட்ரோலுக்காக காருடன் ஒவ்வொரு கேஸ் ஸ்டேசனாகச் சுற்றினான். நிர்மூலமான ஸ்டேசன்கள். வழங்கு பைப்பின் நுனியில் மஞ்சள் உறை சுற்றியி

ருந்தார்கள். இருந்ததைப் பகல் முழுவதும் சுத்தமாக உறிஞ்சி எடுத்திருந்தார்கள் விருந்து முடிந்து வீசி எறிந்த எச்சில் இலைகளை அவனுக்கு நினைவுபடுத்தின. களைப்பில் வெறுமையை உணர்ந்தான்.

கடைசியில் ஒரு ஸ்டேசனைத் தேடிக் கண்டுபிடித்தான். அங்கேயும் நீண்ட வரிசையில் கார்கள். சாலை வரை மடக்கி நிறுத்தியிருந்தார்கள். வரிசையில் சேர்ந்து கொண்டான். மீண்டும் காத்திருப்பு. காலையில் இருந்து இடைவெளி இல்லாத தொடர்ந்த வேலை அலுப்பாயிருந்தது. ரேடியோவைத் திருகினான். இர்மாவை பரபரப்பாக விடாமல் துரத்திக்கொண்டிருந்தார்கள். உடல் லேசாக அனத்துவது போலிருந்தது. ரேடியோவை மௌனித்தான். வரிசை மந்தமாக நகர்ந்து வெறுப்பேத்தி பசி வயிற்றைக் கிள்ளியது. வரிசையில் காத்திருந்தாலும் இறுதியில் பெட்ரோல் கிடைக்குமா எனும் சந்தேகம் வேறு.

பெட்ரோல் கிடைத்தாலும் குடும்பத்துடன் எப்படிப் பிரச்சனைகளைச் சமாளிக்கப்போகிறோம் என்றிருந்தது. இர்மாவில் இருந்து உடனடியாகத் தப்பிக்கும் மார்க்கம் எதுவும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. வெளியில் இருந்த இருள் உள்ளே நுழைந்தது போல அவனுள் கவலை புகுந்துகொண்டது.

இதற்கிடையில் நீல, சிகப்பு நிற விளக்குகள் ஒளிர ஒரு போலீஸ் கார் வரிசையைப் பார்வையிட்டுச் சென்றது. வெகு நேரக் காத்திருப்புக்குப்பின் வந்த சிகப்பு யூனிபார்ம் இளைஞன் இறங்கிய குரலில் "சாரி, கேஸ் தீர்ந்து விட்டது" என்றான்.

அவனுக்கு நன்றி சொல்லத் தோனவில்லை, மறு வார்த்தை பேசாமல் அடுத்த கேஸ் ஸ்டேசனை எதிர் திசையில் தேட முடிவெடுத்துக் காரைத் திருப்பி

னான். ஏமாற்றமும், கோபமும் சேர்ந்த கனல் உள்ளுக்குள் புகையத்தொடங்கியது. தன்னை பகலில் சஞ்சலத்தோடு அலைக்கழித்தும், இரவில் துர்க்கனவுகளால் தூங்கவிடாமலும் பகடையாடும் இர்மாவின் மேல் அவனுக்கு ஆத்திரம் வந்தது. தான் கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருப்பதை உணர்ந்தான்.

மணி பத்துக்கு மேலானதால் ஊர் சுத்தமாக அடங்கிக் கிடந்தது. பகலில் ஆடிக் களைத்த ஊர் ஓய்வெடுப்பதுபோலிருந்தது. ரெஸ்டாரெண்டுகள், மருந்துக்கடைகள், இன்சுரென்ஸ் நிறுவனங்கள், மெபைல் கடைகள், கார் சர்வீஸ் ஸ்டேசன் எனப் பலதரப்புக் கடைகள். யாருமற்ற சாலையை விளக்குகள் மங்கலான மஞ்சள் நிறத்தால் நிரப்பியிருந்தன. சாலையில் அரிதாக விரையும் ஒன்றிரண்டு கார்களும் பெட்ரோல் தாகம் எடுத்துச் சுனை தேடி அலைந்து திரிவதாகப்பட்டது. பெட்ரோல் இல்லாமல் காருடன் தெருவில் நிற்பதைப் போலொரு கொடுமை... நினைத்துப்பார்க்கத் தோன்றவில்லை.

அங்கும் இங்குமாக அலைந்து கடைசியாக ஊரின் எல்லையில் ஒரு கேஸ் ஸ்டேசனைக் கண்டுபிடித்தான். சாதாரண நாட்களில் யாராலும் பெரிதும் கண்டுகொள்ளப்படாத இடங்களுக்கு அன்று புது மனைவி மரியாதை கிடைத்துக்கொண்டிருந்தது.

அந்த ஸ்டேசனிலும் கார்களின் வரிசை சாலை வரை நீண்டிருந்தது. சில மணி நேரங்கள் காத்திருக்க வேண்டும் போலிருந்தது. அவனுக்கு அந்தப் பொறுமை இல்லை. வரிசையில் இருந்த ஒருவர் கவனிக்காத நேரமாக பார்த்து கிடைத்த சின்ன இடைவெளியில் அவன் தைரியமாக உள்ளே நுழைந்துவிட்டான். குறுக்குவழியில் நுழையும் குற்றவுணர்ச்சியை வெறுப்புபோல் ஏதோ ஒன்று தின்று செரித்திருந்தது.

மரியாதைத் தனங்களும், நளினத்தன்மையும் தன்னிட மிருந்து மெல்ல விடைபெறுவதை உணர்ந்த தருணத் தில் கியூ நகர்ந்தது. அவனை யாரும் எதுவும் கேட் கவில்லை. அப்படியே கேட்டாலும், அவர்களை உதா சினப்படுத்தவும் தேவைப்பட்டால் வாக்குவாதத்திற்கு ஏன் தள்ளுமுள்ளுக்குக்கூட அவன் ஆயத்தமாகும் மனநிலையில் இருந்தான். காரில் பெட்ரோல் நிரப்பு கையில் பாதியிலேயே சட்டென நின்றுவிட்டது. கடை யில் இருந்து வந்த ஒருவன் "முடிந்தது" என ஸ்பானிசில் சொல்லிவிட்டுப் போனான். சரி கிடைத்தவரை லாபம் என நினைத்து கொண்டான்.

எதற்கும் ஒரு அவசரத்துக்கு ஒரு கேஸ் கேன் வாங்கி வைத்துக் கொண்டால் வசதியாக இருக்கும் என்ற யோசனைத் தோன்றியது. காரை ஓரமாக பார்க் செய் துவிட்டு கடைக்குள் நுழைந்தான். உள்ளே கடை கச கசவென கூட்டம். கூட்ட நெருக்கத்தில் பதற்றத்தை உணர்ந்தான். யாரும் யாரையும் பொருட்படுத்தாத நெருக்கம் அது. வழக்கமாக பொது இடங்களில் நடக் கும் போது கூட எதிராளிக்குப் போதிய இடைவெளி தந்து, எதிர்ப்படுபவர்களை லேசான புன்னகையுடன் கடந்துபோகும் மக்கள் அன்று உதாசினப்படுத்தி, புன் னகைக்க மறந்திருந்தனர். தெரிந்த ஒன்றிரண்டு முகங் களும்
நட்போடு "ஹலோ" என்று சொல்வதைவிடுத்து வெறு மனே "ஆர் யூ ஸ்டேயிங் ?" எனக் கேட்டபடியிருந்தார் கள்.

உள்ளே கேஸ் கேன்கள் விற்றுத் தீர்ந்திருந்தன. பெட் ரோல் கேன் யோசனையைக் கைகழுவிவிட்டுப் புறப் பட்டான். நடுவில் சிங் போன் செய்திருந்தான். பிள்ளை களுடன் ஃபிளாரிடாவைத் தாண்டி வெகுதொலைவு சென்றிருந்தான். நார்த் கரோலினாவில் இருப்பதாகச்

சொன்னான். “வழியில கேஸ் கிடைக்காமல் சுத்தி அலைஞ்சோம், இந்த வெயில் வேற அநியாயத்துக்குக் கொல்லுது” என்றான். “முடியலன்னா, நடுவுல எங்கயாவது தங்கிக்கலாமே. சின்ன பசங்களை ரொம்ப சிரமப்படுத்த வேண்டாமே!” என நாசுக்காகச் சொல்லி போனை வைத்தான்.

வீட்டுக்கு வந்தபோது மணி இரவு பதினோன்னைத் தொட்டிருந்தது. போர்டிகோ லைட்டை அணைத்து விட்டு தூங்கியிருந்தார்கள். டைனிங் டேபிளில் இட்லியும் ஒரு பீங்கான் குவளையில் சாம்பாரும் இருந்தது. எடுத்து போட்டுச் சாப்பிட்டான்.

வீட்டு இன்சூரன்ஸ் ஞாபகம் வந்தது, போன் செய்து காப்பீடு பற்றி விசாரித்தான். இருபத்தி நான்கு மணி நேரச்சேவை என்பதால் பேச முடிந்தது. வீட்டுக்கு புயல் காப்பீடு மட்டும் செய்திருந்த அவன், வெள்ளக்காப்பீடு செய்யவில்லை எனும் புதிய தகவல் சொன்னார்கள். அதனால், வெள்ளநீரால் வீடு சேதம் அடைந்தால் தாங்கள் பொறுப்பேற்கமாட்டோம் என்றார்கள். விசாரித்தபோது, ஓயாது மழை பெய்து தரை வழியாக தண்ணீர் வீட்டுக்குள் புகுந்தால் அதை வெள்ள நீர் என்று கருத்தில் கொண்டு, அதனால் நாசமடைந்த வீட்டுக்கோ இல்லை வீட்டு உபயோகப் பொருள்களுக்கோ கண்டிப்பாக இழப்பீடு எதுவும் கோரமுடியாதாம். ஃபிளாரிடாவில் ஹரிக்கேன் எச்சரிக்கை விடப்பட்டிருப்பதால் இனி தற்காலிகமாக இன்சூரன்சில் புதிதாக எந்த மாறுதல்களும் செய்ய இயலாது எனக் கைவிரித்தனர். அவனுக்குக் கூடுதல் சுமை ஏற்றியது போலிருந்தது.

டிவியில் மீண்டும் இர்மா. கொசுவர்த்திச் சுருள் போன்ற வெண்புகையாக இர்மா ஃபிளாரிடா நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதைக் காட்டினார்கள். அந்தச் சுருளின்

மையத்தை 'ஹரிக்கேன் ஐ ' அல்லது கண் என்றார்கள். அந்தக் கண் எனும் மையத்தின் ஊடாக 'ஹரிக்கேன் ஹண்டர்ஸ்' எனும் சாகச விமானக்குழு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட விமானத்தில் சென்றிருந்தார்கள்.

விமானம் அந்தப் புகை புகை மண்டலத்துக்குள் புகுந்து செயற்கைக்கோள்கள் தருவதை விட மிகத்துல்லிய மான பல தகவல்களைத் திரட்டிவிட்டுத் திரும்பியிருந் தது. சாகச விமானத்தின் விமானி தனது பயண அனுப வங்களைச் சொன்னார். இறுதியில் ஃபிளாரிடா இன்ன மும் இர்மாவின் பாதையில் தொடர்ந்து கொண்டிருப்ப தாகவும். மேம்பட்ட தகவல்களை அதிகாலை இரண்டு மணிக்கு எதிர்பார்க்கலாம் என்றார்கள். அது அவனுக்கு எந்த வித சமாதானத்தைத் தரப்போகிறது எனும் யோச னையோடு படுக்கையில் விழுந்தான்.

உடல் களைப்பாக இருந்தாலும் ஏதேதோ பழைய நினைவுகள் வந்து அவனைத் தூங்கவிடாமல் அலை கழித்துக் கொண்டிருந்தன. அவனது நினைவுச் சரடுக ளில்
படிந்திருந்த ஒரு ஹரிக்கேன் நிகழ்வு மெல்ல மேலெ ழுந்தது.

# 14

பரணிக்குத் திருமணமான புதிது. தாரிணி இந்தியா போயிருந்தாள். அவனும் ராபர்ட்டும் சேர்ந்து, ஃபிளோ ரிடாவின் மேற்குக் கரையில் விடுமுறையில் இருந் தார்கள். போட்டோகிராஃபியில் ஆர்வமுள்ள ராபர்ட் "அந்தப்பக்கமும் பீச் நல்லாத்தான் இருக்கும் வா" என அழைத்திருந்தார். அப்போது அவன் வேலைக் குச் சேர்ந்த புதிது என்பதால் அலுவலகத்தில் பெரிய பொறுப்புகள் ஏதும் இல்லை. விடுப்பு எடுப்பதில் பிரச்ச னைகள் எதுவும் இல்லை என்பதால் சரி எனத் தயங்கா மல் ஒத்துக்கொண்டான்.

ராபர்ட் கலைநயத்துடன் போர்ட் மேயர்ஸ் கடற்கரை ஓரத்தில் ஒரு ஓட்டலை அவர்களுக்காக முன் பதிவு செய்திருந்தார். அறையிலிருந்து அழகான பீச் வியூ கிடைத்தது. எதிரே நீண்ட கடற்கரை. எங்கும் வெள்ளை நுண்மணல். ஓவிய சுத்தம். அந்த ஓட்டல் பெரிய ஐந்து

நட்சத்திர விடுதிகள் போலில்லாமல் வெளியே தென் அமெரிக்க வீடு போன்ற ஸ்டைலில் இருந்தது. மொத் தமாக இரண்டு தளங்கள். உள்ளே நுழைந்தால் கீழே சின்ன ரிசப்சன் ஏரியா. இடது புறம் டைனிங் ஹால். மேலே அறைகள்.

முதல் நாள் இருவரும் சேர்ந்து நன்றாக ஊர் சுற்றி னார்கள். இரண்டுநாள் அங்கே தங்கிவிட்டு மூன்றாவது நாள்தான் அங்கிருந்து கிளம்புவதாக ஏற்பாடு. ஆனால், ஹரிக்கேன் சார்லியிடம் வேறொரு திட்டமிருந்தது.

அப்போதுதான் ஹரிக்கேன் சார்லி மேற்குக் கடற்க ரையை நோக்கி நகர்வதாக தகவல் வந்ததால் இருவ ரும் ஒருநாள் முன்பே அங்கிருந்து கிளம்பிவிடலாம் என முடிவெடுத்தார்கள்

அன்று இரவு களைப்பு தீர குளித்துவிட்டு ரெஸ்டாரண் டுக்குச் சாப்பிடப் போயிருந்தார்கள். உள்ளே நுழைந்த போது ஹரிக்கேன் வருவதற்கான எந்த அறிகுறியும் சுத் தமாக இல்லை. ஒருவன் கிடார் இசைத்துக்கொண்டி ருந்தான். ஒரு டேபிளில் உற்சாகமாக பீர் குவளையுடன் இருந்த இரண்டு இளைஞர்களுடன் சேர்ந்து அவர்கள் மது அருந்திவிட்டு விடுதிக்குத் திரும்பும்போது இரவு பத்தாகி இருந்தது.

மெலிதான போதையில் இருந்த ராபர்ட் ரிசப்சனில் தனியாக நின்றுகொண்டிருந்த உரிமையாளரிடம் ஹரிக் கேன் சமயத்தில் கட்டடத்தின் உறுதித்தன்மை பற்றி கேள்வி எழுப்பினார்.

அவர் "ஓய் யூ வோரி, யூ ஆர் சேஃப் ஹியர். இது இரு பத்தைஞ்சு வருச பில்டிங். நூறு மைல் வேகத்துல காத் தடிச்சாலும் தாங்கும். இதுபோல எத்தனையோ ஹரிக்

கேன்களைப் பார்த்திருக்கிறோம்” என்று உத்தரவாதம் தந்தார்.

கொஞ்சம் நம்பிக்கை வந்தது.

ராபர்ட், “டு யூ மைன்ட் ?” எனும் தன் கேள்விக்கு யாரிடமும் பதிலை எதிர்பாராமல் ஒரு சுருட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து லைட்டரில் பற்றவைத்துக் கொண்டார்.

கரிபீயன் தீவுகளில் இருந்து வந்ததாலோ என்னவோ ராபர்ட் அரிதாக சுருட்டு புகைப்பதுண்டு. புகையிலையின் கார நெடி அந்தச் சின்ன அறையை நிறைக்க, அவனுக்கு மூச்சு முட்டி தலைவலிப்பது போலிருந்தது.

ராபர்ட்டை நேரடியாக பார்த்து கிளம்பலாமா ? என்பது போலொரு பார்வை பார்த்தான்.

“ஏன், சுருட்டு நெடி பிடிக்கலையா என்ன ?” என்றவர்

“லெட் மி டெல் யூ சம்திங். அமெரிக்கா வந்த கிருஸ்டோபர் கொலம்பஸ் வழியாகத்தான் ஐரோப்பியர்களுக்கு புகையிலையே அறிமுகமான வரலாறு தெரியுமா உனக்கு, இவ்வளவு ஏன், சிகார் எனும் சொல்லின் மூலமே மாயன் நாகரிகம் தான்”

போதையில் இருந்த ராபர்ட் விட்டால் அமெரிக்க வரலாற்றை இரவு முழுவதும் பேசிக்கொண்டிருப்பார் என நினைத்தான். போதை உடலில் ஏதோவொரு புள்ளியை மெல்லத் தொட்டு எதையும் இலகுவாக்கி நிகழ்த்தும் மாயவித்தை அவனுக்கு ஆச்சர்யம் தந்தது. பேச்சில் அவனுக்கு மனம் லயிக்கவில்லை தூக்கம் வந்தது. அறைக்கு வந்து கொஞ்சநேரம் டிவி பார்த்துவிட்டு படுத்தான்.

காலையில் எழுந்தபோது புது பிரச்சனை ஒன்று காத் திருந்தது. ஆரம்பத்தில் சார்லியை கேட்டகிரி ஒன்று இல்லை மிஞ்சிப்போனால் இரண்டு எனக் கணித்திருந் தார்கள். ஆனால், யாரும் எதிர்பாராமல் ஒரே இரவுக் குள் அது மணிக்கு 145 மைல்கள் வேகத்தில் சூறைக் காற்று வீசப்போகிற கேட்டகிரி நான்கு என்று புதுஅவ தாரம் எடுத்திருந்தது.

ஹரிக்கேன் வலுப்பெற்றதும் அதுவரை இணக்கமாக பழகிக்கொண்டிருந்த அந்த ஓட்டல் அதிபரின் நடவ டிக்கைகளில் பெரிய மாற்றம் தெரிந்தது. விசயம் கேள் விப்பட்டு படபடப்பாக மாடிக்கு வந்தவர் கண்டிப்பான குரலில் "இப்பவே நீங்க இங்கிருந்து கிளம்பிடுங்க, நான் ஓட்டலை மூடப் போகிறேன்" என அவசரப்படுத்தினார். அவர் குரலில் இருந்த அவசரத்தையும், கண்டிப்பையும் பார்த்தபோது அவர்கள் அங்கேயே இருந்து உயிர் விடு வதை விரும்பாதவர் போல தோன்றியது.

பெரிதாக யோசிக்காமல் உடனே அங்கிருந்து காரில் கிளம்பும் போது மழை லேசாக தூரத் தொடங்கியிருந் தது. கிளம்பிய ஒரு மணி நேரத்தில் வெயில் அடித்த நிலக்காட்சி மாறி மழை வலுத்து அடித்துப் பெய்தது. காரின் தலைமேல் பட படவென விழுந்த மழைத்துளி கள் உலோகத்தில் இயந்திரத் துப்பாக்கி தன் ரவைக ளைச் சரமாரியாக மழையெனப் பொழிந்தது போலிருந் தது. கூடவே சாலையில் நடப்பவர்களை தலைகுப்புற அடித்து கீழே தள்ளும் சூறாவளியும் சேர்ந்து வீசத் தொடங்கியிருந்தது. ஆத்திரத்தால் தொடர்ச்சியாக சீறும் பாம்பின் சீற்றத்தையொத்தக் காற்றை ஒருவிதமாக சமா ளித்து அவன் காரைச் செலுத்தினான். பேசாமல் தங்க வேறு இடம் தேடியிருக்கலாம். ஏதோ குருட்டுத் தைரி யத்தில் ராபர்ட்டுடன் கிளம்பியதற்காக அவன் வருத்தப் பட்டான். கூடவே ஹரிக்கேன் சமயத்தில் விடுமுறைக்கு

அழைத்துவந்த அவர் மேல் ஆத்திரம் வந்தது. இது ஆத்திரப்படும் நேரமில்லை என்பதை உள்மனதுக்குச் சொல்லி சமாதானம் செய்தான். கூடவே காரின் முன் கண்ணாடி வைப்பர்போல அவனுடைய இதயமும் படபட வென இயங்கி ஓவர் டயம் செய்தது.

அப்போது தெருவில் அவர்கள் கண்ணெதிரில் கையில் உடமைகளுடன் நடந்துகொண்டிருந்த ஒரு வயதான ஜோடி காற்றடித்து வேரருந்த மரம்போல கீழே விழுந் தபோது முதல்முறை அவனுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. நடப்பது நிஜம், எப்படியாவது அங்கிருந்து தப்பிக்கவேண்டும் எனும் எண்ணம் மேலிட்டது. அட்ரி லின் ஊற்றெடுத்தது. அவர்களுக்கு உதவிசெய்ய எத் தனித்து காரை நிறுத்தினான். மூட்டை முடிச்சுகளுடன் எழுந்து வந்தவர்களுக்கு உள்ளே உட்கார பின் சீட்டில் இருந்த சாமான்களை நகர்த்திவிட்டு இடம் தந்தான். கார் மீண்டும் மிகப்பெரிய யுத்தத்தை எதிர்கொள்ளும் ஆயத்தத்துடன் காற்றை எதிர்த்து உறுமலுடன் முன் னேறத் தொடங்கியது. காரில் ஏறிய தம்பதிகள் தொப் பலாக நனைந்திருந்தார்கள். ஈரத்தில் நடுங்கியபடியே "எங்களை எப்படியாவது அருகில் இருக்குற பிரெண்டு வீட்டுல விட்டுருங்களேன், ப்ளீஸ்" என்றபோது அவர்க ளின் கண்களில் மரணபயத்தைப் பார்த்தான். சூழலின் விபரீதம் முற்றிலுமாகப் புரிந்தது. இனி தீவில் இருந்து வெளியேற முடியும் எனும் நம்பிக்கை இழந்து ஒதுங்க பாதுகாப்பான ஒரு இடத்தை அவசரமாக தேடினார்கள். அவனுக்கு விடுமுறை மனநிலை சுத்தமாக மாறி, உயி ருக்கு அஞ்சும் மனநிலை வந்து, பதட்டத்திலும், குழப் பத்திலும் கைகள் நடுங்குவது போலிருந்தது.

மழை முன்பைவிட கூடுதல் ஆவேசமாக பெய்தது. மனித நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்த சாலைகள் அச்சமூட்டின. முன்சீட்டில் இருந்த ராபர்ட் கைகாட்டிய

திசையில் ஓர் ஓட்டல் கண்ணில் பட்டது. ஏதோ நம்பிக் கையில் அங்கே போவதெனத் துணிந்து முடிவெடுத்து காரை நிறுத்தினான்.

அவசர அவசரமாக ராபர்ட் கேமராவை எடுத்து கொண்டு கீழே குதித்தார். மணலோடு சேர்ந்த சூரைக் காற்று வீசத்தொடங்கி இருந்தது. காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுத்து கார் கதவைத் திறக்க முடியாமல் திணறி ஒருவழியாக இறங்கினார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கைகளைக் கோர்த்தபடி நடந்து மூடி யிருந்த விடுதி கதவை பலமாகத் தட்டிப் பார்த்தார்கள். பலனில்லை.

இப்போது காற்றின் வேகம் இன்னமும் கூடி குப்பைகள் பறக்கத் தொடங்கியிருந்தன. அவனுக்கு உடல் முழுதும் அட்ரிலின் பாய்ந்ததில் உடல் நடுங்கியது. மனம் தப் பிக்கும் மார்க்கத்தை அவசரமாக யோசித்தது. அடுத்த முயற்சியாக அவசரமாக ஓடி பின்புறக் கதவை அனை வருமாக சேர்ந்து வலுவோடு இழுத்து பின் மொத்த பலத்தையும் திரட்டி தள்ளியும் பார்த்தார்கள். சில நிமிட கடின முயற்சிக்குப்பிறகு ஒருவழியாக கதவு திறந்தது. அங்கிருந்த செங்குத்தான சின்ன படிக்கட்டு அவர்களை இரண்டாவது தளத்திற்கு அழைத்துச்சென்றது.

ஓட்டல் லாபியில் பதுங்கியிருந்த மனிதத் தலைகளைப் பார்த்த பிறகுதான், அவர்கள் நிம்மதியடைந்து தங் களை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். மேனேஜர் போலிருந்த ஒருவர் நீங்கள் இங்கே தங்கிக்கொள்ள எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை, ஆனால் உங்களுக்கு எதிர்பாராமல் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் நிர்வாகம் பொறுப்பல்ல எனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட சம்மதிக்கவேண்டும் என்று வலியுறுத் தினார். கண்களை மூடியபடி அவர் நீட்டிய இடத்தில்

கையெழுத்திட்டார்கள். அடுத்து வந்த பலமணிநேரங்கள் அந்த ஓட்டலில் தங்க நேரிட்டது. வரம்பு மீறி பெய்த மழையோடு சேர்ந்து அடித்த பெருங்காற்று பெரும் மரங்களைக் கூட ஓரிரு நிமிடங்களில் இரக்கமின்றி சாய்த்துக் கோரத்தாண்டவம் ஆடியது. ஹரிக்கேனைத் தாங்கும் கண்ணாடிகள் பொருத்தியிருந்த சன்னல்களின் ஊடாக அந்தத் தீவு அழிந்து கொண்டிருந்ததைக் கண்ணெதிரில் பார்த்தார்கள். மரத்தின் வேர்களைப் போல வானில் இருந்து ஒளி வேர்கள் மின்னலாக தொடர்ந்து வீழ்ந்துகொண்டிருந்தன. ஃபிளாரிடா ஏன் 'அமெரிக்காவின் மின்னல் தலைநகரம்' என்கிறார்கள் என்று அப்போது அவனுக்குப் புரிந்தது. வீசிய கடும் காற்றுக்கு ஃபிளாரிடாவின் பூர்விகப் பனை மரங்கள் மட்டும் ஈடு கொடுத்து நின்றதை ராபர்ட் சுட்டிக் காட்டினார். அந்த மரங்கள் உயரமாக இருந்தாலும் அதன் உடல் அமைப்பு, இலைகள் போன்ற தனித்துவமான அம்சங்கள் அதைக் காப்பாற்றுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்த போது திடீரென வானமே உடைந்து தரையில் வீழ்ந்தது போல பேரிடி வீழ்ந்து நெஞ்சின் உறுதியைக் குலைத்தது. காற்றும் விடாமல் தன் பங்கிற்கு பல மணி நேரங்கள் பெருங்குரலெடுத்து அரற்றியபடியிருந்தது. அந்தக் கொடூர ஓலத்தை தாங்க இயலாத ஒரு சிறுமி பயத்தில் தன் தாயை அணைத்தபடி “அம்மா, எனக்கு பயமா இருக்குமா. அம்மா, எனக்கு பயமா இருக்குமா” என்று தொடர்ந்து அழுதபடியிருந்தாள். பேய் மழையும், சூறைக் காற்றும் வெகுநேரத்திற்கு ஒன்றை ஒன்று போட்டி போட்டுக்கொண்டிருந்தன.

சூறாவளி ஓய்ந்து அடங்கிய அந்த மாலைவேளையில் அவனும், ராபர்ட்டும் வெளியே வந்தார்கள். புயல் அந்தத் தீவை பூரண வன்கலவி செய்துவிட்டுப் போயிருந்தது. பெரிய பெரிய மரங்கள்கூட வேரோடு பிடுங்கி எறி

யப்பட்டிருந்தன. மின்சார கம்பிகள் எங்கும் அறுந்துகிடந்தன. பலமான காங்கிரீட்டில் நடப்பட்டிருந்த ஸ்டாப் சைன்கள், வீடுகளில் இருந்து வரவேற்பறை சோபாக்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள், குப்பைத் தொட்டிகள் தெருவில் வீசி எறியப்பட்டிருந்தன. ஒரு கார் கரப்பான் பூச்சியை தலைகீழாக கிடத்தியது போல் நான்கு சக்கரங்களையும் வானுக்கு விரித்துக் காட்டியபடி கிடந்தது. மீன்பிடி படகொன்று நான்கு முனைச் சந்திப்பில் நங்கூரமிட்டிருந்தது. சில வீடுகள் இருந்த தடய மற்று போயிருந்தன. பல வீடுகளின் கூரைகளை இழந்து முண்டங்களாக நின்றன. காற்று எனும் பெருஞ்சாட்டை பலங்கொண்ட மட்டும் ஆக்ரோசமாய் சுழன்று இரத்த விளாருகளை விட்டுப்போயிருந்தது.

இன்னமும் மழை விடாமல் லேசாக தூறியபடி இருந்தது. தெரு முனையில் ஒரு வீடு உக்கிரத்தோடு எரிந்துகொண்டிருந்தது. அதிலிருந்து எழுந்த கரும்புகை மேலே எழும்பி இடமும் வலமுமாக அசைந்து கொண்டிருந்தது. ஒரு பதற்றம் அடங்கி இன்னொன்று தலையெடுத்திருந்தது. அரைக்கால் சட்டை அணிந்த மனிதர்கள் சிலர் வெறுங்கால்களுடன் அந்தக் கோரத்தை நம்பமுடியாமல் அதிர்ச்சியோடு வெறித்துக்கொண்டிருந்தனர். அடுப்பெரிக்க வைத்திருந்த கேஸ் சிலிண்டர் வெடித்திருக்கலாம் என்றார்கள். அந்த ஒரு வீட்டின் புகையோடு சேர்ந்து அந்தப் பகுதியே ஒரு போர்க்களம் போல காட்சி தந்தது. மதியமே தீயணைப்புத்துறையினர் பாதுகாப்பான இடத்துக்கு சென்றுவிட்டதால் அவர்கள் உடனே வந்து தீயை அணைப்பது இயலாத காரியம் என்றார்கள். கூட்டத்தில் ஒருவர் அச்சத்தோடு "ஒரு ராட்சத பேரலை உள்ளே நுழைந்ததை என் கண்களால் பார்த்தேன். நான் கண்டிப்பாக அடுத்த புயலுக்கு இங்க இருக்கமாட்டேன்" என்று முணுமுணுத்தான்.

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப் பஞ்சபூதங்களையும் புயல் அசைத்துப் பார்த்துவிட்டுச் சென்றிருந்தது. ஒருவழியாக சமாளித்து அவன் காரை கிளப்பிக்கொண்டு வெளியேறிய போது தெருமுனையில் வந்த ஒரு சிறுகூட்டத்திற்கு ஒதுங்கி வழிவிட்டான். முதலில் அந்தக் கூட்டத்திற்கு தலைமை ஏற்றதுபோல ஒரு சிறிய டிரக் வந்தது. அதன் பின்னால் ஏதோ பெரிய மீன் போன்ற ஒன்றை மரப்பலகையில் வைத்து இழுத்து வந்தார்கள். அது நெருங்கியபோது அந்த உயிருள்ள ஒரு மனேட்டி**(Manatee)ஐ ப்பார்த்தான். ஸ்ரெச்சர் போல செய்திருந்த மரப்பலகையில் அச்சத்தோடு ஒடுங்கியபடி இருந்த அதன் சிறிய கண்களில் பதட்டமும், தவிப்பும் வழிந்தோடின.

புயலால் கரை ஒதுங்கிய மனேட்டியைத் திரும்பக் கடலில் விட அந்தக் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. கூட்டத்தைக் கண்டு மிரண்டிருந்த மனேட்டி-ஐ ஆறுதல் படுத்துவது போல சட்டையில்லாத இளைஞர்கள் இருவர் குனிந்தபடி அதைப் பாதுகாப்பாக அணைத்திருந்தனர். அவர்களின் கண்களில் நேசத்தையும், பரிதவிப்பையும் ஒருசேரப் பார்த்தான். மனேட்டிக்கு ஹரிக்கேனின் நினைவாக சார்லி என்று பெயரிட்டிருந்த அந்தக் கூட்டம் “சார்லி… சார்லி…” என முழக்கமிட்டபோது அவன் கண்களில் கண்ணீர் வழிந்து உருண்டோடியது.

**கடலில் வாழும் சீல்கள் போல் சற்று பெரிதாக இருக்கும் மனேட்டிகளை (மானட்டி) கடல் பசுக்கள் என்கிறார்கள். சைவ உணவுப்பிரியர்களான மனேட்டிகள் நம்மைப் போலொரு பாலூட்டிகள். மிகவும் சாதுவானவை. இவை பெரும்பாலும் ஆழமற்ற, சதுப்பு நிலப்பரப்பு பகுதி

கள் மற்றும் உலகின் சில கடல்பகுதிகளில் காணப்படு கிறது (குறிப்பாக ஃபிளாரிடா பகுதிகளில்).

# 15

படுக்கையிலிருந்து கண் விழித்துப் பார்த்த போது இருளாயிருந்தது. அவனுக்கு லேசாக தலைவலிப்பது போலிருந்தது. அவன் எப்போது தூங்கினான் என்பது சரியாக நினைவில்லை. படுக்கையில் இருந்தபடியே எதிரே இருந்த எல்யிடி கடிகாரத்தில் மணி பார்த்தான். சிகப்பு நிறத்தில் 2:50 எனக் காட்டிய கடிகாரம் வழக்கத் துக்கு மாறாக கூடுதல் பிரகாசமாக ஒளிர்ந்தது போலி ருந்தது. இமெயில் பார்த்தான் அலுவலகத்தில் இருந்து ஹரிக்கேன் தாக்குதலுக்கு நாற்பத்தெட்டு மணிநேரத் துக்கு முந்திய தயாரிப்பு வேலைகளைச் செய்ய பரிந் துரைக்கும் இமெயில் வந்திருந்தது. தனது பட்டியலைச் சரிபார்த்தவன் இர்மாவின் காலை இரண்டு மணி நில வரத்தை இணையத்தில் பார்த்தான். இர்மாவின் பாதை யில் கிழக்குக் கடற்கரை இன்னமும் தொடர்ந்தது. அது

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் கரீபியன் தீவு கள் முழுவதும் கடும் மழையோடு சுழன்று அடித்து பல உயிர், பொருட்சேதங்களுடன் ஃபிளாரிடா நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது. இதைவரை இறந்தவர்க ளின் எண்ணிக்கை ஐம்பதுக்கு மேல் என்றார்கள். இறு தியாக வந்த தகவல்களின் படி இர்மா இதுவரைப் பதிவுசெய்யப்பட்ட அட்லாண்டிக் சூறாவளிகளில் வலி மையான ஒன்றாக இருக்கும். அதனால் மிகப் பெரிய அழிவை ஃபிளாரிடா மக்கள் எதிர்பார்க்கலாம் என்றார் கள்.

யோசனையோடு படுக்கைக்குத் திரும்பினான். வரும் வழியில் அம்முவின் படுக்கை அறையில் இருந்த பூனை வடிவ இரவு விளக்கிலிருந்து பிங்க் நிற ஒளி வெளியே கசிந்து கொண்டிருந்தது. அவன் நிலையற்று இருந் தான். மேம்படுத்தப்பட்ட தகவல் அவனுக்கு எந்தவி தத்திலும் சமாதானத்தைத் தரவில்லை. உண்மையில் வரலாறு காணாத சூறாவளியின் பாதையில் இருப்பது அவனைக் கலக்கமுறச் செய்திருந்தது. தூக்கமில்லா மல் படுக்கையில் புரண்டபடி மையிருட்டை வெறித்தபடி இருளை விழுங்கிக்கொண்டிருந்தான். அவன் நிம்மதி யாகத் தூங்கி முழுதாக இரண்டு நாட்களாகி இருந்தன. இருள் தந்த துணிச்சலில் அவனுள் ஆழ்ந்து புதைந்தி ருந்த பயஉணர்ச்சி மெள்ள மேலெழுப்பியது.

சென்ற ஆண்டு ஹரிக்கேன் மேத்யூவின் போது இர வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. ஹரிக் கேன் காற்றில் கடவுள் வாழ்த்துப் பாடத்தொடங்கிருந்த சமயம். இருளில் லேசான காற்றும், மழையும் சேர்ந்து அடித்துக் கொண்டிருந்தது. இரவு பதினோரு மணி இருக்கலாம். வரப்போகிற பெருங்காற்றை வரவேற்பது போல மரங்கள் தலைவிரிக் கோலமாக சுழலத் தொடங்

கியிருந்தன. சமயங்களில் தாரிணி ஒரு சாகசப் பேர்வழி. "வாங்க கொஞ்சம் வெளியில போய் நின்னு பாக்கலாம்" என்றாள் கண்களில் உற்சாகம் பொங்க.

அவளுடைய ஆசைக்காக, இருவருமாக சேர்ந்து வெளியே ஒரு குடையோடு போய் நின்றார்கள். முகத்தில் முத்தமிடுவதுபோல் ஓரிரு மழைத்துளிகளோடு சில்லென காற்றடித்தது. எதிர்வீட்டு வாழைமர இலைகள் மட்டும் கிழிந்துக் காற்றில் படபடத்தன. லேசான மழை, உடல் தழுவும் மெல்லிய குளிர் அருகில் அணைத்தபடி மனைவி எனும் அனுபவம் வெதுவெதுப்பாக சுகமாகத்தான் இருந்தது. அதைக் கலைக்கும் படி சில நிமிடங்களில் திடீரென வந்த ஒரு பெருங்காற்று அவர்களைச் சடாரென பின்னுக்குத் தள்ளியது. பதற்றத்தில் அவள் கரங்களை இறுகப் பற்றியபடி கையில் குடையோடு காற்றை எதிர்த்து நடக்க எத்ததனித்துக் கண்ணுக்குத் தெரியாத அந்த எதிரியை முழுபலத்தோடு எதிர்கொள்ள முயன்றபோது காற்று குடைக்குள் புகுந்து நார்நாராகக் கிழிந்துவிட்டிருந்தது. அடுத்த நொடி முகத்தில் ஆங்காரத்துடன் தேள் கொட்டியது போன்ற விசையுடன் சடாரென மழைத்துளிகளும் வந்து மோதின. தொப்பலாக நனைந்து அடித்து பிடித்துத் தப்பித்தால் போதும் என்று ஒருவழியாக வீட்டுக்குள் வந்து சேர்ந்தார்கள். உள்ளே நுழைந்தவுடன் கிழிந்து கந்தலாகிபோன குடையைப் பார்த்தபோது சாகச மனநிலை சுத்தமாக வற்றிபோய் அவமானமும், குற்றவுணர்ச்சியும் சேர்ந்த ஓர் உணர்வு மனதை ஏதோ செய்தது. அன்று ஆக்ரோசமாக முகத்தில் அறைந்த சூறைக்காற்றை இப்போது உணர்ந்தான்.

நேற்று கூட அம்மா போன் செய்தபோது "பத்திரமா இருந்துக்க" என்று தொடங்கியவள் பின் "எதுக்குடா உனக்கு அந்த ஊரு, வருசா வருசம் உயிரை கையில

புடிச்சுகிட்டிருக்கிற பிழைப்பு. பேசாம ஊர பாக்க வந்துடேன்டா" என்றாள். "ஏன் அங்க இருந்தால் புயல் வராதா என்ன. பிரச்சனை எங்கயும் தாம்மா இருக்கு" என அவளுக்குப் புரியும் மொழியில் சமாதானம் சொன்னான். "எம்புள்ள அமெரிக்காவுல குழந்தை குட்டிகளோட சந்தோசமா இருக்கிறான். என்னை நல்லா பாத்துக்கிறான்" என மற்றவர்களிடம் இன்று பூரிப்போடு பேசுபவள், நாளை இங்கே எங்களுக்கு ஆபத்து என்றால் ? நாளையே இங்கே எங்களுக்கு ஏதேனும் ஒரு அசம்பாவிதம் நேர்ந்து விட்டால் ? உள்ளபடி இங்கே வந்த புதிதில் தன் மகன் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புகிறான் என்பதே அவளுக்குத் திருப்தியாகவும் ஏன் பெருமையாகக்கூட இருந்தது. ஆனால், நாட்கள் ஆக ஆக அவளுடைய பரிதவிப்பு வேறாகிப்போனது. இப்பொதெல்லாம் அமெரிக்காவில் எங்கேனும் துப்பாக்கிச்சூடு என்று கேள்விப் பட்டால் கூட பதற்றமாகி "எம்புள்ள எங்க இருந்தாலும் காப்பாத்துப்பா..." என மனமுருகி உள்ளூர் பிள்ளையார் கோயிலுக்கு வேண்டிக்கொள்கிறாள்.

சொந்த மண் என்பது எவ்வளவு பெரிய ஒட்டுறவு. எவ்வளவு இறுக்கமான நம்பிக்கை. இப்படிப் பூமிப்பந்தின் மறு புறம் நமக்காக இரவோடும், பகலோடும் காத்திருக்கும் அந்த உலகை உதாசினப்படுத்தும் ஏக்கம் அவனுக்கும் உண்டு. ஊரில் மனதுக்கு நெருக்கமான பலருடன் செலவிடவேண்டிய நல்ல தருணங்களை இந்த வெளிநாட்டு வாழ்க்கை மெள்ள விழுங்கிக்கொண்டிருப்பது அவனுக்கு வலித்தது. சொந்த ஊர் நினைவு வரும் சமயங்களில் ஏனோ அவனைச் சொல்ல இயலாத ஒரு சோகம் பக்கென நெஞ்சை அடைத்து பேச இயலாது செய்துவிடுகிறது. தங்கள் வேர்களை நோக்கி நினைவுகள் திரும்புவது இயல்புதானே. அவ்வளவு ஏன், போர்

முனையில் இருந்து தப்பித்து வெளிநாட்டில் தஞ்சம் புகுந்து, புலம்பெயர்ந்த ஓர் அகதிக்குக்கூட என்றாவது சொந்தநாடு திரும்பும் கனவு கண்டிப்பாக இருக்கும் என்றே நினைத்தான்.

உண்மையில் அயல்மண்ணில் பிடுங்கி நடப்பட்டவர்க ளுக்குச் சொந்தநாடு திரும்புவது என்பது கல்லறை யில் இருந்து கண்விழிப்பதுபோலக் கடினமான காரிய மில்லை தான். ஆனால், அதற்கான மனநிலை கூடிவரு வது எளிதானதில்லை. பல சந்தர்ப்பங்களில் இதுபற்றி அவனே யோசித்ததும் உண்டு. வெளிநாடு தரும் வசதி வாய்ப்புக்காக சொந்தநாட்டை விட்டு வந்த குற்றவு ணர்வு ஒருபுறம். மறுபுறம் சொந்த மண்ணில் இருந்து பல்லாயிரம் மைல்கள் தாண்டிய இந்த மிகப்பெரிய தேசத்தில் அவனுக்குத் தான் மட்டுமே ஆதரவு, நம் பிக்கை எனும் சோகம் ஒருபுறம். தான் வீட்டுக்கு மூத் தவனாக பிறந்தது எந்தவிதத்தில் வரமோ, அதேபோல சாபமும் கூட எனத் தன்னைத் தானே அவன் சமாதானம் செய்துகொள்வான்.

இர்மா பற்றி சில அரைவேக்காடுகள் முகநூலில் எழு திய பல விசயங்கள் அவனுக்கு உவப்பாக இல்லை. பலர் அரைகுறை தமிழில் இர்மா ஹேஷ்டேக்கை தங் கள் விருப்பம்போல் சுயமைதுனம் செய்திருந்தனர்.

கியூபாவில் #இர்மா புயல்..
இர்மா கொஞ்சம் பொறுமா ஒரு *#Postion* ல நிண்டுகி றேன்....

அமெரிக்காகாரன் புயலுக்கு ' #இர்மா' அப்டினு பேர் வச் சுருக்கான்.
அப்றம் அது #போகுமா *.???* இத சொன்னா நம்பல #பைத்திய காரன் னு சொல்லுவாங்க

கடவுளே #இர்மா புயலை அப்படியே கொஞ்சம் பர்மா பக்கம் திருப்பி விடுங்கள்

என்னய்யா பேரு வைக்குறான் புயலுக்கு
#இர்மா
வருமானு.
அதான் வந்துடுச்சுல்ல...

அவர்கள் ' இர்மா, நீ இருமா! ' எனக் கோர்வையாக எழுதியதுகூட அவனுக்குத் தாழ்ந்த ரசனையாகதான் தோன்றியது. சிலர் அதை வைத்து நகைச்சுவை அரசியலும் செய்திருந்தார்கள்.

#ஹார்வி-யை அடுத்து #இர்மா புயல் #புளோரிடா, #கரீபியன் தீவுகளில் அவசரநிலை #பிரகடனம்
இதற்கு காரணம் புளோரிடா மாகாணத்தின் #திமுக_செயலாளரின் #அழுத்தம் தான் என்று கூறப்படுகிறது

கரீபியனில் "#இர்மா" எனும் புயல் வீசிக்கொண்டிருக்கிறது...
தமிழகத்தில் "#திருமா" புயல் வீசுகிறது..
இதில் மத்திய தாமரையும், மாநில இலைகளும் திசை தெரியாது அழிய போகிறது.

முஸ்லிம்களைக் கொன்று குவித்த அமெரிக்காவை நாசம் செய்த ஹார்வி புயலை அடுத்து #இர்மா# புயல் அபாயம்!

மியான்மார் முஸ்லீம்கள் இனப்படுகொலைக்கு ஆதரவாகவும் மியான்மார் அரசுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வரும் அமெரிக்காவிற்க்கு இறைவனின் பதிலடி !!!
#இர்மா #புயல் #அமெரிக்கா

இதுமாதிரியான சில விசமப்பதிவுகள் அவனைச் சங்கடப்படுத்தின. இந்தப் பிரச்சனைகளுக்கு சிலர் கடவுளை

வேண்டுவதுகூட அவனுக்குச் சற்று நெருடலாகத் தான் இருந்தது.

இர்மாவின் வேகத்தையும், ஆக்ரோசத்தையும் வீடியோ வாக பார்த்தபின் அவனுடைய அடி ஆழத்தில் புதைந் திருந்த பயத்தை முழுமையாகத் தோண்டி வெளியே எடுத்திருந்தது. இருளின் குகையில் தனித்து விடப்பட் டது போல உணர்ந்தான். இர்மா வெள்ளைச் சங்கு சக் கரம் போல் ஃபிளாரிடாவின் மேல் சுழலும் வானிலை முன்னறிவுப்பு படம் மீண்டும் மீண்டும் நினைவில் வந்து மனச்சுவரில் மோதிச் சென்றது. அது ஏனோ நகர்ந்து வரும் மலர்வளையத்தை அவனுக்கு நினைவூட்டியது. கூண்டில் அடைபட்ட புலி முன்னும் பின்னும் நடப்பது போல மனம் ஓயாமல் மறுபடியும் அதையேச் சுற்றி சுற்றி வந்தது. பிரளயத்தை எதிர்நோக்கி காலத்தின் கரையில் பதைபதைப்புடன் காத்திருப்பது அவனுக்கு நடுக்கமா யிருந்தது.

நேற்று டிவியில் பார்த்த முன்னெச்சரிக்கை நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அதுபோலொரு நிலை வந் தால் மாஸ்டர் பெட்ரூமில் இருக்கும் சின்ன அறை போன்ற கிளாசெட்டில் ஒளிந்து கொள்ள நினைத்தான். புறாக்கூண்டு போன்ற சின்ன அறையில் பிள்ளைக ளோடு ஒண்டிக்கொண்டிருப்பது போலவும், வெளியே காற்று பெருங்குரல் எடுத்து ஓயாமல் ஊளையிட்டபடி அவனுக்காகக் காத்திருப்பது போல மனக்கண்ணில் தோன்றி அச்சமூட்டியது.

வெளியே அண்ணாந்து பார்க்கும் மலை போல் உயர்ந்து வந்த ஒரு பேரலை அவன் வீட்டை விழுங்கி அணைத் துத் தன்னோடு சேர்த்து பெரும் விசையுடன் இழுத் துச் செல்வதுபோல இருந்தது. ராட்சத மலைப்பாம்பின் வயிற்றில் சிக்கிய இரைபோல உணர்ந்தான். தண்ணீ

ரில் முழுவதுமாக மூழ்கி மூச்சுத்திணறித் தத்தளித்து தலை தூக்கியபோது அலை தன் பிடியை விடுவித்து விட்டு வீட்டை தனித்தீவாக்கியிருந்தது. மேலே கூரை யின்றி வீடு திறந்தவெளி உப்பரிகை போல நின்றது. கண்கொள்ளாத அளவுக்கு எங்கும் தண்ணீர். வீடு கள் காகிதப் பெட்டிகளாக நீரில் மிதந்து கொண்டிருந் தன. மரங்கள் வீழ்ந்து, நின்ற ஒன்றிரண்டு மரங்களும் மொட்டையாக அவனது குடியிருப்பு அடையாளமிழந்து நிர்மூலமாகி நின்றது. தாரிணி, பிள்ளைகளின் நினைவு வந்தது பரபரப்போடு தேடினான். திசையில்லாத திசை போல கண்ணுக்கெட்டிய வரையிலும் தண்ணீர்... பரந்த ஏரி போலிருந்தது. நீர் அகதியாகத் தனித்தீவில் சிக்கிக் கொண்டதுபோல உணர்ந்தான். அதிர்ச்சியில் உறைந் தான். தனது காலடியில் கரும்பாம்பு நெளிவது போலி ருந்தது. வெயிலில் நிழல் நீள்வது போல, ஏதாவது நேர்ந் துவிடும் எனும் அச்சத்தின் நீட்சி அந்த அச்சத்தை விட கொடூரமானதாக இருந்தது. மீண்டும் புரண்டு படுத் தான். நேரக்கூடாதது எதுவும் நேராது என்று தனக் குத் தானே சமாதானம் செய்துகொள்ள முயன்றான். ஆனால் அடுத்த நொடி அசம்பாவிதம் நடப்பது போல, அனைத்தும் முற்றாக அழிந்து நிர்மூலமான வீட்டை மீட்க முடியாமல் நிதிச்சுமை தாளாமல் திவாலா அறிவிப் பது போல, வெளிநாட்டில் வந்து குடும்பத்தை இழந்து நிற்பது போன்ற மனபிம்பம் எனப் பலவிதமான விசித்திர யோசனைகள். இர்மா எனும் பேராற்றல் வான்முட்டும் அலைபோல் எழுந்து வர அதன்முன் அவன் தன் குடும் பத்துடன் நிராதரவாக நிற்பது போலிருந்தது.

இவ்வளவு ஆபத்துக்களோடு குடும்பத்துடன் வீட்டில் இருக்க வேண்டுமா ? எனும் எண்ணம் திடீரென உதித் தது. வரும் சூறாவளி என் வீட்டுக்கும், காட்டுக்கும் வித் தியாசம் பார்க்குமா என்ன ? பாதையில் இருப்பதைத்

துவம்சம் செய்துவிட்டு முன்னேறுவதுதானே அதன் இயல்பு, அது எந்த மனிதரையும் வித்தியாசப்படுத்தி பார்க்கப்போவதில்லையே. நான் கோட்டை போல நம் பிக்கொண்டிருக்கும் இந்த வீடு கைவிடுமா ? இங்கு எது நிரந்தரம். கண்டிப்பாக இந்த வீடு இல்லை. பூமி ? அது கூட சில ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை முதலை கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த சதுப்புநிலம் தானே. முழுவதும் கண்களால் விழுங்க முடியாத வெட்டவெளி தானே. இந்த வீட்டின் காலடி என்பது ஒரு இறந்த நதி ? பச்சைக் காடு ? செத்தொழிந்த முதலைகளின் சாபத் தின் மேல் ?.... அயர்ச்சியாக இருந்தது. எண்ணங்கள் தலைக்குள் தாறுமாறாக இரயில்போல் இரைச்சலிட்டு ஓடிக்கொண்டிருந்தது.

இதுவரை வாங்கிச் சேர்த்த உடமைகளைக் கைவிட்டு குடும்பத்துடன் வெளியேறுவதா ? இல்லை, முரட் டுப் பிடிவாதத்துடன் தங்கி என்ன ஆனாலும் இரண் டில் ஒன்று பார்த்து விடுவதா ? எனும் எண்ணம் அவனை உலுக்கியது. மீள முடியாத ஒரு மாயக்கட்டத் தில் வசமாக சிக்கிவிட்டதாக நொந்துகொண்டான்.

மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. திடீரென அவன் அருகில் படுத்திருந்த கவி சட்டென ஏதோ நினைத்தவளாய் தூக்கத்திலிருந்து திடுக்கென எழுந்து உட்கார்ந்தாள். சுற்றியிருந்த இருளைப் பார்த்துவிட்டு மலங்க மலங்க விழித்தவள் மிரண்டு சன்னதம் வந்தவள் போல் படபடவென படுத்திருந்தவனைத் தட்டி எழுப்பி “அப்பா... நாம சாகபோறமா அப்பா ?” என்று கேட்ட வள் அவன் பதிலுக்கு காத்திராமல் அழத் தொடங்கி னாள். அவள் உடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருந் தது. “அதெல்லாம் ஒன்னுமில்லை. நீ பேசாம படு” என அதட்டுவதைப் போலச் சொல்லி அவளை அணைத்து படுக்கவைத்தான். அவள் நடுக்கத்தைப் போக்குவது

போல அவள் முதுகை மெல்ல நீவிவிட்டான். பாவம் ஏதோ கெட்டக் கனவாயிருக்கும் போல. அதிர்ச்சியாக இருந்தது. தொடர்ச்சியாக இடைவெளி இன்றி இர்மா பற்றி டிவியில் பார்த்திருப்பாள் என நம்பினான்.

அவன் தூக்கம் வராமல் திசை தெரியாத கலம் போலத் தத்தளித்துப் புரண்டான். இதுவரை அவனுள் வீசிக் கொண்டிருந்த புயலோடு, பூகம்பமும் சேர்ந்தது போலி ருந்தது. கிட்டத்தட்ட பித்து பிடித்தது போல் உச்சக்கட்ட விரக்தியில் இருந்த அவனுக்கு அடுத்து என்ன செய் வது எனத் தெளிவாகத் தெரியவில்லை. தன் வாழ்வில் சந்தித்த மிகக் கொடுமையான இரவாக இருக்கும் என நினைத்தான். பிள்ளைகளின் எதிர்காலம், அவன் கண் முன் வந்துபோனது. பாதி போர்த்தியபடி கவி தூங்கியி ருந்தாள். தன் முகத்தை உள்ளங்கைகளில் தாங்கியபடி மலர் போல உறங்கிக் கொண்டிருக்கும் களங்கமில்லாத அவள் முகத்தைப் பார்த்த போது அவனுள் கருணை சுரந்தது. என்னைப் பாதுகாக்க பெற்றவர்கள் இருக்கி றார்கள் எனும் நம்பிக்கை தரும் தைரியத்தில் தானே குழந்தை இப்படி நிம்மதியாகத் தூங்குகிறாள்.

அந்த நிம்மதியை வரும் நாட்களில் தருவேனா என் பதை உறுதியாகச் சொல்ல முடியாதே எனும் கவலை வந்தது. கரும்பலகையில் எழுதி எழுதி அழிப்பது போல தனக்குத் தானே பல கேள்விகளைக் கேட்டு பின் விடையால் அழித்துக் கொண்டான். தனக்குத் தானே பல தர்க்கங்கள் செய்துகொண்டான். அந்தத் தரு ணத்தில் நிம்மதி எனும் சொல்லே மிகவும் கனத்தது. மனம் அமைதியின்றி பெருங்காற்றில் சிக்கிய சிறகு போல் இலக்கின்றி அல்லாடியது. ஹரிக்கேனுக்கு பின் னால் பிள்ளைகளுக்கு இருக்க நல்ல இடம், உடை ஏன் அடுத்த வேளை பசிக்கு உணவு தரமுடியுமா ? எனும் ஆதாரக் கேள்வி முகத்தில் அறைந்தது. நேற்றைய

எவாக்குவேசன் ஷெல்ட்டர் அனுபவமும் அவனுக்கு நம்பிக்கை தருவதாக இல்லை. அங்கே அகதியாக பல நூறு பேரோடு எத்தனை நாள் குடும்பத்தோடு தங்க வேண்டியிருக்குமோ?.
பரணி குடும்பத்தோடு வரிசையில் நின்று சாப்பாட்டுக்கு கையேந்துவது போலக் கற்பனை செய்தான். பல நூறு பேர் ஒன்றாகத் தங்கும் இடத்தில் அடிப்படை வசதி களை எதிர்பார்க்க முடியுமா. வெள்ளத்தால் சுகாதாரம் சீர்கெட்டு தொற்று நோய் வர வாய்ப்பிருக்கிறதே. பல கேள்விகள் அவனைத் தூங்கவிடாமல் துரத்தின. மனம் சுத்தமாக அமைதியிழந்திருந்தது. மீண்டும் மீண்டும் இப்படி ஆகுமா அப்படி ஆகுமா எனும் எண்ணங்களே மனதில் தொடர்ந்து ஓடியது.

தனிப்பட்ட முறையில் போராட்ட குணத்தால் சண்டை போட்டாவது எதையும் முயன்று பெறுபவனாக இருக் கலாம். அதற்காக தேவையில்லாமல் பிள்ளைகளைக் கஷ்டப்படுத்துகிறேனோ ? என நினைத்தான். வாழ வேண்டிய அவர்களின் கனவுகளைக் கலைப்பதற்கு தனக்கு எந்தவொரு தார்மீக உரிமையும் இருப்பதாக அவனுக்குப் படவில்லை.

'உயிரா...? உடமையா...?' எனும் ஆதாரக் கேள்வி அவன் முன்னால் பிரமாண்டமாய் எழுந்து நின்றது. தன் னைத்தானே காயப்படுத்திக்கொண்டு அதற்குத் தானே மருந்து போட்டுக்கொள்வதுபோல. அவன் தன்னை தானே கேள்வி பதிலால் நிரப்பிக்கொண்டான். தான் ஒரு குழப்பவாதியா ? எனப் பரணிக்குத் தன் மீதே கூட கோபம் வந்தது. அப்போது கவர்னர் சொன்ன செய்தி ஞாபகம் வந்தது. "வீடுகளை வேண்டுமா னால் கட்டிவிடலாம். கவலைப்படவேண்டாம். ஆனால் இழந்த வாழ்வை கட்டமைக்க இயலாது". எனும் அந் தச் செய்தியின் நிஜ ஆழம் புரிந்தது போலிருந்தது.

வெளிநாட்டுக்கு யாரும் சாவதற்காக வருவதில்லையே. மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைத்தாலும் பர வாயில்லை. இதனால் தன் வேலை போனாலும் பர வாயில்லை. தான் வாழ்நாளில் சம்பாதித்தது முழுமை யாக ஒரே நாளில் போனாலும் பரவாயில்லை. ஆனால், அதைவிட குடும்பத்தின் பாதுகாப்பு முக்கியம் என நினைப்பு வந்தது.
அதற்காக எந்தச் சவாலையும் ஏற்கத் துணிந்துவிட் டான். எதையும் இழக்கவும் துணிந்து விட்டான். கர்ப் பிணியான தாரிணியுடன் இந்த முகந்தெரியாத தேசத் திற்கு வந்த முதல்நாளை நினைத்துக் கொண்டான். குடும்பம் உடன் இருக்கும் நம்பிக்கையில் மீண்டும் வாழ்வை விட்ட இடத்தில் தொடங்கலாம் என்று தோன் றியது.

அன்று அலுவலகத்தில் அழுத அனாவின் முகம் நினை வுக்கு வந்தது. பொலிவிழந்த ஒரு வயதான தாய் பற வையின் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரின் பிம்பம் போலிருந்தது. மனதால் சுத்தமாக பலமிழந்திருந் தான். காற்று வெளியேறிய பலூன் போன்ற வெறுமையை உணர்ந்தான்.

மிகக் கொடிய அசம்பாவிதம் தனக்கு நிகழப்போவ தாக நினைத்தான். 'எங்கும் பாதுகாப்பில்லை, வெளி யேறுங்கள், வெளியேறுங்கள், வெளியேறுங்கள்' எனும் பெருங் குரல் மண்டைக்குள் மரணக்கிணறு ஓட்டுவ துபோல் விடாது ஒலித்தது. நேரம் ஆக ஆக அந்த ஓசை கனத்து தாங்கிக்கொள்ள முடியாத வலி தந்தது. உண்மையில் அது மரணபயம். இத்தனை ஆண்டுகால கனவு, ஆசைகள், உறவுகள் என அனைத்தையும் ஒரே நொடியில் இழக்கப்போகிறோம் எனும் பயம். இந்த மொத்த மாநிலமே பாதுகாப்பு இல்லை என்றால் ... சஞ்ச லமாயிருந்தது. பாதுகாப்புக்காக இங்கிருந்து வெளியே

றுபவர்களை நினைத்துப் பார்த்தான். இவர்களில் யாரும் பொழுதுபோக்கிற்காக கொழுத்துப்போய் பயணம் செய் யவில்லை என்பது விளங்கியது. இங்கு சிக்கி சின்னா பின்னமாகாமல் இருக்க உடமைகளை விட்டு உயிர்பி ழைக்கப் போகிறார்கள்.

சரியான முக்கிய முடிவை எடுக்காமல் வாழ்வின் போக் கில் போனால் நிலைமை விபரீதமாகிவிடக் கூடும் என நினைத்தான். இர்மாவின் பாதையில் நான் இருப் பது என்பது ஒரு சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எந்த மாதிரியான முடிவெடுக்கிறேன் என்பது என் கையில் இருக்கிறது. அந்த முடிவை எடுக்காமல் ஏதோ ஒன்று என்னைத் தடுத்துக்கொண்டிருக்கிறது. அது எதுவாக இருந்தாலும் அதை மீறத் துணிந்துவிட் டான். இறுதியாக இர்மாவை வீட்டிலிருந்து எதிர்கொள் வது எனும் முடிவை மாற்றிக்கொள்ள முடிவெடுத்துவிட் டான். குடும்பத்திற்காக எதையும் செய்யத் துணிந்து விட்டான். இது உணர்ச்சி வசப்பட்ட முடிவா இல்லை இருக்கும் எல்லா சாத்தியக் கூறுகளையும் கணக்கில் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானமான முடிவா எனும் கேள்வி எழுந்தபோது, இது அனைத்து சாதக பாதங் களையும் தீர அலசி தீர்மானித்து எடுக்கப்பட்ட இறுதி முடிவு என்று உறுதியாக நம்பினான். ஒரு ஆபத்து எனும் போது அவசரமாக விமானத்தைத் தரையிறக்குவது தானே சரியாக இருக்கமுடியும் என தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டான். குழப்பம் குறைந்து கொஞ்சம் தெளிவு பிறந்தது. மண்டையில் ஓடிய மர ணக்கிணற்றின் ஒலி லேசாக குறைந்தது போலிருந்தது. உயிர்வாழ வேண்டும், பாதுகாப்பாக இருக்க வேண் டும் எனும் உள்ளுணர்வு அவனுள் விழித்துக் கிளர்ந் தெழுந்திருந்தது. வாழும் இடத்தில் ஒரு பிரச்சனை,

நம் உயிருக்கு பாதுகாப்பில்லை எனும் போது, எங்கே போவது ? ஒரு கணம் யோசித்தான்.

அட்லாண்டாவில் இருக்கும் பூபதிக்குப் போன் செய்து பார்க்கலாம். எல்லாம் ஒத்து வந்தாலும். அடுத்து இங்கி ருந்து 1000 கி.மீ. மேல் காரில் குடும்பத்துடன் பயணப் பட வேண்டும் என்பது பெரும் மலைப்பாக இருந்தது. அவனைப்போல எத்தனைப்பேர் இப்படித் தீர்மானிக்கி றார்களோ. போகும் வழியில் இடர்பாடுகள் ,அசம்பாவி தங்கள் எதுவுமின்றி, பெட்ரோல், சாப்பாடு... கிடைத்து அலைக்கழிப்பின்றி எல்லாம் சரியாக நடக்கவேண்டுமே எனும் அடுத்த பயம் வந்தது. இருப்பதை விடுத்து பறப்ப தற்கு ஆசைப்பட்டு இறுதியில் பொசுங்கி விழுந்த கதை யாகிவிடக் கூடாது எனும் தயக்கம் எட்டிப் பார்த்தது.

பிள்ளைகளின் மேலிருந்த பாசம் அவனுடைய மற்ற எல்லா தயக்கங்களையும் முழுமையாகப் பின்னுக்குத் தள்ளியிருந்தது. படுக்கையை விட்டு புதுமனிதனாக எழுந்தவன் போர்வையைச் சத்தமின்றி உதறி மடித்துத் தலையணை மேல் வைத்தான். “போக வேண்டாம், இங் கேயே இருக்கலாம்” என தாரிணி மீண்டும் முரண்டு பிடித்தால், அவளையும் எதிர்க்கத் துணிந்துவிட்டான். தாரிணியைக் கண்களால் தேடினான். மறுமுனையில் அவள் படுத்திருந்த இடம் காலியாக இருந்தது.

# 16

தாரிணி கீழே சோபாவில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தாள். இர்மாவுடன் அவன் மனதுக்குள் ஓயாமல் யுத்தம் செய்து தடுமாறிக்கொண்டிருக்கும் நேரத்தில் வீட்டில் தாரிணி உட்பட மற்றவர்கள் சாதாரணமாக இருப்பது போல உணர்ந்தான். அதுதான் குடும்பத்தலைவனுக்குத் தரப்பட்டிருக்கும் கூடுதல் பொறுப்போ எனும் நினைப்பு வந்தது.

அவளை உடனே எழுப்பி விசயத்தைச் சொல்லி அவனுள் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பைக் குளிர வைக்க மனம் பரபரத்தது. அவளோ இன்னொரு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். மணி பார்த்தான் காலை மணி ஐந்து. வரவேற்பறையில் இருந்த களிமண் பிள்ளையார் கண்ணில்பட்டது.

“பிள்ளையாரைப் பத்து நாளைக்கு மேல வீட்டுல வச்சுக்கக் கூடாது, ஏரி இல்ல குளத்துல கரைக்கனும்” எனச் சொல்லியிருந்தாள். விநாயகர் சதுர்த்திக்கு தன் கையால் செயற்கை களிமண்ணில் செய்திருந்தாள். சரிகை வண்ணம் பூசிய பெருவயிறனின் வெள்ளைத்

தந்தம் அரையிருளில் மின்னியது. கைகளில் ஏந்திக் கொண்டான்.

வெளியே இருள் பிரியவில்லை. மரங்கள் இருளில் உறைந்த மெழுகு பொம்மைகளாக நின்றன. மஞ்சள் ஒளியில் சோகையான சாலைகள் நனைந்துகிடந்தன. வானில் நிலா பொலிந்துகொண்டிருந்தது. சாலையைக் கடந்து எதிரே ஏகாந்தமாய் இருளில் கிடந்த ஏரியை நோக்கி நடந்தான். ஏரி அவன் ஊரில் சிறுவயதில் சாப்பிட்ட ஓவல் வடிவ எவர்சில்வர் தட்டின் வடிவத்தை நினைவூட்டியது. ஏரியில் தண்ணீர் குறைந்து உள்வாங்கிக் கிடந்தது. இறக்கத்தில் நடந்தபோது வெறுங்கால் அதிகாலை புல்வெளியில் பட்டு உடலெங்கும் சிலிர்த்தது. செயற்கைக் களிமண்ணால் நீர்நிலையை அசுத்தம் செய்யும் குற்றவுணர்வு விடைபெற்றிருந்தது. கரையோரம் 'முதலைகள் ஜாக்கிரதை' எனும் அறிவிப்புப் பலகையை உதாசினம் செய்து இறக்கத்தில் நடந்தான்.

சிலையைத் தண்ணீரில் உறங்கவைத்துவிட்டு மேலேறும் போது மேலே நிமிர்ந்து பார்த்தான். நீல இருட்டு. நட்சத்திரங்களை விசிறியடித்திருந்த வானம் மேலிருந்து உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தது. சமயங்களில் பிரமிக்க வைக்கும் இந்த சூன்யவெளியை கண்ணசைக்காமல் பார்த்து கொண்டிருந்தால் மனிதன் எவ்வளவு சிறியவன் என்பதை உணர்த்தும். இன்று இர்மா எனும் பிரளயம் புறப்பட்டு வந்துகொண்டிருக்கும் போது அதற்கு வானம் எந்தவிதத்திலும் தொடர்பில்லாதவன் போல் அமைதியாக கைக்கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது அவனுக்கு விநோதமாக இருந்தது.

எதிரே இருந்த வீடு அரை இருளில் சலனமின்றி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த வெள்ளை யானை போல் தோன்றியது. இதுநாள் வரை இர்மாவை எதிர்

கொள்ளப் போகும் கோட்டை எனத் தான் நம்பியிருந்த வீட்டை எதிரியின் வசம் ஒப்படைத்து தான் தப்பிக்க நினைப்பது துரோகம் எனும் எண்ணம் வந்து கசந்தது. ஆபத்துக் காலத்தில் மாலுமி கப்பலைக் கைவிட்டு ஓடு வது போல் இந்த நகருக்கு ஒரு துயரம் எனும்போது காப்பாற்ற எத்தனிக்காமல் இன்று தப்பிப்பது சரியா என் பது குறித்து அவன் யோசிக்க விரும்பவில்லை.

வீட்டு வாசலில் இருந்த குழாயில் காலை நனைத்தவன் உள்ளே நுழைந்தபடியே அவளைக் கண்களால் தேடி னான். தாரிணி எழுந்திருந்தாள். சோபாவில் காஃபியை பெரிய பீங்கான் குவளையில் உறிஞ்சியபடி ஃபோனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு பக்கவாட்டில் இருந்த இன்னொரு சோபாவில் அமர்ந்தவன் அவளு டைய வெள்ளை நிற இரவு உடையின் நிறம் கண்க ளைப் பறிப்பதாக உணர்ந்தான். இப்படி வழக்கத்திற்கு மாறாக சாதாரணமான விசயங்கள் இன்று அதிமுக்கி யத்துவம் பெறுவதாக நினைத்தான். முதலில் அவளிடம் எங்கிருந்து தொடங்குவது, எப்படித் தொடங்குவது என மனதுக்குள் சஞ்சலப்பட்டான். ஒருவித முன் முடிவுடன் அவளை அணுகுவதற்கும் சற்று தயக்கமாக இருந்தது. மனத்தில் சரி என்று நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பது என்பது வேறு. காரண காரியத்தை விளக்கி அதை மற்றவர்களுக்குப் புரியவைத்து இசைவு பெறு வது என்பது வேறு. அந்த மற்றவர்கள் நெருக்கமானவர் களாக இருக்கும் போது ? சற்று நேரம் பொறுத்து மௌ னத்தின் கனம் தாங்காமல்,

“தாரிணி, நாம பேசாம அட்லாண்டா போயிடலாமா ?” அது கிணற்றில் இருந்து வரும் குரல் போலிருந்தது.

போனில் இருந்து கண்கள் நிமிர்த்தி அவனைப் பார்த்த வள்

“என்ன திடீர்னு ?” என்றாள் சாதாரணமாக,

பீடிகையுடன் தொடங்கிய அவனுக்கு உரையாடலுக் கான முதல் நூல் கிடைத்தது போலிருந்தது.

“இன்னைக்கு வெள்ளிக்கிழமை. காலையில வந்த அப் டேட் பாத்தியா. நாம இருக்குற கிழக்குப் பக்கம்தான் வருதாம். இப்பவும் கேட்டகிரி-ஐஞ்சுதான்னு சொல் றாங்க”

அவனைச் சமாதனப்படுத்தும் தொனியில் “அதெல்லாம் ஒன்னும் ஆகாது” என்றாள்.

“நாம அப்படிதான் நம்புறோம், ஆனால், என்ன நடக் கும்னு யாருக்குத் தெரியும்” என்றான் சற்று அழுத்தமாக,

அவன் கண்களைப் படிக்க முயல்பவள் போலச் சற்று உற்றுப் பார்த்தவள், விடாமல்

“இங்கதான் இவ்வளவு பேர் இருக்குறாங்களே அப்புறம் என்ன ?”என்றாள்.

“கிளம்பு” என்றால் தாரிணி கேள்விகளின்றி “சரி” என்று மறுபேச்சின்றி கிளம்புபவள் அல்ல என்பதை அவன் புரிந்தே வைத்திருந்தான். அதனால், மனதள வில் அவன் ஒரு நீண்ட உரையாடலுக்குத் தயாராகவே இருந்தான். ஆனால், நம்பிக்கை இருந்தது.

“எல்லாரும் செய்றாங்கன்னா, அது சரியா இருக்க னும்னு அர்த்தமில்லையே” என்றான் தர்க்கம் செய்வது போல.

அவளிடம் தர்க்கம் செய்வதுமாதிரி கேள்வி கேட்டானே ஒழிய, அவள் அதை எப்படி எதிர்கொள்வாள் எனும் யோசனை அவனுள் ஓடியது.

"ஏதாவது பிரச்சனைன்னா, வந்து ஹெல்ப் செய்ய மாட்டாங்களா என்ன ?" அவள் எதிர்க்கேள்வி கேட்டாள்.

ஹரிக்கேன் சமயத்தில் அமெரிக்காவின் அவசர சேவை எண் 911 உள்பட எந்த அவசரத்தேவைக்கும் உதவிக்கு ஆட்களை எதிர்பார்த்து ஏமாற வேண்டாம் என அறிவித்திருந்ததை அவளுக்கு நினைவூட்டினான். வெளியே அவள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னானே தவிர உள்ளுக்குள் இர்மா பற்றிய சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது.

"நான் பக்கத்துல இருக்குற பிரெண்ட்ஸ சொன்னேன்" என்றாள்.

தாரிணி வேறுவழியில்லாமல் போனால் யாராவது நண்பர்களின் வீட்டில் ஒன்றாக தங்கும் மனநிலையில் இருந்தாள். ஆனால், இதுவரை அப்படி யாரும் தன்னைப் பொருட்படுத்தி வற்புறுத்தவில்லையே எனும் லேசான மனத்தாங்கல் உள்ளுக்குள் இருக்கத்தான் செய்தது. ஏனோ பரணிக்கு மனம் இங்கே யாருடனும் ஒன்றாக தங்கும் வாய்ப்பைப் பயன்படுத்த விரும்பவில்லை. அவனுடைய தனித்துவமான குணம் யாரிடமும் இனம்சேர மறுத்தது.

"பிரெண்ட்ஸ் ஹெல்ப் செய்வாங்களா இல்லையான்றது முக்கியம் இல்லை. முதல்ல நமக்கு இது எவ்வளவு பெரிய பிரச்சனையாகும்னு தெரியலை. ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அவங்க குடும்பத்தை முதல்ல பாத்துகிறதுதானே சரி. சொந்தக் குடும்பத்தை விட்டுட்டு நமக்கு சேவகம் செய்யனும்னு எதிர்பார்க்கிறதும் நியாயம் இல்லையே" என்றான் தணிவாக

"அவங்களை எல்லாம் விட்டுட்டு நாம தனியா போறது நல்லாவா இருக்கும்" என்றாள் விடாமல்

“மத்தவங்கள போக வேணாம்னு நாம தடுக்கலையே. நமக்கு சரின்னு தோன்றதை நாம செய்றோம்” என்றவன் கடைசி நேரத்தில் புயல் எதிர்பாராமல் மாயம் செய்ததுபோல அடங்கிப் போனால் அவர்கள் மற்றவர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாக வேண்டியிருக்குமே எனும் அவளுடைய சஞ்சலத்தையும் போக்கினான். பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தவள் மேலே தொடர்ந்து சொல் என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“இந்த அரசாங்கத்தை, அவங்களோட அனுபவத்தையும் மதிக்கனும்னு தோணுது. இவங்க எத்தனை ஹரிக்கேன்களைப் பாத்திருப்பாங்க, எத்தனை மில்லியன் மக்களோட சிக்கலை சரி செஞ்சிருப்பாங்க. அவங்க இவ்வளவு சொன்ன பின்னாடியும் நாம அலட்சியமா இருந்துட்டு பின்னாடி வருத்தப்படக் கூடாது இல்லை.” எனக் கோர்வையாகச் சொல்லி முடித்தான்.

“அப்ப வீடு ?”

“நடக்குறது நடக்கட்டும்னு இருக்கவேண்டியதுதான். வேற வழி”

கொஞ்சம் குரலை உயர்த்தி “வெளியூர் போறதா இருந்தா இரண்டு நாளைக்கு முன்னாடியே போயிருக்கலாமே. இப்ப கடைசி நேரத்துல வந்து கிளம்புன்னா..” என்றவளின் குரலில் கோபம் இருந்தது.

பதிலுக்குக் குரலை உயர்த்தாமல், மனசைப் புண்படுத்தாமல் சொல்லவந்த விசயத்தைப் பக்குவமாகச் சொல்லி அவளிடம் சம்மதம் வாங்க வேண்டும் எனும் முனைப்புடன்,

“இவ்வளவு பிரச்சனை வரும்னு யாருக்குத் தெரியும். பிரச்சனை அப்படினா பதுங்குனு சொல்ல வரலை, இப்

போதைக்கு கையில் இருக்குற விசயங்களை வைச்சு பாக்குறப்ப இந்த முடிவு சரியானதுன்னு எனக்குத் தோணுது அவ்வளவுதான்” என்றான்.

“பசங்க இதுவரை பெரிய ஹரிக்கேன் எதையும் பாத்த தில்லையே” என்றவளின் குரலில் ஏக்கம் தொனித்தது.

“அவங்க இதுவரை பாக்கலை அப்படிங்கறதுனால, அது நல்லதுனு அர்த்தமில்லையே”

சற்று யோசித்தவள், “சரி போகணுங்கிறீங்களே . இரண்டு பசங்களை வைச்சுகிட்டு அவ்வளவு தூரம் தனியாக ஓட்டிக்கிட்டு போகணுமே”என்றவளின் குர லில் கவலையின் அழுத்தம் இருந்தது.

“அப்படியே போனாலும், போற வழியில டிராபிக்ல, பிள் ளைகளோட, வெயில்ல, நடு ரோட்ல நிக்க வேண்டி இருக்குமே”

அவளைச் சம்மதிக்க வைத்துவிடலாம் எனும் நம் பிக்கை கீற்று லேசாக தென்பட்டது.

“இங்க இருந்து காத்து, வெள்ளம், ஷெல்ட்டர்னு பிள் ளைங்களோட
கஷ்டப்படுறத்துக்கு அது பராவாயில்லைன்னு தோணுது. நாம இரண்டு பேரும் மாறி மாறி ஓட்டி சாமா ளிச்சிட்டு போயிட மாட்டோமா என்ன ?” என்றான்

“ம். எல்லாம் சரி. உங்க ஆபிசு ? அதானே பெரிய பிரச் சனை. அங்கேயிருந்து ஒர்க் பண்ணலாமா ?, வேலை யில சேரும்போது ஏதோ காண்ட்ராக்ட் சைன் பண்ணி ருக்கேன்னு சொன்னீங்க. எதுக்கும் மோனிகா கிட்ட பேசி பாத்தா என்ன ? ”

அவள் ஒத்துக்கொள்ளும் மனநிலையில் இருக்கிறாள் என்பது அவனுக்குக் கூடுதல் திடம் தந்திருந்தது. அவனுடைய தயக்கக் குமிழியை அவள் ஊதி உடைத்த தைரியத்தில்

“செய்யலாமான்னு தெரியல. ஆனாலும், யார்கிட்டயும் நான் பர்மிசன்னு கேட்டு நிக்கப்போறதில்லை. ஃபிளாரிடாவுல எங்க இருந்தாலும் ஆபத்துன்னா என்னதான் செய்றது சொல்லு” என்றவன் விடாமல் என்ன ஆனாலும் நாம இங்கிருந்து கிளம்பலாம், குடும்பத்தோட அங்க பத்திரமாக போய் இருக்குற வழிய பார்ப்போம். இங்கயே முழிச்சு முழிச்சுகிட்டு இருந்து தாமதப்படுத்துற நேரம்தான் வேஸ்ட்

இந்தச் சூழலில் வீட்டிலேயே தங்கி இருந்து மின்சாரம் இல்லாது போனால் நிலைமை இன்னமும் சிக்கலாகும் என்பது பற்றியும் யோசித்தார்கள். வீட்டில், அடுப்பில் இருந்து இண்டெர்நெட், தண்ணீர் எனச் சகலமும் மின்சாரம். அது இல்லாமல் வீட்டில் இருந்துகொண்டு ஆபிஸ் வேலையையும் செய்யாமல் பிள்ளைகளுடன் திண்டாடத்தான் வேண்டுமா என்று கேட்டபோது அவள் யோசித்தாள்.

“இப்போ போனால், என்னைக்குத் திரும்புறது ?”

“ஹரிக்கேனுக்கு அப்புறம், ஹைவேஸ் கிளியர் ஆன உடனே”

“அதுக்கு எவ்வளவு நாளாகுமோ ”தயங்கினாள்.

“அதெல்லாம் கவலப்படாத. அமெரிக்காவோட முதுகெலும்பே ஹைவேஸ் தானே, அது இல்லாமலா. முதல்ல அதைத்தான் கிளியர் பண்ணுவாங்க” அவன் நம்பிக்கை தந்தான்.

“சரி, போற வழியில ஹைய்வேஸ்ல முக்கியமா கேஸ் கிடைக்கனுமே” அவள் கண்களில் கூர்மையும், குரலில் அக்கறையும் இருந்தது

திசை தெரியாத ஒரு தூர தேசத்தைத் தேடி ஏதோ ஒரு குருட்டு தைரியத்தில் புறப்படும் மாலுமியின் மனநிலையில் இருந்த அவன் “புரியுது. கிடைக்கும்னு சொல்றாங்க. போய் தான் பார்க்கணும்” என்றான்.

“அப்படி கஷ்டபட்டு போகணுமா என்ன ?”மீண்டும் தயக்கம்

அவளை எப்படியாவது சமாதானம் செய்துவிடுவது எனும் நம்பிக்கை பொய்யாகும் முன் தனது கடைசி அஸ்திரமாக உண்மையைச் சொல்லிவிடுவது என முடிவெடுத்து, அவள் கண்களை நெருக்கத்தில் சந்தித்து...

“தெரியல தாரிணி, ஐ ஹெவ் அ பேடு (bad) ஃபீலிங் அபட் திஸ். ஏதோ ஒன்னு உள்ளுக்குள்ள ரொம்ப உறுத்தலாவே இருக்குது. கட் பீஃல்னு சொல்லுவாங்க இல்ல அதுமாதிரி ஏதோ ஒன்னு. கண்ணுக்குள்ள கூரான இரும்புத்தூள் விழுந்த மாதிரி இருக்குது. நம்பளால இங்க நிம்மதியா இருக்க முடியும்னு தோனல” என்றான் மெல்லிய குரலில்.

“ம்” எனச் சற்று பெருமூச்சோடு எழுந்தவள் பதிலேதும் சொல்லாமல், யோசனையோடு கிச்சனை நோக்கி நடந்தாள். முதல்முறை காதலைச் சொன்னதுபோல ஒரு வித படபடப்போடும், எதிர்பார்ப்போடும் அவள் போன திசையையே பார்த்திருந்தான்.

அவள் கையில் இருந்த காஃபி குவளையைக் கிச்சன் சிங்கில் வைத்துவிட்டு தண்ணீர் குழாயைத் திறந்தபடி,

“சரி, சாமான்களை எல்லாம் எடுத்துவைச்சுட்டு சீக்கிரம் கிளம்பர வேலையைப் பாக்கலாம்” என்றாள் முடிவாய்.

காஃபி குவளையில் விழுந்த நீர் நிறைந்து நுரைத்துப் பொங்கி வழிந்தோடியது.

# 17

தாரிணி சரி கிளம்புவோம் எனச் சொன்னதும் அவனுக்குக் கூடுதல் தெம்போடு அடுத்து செய்யவேண்டியது பற்றிய ஒரு தெளிவு வந்தது. ஊருக்கு பிள்ளைகளோடு நல்லபடியாக போய்சேருவது போல மனக்கண்ணில் காட்சிபடுத்திப் பார்த்தான். திடமனதோடு எழுந்தவன் முதல் வேலையாக டிவியை நிறுத்தினான்.

பின் அட்லாண்டாவில் இருக்கும் பூபதிக்கு போன் செய்தான். பூபதி அவனுக்கு பதினைந்து வருட நெருங்கிய நண்பன். இருவருமாக இந்தியாவில் ஒன்றாக வேலை செய்திருக்கிறார்கள். வா, போ எனப் பேசும் அளவுக்கு நெருக்கம். இருவரும் ஒன்றாக ஊரில் சுற்றாத இடமில்லை. ஆழ்வார்ப்பேட்டையில் வசித்த நடிகர் கமல் பிரியாணியை விரும்பி சாப்பிடுகிற இடம் சாம்கோ ஹோட்டல் என்று அறிமுகம் செய்து வைத்ததில் இருந்து பொன்னுசாமி ஹோட்டலில் கிடைக்கும் சைவ உணவுக்குத் தனிருசி எனக் கண்டுபிடித்துச் சொன்னது வரை சென்னை நளபாகத்தைக் கையில் வைத்திருந்தான். ஹோட்டல்கள் என்றில்லை சென்னையில்

பிறந்து வளர்ந்த அவனுக்கு சென்னையில் தெரியாத இடமில்லை. குறிப்பாக சினிமா தியேட்டர்கள். மவுண்ட் ரோட்டில் இருந்த இப்போது இடிக்கப்பட்டுவிட்ட வெலிங்டன், சஃபையர் போன்ற பல தியேட்டர்களில் தான் படம் பார்த்த வருடம், யாரோடு போனான், படம் பார்க்கும்போது நடந்த சுவையான சம்பவம் எனச் சக லமான பழைய மெட்ராஸ் கதைகளை நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருப்பான்.

அமெரிக்கக் குடிமகனாகி விட்ட அவனுக்கு இப் போது சென்னையில் புதிதாக வந்திருக்கும் எக்ஸ்பி ரஸ் அவென்யூ, சிட்டி சென்டர் மால்கள் பிடிப்பதில்லை. என்னதான் வந்தாலும் “பழைய மெட்ராஸ் மாதிரி இல் லபா” என சென்னை தமிழிலேயே அலுத்துக் கொள் வான்.

போனில் முதல் கேள்வியை அவனே நேரடியாகவே கேட்டான்.

“அங்க ஹரிக்கேன் வருது, இங்க வந்துடவேண்டியது தானே. நானே பேசனும்னு இருந்தேன்” என்றான் உரி மையாக

பரணி விசயத்தைச் சொன்னான்.

“தாராளமா கிளம்பி வாங்க. இதுக்கெல்லாம் எதுக்கு கேக்குற.எங்களோட புதுவீட்டை பாக்கதான உங்கள ரொம்ப நாளா கூப்பிடுறேனே. ஒருவாரம் தங்குறது மாதிரி வாங்க.
வர்ற வழியெல்லாம் ஒரே டிராபிக்கா இருக்கும் பாத்து பத்திரம்பா”. அதில் இருந்த அக்கறை உண்மையானது என்பதைக் குரல் சொன்னது.

கூடுதல் சக்தி வந்தது போலிருந்தது. பின் வேலைகள் துரிதகதியில் நடந்தன. தாரிணியும் அவனும் ஆளுக் கொரு வேலையாக பிரித்துக் கொண்டார்கள். அவள் குளிக்க போனாள். அவன் காரை கராஜில் இருந்து எடுத்து டிரைவ் வேயில் திருப்பி நிறுத்தி வைத்து சாமான்கள் ஏற்ற வசதியாக டிரங்கைத் திறந்து வைத் தான்.

அடுத்து மூன்று நாட்களுக்குத் தேவையான மாற் றுத் துணிமணிகளை ஒரு பெட்டியில் எடுத்துவைத் துக் கொண்டிருந்தான். "பசங்கல இன்னமும் எழுப் பலை" என்றபடி குளியல் அறையில் இருந்து வந்தவள் ஈரத் துண்டைத் தலையில் சுற்றி முடியைக் கொண்டை போட்டிருந்தாள்.

போய் பிள்ளைகளை எழுப்பிவிட்டான். ஊரை விட்டு கிளம்பவேண்டும் என்றதும் முதலில் சுணக்கம் காட்டிய வர்கள் பின் "அனன்யா (பூபதியின் எட்டு வயது மகள்) வீட்டுக்கு அட்லாண்டா போறோம்" என்றதும் அவர் களுக்கு உற்சாகம் தொற்றிக்கொண்டது. "ஹையா !" எனச் சொல்லியபடி ஆளுக்கொரு பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டார்கள். இத்தனைக்கும் அவர்கள் மிஞ் சிப் போனால் ஒருவாரம்தான் சேர்ந்து விளையாடி இருப்பார்கள்.

அலுவலக ஞாபகம் வந்தது. இந்தச் சூழலில் மோனி காவுக்கு போன் செய்து, அவள் மறுத்து... அந்தச் சிக் கலுக்குள் போக விருப்பமின்றி காரில் பயணித்து அட் லாண்டா போவதாக மோனிகாவுக்கும், மற்றவர்களுக் கும் இமெயில் அனுப்பினான். தேவைப்பட்டால் ஃபோ னில் தொடர்பு கொள்ள எழுதியிருந்தான். கவர்னர் சொன்ன இரண்டு 'ஆப்' (app) களை போனில் தரவிறக் கம் செய்துகொண்டான்.

ரூமின் உள்ளே எட்டிப்பார்த்த தாரிணி, “வெளியில இருக்குற பூந்தொட்டியெல்லாம் ?”என்றாள் கேள்வி யாக.

பின் தொட்டி செடிகளைக் கார் கராஜில் வைப்பது என் றும் புயலின் போது காரை வெளியே அதுவும் மரத்த டியில் விடுவது பாதுகாப்பில்லை என்பதால் யாராவது தெரிந்தவர் வீட்டில் விடுவது என்றும் முடிவெடுத்தார் கள்.

வெளியே கிடந்த பிரம்பு நாற்காலிகள், தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் குழாய்கள், பூந்தொட்டிகள் போன்ற சாமான் களை இருவருமாக சேர்ந்துத் தூக்கி உள்ளே வைத் தார்கள். முன் கதவில் தொங்கிய அலங்கார அட்டை, வாசலில் கிடந்த மிதியடி, செக்யூரிட்டி சைன் போர்ட் என எளிதில் காற்றில் பறக்கும் பொருட்களை அப்புறப்படுத் தினார்கள். உதவிக்குப் பிள்ளைகளும் உடன் சேர்ந்து கொண்டார்கள். கவி செம்பருத்தி பூவை விட அளவில் சின்னதாக இருந்த தனது பிங்க் நிற அலங்கார கள் ளிச்செடி தொட்டியை ஜாக்கிரதையாக பத்திரப்படுத்தி னாள். கார் கராஜ் நிரம்பியது.

இந்தியாவைப் போலத் தங்கநகைகள், பட்டுப்புடவை கள் போன்ற சமாச்சாரங்களை இங்கே உபயோகப்ப டுத்தும் சந்தர்ப்பம் அவர்களுக்கு பெரும்பாலும் அமை வதில்லை. அவர்கள் இருக்கும் பகுதியில் இந்தியர் களும் குறைவு. அப்படியே சந்தர்ப்பம் அமைந்தாலும் கண்ணை உறுத்தாத நகைகள் போதுமானது என்ப தால் அவர்கள் கைவசம் அதிக நகைகள் இல்லை. அதை வங்கி லாக்கரில் வைப்பது என்றும், பாஸ்போர்ட் போன்ற முக்கிய தஸ்தாவேஜுகளைத் தண்ணீரில் சேத மாகதவாறு பாலித்தீன் பைகளில் சுற்றி கையில் எடுத் துக் கொள்வது எனத் தீர்மானித்தார்கள்.

“பேங்கிற்கு போயிட்டு வந்துடுங்க. நாம கிளம்பறோம்னு பக்கத்து வீட்டுல சொல்லிவைக்கிறேன்” என்றாள்.

வங்கியில் வழக்கம் போல் கூட்டமில்லை. அவனது வலது கை விரல்களின் கைரேகைகளை சுத்தமாக ஆராய்ச்சி செய்து திருப்தி அடைந்த செக்யூரிட்டி சிஸ் டம் லேசான சிணுங்கலுடன் உள்ளே அனுமதித்தது. அனைத்திலும் பிரமாண்டத்தைக் காட்டும் தேசத்தில் லாக்கர் அறை சிறியதாகத் தோன்றியது. உள்ளே வரி சையாக உலோக பெட்டிகள். நகைகளை வைத்து விட்டு வெளியே வரும்போது “இந்த லாக்கர் இர்மா வைத் தாங்குமா” எனும் சந்தேகம் திடீரென முளைத் தது. லாக்கர் அறையின் உலோகக் கதவை கவனித் தான். சுமார் ஓர் அடி அகலத்தில் உறுதியாக தெரிந் தது. தாங்கும் என்று நம்பினான். தாங்க வேண்டும் என மனதார விரும்பினான். போகும் வரை கைச்செலவுக்கு பச்சை நோட்டாக இருந்தால் வசதி என நினைத்து 200 டாலரைக் கவுண்டரில் வாங்கிக் கொண்டான்.

பாக்கெட்டில் அந்தத் தொகை என்பது கொஞ்சம் அதி கம் தான். பணப் பரிமாற்றம் பெரும்பாலும் பிளாஸ்டிக் அட்டை வழியாக என்பதால் ஒருவர் பாக்கெட்டில் இரு பது டாலர் இருந்தால் அதுவே பெரிய விசயம்.

தாரிணி வீட்டு வாசலில் நின்றபடி அடுத்தவீட்டுப்பெண் மணியிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அறு பது வயதிருக்கலாம். ஃபிளாரிடாவில் பிறந்து வளர்ந் தேன் எனச் சொல்லும் அவளின் பெற்றோர்கள் கியூபப் புரட்சிக்கு பின் அங்கிருந்து தப்பி இங்கு வந்து தஞ்சம் புகுந்தவர்கள். தென் அமெரிக்காவில் இருந்து வரும் தொழிலாளர்களுக்கு ஆங்கிலம் கற்றுத் தரும் கன்ஸல் டன்ட் வேலை. தேங்க்ஸ் கிவிங் போன்ற நல்ல நாளில் அவளுடைய மகன் போலிருக்கும் ஒரு இளைஞ

னின் தலையைப் பார்த்திருக்கிறான். மற்றபடி அவ்வளவு பெரிய வீட்டில் தனியாகதான் வசிக்கிறாள். தொன்னூறு வயதைக்கடந்த முதியவர்கள் கூட பிறர் உதவியின்றி தனியாக வீடுகளில் வாழ்வதும் சொந்தமாக காரில் கடை கன்னிகளுக்குப் போய் வருவதும் இங்குச் சாதார ணம்தான்.

அவள் கையில் பிடித்திருந்த குட்டி நாய் தாரிணியின் கால்களை விடாமல் ஐஸ்கீரிமை நக்குவதுபோல நாக் கைச் சுழற்றி நக்கிக் கொண்டிருந்தது. இன்றும் தனது நாய் புராணத்தைத் தொடங்கிவிட்டாள். ஹரிக்கேன் போன்ற இயற்கைச் சீற்றங்கள் வருவதை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் சக்தி நாய்களுக்கு உண்டு என்றாள். அதுபோன்ற சமயங்களில் அவளது நாய் ஊளையிட்ட படி, நிலையில்லாமல், பயத்தோடு காலை சுற்றிச் சுற்றி வருமாம். “ரொம்ப தொந்தரவு கொடுத்தால் ஊசி போடு வேன் ” என்றாள். அதிர்ச்சியோடு பார்த்த எங்களிடம், “மயக்க ஊசி தான் , பயப்பட தேவையில்லை” என்ற வள், “நீங்க கிளம்ப முடிவெடுத்தது குட் சாய்ஸ், பசங்கல வச்சிகிட்டு இங்க சிரமம் தான்”.

“நான் உங்க வீட்டு மேல ஒரு கண்ணு வைச்சுகிறேன். கவலைப் படாதீங்க” என்று உறுதியளித்தவள், போன் நம்பரை வாங்கிக் கொண்டாள்.

எதிர் வீட்டில் வசிக்கும் போலீஸ்காரரும், தன் பங்கிற்கு அவனிடம் தன்னுடைய விசிட்டிங் கார்டைக் கொடுத்து விட்டு விடைபெற்றார். ஒரு ஆபத்து என வரும்போது அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் பெரிய பழக்கம் இல் லாவிட்டாலும் தனக்கு உதவ நினைப்பதாக எண்ணி னான்.

அதற்கு நேர்மாறாக வீட்டில் இறுக்கமும், வெறுமையும் விரவிக் கிடந்தது. மாடிக்கு வந்தான். பர்னிச்சர்களா

லும், தட்டுமுட்டுச் சாமான்களாலும் நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கும் வீட்டில் இருந்து முக்கியமானதை மட்டும் தேர்ந்தெடுத்து ஒரு பெட்டியில் நிரப்பு எனும் சவாலை தாரிணி செய்து முடித்திருந்தாள். போட்டோ ஆல்பங்கள், புதிதாக வாங்கிய துணிமணிகளை மட்டும் இரண்டு பெட்டிகளில் போட்டு மாடியில் ஒரு ரூமில் சேர்த்து வைத்திருந்தாள். வெறும் இரண்டு பெட்டிகளோடு கையில் சொற்ப பணத்தோடு எளிமையாக இந்தத் தேசத்திற்கு வந்த நாளை அவன் நினைத்துக் கொண்டான்.

வீட்டை விட்டு வெளியேறும் போது மின்சாரத்தைத் துண்டிப்பது நல்லது. ஆனால், பால், காய்கறி என எளிதில் கெட்டுப்போகும் சமாச்சாரங்களை பிரிஜில் வைக்க வேண்டியிருந்ததால் அதை அவன் செய்யவில்லை. கராஜில் இருந்த செடிகளைப் பராமரிக்கவும், தொட்டியிலிருந்த மீன்களுக்கு உணவிடவும் வசதியாக வீட்டுச் சாவியை நண்பர் வீட்டில் கொடுத்து வைக்கலாம் என்று தாரிணி யோசனை சொன்னாள். கூடவே அதற்குச் சமாதானம் சொல்வது போல "வீட்டுக்குள் தண்ணீ பூந்தால், எல்லாத்தையும் இல்லாட்டி கூட மாடியில சேர்த்து வச்ச பெட்டிகளை மட்டுமாவது பத்திரமாக எடுத்து வைக்கச் சொல்லனும்ல" என்றாள் வருத்தம் தேய்ந்தக் குரலில். அவளுடைய கண்கள் வெளிச்சொல்ல இயலாத ஒரு பாரத்தைச் சுமந்திருப்பதாக நினைத்தான்.

தண்ணீர் பொதி, பிரட், சிப்ஸ், டார்ச் லைட், மருந்து மாத்திரைகள், முதலுதவி கிட் போன்ற எமர்ஜென்சி பொருட்கள் இருந்த அட்டைப் பெட்டியை அப்படியே எடுத்து காரில் வைத்தான். பிள்ளைகள் பயணத்தில் படிக்க புத்தகங்கள், குறுக்கெழுத்து, ஓவியம், சுடோக்கு (sudoku) புத்தகங்களை ஆளுக்கொரு பைகளில் நிரப்பிக் கொண்டு முதுகில் சுமந்து திரிந்தார்கள்.

“வீட்டுப்பத்திரம் இங்கயே இருக்கு, எடுத்துகல” என மாடியிலிருந்து குரல் கொடுத்தாள். மேலே போனான். கல்லாலும், மண்ணாலும் கட்டி அவர்கள் நினைவுகளால் நிரம்பிய வீட்டை 'வீட்டுப்பத்திரம்' என்று சொல்லி காகிதத்தில் அடைத்து எழுத்துக்களால் நிரப்பியிருந்தார்கள். எடுத்து பத்திரப்படுத்தினான். டிவி, ஹோம் தியேட்டர் போன்ற எலெக்ட்ரானிக் சமாச்சாரங்களின் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டியதையும் நினைவுபடுத்தினாள். இந்த வீடு எனும் உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் அவள் தெரிந்து வைத்திருப்பதாக கருதினான்.

சுற்றி சுற்றி வந்து எதுவும் விடுபடவில்லை என்பதைச் சரிபார்த்துக் கொண்டிருந்தபோது, அம்மு தன்னுடைய ஆளுயர பிஸ்கெட் நிற டெடி பியர் கரடி (teddy bear) பொம்மையைத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு வந்து நின்றாள். ஒருவிதத்தில் அம்முவுக்கு அந்த டெடி பியர் ஒரு சகோதரன்போல. கடந்த ஐந்து ஆண்டுகளாக உடன் வளர்கிறான். அவனுக்குக் கழுத்தில் குளிர் மப்ளர் கட்டிவிடுவது, பரணியின் புதுச்சட்டையை எடுத்து மாட்டிவிட்டு அழகு பார்ப்பது, படுக்கையில் இடம் கொடுத்துச் செல்லம் கொஞ்சுவது....

“என்ன ?”

கரடியை அருகில் நிறுத்தி அணைத்தபடி “மிஸ்டர். டெடி (டெடி பியர்) யும் நம்மளோட அட்லாண்டா வர்ரார்” என்றாள்

சற்று கடுமையை வரவழைத்துக் கொண்டு, “என்னது, நம்மளோடயா. பொம்மைக்கெல்லாம் காருல இடமில்லை”

“ஆங்” எனச் சிணுங்கியவளின் முகம் சட்டென வாடியது

“அவ் கேன் வி, லீவ் டெடி அலோன் ?” (எப்படி டெடிய இங்க தனியா விட்டுட்டு வர்ரது ? ) அவள் தொண்டை கட்டி குரல் கம்மியது

“இட் இஸ் ஓகே” என்றபடி அவள் தலையைக் கோதி விட்டான்.

ஆனால், அவளோ “ நாம மட்டும் போறோமே ? இர்மா வர்தால டெடி இங்க பாதுகாப்பா இருக்காது. அது நியாயமில்லை” எனச் சொல்லி வாதிடும் மனநிலை யில் அவள் இருந்தாள். நாம் வாடிய பயிருக்கு வாடிய பரம்பரையல்லவா ? ஒரு பொம்மைக்காகக் கண்ணீ ரைக் கோத்து வைத்திருக்கும் அவளுக்காக அழுவதா இல்லை பரிதாபப்படுவதா எனத் தெரியவில்லை. அரு கில் சென்று அவளைப் பொம்மையுடன் சேர்த்து மெல்ல அணைத்து கொண்டான். அன்பு அவள் விரல்களின் வழி கசிந்தோடியது. கரடி பொம்மையின் ஸ்பரிசமும் சூடாயிருந்தது. அந்தக் கரடி பொம்மை இப்போது அவ னுக்கும் மிஸ்டர் டெடியாகி இருந்தார்.

பொம்மையைத் தாரிணியின் காரில் அமரவைத்து நண் பர் வீட்டு கார் கராஜில் பார்க் செய்யலாம் என்றவன். அவளைச் சமாதானம் செய்யும் வகையில் “ஹி வில் பி சேஃப் தேர். ஓகே” என்றான்

அவனது வாக்குறுதியை நம்பலாமா ? என்பதை உறுதி செய்யும் விதமாக அவன் கண்களை நேராக சந்தித்த வள் பிரிய மனமில்லாமல் “ஓகே” என்றாள் மெலிதாக.

எல்லா சாமான்களையும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு வீட்டைப் பூட்டினான். வெளியில் இருந்து சில நொடிகள் கண்கொட்டாமல் வீட்டைப் உற்றுப் பார்த்தவன், பின் யாரேனும் கவனித்துவிடப் போகிறார்கள் எனும் அவ சரத்தில் வீட்டைப் போட்டோ எடுத்துக் கொண்டான்.

குற்ற உணர்ச்சி மேலிட்டது. இத்தனை நாள், உண்டு, உறங்கிய வீட்டைப் பிரிந்து செல்வது அவனுக்கு என்னவோ போலிருந்தது. ஆபத்தில் பயணிகளைத் தத்தளிக்க வைத்துவிட்டு வேறுவழியின்றி தப்பிக்கும் மாலுமியின் மனநிலை போன்றதொரு கொந்தளிப்பான நிலையில் இருந்தான். வீடு அவனை உற்றுப்பார்ப்பது போலிருந்தது. இந்த வீட்டுக்கு உயிர் என்று ஒன்று இருந்து அது பேச முயன்றால் ஒருவேளை தன்னைத் தடுத்திருக்குமோ என நினைத்தான்.
ஓர் அகதியின் வெளிச்சொல்ல இயலாத வலியை முழுமையாக உணர்ந்தான்.

அவன் செய்கையை அவனாலையே நம்ப முடியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு வரை எது நடந்தாலும் இங்கிருந்து ஒரு கை பார்த்துவிடுவது என்று நினைத்திருந்த அவனது மனது மாறியிருக்கிறது. இல்லை ஏதோ ஒன்று மாற்றி இருக்கிறது. அது எதுவாக இருந்தாலும் நல்லதுக்கானது. அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சரியானது எனத் தன்னுள் சமாதானம் செய்துகொண்டான். தான் எடுத்த முடிவுக்குச் சாதகமாக பல காரணங்களைப் புதிது புதிதாக இனங்கண்டு தனக்குத் தானே ஆறுதல் சொல்லி கொண்டான்.

இரவி வீட்டின் கராஜில் இன்னொரு காரை பார்க் செய்து மூடிவிட்டு வீட்டுச் சாவியை அவரிடம் ஒப்படைத்தான். கிளம்பும்போது அவருடைய முகத்தை உற்றுப்பார்த்து கண்களில் சந்தித்தான். நன்கு பழகிய மனிதர். அடுத்து அவரை எப்போது, எங்கே எந்தச் சூழலில் பார்ப்போம் என்று உறுதியாக சொல்ல இயலாது என்பதைப் பூரணமாக உணர்ந்தவன், அவர் கையைச் சற்று நேரம் கூடுதலாக பற்றிக் கொண்டிருந்தான்.

இரவியின் கண்கள் வழக்கத்திற்கு மாறாக அலைமோதியது. அவருக்கும் அவனை என்றென்றும் பார்க்க முடியாது கூட போகலாம் எனும் எண்ணம் வந்திருக்கலாம். ஆனால், அது பற்றி வெளிப்படையாகக் கேட்கவோ, சொல்லவோ இருவருக்கும் தோன்றவில்லை. உணர்ச்சி மேலிடும் வேளைகளில் நினைத்ததைப் பேச இயலாது வார்த்தைகள் கைவிட்டுவிடுகின்றன. இறுதியாக "குடும்பத்தோடு பத்திரமா இருங்க" என்று மட்டும் சொன்னான்.

கராஜில் பார்க் செய்த காரின் பேசஞ்சர் சீட்டில் தோரணையுடன் அமர்ந்திருந்த மிஸ்டர் டெடி அர்த்தப் புன்னகையுடன் இர்மாவை எதிர்கொள்ளத் தயாரானார். பரணியின் கார் இர்மாவின் எதிர் திசையில் பயணப்பட்டது. டிரைவர் சீட்டில் இருந்த அவனுக்கு முன்னால் மிக நீண்ட பயணம் காத்திருந்தது.

# 18

கார் குடியிருப்பு வளாகங்களைக் கடந்து இடதுபுறம் இருந்த ஃபிளாரிடா அட்லாண்டிக் பல்கலைக் கழக வளாகத்தையும், வலதுபுறமிருந்த கால்ப் விளையாட்டு மைதானத்தையும் கடந்து சில நிமிடங்களில் ஐ-95வ (I-95 N) நெடுஞ்சாலையைத் தொட்டது.

ஐ-95 தெற்கே ஃபிளாரிடாவையும் வடக்கே கனடா வையும் இணைக்கும் வகையில் அட்லாண்டிக் கடற் கரையை ஒட்டினார்போல் நூல் பிடித்து அமைந்தது போலொரு நெடுஞ்சாலை. இதில் இருக்கும் ஐ (I) - மாநிலங்களை இணைக்கும் என்பதைச் சொல்லும் இன்டெர் ஸ்டேட், N வடக்கைக் குறிக்கிறது. அதா வது தெற்கிலிருந்து வடக்கே போகும் நெடுஞ்சாலை ஐ-95வ என்றும் மற்றதை ஐ-95தெ என்கிறார்கள். கிழக் குக் கடற்கரையோரம் மிக நீண்ட இந்தப் பழைய நெடுஞ்சாலை அமெரிக்க வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்கச் சராசரியைவிட மூன்று மடங்கு அதிகமாக அடர்த்தியான மக்கட்தொகை இந்த நெடுஞ் சாலையை ஒட்டிய பகுதிகளில்தான். அதன் பயன்பாடு இலவசம். சுங்கவரி கட்டத் தேவையில்லை என்பதால் ராபர்ட் ஐ-95ஐ எப்போதும் அவனுக்கு பரிந்துரைப்பார்.

ஐ-95யின் இன்னொரு வசதி அதன் எக்ஸிட் எனும் வெளியேறும் பாதை. அதன் ஒவ்வொரு மைலுக்கும் ஓர் எக்ஸிட் உண்டு. அதனால் வழியில் ஏதேனும் பிரச் சனை என்றால் நெடுஞ்சாலையை விட்டு எளிதில் வெளியேறி விடலாம். அந்த முன்னேற்பாட்டோடு தான் அவன் இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தான்.

வெயில் சுளீரென அடித்தது. பொறுப்பை நெஞ்சில் சுமந்த நினைவுகளோடு பொறுமையாகவே காரைச் செலுத்தினான். வலதுபுறம் முன் சீட்டில் அமர்ந்தி ருந்த தாரிணி குளிர்க் கண்ணாடியை ஹேண்ட் பேகில் இருந்து எடுத்து மாட்டிக் கொண்டவள், அவனது போனில் அட்லாண்டா முகவரியை டைப்செய்து காரு டன் இணைத்தாள். சுமார் 1000 கி.மீ. தூரம் போக வேண்டியிருந்தது. ஜிபிஎஸ் இரவு எட்டு மணி வாக்கில் ஊர் போய்ச் சேரலாம் எனக் கணித்தாலும், அது அவ்

வளவு எளிதான வேலையாக இருக்கப்போவதில்லை என்பதை அவன் உள்மனம் சொன்னது.

இர்மாவை எதிர்கொள்ள நெடுஞ்சாலையும் தயாராகிக் கொண்டிருந்தது. குறிப்பாக சாலையோர விளக்குகள். சுமார் நூறு அடி உயர ராட்சத உலோக கம்பங்கள். துக்கம் அனுஷ்டிக்கக் கொடி மரத்தின் கொடியை கீழே இறக்கிக் கட்டுவது போல கம்பங்களில் இருந்த விளக் குகளை ஒரு கொத்தாகக் கீழே இறக்கியிருந்தார்கள். இருளில் வெளிச்சம் பட்டால் பிரதிபலிக்கும் வெளிர் பச்சை மேற்சட்டை அணிந்த சாலை பணியாளர் கள் வேலைக்காக ஓரங்களில் வைத்திருந்த தற்காலிக தடுப்புகள், தளவாடச் சாமான்களை அவசரமாக அகற் றிக் கொண்டிருந்தார்கள்.

“அட்லாண்டா போறதை மத்தவங்களுக்குச் சொல்லி டுங்க” என்றாள் தாரிணி. வாட்ஸ்-ஆப்ல் செய்தி அனுப் பினான். நல்ல முடிவு என வாழ்த்துகள் வந்து குவிந் தன. அப்போது போனில் பல் டாக்டரிடமிருந்து வந்தி ருந்த வாய்ஸ்மெயிலைக் கவனித்தான். உண்மையான பெண் குரல். நல்லவேளை, அது இன்னமும் இயந்திர மாகவில்லை. இர்மாவை முன்னிட்டு அவனுக்கு இன்று முடிவாகி இருந்த அப்பாயிண்ட்மெண்டை ரத்து செய்வ தாகச் சொல்லியிருந்தாள்.

பின் இருக்கையில் பிள்ளைகள் ஆளுக்கொரு புத்தகத் தில் மூழ்கினார்கள். புயலுக்கு முன் அமைதி எனும் நிம் மதி இருந்தாலும். இந்த நீண்ட பயணத்தில் பிள்ளைகள் இடைஞ்சல் தராமல், குறிப்பாக அம்மு வழியில் வாந்தி எதுவும் எடுக்காமல் இருக்க வேண்டுமே என்று மனதில் நினைத்தபடி சாலையை நோட்டம் விட்டான்.

அதிகபட்ச வேகம் எழுபது மைல்கள் என்பதால் சின் னதும் பெரியதுமாக பலதரப்பட்ட கார்கள் வேகமா

கப் பறந்து கொண்டிருந்தன. ரப்பர் டயர்கள் காங்கிரீட் சாலைகளில் எழுப்பும் 'டப், டப் ' எனும் ஓசை ஓயா மல் கேட்கத் தொடங்கியது. அது நம்மூர் மாவுமில்க ளில் ஓட்டுபோட்ட கன்வெயர் பெல்டுகள் இயக்கத்தில் இருக்கும்போது வரும் சத்தத்தை அவனுக்கு நினைவு படுத்தியது. காரிலிருந்த ரேடியோவுக்கு உயிரூட்டினான். தொடுதிரை மூலம் இயங்கும் அந்த ரேடியோவில் சிஎன் என்ஜ தேடி வைத்தான்.

தண்ணீரைக் காசு கொடுத்து வாங்குவதைச் சில ஆண் டுகளுக்கு முன் யாரவது சொல்லியிருந்தால் எப்படி நம் பியிருக்க மாட்டோமோ, அதுபோலத்தான் அவன் இப் போது ரேடியோவிற்கு சந்தா கட்டுவதும். சிஎன்என், பிபிசி, என்பிசி போன்ற உலகச் செய்தி நிறுவனங்களை யும் பல நூறு சிறப்புச் சேனல்களையும் தருவதால் சாட்டி லைட் எனும் செயற்கைக்கோள் ரேடியோவிற்கு அவன் சந்தாதாரராகி விட்டான். ஒரு சராசரி அமெரிக்கன் ஒரு வருடத்தில் சராசரியாக 300 மணி நேரங்கள் காரில் செலவு செய்வதால் இதெல்லாம் அவசியமாகின்றது. சின்என்என்-னில் இர்மாவை நேரடி ஒலிபரப்பு செய்து கொண்டிருந்தார்கள்.

'இர்மா தென் ஃபிளாரிடாவை நோக்கி முன்னேறுவ தால் ஹரிக்கேன் வாட்ச் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது ஃபிளாரிடாவின் மொத்த நிலப்பரப்பையும் ஆக்கிரமிப்ப தால் சூறைக்காற்றைத் தவிர்க்க இயலாது. காலை பதி னோரு மணி தகவலின் படி மியாமி நகரை இர்மா நேரடி யாகத் தாக்குகிறது' என்றார்கள்.

அம்மு ஹரிக்கேன் தடத்தைக் கண்காணிக்கும் தாளின் பின்புறத்தில் இருந்த சில கேள்விகளைக் கேட்டாள். "அப்பா, ஹரிக்கேன் வாட்சுக்கும் (hurricane watch)

வார்னிங்கும் (warning) என்ன வித்தியாசம் ? " சொன்னான்.

அது ஹரிக்கேனுக்கு நம்மையும் வீட்டையும் தயார் செய்து ஆயத்தமாவதற்கும் அதைச் செயல்படுத்துவ தற்குமான இடைவெளி தான். அவள் விடாமல் "இப்போ இர்மாவுக்கு பீச்ல, சிகப்பு கொடி ஏத்திருப்பாங்கல்ல. நான் புக்கல படிச்சிருக்கேன். ஷல் வீ கோ அன்டு சீ ?" என்றாள் ஆர்வம் பொங்க,

"கடலை இப்போ போய் பாக்கணுமா ? வழியை மூடி யிருப்பாங்க. சும்மா இரு. முதல்ல அட்லாண்டா போய்ச் சேருவோம்" என அவளை அடக்கினான்.

விரைந்து கொண்டிருந்த கார்கள் லேசாக வேகம் குறைவது போலிருந்தது, மற்ற கார்களில் இருப்பவர் களை இப்போது நெருக்கத்தில் பார்க்கமுடிந்தது. ஒரு காரில் சாமான்களை முழுவதுமாக நிரப்பிக் கடைசி யில் டிரைவரை உள்ளே திணித்திருப்பார்களோ என்று நினைக்கும் படி நிரம்பி வழிந்தது.

"நாம இரண்டு- மூனு நாளைக்கு துணி எடுத்துட்டு வர்றோம். இவங்க மைக்ரோவேவ், பெட்னு வீட்டை காலி பண்ணில கார்ல எடுத்துட்டு வர்றாங்க" என்றாள் தாரிணி ஆதங்கத்துடன்.

"நம்ம வீட்டை காலி செய்ய கார் போதுமா என்ன. டிரக்குல எடுக்கணும். யாருக்கு தெரியும் லோ-லைன் ஏரியாவுல இல்ல மொபைல் ஹோம் (நடமாடும் வீடு) ஆக இருக்கலாம். அதனால கட்டாயமாக வெளியேற சொல்லி இருப்பாங்க" என்றபடி அந்தக் காரை பார்த்தப டியிருந்தான்.

இங்கே கறுப்பர், வெள்ளையர், ஹிஸ்பானிக் என பல் வேறு இனத்தவர்கள் வாழ்ந்தாலும், அவர்களை ஏழை, பணக்காரரர் என்று எளிதாக இருவகைப் படுத்திவிட லாம்.

அவர்களைப் பொறுத்தவரை கார் என்பது ஆடம்பர மானதொரு விசயமல்ல. அத்தியாவசியம். வந்த புதிதில் அவன் கார் இல்லாமல் ரொம்ப அல்லாடியிருக்கிறான். அலுவலகத்துக்கு, மளிகைக் கடைக்கு எனச் சின்ன விசயங்களுக்குக் கூட நண்பர்களை எதிர்பார்த்திருப் பது அவனுக்கு தர்மசங்கடமாயிருக்கும். பஸ், இரயில் மாதிரியான போக்குவரத்து வசதிகள் பெரும்பான்மை யான நகரங்களில் கிடையாது. சாலைகள், அபரிமித மான பார்க்கிங் லாட்டுகள், டிரைவ் இன்கள் என்று இந்த இந்த மொத்த தேசமே காரை மையப்படுத்தி நிர்மா ணிக்கப்பட்டிருப்பதாக தோன்றியது. அந்த இயலாமை யால் வந்த புதிதில் என்ன மாதிரியான ஊர் இது. சொந் தமாக கார் இருந்தால் தான் பிழைக்கமுடியும் என்பது என்னமாதிரியான ஒரு கட்டமைப்பு என ஆத்திரப்பட் டிருக்கிறான். சாலைகளில் ஒரு பயணியாக பயணிப்பது என்பது வேறு, சொந்தமாக கார்வைத்து பராமரித்து ஓட் டுவது என்பது வேறு...

முதலில் அமெரிக்கச் சாலைகளில் கார் ஓட்டுவது என் பது, பரணிக்கு ஒரு புதிய அதே சமயத்தில் பதற்றமான தொரு அனுபவமாகத்தான் இருந்தது. பாலை தரையில் ஊற்றிவிட்டது போன்ற வெள்ளைநிற நீண்ட சிமெண்ட் சாலைகள். கூடவே ராட்சத சிக்னல்கள், விதவிதமான மேம்பாலங்கள், இடைவெளியின்றி மின்னலாய் விரை யும் கார்கள், பிசாசாக பறக்கும் பெரிய பெரிய டிரக்கு கள், டிரைலர் வண்டிகள்.... ஹாலிவூட் படங்களில் வரும் சைரன் வைத்த போலீஸ் கார்கள், அதில் முடியை ஒட்ட வெட்டிக் கொண்டு குளிர்கண்ணாடி அணிந்தபடி அடர்

நீலநிறச் சீருடையில் விறைப்பாய் திரியும் வெள்ளை போலீஸ்காரர்கள், அவர்களின் பயமுறுத்தும் கிளாக் துப்பாக்கி, கடுமையான போக்குவரத்து விதிமுறைகள், மீறினால் சிறைதண்டனை எனும் பயமுறுத்தல்கள் ... ஒரு புதிய உலகில் நுழைந்து மாயநகருக்குள் வேறுவழி யின்றி வசமாக சிக்கிக் கொண்டதாக நினைத்தான்.

காரில் பிள்ளைகள் உற்சாகமாக இருந்தார்கள் என்று சொல்வதைவிட இடைஞ்சல் தராமல் இருந்தார்கள். கொஞ்ச நேரம் 'தமிழ் கேம்' எனும் வார்த்தை விளை யாட்டு ஆடினான். அதாவது பெரியவர்கள் ஆங்கில வார்த்தையைச் சொல்ல பிள்ளைகள் இணையான தமிழ் வார்த்தையைச் சொல்லவேண்டும். உபயோக மான பொழுதுபோக்கு. இப்போதெல்லாம் வீட்டில் "பிள் ளைங்க பள்ளிக்கூடம் கிளம்பியாச்சா ? " எனக்கேட் டால், தாரிணி "ஸ்கூலுக்கு கிளம்பியாச்சானு ? தமிழில் கேளுங்க" என்பதே இன்றைய நிதர்சனம்.

அடுத்து ஹரிக்கேன் பற்றிய தெரிந்த விவரங்களைச் சொல்லுங்களேன் என்றான்.

கவி "ஹரிக்கேன் இர்மா, வானத்திலல... இருந்து வருது" என இழுத்துச் சொன்னாள். எல்லோரும் வாய்விட்டு சிரித்தார்கள். "இல்ல அது கடலில் இருந்து வருதுமா" எனச் சரி செய்த அம்மு தொடர்ந்தாள் "கேட்டகிரி-ஐஞ்சு ஹரிக்கேன்- வெரி பவர்புல், ரொம்ப மோசம் கூட. அது வந்தால் ஒளிஞ்சிக்க சரியான இடம் பேஸ்மெண்ட் தான்"

"ஓகே. ஆனால், வெள்ளம் வந்தால் மாடி இல்லை, பரண் (attic) மாதிரி உயரமான இடத்துல ஒளிஞ்சிக்கனும்" சரி செய்தாள் தாரிணி

“அப்பா, ஏன் இர்மா நம்மல தேடிக்கிட்டு வருது ?” கேட்டது கவி

“பிகாஸ், சீ லைக்ஸ் அஸ்” எனச் சொல்லி பெரிதாக சிரித்தாள் அம்மு

“இல்லை,ஃபிளாரிடா பக்கம்தான் கடல் சூடா இருக்குதாம்” பரணி

“யூ மீன் குளோபல் வார்மிங் ?”- அம்மு

திடீரென தாரிணி, ஏதோ நினைவு வந்தவளாய் “ஆபிஸ் லேப்டாப் கீ வெளியே இருந்ததே, மறக்காம எடுத்து வைச்சீங்களா ?” என்றொரு குண்டைப் போட்டாள்.

வயிற்றில் லேசான பயம் கவ்வியது. அலுவலக லேப்டாப்பை விட அதன் 'ரீமோட் கீ' முக்கியம் என்பதால், காரை வழியில் நிறுத்திப் பார்த்துவிட நினைத்தான். உண்மையில் சொந்த லேப்டாப்பைவிட அலுவலக லேப்டாப்பிற்கு மரியாதை மிக அதிகம். அலுவல் சம்பந்தமில்லாத எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக்கூடாது. உயரதிகாரிகளின் அனுமதி இல்லாமல் அமெரிக்காவைத் தாண்டக்கூடாது என்பது போன்ற பலகெடுபிடிகள். ஒருமுறை ராபர்ட் தனது லாப்டாப்பைக் கார் டிரங்கில் வைக்காததால் யாரோ கண்ணாடியை உடைத்துத் திருட அதற்கு போலீஸ் எப்ஐஆர் பதிவு என அலைந்தார்.

“எங்காவது கேஸ் ஸ்டேசன் பார்த்து நிறுத்துங்க, எல்லா வேலையும் சேர்த்து பார்த்திடலாம்” என்றாள் தாரிணி

“ம், குளோபல் வார்மிங் உனக்குத் தெரியுமா அம்மு” - அவன் உரையாடலைத் தொடர்ந்தான்.

“ஆமாம். படிச்சிருக்கேன். அதுக்கு என்வராயன்மெண்டைக் காப்பாத்தனும். ஸ்கூலுக்கு கார்ல போகாமல் பைக்கில் (சைக்கிள்) போகலாம். பிளாஸ்டிகைக் குறைக்கனும். மறுசுழற்சி செய்யனும். அப்புறம் மரத்தை வெட்டாமல் வளர்க்கனும்”

“உம்”

“குளோபல் வார்மிங்கும் இர்மா மாதிரி பெரிய ஹரிக்கேனுக்கும் சம்பந்தம் இருக்குனு நீங்க நம்புறீங்களா என்ன ?” என்றொரு தீவிரமான கேள்வியைக் கேட்டாள் தாரிணி

அமெரிக்க அரசியலில் ஏன் உலக அரசியலில் தொடர்ந்து பெரிதும் பேசப்படும் ஒரு விசயம். அதற்கு பதில் சொல்ல உண்மையில் அவன் கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டியிருந்தது.

தயக்கத்தோடு “அப்படித்தான்னு நினைக்கிறேன்” என்றான்.

ஆனால், அம்மு தயங்காமல் அதே சமயத்தில் திடமாக “சேர்டன்லி” என்றபடி புவி வெப்பமடைதல் காரணமாக பெருங்கடலில் நேரும் ஒழுங்கற்ற காலநிலை மாற்றத்தைச் சொல்லும் எல்- நீனோ (El-Nino), லா-நினா (La-Nina) போன்ற சமாச்சாரங்களை தெளிவாக விளக்கி அசத்தினாள்.

தாரிணி மனம் விட்டுப் பாராட்டினாள். தாய்க்கு பாடம் சொன்ன அம்மு அவன் மனதில் தாய்சாமி ஆகி இருந்தாள். அடுத்த தலைமுறை, முந்திய தலைமுறையை விட புத்திசாலிகளாக இருப்பதால்தான் செவ்வாய் வரை பயணப்படுவதைப் பற்றி யோசிக்கமுடிகிறது.

சிறிது நேர யோசனைக்குப் பின் தாரிணி மெதுவாக "இவ்வளவு பேர் இங்கேயிருந்து வெளியே போறாங் கல்ல, எல்லாரும் தனித்தனியா கார்ல போறத்துக்குப் பதிலா, இவங்க பப்ளிக் டிரான்ஸ்போர்ட் ஏற்பாடு செய்ய லாம்ல" என்றாள்.

இந்த உயர தேசம் எண்ணெய் வளம் எனும் கட்டு மானத்தில்தான் நிற்கிறது என்பதை அவனுக்கு விளக் கத் தோன்றவில்லை. அவன் ஆழ்ந்து சிந்திப்பது போலொரு பாவனை செய்து அமைதியாக இருந்தான். அந்த நேரத்துக்கு அதுவே பாதுகாப்பாகவும் தோன்றி யது.

நெடுஞ்சாலையிலிருந்து வெளியேச் செல்லும் அனைத்து எக்ஸிட்டுகளும் (வெளியேறும் வழிகளும்) நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. ஒருவழியாக 'வீரோ பீச்' என்றிருந்த ஊரின் எக்சிட்டை எடுத்தான். அந்த நகருக்குள் நுழைந்தவுடன் கேஸ் ஸ்டேசன் வலதுபு றமிருந்தது. வழக்கம் போல் நீண்ட வரிசை. தாரிணி இறங்கி முதல்வேளையாக டிரங்கில் லேப்டாப் கீ இருப் பதை உறுதி செய்தாள். பெருமூச்சு வந்தது. அவள் கழி வறையைப் பயன்படுத்த பிள்ளைகளுடன் கடைக்குள் நுழைந்தாள்.

வெயிலில் ஓடிக் களைத்திருந்த இயந்திர மிருகம் செரு மல் இல்லாமல் வயிறு நிரப்பிக் கொண்டது. அவன் வெளியில் இருந்த பொதுக்கழிவறைக்குள் நுழைந் தான். அதுவரை அவன் பார்த்திராத ஓர் ஒழுங்கீனம். தரையில் ஒட்டியிருந்த வெள்ளை டைல்கள் ஆழ்ந்த மஞ்சளடித்துபோய், ஈர நயப்போடு, பாத்ரூம் பேப்பர்கள் சிதறி, சுவர்கள் கறுத்துபோய், கை வைக்கும் இடங் கள் அழுக்கேறி, மூலையில் இருந்த குப்பைக் கூடை

நிரம்பி.... கெட்ட வாடை அருவருப்பில் குமட்டல் வந்தது. அவசரமாக வெளியே வந்து காரில் ஏறினான். இதை யெல்லாம் ஆய்வு செய்ய மாட்டார்களா எனத் தோன்றி யது.

அவனுக்கும் பெட்ரோல் வந்தது ஊக்க பானம் எனும் பெயரில். ஆரஞ்சு நிறத்தில் "வெயிலுக்கு நல்லாயி ருக்கும்" என ஒரு போத்தலை தாரிணி நீட்டினாள். வாங்கி காரின் இடது பக்க கதவில் அதைச் சொரு கிவிட்டு, மீண்டும் நெடுஞ்சாலைக்குள் நுழையும் வழி யைப் பார்த்து உறைந்தான்.

# 19

கேஸ் ஸ்டேசனில் இருந்து வெளியேறி மீண்டும் நெடுஞ்சாலையில் இணையும் சாலையெங்கும் நீண்ட வரிசையில் கார்கள். காத்திருந்தார்கள். பிள்ளைகளின் பேச்சில் கூடுதல் உற்சாகம் தொற்றியிருந்தது. உபயம் சர்க்கரையாகக் கூட இருக்கலாம். பிள்ளைகள் சர்க்

கரை அதிகமுள்ள உணவைச் சாப்பிட்டால் அவர்க ளுக்குப் பற்றிக்கொள்ளும் அதீத உற்சாகத்திற்கு 'சுகர் ரஸ்' என அமெரிக்கப் பெற்றோர்கள் சொல்லக் கேட்டி ருக்கிறான். ஆராய்ச்சி செய்ததில்லை.

சூரியன் உச்சிக்கு வந்திருந்தான். ஃபிளாரிடாவின் செப் டம்பர் வெயில் தகித்தது. இப்படி ஆண்டு முழுவதும் எந் தக் குறையுமின்றி சூரியன் பிரகாசிக்கும் பிளாரிடாவை 'சன் சைன் ஸ்டேட்' (Sun Shine State) என்று செல்லமாக பெயரிட்டதில் ஆச்சர்யம் எதுவுமில்லை. அவனுக்குத் திரும்ப ரேடியோ கேட்கப் பிடிக்கவில்லை. இர்மாவின் தகவல்களால் அவன் மூளை நிரம்பி வியர்வையாக வழிந்தோடுவது போலிருந்தது. ஏசியை மீண்டும் போட் டான். முப்பது நிமிடங்கள். துளி கூட அங்கிருந்து நகர முடியவில்லை. அவனுக்கான எல்லைகள் குறுகி இறுதி யில் காரில் சிறை வைக்கப்பட்டது போல உணர்ந்தான். மணி பதினொன்றைத் தொட்டிருந்தது. தொடக்கமே இப்படி இருக்கும்போது அவ்வளவு தூரம் எப்படிப் போய் சேருவோம் எனும் கவலையும் தொற்றிக்கொண்டது.

இந்த நெரிசல் கடலில் நீந்தி கரைசேர வேண்டுமே என்று மலைத்த தாரிணியும் “இங்கயே இவ்வளவு கூட் டமா இருக்கே” என்றாள்.

அவன் சீரியசான முகத்துடன், “இப்ப கூட மோசமில்லை, திரும்பி வீட்டுக்கு போயிடலாமா” என்றான்

பசி வந்தால் சமயங்களில் பரணி இதுபோன்ற கோணங் கித்தனங்களில் இறங்குவான் என்பதைப் புரிந்த தாரிணி “அட நீங்க வேற, அதெல்லாம் கிளியராயிடும்” என்றாள் அவசரமாக,

அவள் சாலையை வெறித்தபடி , “நம்மள மாதிரி எத் தனை பேர் வந்திருக்காங்க இல்ல” என்றபோது அவ

னுக்குள் எங்கோ ஒரு விளிம்பில் மகிழ்ச்சிப்பூ அரும்பி யது.

அதிரும் இசை வழிய ஒரு சிகப்புநிற கார் எதிர்த் திசையில் விரைந்தது. வாங்கி வைத்த ஊக்கபானம் நினைவுக்கு வந்தது. எடுத்துக் குடித்தான்.ஒரு கார் டீலரின் மிகப்பெரிய பார்க்கிங் லாட் வாசலில் அவன் கார். உள்ளே பல வண்ணங்களில் ஆயிரக்கணக்கான கார்கள். நடுநாயகமாக பிரம்மாண்டமான அமெரிக்கக் கொடி.

ஒருவழியாக கார் நகர்ந்து நெடுஞ்சாலைக்குள் நுழைந் தது. வலது பக்க லைனை அடைத்துவைத்து ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒருவர் சிகப்புக் கொடியை உயர்த்திப் பிடித்து கைகளால் சைகை காட்டி ஒதுங்கிப் போகச் சொன்னார். சிலப்பதிகாரத்தின் தற் குறிப்பேற்ற அணி நினைவுக்கு வந்தது. போக்குவரத்து மந்தமாக நகர்ந்தது. அடிக்கடி பிரேக்கைப் பயன்படுத்தி னான்.

நல்ல வெயில். சாலை ஓரத்தில் நின்றிருந்த நெட்டை மரங்களுக்கும் வேர்க்கும் அளவுக்கு. முன்னால் நகர்ந்து கொண்டிருந்த வாகனத்தைக் கவனித்தான். குதிரை வால். நன்றாக கவனித்தபோது ஒன்றல்ல, இரண்டல்ல மூன்று தெரிந்தது. அதுவும் வெவ்வேறு நிறங்களில். அது ஒரு வேகன்(wagon). கூண்டு வைத்த பாரவண்டி. மூன்று குதிரைகளையும் அந்த வாகனத்தில் ஏற்றி ஒரு டிரக்கின் பின்புறம் இணைத்திருந்தார்கள். பின்னால் இருந்து பார்க்கையில் குதிரைகள் நல்ல பளபளப்பாக, வாளிப் பாக தெரிந்தன. இன்னமும் குதிரையேற்றம், கோல்ஃப் எல்லாம் அந்தஸ்தோடு தொடர்புடையதாகவே தோன் றியது. குதிரையைப் பார்த்த பிள்ளைகளுக்கு ஒருவித மகிழ்ச்சி. கொண்டாட்டம். இளவயதில் இப்படி மிருகங்

களை நேசிக்கத் தொடங்கி பின் மனிதர்கள் பக்கம் திரும்புவது கூட ஒருவிதத்தில் நல்ல பயிற்சிதான் என்று நினைத்து கொண்டான்.

பக்கவாட்டில் வந்த கார் இப்போது நெருக்கத்தில். விலை உயர்ந்த ஜெர்மனியின் மூன்றெழுத்துக் கம்பெனி தயாரித்த எஸ்யூவி (sport utility vehicle). உள்ளே அப்பா, அம்மா, இரண்டு பிள்ளைகள் எனச் சிறுகுடும்பம். அம்மா- டிரைவர் சீட்டில், பின் இருக்கையில் வீடியோ கேம்ஸ் விளையாடியபடி இரண்டு பிள்ளைகள். அப்பா- முன்னால் உட்கார்ந்து பேனட் மேல் காலை உயர்த்தி வைத்தபடி சவாதனமாக. அடுத்து வந்த பழைய காரில் ஒரு இளைஞனும், இளைஞியும் பீசா போன்ற ஏதோ ஒன்றை ரசித்து சுவைத்தபடி சிரித்துக்கொண்டிருந்தார்கள். அடுத்து வந்த காரில் ....

குடும்பம் குடும்பமாக நிறையவே மனிதர்கள். இந்த மாநிலத்தில் இத்தனைப் பேர் வாழ்கிறார்களா என்ன. அவன் ஆச்சர்யப்படும் அளவுக்கு. அதுவும் கறுப்பு, சிவப்பு, மஞ்சள், மாநிறம், வெள்ளை என வெவ்வேறு நிறங்களில்.

ஏழை பணக்காரன் எனும் இடைவெளியை இர்மாவின் அச்சம் நிரப்பிவிட்டிருந்தது. பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் அடித்துவரும் சிறிதும் பெரிதுமான மரக்கிளைகள் போல மக்கள் சாரைசாரையாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். ஆற்றில் சுழிந்தோடும் புதுப் புனலில் மிதந்து வரும் நுரைகள் போல வெவ்வேறு மனிதர்கள் உடமைகளை உதறிவிட்டு கையில் கிடைத்ததைக் காரில் திணித்தபடி, யார் கண்களையும் சந்திக்கத் தயங்கி, கவலை தோய்ந்த முகங்களோடு, பீதியோடு... குடும்பம் குடும்பமாக அகதிகளாக. அமெரிக்காவில் அடுத்தவர்களின் தயவு இன்றி சுயமாக, சுதந்திரமாக

வாழ்ந்தாலும் தானும் மனிதத்தில் ஒரு துளி எனும் நிதர்சனம் புரிந்தது போலிருந்தது.

இவ்வளவு களேபரங்கள் நடந்து கொண்டிருக்கையில் நெடுஞ்சாலையின் எதிர்புறத்தைப் (ஐ95 தெ) பார்த்தான். அவ்வப்போது விரையும் ஓரிரு போலீஸ் கார்களைத் தவிர ஒருவர் கூட இல்லை. ஆள் அரவமற்ற சூடான மயானம்போல் வெறிச்சோடிக் கிடந்தது. இப்போது மாநிலத்தின் சாலைகள் விடுபாடு இல்லாமல் எல்லாம் வடக்குநோக்கிச் செல்வதாக நினைத்தான். இதுபோன்ற அவசரகாலங்களில் மக்கள் எளிதாக வெளியேற சமயங்களில் நெடுஞ்சாலையின் இருபுறமும் வடக்குநோக்கி திருப்பிவிடவும் வாய்ப்பிருப்பதாக ராபர்ட் சொன்னது நினைவுக்கு வந்தது.

திரும்ப ரேடியோவை வைத்தான். இர்மா கரீபியனில் செய்த கபளீகரம் பற்றி சொன்னார்கள். 'மாநிலத்தின் மேலும் பலருக்கு கட்டாய வெளியேற்றம் அறிவித்திருப்பதால் அமெரிக்க வரலாற்றில் இடம்பெறப்போகும் மிகப்பெரிய வெளியேற்றம் ஃபிளாரிடாவில் நிகழ்வதாகச் சொன்னார்கள். தரை வழியாக மட்டுமே பல மில்லியன் பேர்கள் வெளியேறுவார்கள்' எனக் கணித்தார்கள். அவன் கண் முன்னால் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதுவரை மெள்ள நகர்ந்து கொண்டிருந்த போக்குவரத்து சுத்தமாக நின்றுவிட்டது. மேலே அவனைப்போல வடக்கு நோக்கிப் பறந்த வலசை பறவைகளைப் பார்த்தபடி இருந்தான்.

அவன் கவனத்தைக் கலைக்கும்படி “எதாவது ஆக்ஸிடென்டா இருக்குமோ” என்றாள்

“தெரியல, ஹைவேயும் எவ்வளவுக் காரைத்தான் தாங்கும்”

கார்கள் சாலையில் சீரான வேகத்தில் பயணிக்க, குறிப் பிட்ட இடைவெளி தேவைப்படுமே என்று நினைத்தான்.

கொஞ்சம் மேடான இடத்தில் இருந்து பார்த்தபோது, எதிரே இருந்த சாலை பாம்பு போல வளைந்து பல மைல்கள் தூரத்திற்கு நீண்ட மரவட்டையாக கார் கள் நின்றன. உலகத்தின் மொத்த கார்களையும் அவன் கண்முன்னால் இறக்கிவிட்டு வேடிக்கை பார்ப் பது போல இருந்தது. போக்குவரத்து நெரிசல் ஜிபிஎஸில் ஆழ்ந்த சிகப்பு நிறமாக. மீண்டும் காத்திருப்பு. கொஞ்சம் கண்களை மூடினான்.

படபடவெனக் காதை அடைக்கும் இயந்திரச் சத்தம் மேலே மிக அருகில்... சட்டென நிமிர்ந்து பார்த்தான். பச்சை நிற ராணுவ ஹெலிகாப்டர் போலொன்று நெருக் கடியைப் பார்வையிடுவது போல் சாலையின் மேல் கோடு பிடித்தாற்போல் தாழ்வாக பறந்து சென்றது. அதைத் தொடர்ந்து இன்னொரு டிவி ஹெலிகாப்டர்.

சாலை ஓரம் அடர் பச்சை நிற மினி வேனின் டிரங்க் அண்ணாந்து திறந்து கிடந்தது. அதை ஒட்டினாற் போல் ஒரு அழகான இளம்பெண். ஒரு கையில் மைக். மறு கையில் ஒப்பனை கண்ணாடி. காற்று அவள் கூந்தலை இரக்கமின்றி கலைத்து விளையாடிக் கொண்டிருந்தது. இன்னொருவன் தன் வீடியோ கேமராவால் அவளைப் படம் பிடிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். டிவி குழுவின் நேரடி ஒளிபரப்பாயிருக்கக்கூடும். யாருடைய தவிப்போ. யாருக்கோ செய்தி...

மேலே படபடக்கும் ஹெலிகாப்டர், கீழே ராணுவ டாங்கி கள் போல சாரை சாரையாக அணிவகுத்து நிற்கும் கார் கள், அதைப் படம்பிடிக்கும் கேமராக்கள் எனும் கல வையான காட்சிகள் அவனுக்குப் போர்க்களம் போன்ற தொரு பிரமையைத் தந்தது.

கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்வது போல் இருந்தாலும் அவனுக்கு அப்படியொரு உணர்வே பீறிட்டது. அது ஒரு போர்க்களமெனில், இது யாருடனான போர். மனிதனுக்கும், இயற்கைக்குமானது தானே. அந்தப்போரில் வெல்லப்போவது யார்?. போர் என்றால் வெற்றி அல்லது தோல்விதான் முடிவா . சமாதானம் ? அது யாருடைய வெற்றி ? அமைதிக்குக் கிடைத்த வெற்றி ? பல கேள்விகள். எங்கோ அட்லாண்டிக் கடலில் உருவான இயற்கையின் அடியாள் இர்மா. அதற்கு அஞ்சி, வீடு உடமைகளைத் துறந்து பல நூறு மைல்கள் புறமுதுகிட்டு வந்த போதே முடிவு தெரிந்துவிட்டதே.

எவ்வளவு மூர்க்கமாக போரிட்டாலும் மனிதன் இறுதியில் இயற்கையிடம் சரணடைவது உறுதி என நம்பினான். தொழில் போட்டியால் பூமிப் பந்தைக் கசக்கிப் பிழியும் மனிதனை இயற்கை இதுபோன்ற இக்கட்டான சூழலைத் தந்து வெட்கத்தில் தலைகுனிய வைத்து அவமானப் படுத்துவதாகக் கருதினான்.

போனை எடுத்து நோண்டிய தாரிணி இர்மாவுக்கு அஞ்சி கரீபியன் தீவுகளை நோக்கி செல்லவிருந்த எல்லா விமானங்களும் ரத்து செய்யப்பட்டு அவற்றை மாநிலத்தில் இருந்து வெளியேற திருப்பிவிடுகிறார்கள் என்றாள். ரயில் பெட்டிகள் போல் எதிரே நீண்டு கிடந்த போக்குவரத்தை ஜன்னல் வழியாக போட்டோ எடுத்து வாட்ஸ் அப்பில் நண்பர்களுக்குப் பகிர்ந்தாள். பின் 'இர்மா கடலில் 320 கிமீ வேகத்தில் சுழல்கிறது.. ஒரு இரயிலையே தூக்கி அடித்து விடும். வரலாற்றிலேயே படு பயங்கரமான புயல் இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்... 'என்று யாரோ முகநூலில் பகிர்ந்ததை எடுத்துக் காட்டினாள். பெரும்பாலும் அடுத்தவர்களின் சங்கடம் பலருக்கு சிரிப்பைத்தான் தருகிறது.

இதுவரை லேசாக கண் அசந்திருந்த பிள்ளைகள் ஹெலிகாப்டர் இரைச்சலில் விழித்துக் கொண்டு கச கசத்தனர். பசி வந்திருந்தது. தாரிணி நொறுக்குத் தீனி கொடுத்து அவர்களைச் சரிசெய்யப் பார்த்தாள். பிள்ளைகள் பிடிவாதமாக "அம்மா, இதுமாதிரி ஸ்னாக்சை எல்லாம் எங்களுக்குக் கொடுத்தது போதும். சாப்பாடு வாங்கிக்குடு" என்றார்கள் தெளிவாய்

"பீசா மாதிரி எதாவது வாங்கிக் குடுக்கலாமே" என்றாள் தாரிணி

அவனுக்கும் நிமிடத்துக்கு நிமிடம் வெயிலோடு, பசியும் ஏறிக்கொண்டிருந்தது. ஆனால், சொல்லிவைத்தார் போல் நெடுஞ்சாலையை விட்டு வெளியேறும் எக்ஸிட்டுகள் நிரம்பிவழிந்தன. பிள்ளைகள் பசியை பொறுக்க மாட்டாமல் 'பீட்சா ..!!, பீட்சா...!! ' எனத் தொடர்ந்தார் போல் கோசமிட்டனர். தலைவலி வந்தது. பொறுத்து கொண்டான். ஒரு வழியாக அடுத்துக் கிடைத்த எக்ஸிட்டில் நெடுஞ்சாலையை விட்டு வெளியே வந்தான்.

காற்றில்லாத அறையில் இருந்து தப்பித்து வியர்த்து போய் வெளியே வந்ததுபோலொரு உணர்வு. அந்தப் புதிய நகரம் எந்த பதற்றமும் இல்லாமல் இயல்பாக இயங்கிக் கொண்டிருந்தது. பிட்சா கடையை போனில் கண்டுபிடித்து தாரிணி வழி சொன்னாள். அந்தச் சிறிய கடையில் வழக்கம் போல் சிரித்தபடி வரவேற்றது வெள்ளை இளைஞன். பிட்சாவை தொடர்ந்து சாப்பிடுபவன் போலொரு உடல்வாகு. மாநிலத்தின் தெற்கில் இருந்து இத்தனை மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கையில் அதற்கான சுவடு கொஞ்சமும் இல்லாமல் அங்கிருந்தவர்கள் பழகியது அவனுக்கு ஆச்சர்யம்.

“பிட்சாவை இங்கே உள்ளே உட்கார்ந்து சாப்பிட வழி யில்லை. ஆனால் வெளியில் கிடக்கும் டேபிளை நீங்க தாராளமாய் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்று புன் னகையுடன் கைகாட்டினான். அவனுடைய சேவைக்கு நன்றி சொல்லும் வகையில் தாரிணி அங்கிருந்த பிளாஸ்டிக் டப்பாவில் டிப்ஸாக இரண்டு டாலர்கள் போட்டுவிட்டு வந்தாள். அவர்கள் வெளியே வந்து குடும்பத்தோடு உட்கார்ந்து சாப்பிடும்போது அட்லாண் டாவில் இருந்து போன் வந்தது. ஸ்பீக்கரில் போட்டான்.

பூபதி பேசினான். “என்னப்பா, எங்க இருக்கீங்க, லஞ்ச் செல்லாம் சாப்பிட்டாச்சா” என ஆரம்பித்தவன் “வரும் போது கையோடு இர்மாவை அழைச்சுட்டு வர்ர போல ? ” எனச் சொல்லி சிரித்தான்.

விசாரித்தான், இர்மா ஃபிளாரிடா வழியாக நுழைந்து வடக்கே ஜிர்ஜியா, சௌத் கரலினா நோக்கி நகர்வதால் அந்த மாநிலங்களிலும் ஸ்டேட் ஆப் எமர்ஜென்சி அறி வித்திருக்கிறார்களாம்.

“ஸ்டேட் ஆப் எமர்ஜென்சின்னா ?” கேட்டது அம்மு

உள்நாட்டில் கையிருப்பில் இருக்கும் ஆதாரங்களை வைத்து ஓர் அரசால் பேரழிவை எதிர்கொள்ள இயலாத நிலை வந்தால், அவசரகால நிலை அறிவிப்பார்கள் என்றான்.

# 20

மதிய உணவுக்குப் பின் மறுபடியும் நெடுஞ்சாலையில்

நுழைந்த போது நெருக்கடி குறைந்திருந்தது. சீரான வேகத்தில் வாகனங்கள் சீறிக்கொண்டிருந்தன. ஜோதி யில் ஐக்கியமானார்கள். பிள்ளைகள் கண் உறங்கியி ருந்தார்கள். சேரும் நேரத்தை ஜிபிஎஸ் இரவு பதி னொன்று எனக் காட்டியது. இனி வேறெந்த நெருக்கடி யும் வராமல் இருந்தால் நள்ளிரவுக்கு முன் வீடு போய் சேர்ந்துவிடலாம். புனித் கர்ப்பிணி மனைவியுடன் போக் குவரத்தில் சிக்கி பல மணி நேரத் தாமதத்திற்கு பின் சிர மப்பட்டு அட்லாண்டா போய் சேர்ந்ததாக போன் செய்து சொன்னான்.

காரை குரூஸ் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். இந்த நிலம் இர்மா போன்ற எத்தனை ஆயிரம் பேரழிவுக ளைப் பார்த்திருக்கும் எனும் எண்ணம் வந்தது.
சாலையோரத்தில் பிரமாண்ட விளம்பரத் தட்டிகள் அகற்றப்பட்டன. உயர வெள்ளை ஒட்டகச்சிவிங்கி குனிந்து நின்றது போலிருந்த இயந்திரங்களின் உதவி யால் மின்கம்பிகள் பராமரிக்கப்பட்டன. பார்த்தவரைப் பெரும்பாலும் சமநிலம். நெட்டை மரக்காடுகள். மற்ற படி சாலை ஓரங்களில் மனித சஞ்சாரம் இல்லை. இது போல கோடிக்கணக்கான மரங்கள், வீடுகள், உயரக் கட்டிடங்கள் என்று சகலத்தையும் அடித்து நொறுக்கி பல ஆயிரம் மைல்கள் மிகுந்த ஆளுமையுடன் முன் னேறும் இர்மாவின் பேராற்றலின் மர்மத்தை அவனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அது மனிதக் கற்பனைக்கு அப்பாற்பட்ட விசயமாகவும், மலைப்பாக வும் தெரிந்தது. இதன் ஆற்றல் பல அணுகுண்டுக ளுக்கு சமம் என்று சொல்வதெல்லாம் வெறும் ஒப்பீடா கத் தோன்றியது.

ராணுவம், பொருளாதாரம், உயர் தொழில் நுட்பம் எனப் பலதுறைகளில் கோலாச்சி உலகின் வல்லரசாக வலம் வரும் அமெரிக்கத்தேசத்தின் பல மில்லியன் பிரஜை

கள் இப்படி ஒரு இயற்கைச் சீற்றத்திற்கு அஞ்சி பல ஆயிரம் மைல்கள் இடம் பெயர்வது அவனைச் சல னப்படுத்தியிருந்தது. அவன் இதை யோசிக்கும் இந்த நொடி அமெரிக்க அரசாங்கம் தனது வானளாவிய அதி காரத்தால் ஏதோவொரு நாட்டை மிரட்டிக் கொண்டி ருக்கலாம். இல்லை உலகின் ஏதோ ஒரு மூலையில் எதற்காகவோ ஓர் ஒப்பந்தம் போட்டிருக்கலாம். அது ஒரு நாட்டின் தலைஎழுத்தையேக் கூட வேறுவிதமாக தீர்மானித்திருக்கலாம். இல்லை விண்வெளி ஆராய்ச் சியில் மனிதம் இதுவரை அடையாத ஒரு உயரத்தைக் கூட அது தொட்டிருக்கலாம். ஆனால், இந்த வல்லர சின் அதிகாரம் உள்ளூரில் இயற்கையிடம் கண்டிப்பா கச் செல்லுபடியாகவில்லை.

இந்தப் புயல், வெள்ளம், காட்டுத் தீ இவையெல்லாம் இயற்கையின் கொடூரமான அடியாட்கள் என அவன் உறுதியாக நம்பினான். அவர்களின் இசைக்கேற்ப மனி தன் ஆடத்தான் வேண்டியிருக்கிறது. அவ்வாறு ஆடாத கால்கள் ஒடுக்கப்படுகின்றன. இசைக்கேற்ப பாடாத குரல்வளை அழுத்தி மூச்சுமுட்ட நெரிக்கப்படுகிறது. தான் பெரிய வீரனென்று தலை நிமிர்ந்து வாழ்பவனுக் கும், இப்படி இயற்கை ஒருநாள் குறித்து தேடி வருவதாக நினைத்து வேதனைப்பட்டான். அதன் பிரம்மாண்டத் திற்கு முன் மனிதன் சிறுதுளிதான் என்று வெட்கப்பட் டான். 'காலா! உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்; எந்தன் காலருகே வாடா! ' எனும் பாரதி போல.

பேராசைக்கொண்ட மனிதன் பொன் முட்டையிடும் பூமியை அறுத்து ஒரே நாளில் விருந்துவைத்து கொண் டாடித் தீர்த்துவிடும் வன்மத்தோடு திரிவதாக நினைத் தான். தான் தொடர்ந்து சீர்கேடுகளால் துன்புறுத்தி கப ளீகரம் செய்யப்படுவதைப் பொறுக்க இயலாத இயற்கை வெகுண்டு முன்பை விட மூர்க்கமாக, ஆக்ரோசத்தோடு

தன் அடியாட்கள் மூலம் மனிதக்குலத்தைத் தாக்கக் களம் இறங்கியிருக்கிறாளா?.

இந்த பூமி நமக்கானது, மனித இனத்துக்கானது. இதை அடுத்த தலைமுறையிடம் சரியாக ஒப்படைப்பது நமது கடமையாகிறது எனும் புரிதலை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதில் கூட இங்கே அரசியல் இருக்கிறது. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கவும் முந்தைய ஜனநாயகக் கட்சியின் ஒபாமா அரசு எடுத்த அனைத்து நடவடிக்கைகளும், ஒப்பந்தங்களும் தற்போதைய குடியரசு கட்சியின் டிரம்ப் அரசால் ரத்து செய்யப்படுகின்றன. ஆட்டத்தில் ஒரே காயை முன்னும் பின்னுமாக குறிக்கோளின்றி நகர்த்துவது மாதிரி. அவ்வளவு ஏன் காலநிலை மாற்றம் (climate change) எனும் நிகழ்வை அங்கீகரிப்பதில் கூட இரு கட்சிகளின் சித்தாந்தகளும் வெவ்வேறாக இருக்கின்றன. இது எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் சீர்கேடுகளைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஓர் அச்சுறுத்தல் மட்டுமல்ல ஒருவித பின்னடைவும் கூட. என்று பலவற்றை அவனது மனம் போட்டு குழப்பிக்கொண்டிருந்தது.

சாலையைப் பார்த்து பார்த்து அவனுடைய கண்களோடு, மனமும் களைத்திருந்தன. கண்கள் சாலையில் கானல்நீரைக் காட்டிய வேளையில் காரை தாரிணியிடம் கொடுத்துவிட்டு பின்னால் போய் உட்கார்ந்தான். கார் சீட்டில் கவி சாய்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள். அம்மு தடியான ஆங்கில நாவலில் புதைந்திருந்தாள். பின் இருக்கை பயண அனுபவம் புதிதாக இருந்தாலும் பிள்ளைகளோடு நெருங்கி அமரும் வாய்ப்பு அந்தச் சூழலுக்கு ஆறுதலாக இருந்தது.

ஜிபிஎஸ் இப்போது இரண்டாவது பாதையைப் பரிந்து ரைத்தது. ஒரு மணி நேரம் சேமிக்கலாம் என்று தாரிணி அந்த வழியைத் தேர்ந்தெடுத்தாள். புதிய பாதை நெடுஞ்சாலை அல்ல. அது ஊருக்குள் புகுந்து புகுந்து சென்றது. குறுகலான சாலைகள். அவன் தயங்கினான். ஆனால், ஆச்சரியப்படும் வகையில் தாரிணி திறமை யாக ஓட்டிச் சமாளித்தாள். மோனிகாவிடமிருந்து போன் வந்தது. அவள் திடீரென ஏன் அட்லாண்டா புறப்பட் டான் எனக் கேட்டால் எப்படிச் சமாளிப்பது என்ன பதில் சொல்வது எனும் தயக்கத்தோடு எடுத்து பேசினான். அவளோ அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது போல காட்டிக்கொள்ளாமல் பேசினாள். அவன் மீது உண் மையான அக்கறை எதுவும் தனக்கு இல்லை என்கிற ரீதியில் அவள் குரல் தொனித்தது. பொதுவாக பேசிக் கொண்டிருந்தவள், இறுதியில் “டிவியில பார்த்தேன். அட்லாண்டா போற வழி முழுக்க பம்பர் டு பம்பர் (போக் குவரத்து நெரிசல்). சோ சேப் டிரைவ்” என்றாள். குரலில் அந்நியத் தன்மை மேலோங்கி போலித்தனம் மிகுந்தி ருந்தது.

மாலை மயங்கிக் கொண்டிருந்த வேளையில் வந்த கிரா மம் போலிருந்த ஒரு சின்ன ஊர் தூங்கிவழிந்து கொண் டிருந்தது. அதைக் கடந்தபோது “கேஸ் தீரப் போகுது” என்றாள் தாரிணி.

“என்னது தீரப் போகுதா ?” என்றான் பதறியபடி

“ம், இண்டிகேட்டரில் லைட் வந்துட்டே”

அவனுக்கு சட்டென உள்ளுக்குள் விளக்கு எரிந்தது போலிருந்தது. எழுந்து நின்று பார்த்து உறுதிப்படுத்தி னான். முன்பே அதைக் கவனிக்காததற்காக நொந்து கொண்டான்.

“சரி அடுத்து வர்ர ஊருக்குள்ள போய் பார்ப்போம்”

வலதுபுறம் வந்த ஒரு ஊருக்குள் புகுந்து தேடினார்கள். ஊரில் மனிதர்களை விட நிறைய மரங்கள். உதிரி மாடு கள், குதிரைகள். எந்திரம் சுருட்டிய வைக்கோல் திரள் கள். ஆங்காங்கே ஒன்றிரண்டு பழைய பாணி வீடுகள். மற்றபடி பச்சை மண்டிக் கிடந்தது. இருந்த சில கடை களும் மர இழைப்பகம், விற்பனையகம் என்று மரத் தோடு தொடர்புடையதாக இருந்தது. பச்சையாக பாசி பிடித்திருந்த மரத்தின் மின்கம்பங்கள் என நகரத்தின் வாடை சுத்தமாக இல்லை. கேஸ் ஸ்டேசன் இருப்பதற் கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. வெயிலில் உருகும் பனிக்கட்டிபோல் கையில் இருந்த பெட்ரோல் கரைந்துகொண்டிருந்தது.

“ரிசர்வா ஒரு காலன் பெட்ரோல் இருக்குமா, அது எவ்வ ளவு தூரம் தாங்கும்” எனக் கேட்ட தாரிணியின் குரலில் கவலை தெரிந்தது.

“தேடிப்பார்ப்போம், இல்ல விசாரிப்போம்” என்றான்.

மாலைவேளை தெருவிலும் கூட்டம் அதிகமில்லை. ஒன்றிரண்டு டிராக்டர்கள். அதை ஓட்டிச் சென்ற வெள்ளை ஆட்களின் உடலமைப்பு கொஞ்சம் தாட் டியாக, தடித்த சிகப்பு நிறத்தில் இதுவரை நெருங் கிப் பார்த்திராத வகையில் ரெட் நெக் மனிதர்களா கத் தெரிந்தார்கள். பண்படாத அவர்களின் உடல்மொழி வித்தியாசமாக இருந்தது. மொத்தத்தில் அயல்கிரகத் தில் தான் தனித்துவிடப்பட்டதாக உணர்ந்தான். தாரி ணியின் முகமும் கலவரப்பட்டதைக் கவனித்தான்.

சுற்றி சுற்றி கடைசியில் கடைவீதி போலிருந்த ஒரு தெருவைக் கடந்தார்கள். தபால் அலுவலகம், நீதிமன் றம், பதிவு அலுவலகம், சிறிய மருத்துவமனை, ஒட்டு

நர் உரிமை வழங்கு அலுவலகம் போன்ற இத்தியாதிகள் அதேத் தெருவில் தொடங்கி முடிந்தது ஆச்சர்யம் தான். ஆனால், கேஸ் ஸ்டேசன் எதுவும் கண்ணில் படவில்லை. புதுச் சிக்கல். அதுமாதிரியான இடத்தில் இறங்கி யாரிடமும் விசாரிக்கவும் அவனுக்கு யோசனையாக இருந்தது.

கடைசியில் “இது ரெட் நெக் (redneck) ஏரியா மாதிரி இருக்கு. நம்மகிட்ட பேசுவானுங்களானே தெரியல. இங்கெல்லாம் வேண்டாம்” என்று தவிர்த்தான்.

ஊருக்கு எல்லையில் 1980களின் ஹாலிவுட் படக்காட்சியை நினைவூட்டும் ஒரு கேஸ் ஸ்டேசன் ஒதுக்குப்புறமாக வயலில் தனித்து நின்றது. நிறுத்தினாள். அடைத்து வைத்திருந்த சுருள் போல பிள்ளைகள் காரில் இருந்து குதித்து இறங்கினார்கள். கூட்டமில்லை. கடனட்டை தேயத் தேய பெட்ரோல் நிரப்பினான். விட்டால் போதும் என இறங்கிய பிள்ளைகள் கடையில் நுழைந்து அங்கிருந்த அடர் வண்ண மிட்டாய்களை வேண்டும் என பிடிவாதம் பிடித்தார்கள். அந்தக் கடைக்காரர் பேசிய அமெரிக்க ஆங்கிலத்திலும் வித்தியாசம் தெரிந்தது. அதற்கு கொஞ்சம் யோசித்துதான் பதில் சொல்லவேண்டியிருந்தது. அமெரிக்கத்தேசத்தின் ஒரு புதிய அத்தியாத்தைதான் வாசிக்கத் தொடங்கியிருப்பதாக அவன் நினைத்தான்.

கழிவறையை பயன்படுத்திவிட்டு வந்த தாரிணி காரில் அமர்ந்தபடி “இனி இந்த ரூட் வேணாம், போற போக்குல ராத்திரி நேரத்துல தனியா காட்டுல விட்ரபோறாங்க” என்றாள். கார் திரும்ப நெடுஞ்சாலை வழிக்கே திரும்பியது. கார் நெடுஞ்சாலையை அடைந்ததும் தான் பரணி இயல்பு நிலைக்கு திரும்பினான், தூண்டிலில் சிக்கவி

ருந்த மீன் கடைசி நொடியில் தப்பித்தது போன்ற எண்ணம் வந்து போனது, அவனுக்கு.

அவன் ஓட்டினான். சீரான வேகம். விட்டதைப் பிடித்து விடும் தோரணையில் தெம்பாக இயக்கினான். வானம் ஆரஞ்சு வண்ணம் பூசியிருந்தது. அழகான நிலக் காட்சி. எதிர்புற நெடுஞ்சாலையில் மின்சாரக்கம்பிகளைப் பழுதுபார்க்க உதவும் வாளி டிரக் (bucket truck) குகள் தொடர்ச்சியாக ஃபிளாரிடா நோக்கி அவசரமாக விரைந்தன. புயலுக்கு பின்பான மறுசீரமைப்புப் பணிகளுக்கு மாநிலம் இன்றே தயாராவது புரிந்தது.

கார் ஐ75 நெடுஞ்சாலை வழியாக ஜார்ஜியா மாநிலத்தை நெருங்கும் போது நிலக்காட்சி மாறியிருந்தது. ஃபிளாரிடாவின் சமவெளி சுத்தமாகத் தொலைந்து. நெட்டை மரங்கள் மறைந்திருந்தன. அடர்ந்த குட்டையான பச்சை மரங்கள், மலைக் காட்சிகள் தென்பட்டன. கதிரவன் கண் சிவந்து இருளாகிக் கொண்டிருந்தது. கார்களின் வேகம் குறைந்து. ஒரு கட்டத்தில் நின்றுவிட்டது.

சாலையைக் கவனித்தான். சபரிமலைக்கு இருமுடி தாங்கிய பக்தர்களைப்போல எதிரே நின்ற கார் தன் தலையில் பத்து பதினைந்து கேஸ் கேன்களைச் சுமந்திருந்தது. கயிறு போட்டுக் கட்டிவைத்திருந்தார்கள். சூரியன் விடைபெற்றுக் கொண்டிருந்தான். அதை வரவேற்பது போல் 'மூன் ரூப்'எனும் காரின் மேலிருந்த கண்ணாடி திறப்பை திறந்தான். அதன் வழியாக தலையை விட்டு வெளியே பார்த்த அம்மு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கார்கள் என்றாள். மோனிகா சொன்னது நினைவுக்கு வந்தது. ஜிபிஎஸ் சாலை விபத்தால் போக்குவரத்து நெரிசல் என்று உறுதிப்படுத்தியது. தவிப்போடு காத்திருந்தார்கள்.

இரவு ஹோட்டலில் தங்கிவிட்டு மறுநாள் பயணத்தைத் தொடரலாம் எனும் அவனுடைய யோசனையைத் தாரிணி "அதெல்லாம் வேணாம். நிறுத்தாமல் போயிடலாம்" என்று நிராகரித்தாள். காருக்குள் இறுக்கமாக இருந்தது. ஒரு கட்டத்தில் உரையாடல் ஓய்ந்து இனி புதிதாக பேச எதுவுமில்லை என அவனுக்குத் தோன்றியபோது ரேடியோ வைத்தான். பாதுகாப்புக் காரணங்களுக்காக ஃபிளாரிடாவில் இருக்கும் இரண்டு அணுமின் நிலையங்களை நிறுத்தப் போவதாக அறிவித்திருந்தார்கள். ஜப்பானில் உள்ள புகுஷிமா அணுசக்தி பேரழிவிற்கு பின் அவை மேலும் வலுவூட்டப்பட்டிருக்கின்றன என்ற தகவல் அவனுக்கு முக்கியமாகப் பட்டது. ஒருவேளை இர்மாவால் அணுமின் கசிவு ஏற்பட்டால் விளைவு எப்படி இருக்கும் எனும் விபரீத எண்ணம் வந்து கிலியூட்டியது. ஜிபிஎஸ்சில் அட்லாண்டா போய் சேரும் நேரம் நள்ளிரவு என்றானது. அகாலத்தில் பூபதியின் தூக்கத்தைக் கலைக்க வேண்டும் எனும் தயக்கம் வந்தது. விசயத்தைச் சொல்ல போன் செய்த போது "அதெல்லாம் பிரச்சனை இல்லை, இதுக்கெல்லாம் நேரம் காலமெல்லாம் பாக்காத" என்றான். அவனுடைய வருகையை பூபதி எதிர்பார்த்துக் காத்திருப்பது ஆறுதலாக இருந்தது.

ஒரு மணிநேர காத்திருப்பிற்கு பின் அட்லாண்டா நகருக்குள் வண்டி நுழையும்போது நகரம் இருளோடு உரையாடத் தொடங்கியிருந்தது. உயரக்கட்டிடங்களில் மின்மினிப் பூச்சிகளாக மின்விளக்குகள் மினுக்கின. வானிலிருந்த வண்ண நட்சத்திரங்களை வாரி தலையில் கவிழ்த்துக் கொண்டு மொத்த நகரமே ஜொலித்தது. அதைப் பார்த்தபின் லேசான மலர்ச்சி வந்தது. இனி பாதுகாப்பாக போய் சேர்ந்துவிடலாம் எனும் நம்பிக்கை துலங்கியது. வழியில் நகரத்தின் பிரமாண்டங்களுடன்

நின்ற உலகப்புகழ் பெற்ற ஜார்ஜியா டெக் பல்கலைக் கழகக் கட்டிடத்தை அம்முவிற்குக் காட்டினான். அவள் குரலில் குதூகலம். பாதுகாப்பாக ஜனத்திரளோடு ஐக்கி யமானதால் வந்திருக்கலாம்.

இரவு உணவுக்கு ஒரு துரித மெக்ஸிகன் உணவகம். கிளம்பும்போது இனி அடுத்த இலக்கு பூபதியின் வீடு தான் என மனதுக்குள் நினைத்துக் கொண்டு வைராக் கியமாக வண்டியை எடுத்தான். ஆனால், அது சில மணி நேரங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்கவில்லை. வழக்கமா கவே படுமோசமான அட்லாண்டாவின் போக்குவரத்து நெரிசல் அன்று இரக்கமில்லாமல் கொன்றது. சாலை வாகனங்களின் பின்புற சிகப்பு விளக்குகளால் நிறைந் திருந்தது. அது ஒளிரும் சிகப்பு நட்சத்திரங்களைத் தாராளமாக தரையில் பரப்பிவிட்டது போல முழுவது மாக நிறைந்து கிடந்தது. நகருக்குள் நுழைந்த நேரத் தில் இருந்து அவனுடைய போன் பரபரப்பாக இருந்தது. தொடர்ச்சியாக நண்பர்களிடம் இருந்து அழைப்புகள். குறுஞ்செய்திகள். இமெயில்கள் வந்தபடி இருந்தன. "இந்தியாவில இப்பதான் காலை வேளை அதான்" என தாரிணி நினைவூட்டினாள். இதுநாள் வரை அமெரிக் காவில் இவர் எங்கிருக்கிறார் என நினைத்திராத பழைய நண்பர்கள் கூட தொடர்பு கொண்டது மனதுக்கு சற்று இனிப்பாகத்தான் இருந்தது.

ஜிபிஎஸில் போகும்வழி சிகப்புப் பாம்பாக வளைந்து நெளிந்தோடியது. சேரும் நேரம் நள்ளிரவைத் தாண்டி இரண்டு மணி என்றானது. காலையிலிருந்து ஓடும் ஓட் டம் அவனது சக்தியை முழுவதுமாக உறிஞ்சி எடுத்தி ருந்தது. உடல் சோர்வில் ஒருகட்டத்தில் இதற்கு மேல் முடியாது எனும் நிலை வந்தபோது தாரிணியிடம் காரை ஒப்படைத்தான். இருபது மணிநேர தொடர்ச்சியான கண்விழிப்பு.

உடல் தளர்ந்தது. முன்சீட்டில் சாய்ந்தபடி களைப்பில் கண் அசந்தான்.

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தவனை யாரோ கன்னத்தில் 'பளாரென ' அறைந்தது போலிருந்ததால் திடுக்கிட்டு கண்விழித்தான். புளூ டூத்தில் இணைக்கப்பட்டிருந்த போன் அலறி நிசப்தத்தைக் கிழித்ததில் கார் அதிர்ந்தது. அவசரமாக மணி பார்த்தான். அதிகாலை இரண்டு மணியைத்தாண்டி இருந்தது.

ஓட்டுநர் இருக்கையிலிருந்த தாரிணி பாதையில் கவனமாயிருந்தாள். பிள்ளைகள் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாதபடி அவசர அவசரமாக புளூ டூத்திலிருந்து ஃபோனைத் துண்டித்தபோது பூபதி பேசினான். "இன்னுமா வந்துட்டிக்கீங்க. எங்கப்பா இருக்கீங்க ?" என்றான் உரிமையாக. அரைத்தூக்கத்தில் இருந்த பரணி சட்டென பதில் சொல்ல தடுமாறி அவசரத்துடன் வெளியே பார்த்தான்.

வெளியே கும்மிருட்டு. அது அடர்ந்த மரங்கள் சூழ்ந்த புறநகர்ப் பகுதி. இருண்ட ஆள் அரவமற்ற ஏற்ற இறக்கமான மலைப்பாதையில் ஒற்றை ஆளாக கார் முன்னேறிக்கொண்டிருந்தது. வீட்டை நெருங்கி இருப்பதாக அவன் உள்ளுணர்வு சொன்னது. தாரிணியிடமிருந்து பரணி காரை வாங்கிக்கொண்டான். பூபதி போனில் வழி சொல்ல சொல்ல அவன் ஓட்டினான். இருட்டுக்கு கண் பழகிவிட்டிருந்தது. சில நிமிட வளைவுகள், திருப்பங்களுக்குப்பின் இடது புறம் அவன் தங்கியிருக்கும் குடியிருப்பின் பெயர் கண்ணில்பட்டது. அந்தச் சாலையில் லாவகமாக காரைத் திருப்பினான். காரின் ஒளி அம்புகள் பாய்ந்து எதிரே இருள் செறிந்த மலைச்சாரலில் மேய்ந்த மான்கள் கூட்டம் மிரண்டு துள்ளி ஓடியது.

# 21

பூபதியின் வீடு மலைப்பாங்கான இடம். வீடு உயரம் அதிகமில்லாத ஐரோப்பிய காட்டேஜ் பங்களா பாணி. வீட்டைச் சுற்றி ரசனையோடு தோட்டம் போட்டிருந்தான். வீட்டை ஒட்டினார்போல் காட்டு மரங்கள் மண்டிக்கிடந்தன. மாடியிலிருந்து அழகான மலைமுகடுகள் தெரிந்தன.

வெளியே இளங்காலை பனி. எங்கும் கண்களுக்குக் குளிர்ச்சியான பசுமை. சூரியன் பசுமைக்கு மேல் போர்த்தியிருந்த பனியை எழுப்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். மலைப்பிரதேசத்துக்கான இதமான குளிரிலும், பயணக் களைப்பிலும் உள்ளே அனைவரும் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

பரணி வழக்கம் போல் அதிகாலையில் விழித்துக் கொண்டாலும்

அந்தக் குளிருக்கு படுக்கையில் படுத்துக்கொண்டிருப்பது சுகமாகதானிருந்தது. வீட்டு நினைப்பு வந்தபோது எழுந்துகொண்டான். மரத்தாலான தரை காலுக்கு இதமான சூடு தந்தது. பல் துலக்கிவிட்டு கீழே வந்த போது “இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டியது தான. என்ன அவசரம்” என்றபடி பூபதி டீ குவளையை நீட்டினான்.

ஆவி பறந்த டீயை சாப்பாட்டு மேசையில் அமர்ந்தபடி இருவரும் உறிஞ்சியபடியே பேசிக்கொண்டிருந்தனர். சூட்டில் பறந்த ஆவியை பூபதி ஊதி ஊதி குடித்தான். சூடான இஞ்சி டீ குளிருக்கு இதமாக இருந்தது. பழைய நண்பர்கள் நீண்ட இடைவெளியில் சந்திக்கும் போது பேச எவ்வளவோ விசயங்கள் வந்துவிடுகிறன. ஊரில் எளிய பின்புலத்தில் இருந்து வந்த பூபதி இங்கே வசதி வாய்ப்போடு இருப்பது மனதுக்கு நிறைவாக இருந்தது.

ஊர் பேச்சு, குடும்பம், வேலை என்று முதல்சுற்று பேசி ஓய்ந்த பின் இர்மா குறித்த பேச்சு வந்தது. ஃபிளாரி டாவைத் தாக்கிவிட்டு ஜார்ஜியாவுக்கு வரும் புயல் வலு இழந்திருக்கும் என்றாலும் அங்கேயும் பலத்த மழை யோடு பெருங்காற்றும் வீசக்கூடும் என்றார்கள். அத னால் அவசரகால நிலை பிறப்பித்து பள்ளி, கல்லூரிக ளுக்கு விடுமுறை அளித்திருந்தார்கள்.

டிவியிலும் இர்மா பற்றிய பேச்சாகவே இருந்தது. கன மழையால் அட்லாண்டாவின் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகும் அபாயம் இருப்பதாகவும், அறுபது மைல் வேகத்திற்கு காற்றடிக்கலாம் என எச்சரித்தார் கள். பரணி புயலுக்கு அஞ்சி குடும்பத்தோடு போராடி வந்தால் வந்த இடத்திலும் இர்மா பயம் பீடித்திருப்பது அவனுக்கு ஆச்சர்யம் தந்ததது. இர்மா தன்னைச் சாப மாக தொடர்வதாக உணர்ந்தான். ஆனால், ஃபிளாரிடா வின் பேராபத்து இங்கில்லை எனும் நிம்மதி இருந்தது.

சாப்பிட்டபின், “கடைக்கு போறேன், சேர்ந்து போக லாமா ?” என பூபதி கூப்பிட்டான். பரணியின் காருக்கும் பெட்ரோல் போட வேண்டியிருந்ததால் ஆளுக்கொரு காரில் கிளம்பினார்கள். கடை அட்ரசைக் கேட்டதற்கு “அதெல்லாம் வேணா, என்னோட கார் பின்னாலயே

வந்துடேம்பா" என்ற பூபதியின் காரை அவன் பின் தொடர்ந்தான்.

வழியில் சாலை நெரிசலில் பூபதியின் காரை கண் பார்வையிலிருந்து இருந்து தவறவிட்டதால் அவன் வழி தெரியாமல் தட்டுத்தடுமாறி அருகில் இருந்த நெடுஞ் சாலைக்குள் நுழைந்தான். புதிய ஊர். புதிய சூழல். கையில் அட்ரஸ் வேறு இல்லை. குழப்பத்தில் பூபதிக்கு போன் செய்தான். லைனில் காத்திருந்தபோது தான் வேகக் கட்டுப்பாட்டை மீறி கார் ஓட்டிக் கொண்டிருப் பதை உணர்ந்தான். பூபதி ஃபோனில் "ஏய் நீ கார் ஓட் டும்போது ஃபோனை கையில் வைச்சுகிட்டு பேசாதே, இங்க அது லீகல் கிடையாது. ஜாக்கிரதை" என்றபோது தான் ஃபோனை கையில் வைத்துப் பேசிக் கொண் டிருப்பது அவனுக்குச் சட்டென உறைத்தது. தவறான வழி, அதி வேகம், போன் விதிமுறை மீறல் என்று அனைத்தையும் ஒரு சேர செய்யும் பதற்றம் தொற்றியது. அது முழுமையாக எழுந்து அடங்கும் முன்...

நெடுஞ்சாலையோர மரத்தடியில் வேட்டை தொப்பி அணிந்த போலீஸ்க்காரர் ஒருவர் 'அட்லாண்டா போலீஸ்' என்று எழுதியிருந்த காரில் சாய்ந்தபடி நின் றிருந்தார். அவனுக்கு அட்ரிலின் சுரந்து படபடவென இதயம் அடித்துக்கொண்டது. தொலைஞ்சோம் என நினைத்து வேகத்தைச் சடாலெனக் குறைத்து, கையில் இருந்த ஃபோனை டக்கென காரின் முன் சீட்டில் கடாசி காரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தான். இத் தனை ஆயிரம் கிமீ சகலமும் சரியாக நடந்து இங்கு வந்து இத்தனை முட்டாள்தனமாக இருந்துவிட்டோமே எனும் குற்றவுணர்வு சுரந்து கசந்தது. வெளிமாநில பதிவு செய்த வண்டி வேறு...

நல்ல வேளையாக போலீஸ் அவனைத் துரத்திவர வில்லை. வந்திருந்தால் ? வந்த இடத்தில் போலீசில் சிக்கி அதிரடி அபராதம், அவமானம். கூடவே ஓட்டுநர் உரிமத்தில் தண்டனைப் புள்ளிகள் அதையடுத்து விச மாக ஏறும் இன்சூரன்ஸ் பிரிமியம்... தலை சுற்றியது. தண் ணீர் பாட்டில் படபடப்பைத் தணித்தது.

பூபதியைத் தேடினான். பார்பெக்யூ (BBQ)வுக்கு உப யோகப்படுத்தும் சின்ன ப்ராபேன் கேஸ் சிலிண்டரை நிரப்ப நீண்ட வரிசையில் காத்திருந்தான். ரிமோட் டில் வேலை செய்கிறேன் என்றவன் கையில் அலுவ லக லாப்டாப்போடு வேறு வந்திருந்தான். அவனோடு இணைந்து ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினான். அங்கேயும் பெட்ரோலுக்கு நீண்ட வரிசை, கடைகளில் காலியான தண்ணீர் ஷெல்ஃபுகள், பிரட், பால், முட்டை போன்ற அத்தியாவசியங்களுக்கு தட்டுப்பாடு என பற் றாக்குறை தொடர்கதையானது.

மாலையில் வீட்டின் பின்புறத் தோட்டத்தில் நண்பர்களு டன் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான். 'கிரில்' இல் பார்பெக்யூ போட்டிருந்தான். திறந்தவெளி அடுப்பில் உலோக வலை மீது நீர் சத்தான சோளம், வெள்ளரி, கத்திரி துண்டங்களோடு கோழி, இறைச்சித் துண்டங்க ளையும் மசாலா தடவி கம்பியில் செருகி சுட வைத்தி ருந்தான்.

அமெரிக்காவில் பார்பெக்யூ விருந்து மிக பிரசித்தம். அமெரிக்க பாரம்பரியங்களில் ஒன்று. போன இன்டி பெண்டன்ஸ் டேவுக்கு ராபர்ட் குடும்பத்துடன் எங்களை அழைத்திருந்தார். போயிருந்தோம். மியாமியில் ஒரு கடற்கரையோர பூங்காவில் வானவேடிக்கை பார்த்தபடி பார்பெக்யூ செய்து சாப்பிட்டார்கள். ராபர்டின் நினைவு

வந்தபோது தான் அட்லாண்டா வந்துவிட்டதை அவருக்கு மெசேஜ் செய்தான்.

பிள்ளைகள் பூபதியின் மகளோடு ஒன்றாக சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவளுடைய அறையில் நிரம்பிக் கிடந்த விளையாட்டுச்சாமான்கள் அவர்களுக்கு ஒரு புதிய உலகைத் திறந்துவிட்டிருந்தது. தாரிணியும் அடுத்தவர் வீடு எனும் தயக்கம் கரைந்து பூபதியின் மனைவியோடு சகஜமானாள்.

அன்று வீடே இறைச்சி வாடையிலும், மசாலா வாசனையிலும் மணத்துக்கிடந்தது. பார்பெக்யூ, நண்பர்கள், மது, சுவையான உணவு என பூபதி வீடு கொண்டாட்ட மன நிலையில் இருந்தாலும் பரணியால் விருந்தில் முழுமையாக லயிக்க முடியவில்லை. சஞ்சலமாயிருந்தது. அடிக்கடி வீட்டு நினைப்பு வந்து மனதைத் தொடர்ந்து அரித்துக் கொண்டிருந்தது.

அவன் அந்த நினைவுகளில் இருந்து கொஞ்சம் விடுபட்டிருந்த நேரத்திலும் நண்பர்கள் ஊரில் இருந்து போன் செய்து தொடர்ந்து அதுபற்றியே பேசினார்கள். அனைத்து தேசிய சேனல்களிலும் முழுமையாக இர்மா நீக்கமற ஆக்கிரமித்திருந்தது. எச்சரிக்கை செய்திகள், கடைசி நேர பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து எனத் தொடர்ந்து சூடேற்றிக் கொண்டிருந்தார்கள். வீட்டில் அனைவரும் 'வெதர் சேனல்' மிகத் துல்லியமான தகவல்களைத் தருவதாக நம்பினார்கள். ஒருகட்டத்தில் கிழக்குக் கடற்கரை இர்மாவால் நேரடியாக தாக்கக் கூடும் என்பது ஏறக்குறைய உறுதியான போது இரவியும் அட்லாண்டா வர யோசிப்பதாக தகவல் சொன்னார். அலுவலகத்தில் இருந்து ஹரிக்கேன் தாக்குதலுக்கு இருபத்திநான்கு மணிநேரத்துக்கு முந்திய தயாரிப்பு வேலைகளைச் செய்ய பரிந்துரைக்கும் இமெயில் வந்தி

ருந்தது. புனித்துக்கு போன் செய்து இறுதிகட்ட ஆயத்தப்பணிகளைப் பற்றி பேசினான்.

விருந்து நள்ளிரவு வரைத் தொடர்ந்தது. பலருக்கு போதை ஏறி உள்ளுக்குள் மறைந்து ஒளிந்துகிடந்த பிரதாபங்கள் சுதந்திரமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. ரசித்து ரசித்து பேசினார்கள். சம்பந்தமில்லாமல் மிகையாக சிரித்தார்கள். அவர்களுக்கு ஏன் சிரிக்கிறோம் எனும் யோசனை ஒரு நொடி வந்துவிடும் பதட்டத்தில் தாமதிக்காமல் தொடர்ந்து சிரிப்பது போலிருந்தது. லண்டனில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவனைப் போன் செய்து எழுப்பி “இத பாரு மச்சி” என பார்பெக்யூ வை வாட்ஸ் அப்பில் காட்டி பெருமைப்பட்டனர். பார்பெக்யூவோடு செல்பி எடுத்தனர். அதற்கு தாரிணி பரணியைக் கட்டாயப் படுத்தி வந்து நிற்கச் சொன்னாள். பரணி தூக்கம் கண்களை அழுத்த எழுந்துபோய் மாடியில் படுத்தான். கீழே விடிய விடிய கண்ணாடி கோப்பைகள் உரசும் ஓசையும், பலத்த சிரிப்பொலியும் தொடர்ந்து கேட்டபடியிருந்தன. அந்தச் சத்தங்களுடாகவே அவன் தூக்கத்தில் அமிழ்ந்தான். விருந்து முடிய நள்ளிரவானதால் சிலர் அங்கேயே படுத்துவிட்டு காலையில் எழுந்து சென்றனர்.

அன்றிரவு இர்மா ஃபிளாரிடாவில் தன் கோரமுகத்தைக் காட்டத் தொடங்கியிருந்தது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலேயே கேட்டகிரி-நான்கு வேக சூறைக்காற்று 130 (210 கி.மீ.) மைல் வேகத்தில் கீ வெஸ்ட் தீவுகளைத் தாக்கி செயலிழக்கச் செய்திருந்தது. கடல்நீர் கொந்தளித்து ஊருக்குள் புகுந்து நாசம் செய்துகொண்டிருந்தது. "'ஹரிக்கேன் ஐ' எனும் சூறாவளியின் மையம் மக்கள் அடர்த்தியான மேற்கு கடற்கரையோர நகர்பகுதிகளைத் தாக்க ஆயத்தமானது.

காலையில் டீ கோப்பையுடன் அவனை எழுப்பிய தாரிணி "நல்ல வேளை, இர்மா வெஸ்ட் கோஸ்ட் பக்கம் திரும்பிட்டுதாம், ஆனாலும் நமக்கு இம்பெக்ட் இருக்கு மாம்" என்றாள். புதிய திருப்பம். டிவியைப் போட்டான். கடைசி நேரத்தில் இர்மா தனது பயணப்பாதையை மேற்குக் கரையோரமாக மாற்றிக்கொண்டு மூர்க்கமாக தாக்கத் தொடங்கியிருந்தது. தேசத்தின் கவனம் கிழக்கில் இருந்து மேற்குக் கரையோரமாக திரும்பியிருந்தது. கிழக்கிலிருந்து மேற்கு எனும் இந்த நகர்வு யாரும் எதிர்பார்க்காத ஒன்று. கிழக்குக் கடற்கரை ஓரம் போல் மேற்குக் கரையோரத்தில் மக்கள் முழு ஆயத்தமாக இல்லை என்பதே உண்மை. இன்னமும் ஹரிக்கேனின் பாதையை முன்கூட்டியே மிகச் சரியாக துல்லியமாக யாராலும் கணிக்க இயலவில்லை என்பதும் கசப்பான மெய்.

இர்மாவுக்கு அஞ்சி மேற்குக் கரையோரமான தாம்பாவுக்குத் தஞ்சம் புகுந்த டீம்-லீடர் ஞாபகம் அவனுக்கு வந்தது. ஃபோனில் விசாரித்தான். கடந்த இருபத்து நான்கு மணி நேரத்தில் கிழக்கில் இருந்து மேற்கு பின் கிழக்கு எனப் பிள்ளைகளோடு காரில் பந்தாடப் படுவதை ஆற்றாமையோடு சொன்னாள். இப்படி அவளைப்போல பல லட்சம் பேர் கடந்த இரண்டு நாட்களில் கிழக்கு மேற்கு என்று அலைக்கழிக்கப்பட்டார்கள். இர்மா மேற்கே நகர்ந்தாலும் சூறாவளியின் வீச்சை மாநிலம் முழுமையும் உணரமுடிந்தது. மியாமி நகரில் டோர்நாடோ எனும் சுழல் காற்று எச்சரிக்கை விடப்பட்டிருந்தது.

ஆவேசக் காற்று அவனுடைய வீடு இருந்த பகுதிகளில் அறுபத்தைந்து மைல் (105 கி.மீ.) வேகத்தில் வீசியதை டிவியில் பார்த்தான். பலமான காற்று தலைவிரி கோலமாக மரங்களைத் தொடர்ந்து உலுக்கி எடுத்தது. அவை

தங்கள் கிளைகளால் போதும், வேண்டாம் வேண்டாம் எனத் தலையசைத்தன. கொட்டும் மழையில் நனைந் தபடி டிவி செய்தியாளர்கள் இடுப்பு வரை நீரில் நின் றபடி, வீசியக் காற்றில் நிலையில்லாமல் நின்றபடி பேசி சாகச கடமை ஆற்றினர். ஆக்ரோசமாக பொங்கி வழிந்து ஊருக்குள் நுழையும் கடல், தற்காலிக நீர் நிலைகளான சாலைகள், அதில் படகுகளாக மிதந்த கார்கள், மல் லாந்து இறந்து கிடக்கும் யானைகள் போல வேரருந்து வீழ்ந்த மரங்கள், காற்றில் காகிதமாக பறந்த சாலை யோர பேனர்கள், அறுந்து விழுந்த மின்கம்பிகள் எனக் கலவையான திகிலூட்டும் பல காட்சிகள். கண் கொட் டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனும் தாரிணியும் பதட்ட மனநிலையில் டிவியின் முன் அமர்ந்திருந்தனர். “நம்ம வீட்டுக்கு என்ன ஆச் சுமா” என்றபடி பிள்ளைகளும் உடன் இணைந்து கொண்டனர். மாலையில் மேற்குக் கரையோரம் இரண் டாவது முறையாக கரை கடந்த பின் இர்மா கேட்டகிரி-இரண்டாக ஆக பலம் இழந்திருந்தது. கடும் மழையும், காற்றும் சற்று குறைந்தாலும் தொடர்ந்து வீசியபடிதான் இருந்தது.

மதியம் சூடான பிரியாணி வந்தது. தாரிணி டிவி காட்டி யபடி கவிக்கு ஊட்டிவிட்டாள். இந்த சமயத்தில் அவன் வயிறு நிறைய சாப்பிடும் மனநிலையில் இல்லை. அவ னால் சகஜமாக சிரித்து பேசி இருக்கமுடியவில்லை. என்னமோ போலிருந்தது. வந்த இடத்தில் தான் மட் டும் அந்நியப்பட்டிருப்பது நியாயம் இல்லை என்பதை உணர்ந்தே இருந்தான். இவ்வளவு நடந்துகொண்டிருக் கும் போதும் அலுவலகத்தின் கட்டளை மையத்தில் இருந்த ராபர்ட் அவனுடன் குறுஞ்செய்தியில் தொடர் பில் இருந்தார். ஆயத்தப்பணிக் குழுவில் இருந்தவர் பல வேலைகளை மேற்பார்வை செய்தார். ஹரிக்கேனுக்கு

முன்பு எச்சரிக்கை நடவடிக்கையாக மரங்களை வெட்டி சுத்தம் செய்வது, மின்பகிர்மான கம்பிகளில் தற்கா லிக மின் பாதுகாப்பு உபகரணங்களைப் பொருத்துவது, வெளிமாநிலங்களில் இருந்து வந்துகொண்டிருந்த தற் காலிக பணியாளர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது.... இர்மாவால் மின்சாரம் இழந்தவர்களின் எண்ணிக்கையைக் கேட்டிருந்தான். அனுப்பிக்கொண் டிருந்தார். அது மில்லியன்களைத் தாண்டி பலமணி நேரமாகியிருந்தது.

இரவு எட்டுமணிவாக்கில் குறுஞ்செய்தி அனுப்பிய மோனிகா "மறுசீரமைப்பு வேலையைக் காலையிலே தொடங்கவேண்டும். தயாராக இரு. குட் நைட்" என்றி ருந்தாள்.

மறுநாள் அதிகாலை புயல் அடித்து ஓய்ந்திருந்தது. அதிகாரப்பூர்வமாக சொன்னார்கள். முதல்வேளையாக அடுத்த வீட்டு பெண்மணிக்கு குறுஞ்செய்தி அனுப்பி வீடுபற்றி விசாரித்தான். உடனடியாக பதிலில்லை.

போன் செய்ய எத்தனித்தபோது அலுவலகத்தில் இருந்து ஆட்டோமெடிக் தொலைபேசி அழைப்பு வந் தது. அது நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்கள் அனைவரும் புயலுக்குப் பின் பாதுகாப்பாக இருக்கிறார் கள் என்பதை உறுதி செய்யும் வகையில் சில கேள்வி களைக் கேட்டது. அவன் 'நான் பாதுகாப்பாக இருக்கி றேன், மறுசீரமைப்பு தொடர்பாக எனது மேற்பார்வையா ளரை நேரடியாகத் தொடர்பு கொள்வேன் ' என்பதைக் குறிக்கும் எண் இரண்டைப் பதிலாக அழுத்தினான்.

அவன் லேப்டாப்பை ஆன் செய்தபோது அதிகாரப்பூர் வமாக மறுசீரமைப்புப் பணி தொடங்கியிருந்தது. இர் மாவின் கோரதாண்டவத்தால் ஃபிளாரிடாவின் மின்வ ழங்கும் வலைப்பின்னல் அறுந்த சிலந்திவலை போலா

கியிருந்தது. தொன்னூறு சதவீத மக்கள் மின்சாரத்தை இழந்து மாநிலம் இருளில் மூழ்கியது. மின்சாரத்தை உடனடியாக மீட்க பதினெட்டாயிரம் தொழிலாளர்கள் கொண்ட ஒரு பட்டாளத்தை நிறுவனம் களம் இறக்கியிருந்தது. அமெரிக்கா வரலாற்றில் முன்பு எப்போதும் நடந்திராத ஒரு மாபெரும் நிகழ்வு. தேசத்தின் முப்பது மாநிலங்களில் இருந்தும் கனடாவில் இருந்தும் வந்திருந்த இந்தத் தொழிலாளர்கள் இரவு பகல் பாராமல் அர்ப்பணிப்போடு வேலைசெய்வார்கள் என்று நிறுவனத் தலைவர் இமெயில் அனுப்பியிருந்தார். மறுசீரமைப்பு தொடர்பான மேலோட்டமான வழிமுறையையும் கொடுத்திருந்தார். அதன்படி

முதலில் மின் உற்பத்தி நிலையங்கள், அதில் இருந்து மின்சாரத்தை உள்ளூர் சப்ஸ்டேசன்களுக்கு சப்ளை செய்யும் மின் இணைப்புகளைச் சரிசெய்வோம்

மின்சாரத்தை மீட்டெடுக்கும்போது மருத்துவமனை, போலீஸ், தீயணைப்பு நிலையங்கள், தகவல் தொடர்பு மையங்கள், முகாம்கள் போன்ற இடங்களுக்கு முக்கியத்துவம் தரப்படும்

அதே நேரத்தில், குறுகிய இடைவெளியில் அதிக வாடிக்கையாளர்களுக்கு மின்சாரத்தை மீட்க முயலுவோம். கேஸ் ஸ்டேசன், பல்பொருள் அங்காடிகள், மருந்தகங்கள், சமூகச்சேவை மையங்களுக்கு முன்னுரிமை உண்டு

நமது கடைசி வாடிக்கையாளர் மின்சாரத்தை மீட்டெடுக்கும் வரை ஓயாமல் பணிசெய்வோம்

என ஊக்கமூட்டுவதாக அந்த இமெயில் இருந்தது. அதை வாசித்த பரணி புது உத்வேகத்துடன் களப்பணிக்கு தயாரானான்.

புயல் அடித்து ஓய்ந்த சமயத்தில் வாடிக்கையாளர்க ளுக்கு
உடனடியாக மின்சாரம் வழங்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு
நிறுவனத்தின் முன் இருந்தது. அதை உறுதி செய்யும் வகையில்
தொழில் நுட்பப் பிரிவிலும் மீட்புப்பணிகள் தீவிரப்படுத் தப்பட்டிருந்தன. அதில் இந்தியாவில் இருந்து வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளர்களும் கைகோர்த்தி ருந்தனர்.

“இந்த அப்ளிகேசன் இயங்கவில்லை. என்னனு பாத்து உடனே சரிசெய்யுங்க” என்று அந்த வெள்ளை அமெ ரிக்கன் பதற்றத்தோடு போனில் சொன்னான். ஸ்மார்ட் மீட்டர் நெட்வொர்க் இணைப்பை உறுதிசெய்ய களப் பணி ஆற்றுபவர்களுக்கு உதவும் கணினிப்பயன்பாடு ஒன்று அவனது கட்டுப்பாட்டில் வருகிறது. அது செயல் படவில்லையாம். விளைவு ? மீட்புப்பணிக்காக களத்தில் நிற்கும் பலநூறு பேர் வேலை பாதிக்கப்படுகிறது. அவ னுக்கு பதற்றம் தொற்றிக்கொண்டது.

ஸ்மார்ட் நெட்வொர்க் என்பது வெற்றுக் கண்களுக் குப் புலப்படாத சிலந்திவலை. செல்போன் அலைவரி சையில் தகவல் பரிமாற்றம் செய்யும் சிக்கலானதொரு அமைப்பு. இந்த வலையில்தான் பல மில்லியன் சிலந் திகளாக வாடிக்கையாளர்களின் மீட்டர்கள், ஏபி (AP), ரிலே (Relay), ஸ்மார்ட் சாலை விளக்குகள் போன்ற பல மின்னணு சாதனங்கள் உயிர்வாழ்கின்றன. இந்த வலைப்பின்னலின் வழியாகத்தான் தகவல்கள் பரிமா றப்படுகின்றன.

பிரச்சனைக்குத் தீர்வாக என்ன செய்யலாம் என்று அவன் யோசித்துக்கொண்டிருந்த போது, கமாண்ட்

சென்டரில் இருந்த மோனிகாவிற்கு விசயம் கசிந்து அது பற்றி விசாரிக்க அவள் போன் செய்தபோது காலை ஏழு மணி. அவள் கேட்ட முதல் கேள்வி "ஆட்டோமெடிக் போன் வந்ததுல்ல. ஏன் எனக்கு போன் செய்து சொல் லல, பாதுகாப்பா இருக்க தானே ?" என்றாள். நீ கடமை யைச் செய்யவில்லை எனும் நேரடியான குற்றச்சாட்டு. அவன் என்ன? ஏது? என நிதானிக்கும் முன்பாகவே வரிசையாக பல கேள்விகளைக்கேட்டு திக்குமுக்காட வைத்தாள். "இதையெல்லாம் எதிர்பார்க்கவில்லையா. முன்னேற்பாடு என்ன செய்தீங்க ? " அடுக்கடுக்காக வீசினாள். ஒவ்வொன்றுக்கும் யோசித்து தனியாக பதில் சொல்ல நேரமில்லை, "முப்பது நிமிடங்கள் கொடுங்க பாத்துட்டு சொல்றேனே" என அவகாசம் கேட்டான். போனை வைத்தபின் அவன் கைகள் பரபரத்தன. விமானிக்குக் கட்டுப்பாட்டு அறையில் இருந்து அவசர சமிக்ஞை வந்திருந்தது போலிருந்தது. உடலுக்குள் கூடுதல் மின்சாரம் பாய்ந்தது போல உணர்ந்தான். அந்த முப்பது நிமிடங்களை வாழ்வின் மிக முக்கியமான தரு ணமாக நினைத்தான். அது தன்னைத் தன்னுடைய முடி வெடுக்கும் திறனை, ஆற்றலை என அனைத்தையும் சோதனை செய்து பார்க்கும் தருணம் என்று நினைத் தான் இதைக் கண்டுபிடித்து உரிய நேரத்தில் சரிசெய் யாவிட்டால்...

முதல் வேலையாக பரணி ஊரில் இல்லாததை மோனிகா காரணமாக காட்டக்கூடும். அதனால் வரும் அனைத்துப் பின்விளைவுகளுக்கும் தானே முழுப்பொ றுப்பு. தன் மீதான அழுத்தத்தை உணர்ந்தவன் உத விசெய்ய புனித், இந்தியா டீம் இருந்தாலும் நேரடியாக தானே களத்தில் இறங்கினான். தலைமைத்துவப் பண் புகள் பற்றி கட்ரீனாவின் கதாநாயகன் ரஸ்ஸல் சொன்ன அறிவுரைகள் நினைவுக்கு வந்தன. 'நல்ல தலைவர்

கள் வழக்கமான விஷயங்களை நன்றாக செய்ய கற்றுக்கொள்கிறார்கள், முக்கியமாக இக்கட்டான காலங்களில் தனது குழுவுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்'. அவன்
உறுதுணையாக இருக்க உறுதிபூண்டான்.

தாமதமின்றி உடனடியாக சர்வருக்குள் நுழைந்து லாக் பைஃல் எனும் பதிவு கோப்புகளைத் தேடிக் கண்டுபிடித்து பார்வையிட்டபோது விசயம் ஓரளவு அவனுக்கு பிடிபட்டது.
தினமும் சராசரியாக சில ஆயிரங்களில் இருக்கும் தகவல் பெற இயலாத மீட்டர்களின் எண்ணிக்கை அன்று நான்கு மில்லியன்களைத் தொட்டது. இர்மா இந்த ஸ்மார்ட் மீட்டர்களைப் பைத்தியம் அடிக்கச் செய்திருக்கவேண்டும் என்று அவன் நினைக்கும் அளவுக்கு கணக்கு வழக்கில்லாத தரவுகள். கொட்டிக் கொண்டிருந்தன. புயலின்போது மின்சாரம் துண்டிக்கப்பட்டு தனது கடைசி மூச்சை விடும்போது வழக்கத்திற்கு மாறாக தன் வயிறு போன்ற நிக்-கார்டில் சேமித்து வைத்திருந்த எல்லாத் தகவல்களையும் வாந்தியாக எடுத்திருந்தன. இதை ஒன்றல்ல, இரண்டல்ல வலைப்பின்னலில் இருக்கும் அனைத்து மின்னணு சாதனங்களும் செய்ததால் வந்த வினை அது.

அதனால் நாங்கள் எவ்வளவுதான் முன்னேற்பாடுகளைச் செய்திருந்தாலும் இந்தப் பெரும் அழுத்தத்தை அப்ளிகேசன் தாங்க முடியாமல் திணறியது. சாதரணமாகச் சாப்பிட்டுக் கொண்டிருப்பவனின் வாயில் அவகாசமின்றி அதிகப்படியான உணவை வம்படியாகத் திணித்தால் வரும் திணறல் போலிருந்தது.

அதற்கு ஒரே தீர்வு செயலியின் மெமரியை அதிகப்படுத்துவதுதான். அதற்கு வசதியாக செயலிக்குத் தேவை

யான மெமரி சர்வரில் இருந்தது. புனித்திடம் போனில் ஆலோசனை செய்து உறுதிப்படுத்திக் கொண்டான். அடுத்த பிரச்சனை யார் இதைச் செய்வது ? ஹரிக்கேன் சமயங்களில் வைஸ் பிரசிடெண்ட் அல்லது டைரக்டர் மட்டத்தில் இருப்பவர்களின் ஒப்புதல் பெற்று செய்ய வேண்டிய வேலை. மோனிகா வழியாகத்தான் அணுக வேண்டும். மீண்டும் அவளிடம் போய் நிற்கவேண்டுமா என்ன?. நேரம் கரைந்துக் கொண்டிருந்தது. தான் விமர் சிக்கப்பட்டாலும் ஒரு நல்லதலைவன் செயல்படுவதற்கு தயங்கமாட்டான் எனும் ரஸிலின் வழிகாட்டுதல் நினை வுக்கு வந்தது. தன்னிடம் பிரச்சனைக்குச் சரியான தீர்வு இருக்கிறது எனும் நம்பிக்கை தந்த அசட்டுச் துணிச் சலில் அந்த முடிவை எடுத்தான். இசைவு பெறுதல் எனும் எந்தவொரு வழிமுறைகளையும் பின்பற்றாமல் பரணி தானாகவே யாருடைய உதவியுமின்றி சட்டென மெமரியை அதிகப்படுத்தும் வேலையைச் செய்துமுடித் துவிட்டான்.

செயலிக்கு பதினைந்து நிமிடங்கள் தற்காலிக தடங்கல். மீண்டும் செயலிக்கு உயிர் வந்ததை புனித் சரிபார்த்து உறுதிசெய்தான். மோனிகாவுக்கும் மற்றவர்களுக்கும் நிலைமை கட்டுக்குள் வந்ததைத் தகவலாக சொன் னான். வழக்கமாக என்ன? ஏது? எதனால்? எனப் புகுந்து புறப்படும் மோனிகா நல்லவேளையாக மற்ற வேலைக ளில் பிசியாக இருந்ததால் அவனை அன்று பெரிதாக நோண்டவில்லை.

நிரலியில் தரப்படுவது தவறான தகவல், இல்லை தரப்பட்ட தகவல் மற்ற வணிகப்பிரிவோடு பொருந் தவில்லை, செயலி மந்தமாக செயல்படுகிறது என்று அடுக்கடுக்கான பிரச்சனைகளுக்கு ஆட்களைப் போனில் விரட்டிப் பிடித்து வேலை செய்து கொண்டிருந்

தான். வேலை பளு மேலிருந்து கீழே இறங்கிக் கொண் டிருந்தது. முடுக்கிவிட்ட இயந்திரம் போல வேலை.

பூபதி வீட்டில் அவனுக்கு கெஸ்ட் பெட்ரூமை ஒதுக் கிக்கொடுத்திருந்தார்கள். அவன் வேலை மும்மரத் தில் லேப்டாப்பில் முகம் புதைத்து கிடந்தான். அங்கும் மிங்கும் நகரமுடியாதபடி வேலை. வேளாவேளைக்கு உணவுகூட அவனுடைய மேசைக்கு வந்தது. அவன் அதிகபட்சமாக நடந்தது அடுத்து இருந்த கழிவறைக்கு மட்டும்தான். இர்மாவுக்கு பின் ஊரில் வீட்டுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என தாரிணி தகவல் சொல் லிவிட்டுப் போனாள். அவனுக்கு அதைப்பற்றி சிந்திக்க நேரமில்லை.

மதியம் கிடைத்த கொஞ்ச நேர இடைவெளியில் அவன் குளிக்கப் போனான். புயலால் இவ்வளவு பிரச்சனைகள், குழப்பங்கள் நேர்ந்து ஊரில் மக்கள் அல்லல்பட்டுத் துயரப்படும் நேரத்தில் தான் நிர்வாணமாக குளிப்பதுகூட ஆடம்பரம் எனும் குற்றவுணர்வு வந்தபோது ஷவரை நிறுத்தினான்.

# 22

அட்லாண்டாவிலிருந்து, ஃபிளாரிடா திரும்பவேண்டும்

என முடிவெடுத்த பரணி, விடியற்காலை மூன்று மணிக்கே எழுந்து, அரைத்தூக்கத்தில் இருந்த பிள் ளைகளைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டான். இர்மா ஃபிளாரிடாவைப் பலங்கொண்ட மட்டும் உலுக் கிக் கலைத்து போட்டுவிட்டு சென்றிருந்தது. வரும் வழி யெங்கும் முறிந்துவிழுந்த மரங்கள், சரிந்த மின்கம்பங் கள், சல்லைடையான போர்டுகள், தேங்கிய வெள்ள நீர் என இர்மாவின் பலத்த சேதத்தைப் பார்க்கமுடிந்தது. அந்தச் சோகக்காட்சிகள், மூர்க்கமாக வந்த எதிரிப் படை தாக்குதல் நடத்தி முன்னேறிச் சென்ற போர்க் களத்தை நினைவூட்டின. நடுவில் பெட்ரோல் வேறு கிடைக்காமல் சுற்றினான். இடையிடையே தொடர்ச்சி யான அலுவலக போன் வேறு...

வரும் வழியில் மீட்புப்பணியில் இருந்த ஒன்றிரண்டு இராணுவ கவச வாகனங்கள் கண்ணில்பட்டன. இயல் புநிலை முழுவதுமாகத் திரும்பவில்லை. பல இடங்க ளில் மின்சாரம் இல்லாததால் போக்குவரத்து விளக்கு கள் வேலை செய்யவில்லை.
முச்சந்திகளில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த பெரிய தடைகற்களை அடுக்கி சிகப்புக் கொடிகளை நட்டிருந் தனர்.

நெடுஞ்சாலை ஓரக் கழிப்பறைகள் மூடிக்கிடந்தன. அதற்கு மாற்று ஏற்பாடாக வைக்கப்பட்டிருந்த தற்காலிக கழிவறைகள் நிரம்பி குமட்டவைத்தன. வேறு வழியின்றி அதைப் பயன்படுத்தக்கூட மக்கள் நீண்ட வரிசையில் நின்றிருந்தார்கள். தண்ணீரும், மின்சாரமும் இல்லாத தால் சாலையோர புல்வெளிகள் நாய்களுக்குத் திறந்த வெளி கழிப்பிடமாகி நாறியது. வழியில் எங்கும் சரியான சாப்பாட்டுக் கடைகளும் திறந்திருக்கவில்லை.

அவனுக்கு ஐம்பது ஆண்டுகள் பின்னோக்கி சென்றது போலிருந்தது. ரேடியோவில் தொடர்ச்சியாக இர்மா வுக்குப் பிறகான அழிவு, மீட்பு நடவடிக்கை செய்திகளை கேட்டபடியே வந்தான். இர்மாவுக்குப் பலியானவர்கள் ஐம்பதைத் தாண்டும் எனக் கணித்தார்கள். போகும் போது இருந்த பதற்றம் திரும்பும்போது இல்லாததால் அவனும் தாரிணியும் காரில் மனம்விட்டு நிறையவே பேசினார்கள்.

விடியற்காலையில் கிளம்பிவிட்டதால் போக்குவரத்து நெரிசலில் இருந்து ஓரளவுக்குத் தப்பித்து வீடு வந்து சேர்ந்தான். மாலைவெயில் வடிந்து கிடந்த வீட்டின் உள்ளே குடும்பத்துடன் நுழைந்தபோது பாதுகாப்பின் வெதுவெதுப்பை உணர்ந்தான். இதுவரை கடந்துவந்த அச்சுறுத்தல்கள் அவனுக்கு வாழ்க்கையை உணரச் செய்திருந்தன. பல விசயங்களை நிதானமாக யோசிக்க முடிந்தது. குடும்பத்தோடு நெருக்கமாக உணரவைத் தது. அவர்களோடு வாழ்வில் இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியதை அவனுக்கு நினைவூட்டியது போலிருந்தது. வீட்டின் மீது மேலும் நெருக்கம் கூடி இத் தனை வருடங்கள் கிடைக்காத ஒருவித மனநிறைவை அவன் அன்றைய இரவில் உணர்ந்தான்.

சற்று கனமழையோடு மட்டும் இர்மா அட்லாண்டாவைக் கடந்து சென்றிருந்தாலும், ஃபிளாரிடாவில் ஓர் ஆறாவ டுவை ஏற்படுத்திச் சென்றிருந்தது. புயல் அடித்து ஓய்ந்த கையோடு "ரெஸ்டரேசன் (மறு சீரமைப்பு) வேலை இருக்கு, கமாண்ட் சென்டருக்கு வரமுடியுமா ?" என மோனிகா போன் செய்து கேட்டபோது, அவன் எந்தவித யோசனையுமின்றி தயங்காமல் "சரி" என்று வர ஒத்துக் கொண்டான்.

*****

சமீபமாக காயசண்டிகையாக மாறிவிட்ட காரின் பசி யைத் தீர்க்க அவன் கேஸ் ஸ்டேசனில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டிருந்தான். காலை எட்டு மணிக்கு ரிய வழக்கமான கூட்டம். சூரியன் மெல்லிய புன்னகை யோடு மெல்ல மேலெழுந்து கொண்டிருந்தான். காற்றில் குளிர் இன்னமும் மீதமிருந்தது. இர்மாவின் போது அம லில் இருந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு மெள்ள இயல்பு வாழ்க்கைத் திரும்பிக்கொண்டிருந்தது.

பெட்ரோலுக்கான ரசீதை எடுத்துக் கொண்டிருந்த போது "ஹே மேன்!" என்றொரு உற்சாகக் குரல் கேட்டுத் திரும்பினான்.

ஐம்பது, ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு ஆஜா னுபாகுவான கறுப்பர். வலது காலைக் கொஞ்சம் தாங் கியபடி அவனை நோக்கி நடந்து நெருங்கியவர் "தேங்யூ, சோ மச் மேன் "எனக் கைகுலுக்கினார்.

எதற்கு என்பது போல், "பார் வாட் ?" என்றான் புரியாமல்.

அவர், பரணியின் நிறுவனத்தின் பெயரைச் சொல்லி "நீ அங்கேதான் வேலை செய்கிறாய் ? " என்றார் கண்கள் விரிய.

அவன் ஆமாம் எனச் சொல்ல வாயெடுப்பதற்கு முன்பா கவே, வரவேற்பது போல் முன்னால் வந்து "கிவ் மீ அ ஹக்" என்றபடி தன் நீண்ட கைகளால் அவனை ஆரத் தழுவி "யூ கைய்ஸ் ராக் மேன். ஐ காட் மை பவர் பேக் டு டே மார்னிங். தேங்யூ ... தேங்யூ சோ மச்..." என ஆனந்த மாகச் சொல்லியபடி தனது நீண்ட கைகளால் பின்முது கில் தட்டிக் கொடுத்தார்.

அவர் "எனது வீட்டுக்கு உங்களால் இர்மாவுக்கு பிறகு இன்று காலையில் மின்சாரம் வந்துவிட்டது, உங்கள் சேவைக்கு மிக நன்றி" எனப் பொருள்படி ஆங்கிலத்

தில் சொல்லி முதுகில் தட்டிக் கொடுத்ததற்குப் பதிலாக அவன் புன்னகைத்தான். அவர் தன்னை எப்படி அடையாளம் கண்டுகொண்டார் என வியந்த நொடியில் அவன் தன் நிறுவனத்தின் பெயர் பொறித்த டீசெர்ட்டை அன்று அணிந்திருப்பது நினைவு வந்தது.

அந்த நெருக்கத்தில் அந்த முகமறியாத மனிதனின் மகத்தான அன்புத் தழுவலில் களைப்பு, குற்றவுணர்ச்சியோடு சேர்ந்து அவனது எல்லாச் சங்கடங்களும் நெகிழ்ந்து வழிந்தோடியது போல உணர்ந்தான்.

கமாண்ட் சென்டர் உள்ளே நுழையும்போது சிஃப்ட் முடித்து வந்த ராபர்ட் வாசலில் காரை நிறுத்தி தனது லேப்டாப், ஸ்லீபிங் பேக், உடைகள் போன்ற உடமைகளை ஏற்றிக்கொண்டிருந்தார். தொடர்ச்சியாக மூன்று நாட்கள் அங்கேயே தங்கி வேலைசெய்த களைப்பின் தளர்ச்சி அவர் முகத்தில் தெரிந்தது. ஆச்சர்யத்தோடு பார்த்தவர் "அட்லாண்டல இருக்குறனு சொல்லிட்டு இங்க என்ன பண்ற" எனச் சொல்லி சிரிக்க முயன்றவர் நெருங்கி வந்து கைகுலுக்கினார்.

தாரிணி, பிள்ளைகளைப் பற்றி அக்கறையாக விசாரித்தார். "வீட்ல பவர் இருக்குல" என்றவர் இன்னமும் ஓரிரு நாட்களில் கிழக்குக் கடற்கரை முழுவதுமாக சரிசெய்யப்பட்டுவிடும் என்றார். மேற்குக்கரை நாளாகலாம். அங்கே பல இடங்களில் மின்பகிர்மானம் செய்த தடயமின்றி அழிந்துவிட்டது என்றார்.

இர்மா கிழக்குக் கடற்கரையோரம் எதிர்பார்க்கப்பட்டதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மேற்குப் பகுதிகளில் நிலை வைக்கப்பட்டிருந்தார்களாம். கடைசி நேரத்தில் திசை மாறியதால் அவர்களை ஆபத்தின் பாதையில் இருந்து வெளியேற்றி பல திண்டாட்டங்

களுக்குப் பிறகு கிழக்கு நோக்கி திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

இராணுவ நடவடிக்கை போல் மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடப்பதாகச் சொன்னவர். அதே வளாகத்தில் செயல்பட்ட ஸ்டேஜிங் சைட்டைப் போய் காட்டினார்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பல நூறு வெள்ளைநிற பழுதுபார்க்கும் லாரிகள். பார்ப்பதற்கு பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு போலிருந்தது. அதைச் சுற்றி தற்காலிகமாக தங்கும் வகையில் டெண்டுகள். ஒருபுறம் குவிந்துகிடந்த மின் தளவாடப் பொருட்கள், சுழலும் இறக்கைகளுடன் தயார் நிலையில் இரண்டு ஹெலிகாப்டர்கள். ஒளிரும் பச்சை நிற உடை, மஞ்சள்நிற கடின தொப்பி அணிந்த தொழிலாளர்கள் என பரபரப்பாக இருந்தது.

கமாண்ட் சென்டருக்குள் நுழைந்த நேரத்தில் மோனிகா இருந்தாள். அவளை அவ்வளவு சீக்கிரத்தில் நேரில் பார்ப்போம் என அவன் எதிர்பார்க்கவில்லை. தயக்கமாக இருந்தது. வேலை அவசரத்தில் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தவள் அவனைப் பார்த்ததும் நிம்மதி பெருமூச்சுடன் “தேங்க் காட்!! நல்ல வேளை நீ இங்க வந்த. என்னால இரண்டுநாளா இவங்க கேட்குற கேள்விகளுக்கு ஒழுங்காக பதில் சொல்ல முடியல. இந்தா, பிடி” என கையில் இருந்த ஒரு ரிப்போர்ட் பிரிண்ட் அவுட்டைத் திணித்துவிட்டு போனாள்.கொஞ்ச நேரம் கழித்து அவன் இருக்கைக்கு வந்தவள் சற்று இறுக்கம் தளர்ந்தது போல பேசினாள். இதுபோன்ற முக்கியத்தருணங்களில் பரணி மாதிரி தொழில்நுட்பத்தோடு துறை சார்ந்த அறிவும் உள்ள யாராவது உடன் இருந்திருந்தால் தனக்கு வேலை சுலபமாக இருந்திருக்கும் என்றாள். அவன் இங்கில்லாமல் அட்லாண்டா போனதைப்

பெரிதுபடுத்தவில்லை. அவனுக்கு இருந்த மிகப்பெரிய மனக்குழப்பம் தீர்ந்தது.

போகும்போது "தேங்க்ஸ் பாஃர் யுவர் சப்போர்ட், அன்ட் ஆல் த பெஸ்ட்" என்றவள், வரும் இரண்டு வாரங்களுக்கு அவனுக்கு இங்கிருந்துதான் இரவு பணி என்று சொல்லி விடைபெற்றுச் சென்றாள். அவன் இனி வரும் இரவுகளில் புனித் மற்றும் இந்தியாவில் இருக்கும் குழுவினருடன் இணைந்து செயல்படுவான். இருக்கையில் கொஞ்சம் வசதியாக அமர்ந்தபடி கடந்த வாரத்தில் நடந்த நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தான், பிரமிப்பாக இருந்தது.